வரு.74 இல. 22 ★

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
தினகரன் වාරමන්ජරි

2022 மே 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை    May 29 Sunday, 2022

24 பக்கங்கள்    80/-

## '21'திருத்தத்துக்கு SLFP ஆதரவு

### சுதந்திரக்கட்சி எடுத்துள்ள தீர்மானம்



21 ஆவது திருத்தச் சட்ட மூலத்துக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.

21ஆவது திருத்த சட்டமூலம் தொடர்பான விஷேட கலந்துரையாடல் டார்ளி வீதியிலமைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 04



03 நெருக்கடி தீர்ப்பதற்கு தேசிய சபை அமைக்கும் யோசனையே சிறந்தது



05 16 மில்.டொலர் பெறுமதியான தமிழக நிவாரண பொருட்கள்



06 அரசியல் கலாசாரத்தை மாற்றினால் மட்டுமே ஸ்திரம்



24 100 செல்வாக்கு மிக்க நபர்களில் ரபேல் நடால், பெங் ஷுவாய்

## இலங்கைக்கு இந்தியா மேலும் உதவிகளை வழங்குமென உறுதி



இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவுக்கும் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்குமிடையிலான சந்திப்பு நடைபெற்றுள்ளது.

நேற்று முன்தினம் மாலை இச் சந்திப்பு நடைபெற்றபோது, இரு நாடுகளுக்குமிடையில் நிலவும் பொருளாதார ஒத்துழைப்பின் நிலையை இருவரும் ஆராய்ந்தனர்.

ஏற்கனவே இவ்விருவரும் கடந்த ஏப்ரல் நடுப்பகுதியிலும் இவ்வாறானதொரு சந்திப்பை நடத்தியிருந்தனர்.

இச் சந்திப்பின்போது உயர்ஸ்தானிகர் மிலிந்த 04

# 21ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு கட்சித் தலைவர்கள் பூரண ஆதரவு

### பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்று நடைமுறைப்படுத்தவும் இணக்கம்

### வெள்ளியன்று மீண்டும் கலந்துரையாடி இறுதித் தீர்மானம் எடுக்கவும் முடிவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை விரைவில் நடைமுறைப் படுத்த அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் 04

## இலங்கைக்கு உதவிகளை வழங்க பிரிட்டனும் ஆர்வம்

### அமைச்சர் பீரிஸுடன் UK தூதுவர் தெரிவிப்பு



இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளை தாங்கள் புரிந்து கொண்டுள்ளதுடன் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான வழிகளை பிரிட்டன் ஆராய்ந்து வருவதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸிடம் இலங்கையிலுள்ள பிரிட்டனின் உயர் ஸ்தானிகர் சாரா ஹல்டன், தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பிரிட்டன் உயர் ஸ்தானிகர் சாரா ஹல்டன், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் 04


### சூரிய சக்தி கட்டமைப்பு மூலமான பாவனை அவசியம்

# எரிபொருளுக்காக மாதாந்தம் 100 மில். டொலர்கள் தேவை

### இந்நிலையை மாற்றியமைக்க அடுத்த மாதம் முதல் புதிய திட்டம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் எரிபொருளுக்காக மாதாந்தம் சுமார் 100 மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான தொகை செலவிடப்படுவதாக வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.



Kanchana Wijesekera
@kanchana_wij

1) A rapid renewable energy generation plan will be in effect from 1st of June. The Fuel bill for power generation has exceeded USD $100 million per month. Average cost per unit generation has increased to Rs 48.
2 quick solutions

அத்துடன் சராசரியாக அலகொன்றுக்கான மின்சார உற்பத்தி செலவீனம் 48 ரூபா 2 சதத்தால் அதிகரித்துள்ளதாகவும் அவர் தமது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையை மாற்றுவதற்கேற்ற வகையில் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவுள்ளது. 04

**நெருக்கடியை தீர்க்க கைத்தொழில், அரச நிறுவனங்கள், விருந்தகங்களின் மின் கட்டணங்களை மூன்று மடங்கு அதிகரிக்கவும் ஆலோசனை**



### ரூ.260 மில்.பெறுமதியான 250 மெற்றிக் தொன்

## இந்தியாவின் அவசர மருத்துவ உதவிகள் அமைச்சரிடம் கையளிப்பு



இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட ஒரு தொகுதி மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருட்களை பதில் இந்திய உயர்ஸ்தானிகர் வினோத்கே ஜேக்கப், சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிடம் (27) கொழும்பில் கையளித்தார். 25 தொன்களுக்கும் அதிகமான இத்தொகுதி சுமார் 260 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியுடையதென மதிப்பிடப்பட்டுள்ளது. 04

## கறுப்புச் சந்தையில் Gas சிலிண்டர் ஒன்று ரூ15,000

### வவுனியாவில் பொதுமக்கள் குமுறல்



வவுனியாவில் சமையல் எரிவாயு கறுப்பு சந்தைகளில் 15 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியா மாவட்டத்திற்கு என அனுப்பப்படுகின்ற சமையல் எரிவாயுவை (காஸ்) பதுக்கும் சில விற்பனை முகவர்கள் அதனை வேறு இடங்களில் களஞ்சியப்படுத்தி விட்டு முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் சிலரின் துணையுடன் 15 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்து வருகின்றனர். 04

### வடமாகாண மக்களுக்கு இந்திய உதவிகள்;

## KKS துறைமுகம் ஊடாக இனி அவசர உணவுகள், உரவகைகள்

### டக்ளஸின் கோரிக்கைக்கு ஜெய்சங்கர் சம்மதம்





வடக்கு மாகாணத்துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சிறுபோக செய்கைக்கு தேவையான உர வகைகள் போன்றவற்றை காங்கேசன்துறை துறைமுகத்தின் ஊடாக எடுத்து வருவது தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி 04

## கச்சதீவை வழங்க முடியாது அதனால் உறவும் பாதிக்காது

### சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. தெரிவிப்பு



"கச்சதீவை வழங்க முடியாது, அதில் உடன்பாடில்லை. என்னுடைய நிலைப்பாடும் அதுவே" என பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்துக்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கச்சதீவை மீட்பதற்குரிய பொருத்தமான நேரம் இதுவென தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோரிக்கை விடுத்திருந்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு தமிழர்கள் 04

### எங்கள் கருத்து...

## காலம் மட்டும் கடந்து சென்றாலும் கண்டது இதுவரை எதுவுமில்லை

நாட்டில் மக்கள் தமது அன்றாட வாழ்வை கொண்டு செல்வதில் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர். சமைத்து உண்பதற்கு எரிவாயு இல்லை, போக்குவரத்துச் செய்வதற்கு எரிபொருட்கள் இல்லை, வீட்டில் நிம்மதியாக இருப்பதற்கு முக்கியமான நேரங்களில் மின்சாரம் இல்லை. ஆதார உணவுகளான அரிசி, மா, பருப்பு, காய்கறிகளின் விலைகளில் எந்தக் கட்டுப்பாடும் கிடையாது. ஒகஸ்டில் உணவுப் பஞ்சம் வரலாம் என பிரதமரே சொல்கிறார்.

இவ்வாறு இன்னும் எவ்வளவு காலத்தை கழிக்கப்போகின்றோம் என்பது பெரும் கேள்விக்குறியாக உள்ளது. இந்நிலையில் இப்போதைக்கு எதுவுமே செய்ய முடியாது என்று அரசாங்கம் கைகளை விரித்து நிற்கிறது. உதவி வழங்கும் நாடுகள் கட்டளைகளையும், நிபந்தனைகளையும் விதிக்கின்றன. அதற்கு உடன்பட்டு போக அரசியல் தலைமைகள் அதிகார கதிரைகளை எதிர்பார்த்து தமக்கிடையே போட்டி போட்டு நிற்கின்றன.

இந்நிலை தொடர்ந்தால் நாட்டிலுள்ள பொதுமக்களுக்கு வாழ்வா சாவா எனும் நிலையே ஏற்படும். மக்களில் இப்போது மேல்மட்டம், நடுத்தரவர்க்கம், கீழ் மட்டம் என்ற பாகுபாட்டை காணமுடியவில்லை. அரசியல் பின்னணி உள்ளவர்கள், அரசியல் பின்னணி இல்லாதவர்கள் என்று இரு பிரிவினரையே காணுகிறோம்.

அரசியல் பின்னணி உள்ளவர்கள் வழமை போன்று தமது வாழ்வை நடத்துகின்றார்கள். பின்னணி எதுவும் இல்லாதவர்கள் பாதைகளில் நின்று தமது மற்றும் குடும்ப உறுப்பினர்களதும் வாழ்வுக்காக போராடுகிறார்கள். 04

## சிரேஷ்ட DIGமார் சிலருக்கு உடனடி இடமாற்ற உத்தரவு

### அஜித் ரோஹன தென் மாகாணத்துக்கு மாற்றம்



சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர்கள் சிலருக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. இதன்படி, சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் ஆர்.எஸ்.தமிந்த தென் மாகாணத்திலிருந்து கிழக்கு மாகாணத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். குற்றவியல் மற்றும் போக்குவரத்து 04

## செல்வந்தர்களுக்கு நிவாரணம் வழங்கவா பணம் அச்சடிப்பு?

### அரசாங்கம் மீது சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு



செல்வந்தர்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்கில் அரசாங்கம் பணத்தை அச்சிடுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டியுள்ளார்.

ஒரு ட்ரில்லியன் ரூபா பணத்தை அச்சிடவுள்ளதாக அண்மையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சர்வதேச ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்தார். இவ்வாறு பணம் 04

## முத்தமிழ் அறிஞரின் 98 ஆவது ஜனன தின விழாவும்

### முதல்வருக்கு நன்றி நவிலலும்



முத்தமிழ் அறிஞர் கலைஞர் கருணாநிதியின் 98ஆவது ஜனன தின நினைவேந்தலும், அல்லலுறும் இலங்கை மக்களுக்கு அத்தியாவசிய தேவைகள் அறிந்து உதவி அளித்து வரும் தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கான நன்றி நவிலல் நிகழ்வும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. 04

### பண்டாரகம, அட்டுளுகமையில்

# காணாமல் போன 09 வயது சிறுமி ஆயிஷா வீட்டுக்கருகே சதுப்பு நிலத்தில் சடலமாக மீட்பு

**அயலவர்களால் நேற்று மாலை கண்டுபிடிப்பு**



களுத்துறை பண்டாரகம, அட்டுலுகமயில் காணாமல் போன 09 வயது சிறுமி பாத்திமா ஆயிஷாவின் சடலம் அவரது வீட்டுக்கருகிலுள்ள சதுப்பு நிலத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் நேற்று தெரிவித்தது.

வீட்டிலிருந்து சுமார் 150 மீற்றர் தொலைவிலுள்ள பெரிய பள்ளி என்ற இடத்துக்கு முன்னாலுள்ள சதுப்பு நிலப்பகுதியிலேயே சிறுமி சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் நேற்று தெரிவித்தது.

அட்டுலுகம எபிட்டமுல்ல முஸ்லிம் கொலனியில் வசிக்கும் 09 வயது சிறுமி நேற்றுமுன்தினம் (27) காலை அவரது வீட்டிலிருந்து சுமார் 200 மீற்றர் தொலைவிலுள்ள இறைச்சிக் கடையொன்றுக்கு சென்ற போது காணாமல் போயிருந்தார்.

சிறுமி வான் ஒன்றில் கடத்தப்பட்டதாக கூறப்பட்டதுடன் வானின் இலக்கங்கள் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டும் இருந்தன. இதில் எவ்வித உண்மையும் இல்லையென்றும் 04

### விக்கல் வீராச்சாமி



நாட்டில பெட்ரோல் இல்ல, டீசல் இல்ல எண்டு சொல்றாங்கள், ஆனா எந்த ரோட்ட பாத்தாலும் ரஃபிக்கால வாகன நெரிசல் முன்னதை விட அதிகமாத்தான் இருக்கே....

உண்மைதான், அதுக்காக எல்லாரும் வீடடில சும்மா படுத்து இருந்தா எப்படி சமைச்சு சாப்பிடுறது, குடும்பத்த காப்பாத்த ஏதோ பண்ணனும்தானே...!!!

# குழந்தைகளை குறிவைக்கும் அமெரிக்க துப்பாக்கிகள்...

## துப்பாக்கிகள் கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வருவதில் என்ன சிக்கல்?

அமெரிக்க வரலாற்றில் துப்பாக்கி கலாசாரம் என்பது ஒன்றும் புதியதோ, புதினமானதோ அல்ல என்பதும் பிரித்தானியர் ஆட்சி செய்த காலம் தொட்டே துப்பாக்கிப் பாவனை அங்கே சாதாரணமான ஒன்று என்பதும் உலகறிந்த சமாச்சாரம். இதனை மெய்ப்பிக்கும் வெளிப்பாடாக அமெரிக்காவின் பல பாகங்களிலும், மக்கள் மத்தியில் குறிப்பாக மாணவ சமூகத்தினரிடையே துப்பாக்கி சூட்டு சம்பவங்கள் அரங்கேறி உலகையே பரபரப்பில் ஆழ்த்தி வருகின்றன.

இதன் தொடர்ச்சியாகவே கடந்த வாரம் அமெரிக்காவின் TEXAS மாநிலத்தில் உள்ள தனது பள்ளிக்கூடத்தினுள் துப்பாக்கியுடன் புகுந்த 18 வயது மாணவன் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தைப் பார்க்க வேண்டும். இக் கொடூர தாக்குதலில் அங்கு கல்வி பயிலும் 19 குழந்தைகள் மற்றும் பணியாற்றும் இரண்டு ஆசிரியைகள் உட்பட 21 அப்பாவிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

கடந்த பத்தாண்டுகளில் அமெரிக்காவில் நடந்த மிகப்பெரிய துப்பாக்கிச் சூடு இது என்பதும் கொல்லப்பட்ட அனைத்து குழந்தைகளும் 11 வயதுக்கு உட்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட மாணவன் வேண்டுமென்றே இந்த இளம் குழந்தைகளை குறிவைத்துள்ளான் எனவும் மக்கள் மத்தியில் குறிப்பாக அந்த குழந்தைகளின் பெற்றோர் மனதில், அச்சத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்த கொடூரத்தை அவன் அரங்கேற்றி உள்ளான் எனவும் ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக விசாரணை அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்,

அமெரிக்க தலைநகர் வொஷிங்டனில் இருந்து 2,700 கிலோமீட்டர் தொலைவில் உள்ள டெக்சாஸ்(TEXAS) மாநிலத்தின், 600 குழந்தைகள் படிக்கும் பள்ளி ஒன்றிலேயே இந்த துயர சம்பவம் நடந்துள்ளது. இந்த கொடூரத்தை அரங்கேற்றிய இளஞனான Salvador Ramos என்பவன் துப்பாக்கி பிரயோகத்திற்கு ஒரு நாள் முன் தனது பிறந்தநாளின் போதுதான் இரண்டு துப்பாக்கிகளை வாங்கியுள்ளான் எனவும் வாங்கிய அந்த துப்பாக்கிகளுடன் எடுத்துக் கொண்ட புகைப்படங்களை தனது சமூக வலைத் தளங்களில் வெளியிட்டி ருந்தான் எனவும் தெரிவிக்கப் படுகிறது.அமெரிக்காவில் இதுபோன்ற படங்களை சமூக ஊடகங்களில் வெளியிடுவது சகஜம் என்பதாலும், ஆயுதங்கள் ஒரு பொருட்டாக மக்களால் பார்க்கப் படுவதில்லை என்பதாலும் இந்தப் படங்கள் எவராலும் பெரிதாக எடுத்துக் கொள்ளப்படவில்லை.

அமெரிக்காவில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களில் 44 சதவீதம் பேர் தமது வீடுகளில் துப்பாக்கி வைத்துள்ளனர். அங்கே அன்றாட பொருட்களை மளிகைக் கடைகளில் வாங்குவது போல் அங்குள்ள துப்பாக்கி கடைகளில் துப்பாக்கிகளை வாங்குவது சாதரணமான ஒன்றே. அதனால் தான் இந்த Salvador Ramos இரண்டு துப்பாக்கிகளை எளிதாக வாங்கி தன் வீட்டில் வைத்திருந்து புகைப்படமும் எடுத்து தனதும் நண்பர்கள் சிலரினதும் சமூக வலைத்தளங்களில் பிரசுரித்துவிட்டு, மறுநாள் கடந்த மே 24ம் தேதி அன்று இப்பள்ளிக் குழந்தைகள் மீது தாக்குதல் நடத்தி உள்ளான். இந்தத் தாக்குதலுக்கு சற்று முன்னர் அவன் தனது பாட்டி ஒருவரையும் சுட்டுக் கொன்றதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்பிறகு அதே துப்பாக்கியுடன் அங்குள்ள, தான் முன்னர் படித்த பள்ளிக்குள் சாதாரணமாக நுழைந்து அங்கே வகுப்பறை ஒன்றில் இருந்த சிறு குழந்தைகளை நோக்கி சரமாரியாக சுட்டதில் 19 குழந்தைகள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இடையில் சிக்கிக் கொண்ட இரண்டு ஆசிரியைகள் பலத்த காயம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் பின்னர் மரணமானார்கள். மேலும் பல குழந்தைகள் ஆபத்தான நிலையில் உயிருக்கு போராடி வருகின்றன.

வகுப்பறையில் இருந்த அமெரி என்ற 10 வயது சிறுமி தனது கைத்தொலைபேசியில் அவசர உதவி எண்ணுக்கு அழைத்தபோதும் அவள் எதுவும் பேசுவதற்குள், தாக்குதல் நடத்தியவனின் துப்பாக்கி ரவைகள் அவள் உயிரையும் மாய்த்தது. இது தவிர, தள்ளுப்பாடுகளில் சிக்கி வகுப்பறையில் இருந்து வெளியேற முடியாமல் நான்கு குழந்தைகள் உயிரிழந்தனர். கொல்லப்பட்ட குழந்தைகளில் நால்வர் இந்தியா மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது.




அமெரிக்கா தன்னை உலகின் பழமையான ஜனநாயக நாடு என்றும், அமைதிக்கான உலகின் பாரம்பரிய தூதர் என்றும் தம்பட்டம் அடிக்கிறது. ஆனால் உலகை காக்கிறேன் என்று கூறும் அந்த வல்லரசில் 18 வயதுக்கு மேற்பட்ட எவரும் துப்பாக்கிகளை வாங்கலாம் வைத்திருக்கலாம் என்கின்ற சட்ட நடைமுறையை எந்த அரசாங்கத்தாலோ அல்லது எந்த ஜனாதிபதியாலோ ரத்துசெய்ய முடியவில்லை என்பதுதான் வேதனை நிறைந்த வரலாறு.

கடந்த 2014 ஆம் ஆண்டு டிசம்பர் 16ஆம் தேதி பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் தலிபான் தீவிரவாதிகள் ஆயுதங்களுடன் அங்குள்ள இராணுவ பொதுப்பள்ளிக்குள் நுழைந்து அங்கே இருந்த. 132 குழந்தைகளைக் கொன்றனர். இந்த பயங்கரவாதத் தாக்குதலை அமெரிக்காவின் தற்போதைய சம்பவத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இரண்டுக்கும் அதிக வித்தியாசம் இல்லை என்கிற யதார்த்தத்தை புரிந்து கொள்ள முடியும்.

பாடசாலைகளில் சிறு குழந்தைகள் குறிவைக்கப்பட்ட இந்த இரண்டு தாக்குதல்களின் நோக்கமும் கிட்டத்தட்ட ஒன்றுதான். அதாவது குழந்தைகளைக் கொன்று மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்துவது என்பதே.

ஏனைய நாடுகளில் நடக்கும் இது போன்ற சம்பவங்கள் தொடர்பில் பெரும் கண்டனங்களை வெளியிட்டு அதற்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் அமெரிக்கா போன்ற நாடுகள் தங்கள் நாட்டில் நடக்கும் இந்த அசிங்கங்கள் தொடர்பில் அடக்கி வாசிப்புகளை மேற்கொள்வதுடன் இது பற்றி பேசப்படும்போது, தாக்கியவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் அல்லது வழிதவறி வந்தவர் என்றும், தவறுதலாக நடாத்தப்பட்ட தாக்குதல் என்றும் செய்திகளை வெளிப்படுத்தி தனது கேவலங்களை மறைக்க முயல்கிறது. .

கடந்த வார தாக்குதல் தொடர்பில் இதுவரை அமெரிக்க காவல்துறை எந்த ஆழமான விசாரனைகளையும் ஆரம்பிக்கவில்லை என ஆதங்கம் வெளியிடுகின்றனர் National Association for the Education of Young Children என்கிற அங்குள்ள சுயாதீன குழந்தைகள் நல அமைப்பினர். குழந்தைகள் மீதான பெஷாவர் தாக்குதல் போல இந்தத் தாக்குதலை தீவிரவாதிகள் நடத்தவில்லை என்கின்ற அமெரிக்க பாதுகாப்பு செயலகத்தின் அறிவிப்பு அமெரிக்காவின் ஏகாதிபத்திய இரட்டை நிலைப்பாட்டைக் வெளிப்படுத்தி நிற்கிறது.

இந்த நிலையில் காவல்துறையின் துப்பாக்கிப் பிரயோகத்தில் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்ட இந்த கொலைகளை மேற்கொண்ட 18 வயது Salvador Ramos ஒரு மனநோயாளி என்று செய்திகள் வெளியாகி உள்ளன. மேல் தட்டு நடுத்தர வர்க்க குடும்பத்தை சேர்ந்த அவன் வறுமையான தோற்றம் உடையவன் எனவும் அவனது தோற்றமும் அவன் அணியும் ஆடைகள் என்பனவும் அவன் படித்த அதே பள்ளியின் சக மாணவர்களால் கேலி செய்யப்பட்டதாகவும், இதனால் அவன் மன உளைச்சலுக்கு ஆளானதாகவும் பொலிசார் கூறுகின்றனர். இந்த மன உளைச்சலால் அவன் படிப்பை கைவிட்டு பாடசாலையை விட்டு வெளியேறியதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

அமெரிக்க அரச நிர்வாகம் பழைய நிகழ்வுகள் போல் இந்த சம்பவத்தையும் திசை திருப்பி அடக்கி வாசிக்க முயல்வது, வெளியாகும் முரண்பட்ட செய்திகள் மூலம் அறியமுடிகிறது.

கடந்த பத்தாண்டுகளில் அமெரிக்காவில் நடந்த மிகப்பெரிய இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்திற்கு முன்பு 2012ம் ஆண்டு இதேபோன்ற ஒரு சம்பவம் அமெரிக்காவின் கனெக்டிகட் (Connecticut) மாநிலத்து பள்ளி ஒன்றில் நடந்தது. அப்போது 19 வயது இளைஞன் ஒருவன் 20 மாணவர்களைக் கொன்றான். 1998 ஆம் ஆண்டு மற்றொரு அமெரிக்கப் பாடசாலை ஒன்றில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 5 பேர் கொல்லப்பட்டனர். இப்படி இது போன்ற கொலைகள் அவ்வப்போது நடந்தாலும் அமெரிக்க அரச நிர்வாகம் இந்த சம்பவங்களை பெரிதாக எடுத்துக் கொள்வதிலை என்பதும் குறிப்பிடத்தக்கது..

அமெரிக்காவில் பிரித்தனியர் ஆட்சிக் காலத்தில் பொலிஸ் மற்றும் நிரந்தர பாதுகாப்பு படை இல்லாத காரணத்தால் மக்கள் தங்களையும் தங்கள் குடும்பங்கள், உடைமைகளை பாதுகாக்கவும் ஆயுதங்களை வைத்திருக்க அவர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டது. இதற்காக 1791ம் ஆண்டு அங்கே இயற்றப்பட்ட சட்டம், குடிமக்கள் ஆயுதங்களை வைத்திருக்க அனுமதித்தது. இந்த சட்டமூலம் நாட்டின் அரசியல் சட்டத்திலும் சேர்க்கப்பட்டு அந்த அரசியல் அமைப்புச் சட்டம் இன்று வரை மாற்றப்பட முடியாமல் தொடர்கிறது.

துப்பாக்கி கலாச்சாரம் நாட்டில் அமைதியை நிலைநாட்ட அனுமதிக்காது என்கிற கருத்து சற்று மேலோங்கிய, 19 ஆம் நூற்றாண்டில், இந்த அரசியல் சட்டத்தை மாற்ற எடுத்த முயற்சிகள் அமெரிக்க அரசியலில் செல்வாக்கு செலுத்தும் NRA என அழைக்கப்படும் தேசிய துப்பாக்கி பாவனையாளர்கள் சங்கம் (NATIONAL RIFLE ASSOCIATION) உட்பட்ட பெரும் செல்வந்த முதலாளிகள் சம்மேளத்தினால் முறியடிக்கப்பட்டது. இந்த NRA அமைப்பில் குடியரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியுமான டொனல்ட் ட்ரம்ப் (Donald Trump), TEXAS மாநில செனட்டர் Teal Cruz ஆகியோர் உட்பட பல அரசியல் வாதிகள் முக்கியஸ்தர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இன்று, சராசரியாகெ அமெரிக்காவில் தினமும் 100 பேர் இந்த துப்பாக்கி கலாசாரத்தினால் இறக்கின்றார்கள் என்கிறது புள்ளிவிபரம் ஒன்று..

இன்றைய உலகில் அமெரிக்கா, மெக்சிகோ, ஹைட்டி மற்றும் குவாத்தமாலா ஆகிய நான்கு நாடுகளில் மட்டுமே குடிமக்கள் ஆயுதம் வைத்திருக்க முடியும் என்கிற அரசியலமைப்பு உரிமையைப் பெற்றுள்ளனர்.

ஆனாலும் மனித உரிமைகள், உலக அமைதி என்பன பற்றியெல்லாம் உலகிற்கு போதனை செய்யும் அமெரிக்கா, இவற்றின் பெயரில் விருதுகளையும் பட்டங்களையும் சான்றிதழ்களையும் விநியோகிப்பதற்கான சர்வதேச சந்தையை விரித்துள்ள அமெரிக்கா, தனது நாட்டு மக்கள் ஆயுதங்களை வைத்திருக்கவும் அப்பப்போ அதனை பயன்படுத்தவும் முடியும் என்கின்ற அரசியலமைப்பு உரிமையை நீக்க முடியாமல் தவிக்கிறது என்பதுதான் வேடிக்கையான வினோதம்.

பண்டைய காலத்துச் சூழலுக்கேற்ப இயற்றப்பட்ட, இன்றைய நவீன காலத்துக்கு ஏற்புடையதற்ற பல உளுத்துப் போன சட்ட மூலங்கள் பல நாடுகளில் மாற்றப்பட்டு வரும் சூழலில் இந்த மனித நேயத்திற்கு சவால் விடும் சட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு முடியாத நிலையில் இருக்கும் ஒரே நாடு என்றால் அது அமெரிக்கா மட்டுமேஇந்த நிலைமை மாறும் வரை இது போன்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் அந்த ஏகாதிபத்திய மண்ணில் இடம்பெற்றுக் கொண்டுதான் இருக்கப்போகிறது.

**கோவை நந்தன்...**

# என்னுயிர்த் தாயே!

இலக்கியச் செம்மல்,
கலாபூஷணம் சட்டத்தரணி
**ரஷீத்எம். இம்தியாஸ்**



பற்றோடும்பரிவோடும்
பாசத்தைப்பகிர்ந்தீர்கள்
கற்கள் உடைத்துமெமை
கற்றிடவே செய்தீர்கள்

உற்றார் உறவினரில்
உயர்வடையச் செய்தீர்கள்
ஊற்றாகநற்குணங்கள்
உணர்த்தி வளர்த்தீர்கள்

வற்றாது என் விழிகள்
வழிகிறதே உன் பிரிவால்
பெற்றெடுத்தஎந்தாயே
போற்றுகிறேன்நின்புகழை

அதிகாலை எழுப்பியே
இறையோனைதொழவைத்தாய்
ஓதிடவேஇறைமறையினை
ஒழுங்காகப் ஒப்புவித்தாய்

நீதியாய் நாம் நடந்திடவே
நல்லவற்றைபோதித்தாய்
ஜோதியாய் ஒளி தந்தேதான்
நேர்வழியைக்காட்டிட்டாய்

போதித்தநற்போதனையால்
பேர் புகழை பெறவைத்தாய்
சாதிக்கப் பல சாதனைகள்
சரியாக வழி சொலிட்டாய்

கந்தையுடைகள் என்றாலும்
கசக்கியேதான்கட்டிட்டாய்
சிந்தனைகளில் சிறந்ததையே
சீராகவேசொல்லிட்டாய்

நிந்தனைகள்செய்தோரை
நீக்கியேதான்வாழ்த்திட்டாய்
வஞ்சனைகள்செய்தோரை
வாழ்வினிலேஒதுக்கிட்டாய்

சொந்தங்கள்சொர்க்கமென
சேர்ந்து வாழச் சொன்னாயே
பந்தங்களேபாரில் நல்ல
பரிவாரங்கள்எனப்பகர்ந்தாய்

வீட்டுத்தோட்டமதில் நல்
விவசாயம் செய்திட்டாய்
நாட்டுக்குமதுநல்லதென
நாள்தோறும் உணர்த்திட்டாய்

கட்டுப்பாடாய்வாழ்வதனால்
காயத்தில்உயரலாமென்றாய்
திட்டமிட்டு வாழ்வதற்கே
தினந்தோறும் சொல்லிட்டாய்

சட்டப்படி யாம் வாழ்ந்திடவே
சரிவழியில்செலுத்திட்டாய்
பட்டங்கள் பல பெற்றிடவே
பரிவோடெமைபயிற்றுவித்தாய்.

எம்மைப்பிரிந்திப்போ பல
அகவைகள்தான் கடந்தாலும்
எங்கேயும் எப்போதும்தான்
ஏங்குதுள்ளம்ஆழ்த்துயராலே

அம்மாவுன்மறைவாலேஎம்
அன்புத்துணைஇழப்பாலே
நிம்மதியே இழந்து நாமும்
இதயத்தால் அழுகின்றோம்

எம்மையாளும்இறையோனே
அகிலமதைப்படைத்தோனே
எம்தாயின்மறுவாழ்வதனை
ஏற்றமுறவேயருள்புரிவாயே!

# அக்குறணைக்கு பெருமை சேர்த்த பாத்திமா ஸஹ்ரா



அக்குறணையைச் சேர்ந்த பாத்திமா ஸஹ்ரா அமெரிக்காவின் புகழ்பெற்ற பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்று, தனது ஊருக்கு கண்ணியத்தையும் கௌரவத்தையும் பெற்றுக் கொடுத்துள்ளார்.

அமெரிக்காவின் மிஸௌரி அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் (Missouri University of Science and Technology, MUS&T) தனது முனைவர் பட்டப் படிப்பை பெற்ற பாத்திமா ஸஹ்ரா தனது கல்வி வாழ்க்கையின் உச்சத்தை எட்டியுள்ளார். பாத்திமா ஸஹ்ரா ஸெல்வன் ஆப்தீன் தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை கண்டி பதியுதீன் மஹ்மூத் பெண்கள் கல்லூரியில் (1994_2004) ஆரம்பித்து, கண்டி பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் (2004_2007) உயர்தரப் படிப்பைத் தொடர்ந்தார். அதன்பிறகு 2008 இல் இலங்கையின் கண்டி, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நுழைந்து, தனது இளங்கலை ( BSc)ப் பட்டத்தை புள்ளிவிபரவியல் துறையில் 2ஆம் வகுப்பு உயர்தரத்துடன் சித்தியடைந்தார்.

அவர் BSc பட்டம் பெற்ற பிறகு, பட்டப் படிப்பின் போது பெற்ற சிறந்த மதிப்பெண்கள் காரணமாக, அதே பல்கலைக்கழகத்தில் இரண்டு ஆண்டுகள் பயிற்றுவிப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கடமையாற்றினார். இதற்கிடையில், அமெரிக்காவில் உள்ள மிஸௌரி அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் (Missouri University of Science and Technology, MUS&T) முதுகலைப் படிப்பைத் தொடர உதவியாளர் பதவி (assistantship) வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில், அவர் அமெரிக்காவில் உள்ள MUS&T இல் சேர்ந்து தனது முதுகலைப் பட்டத்தை (M.Sc.) மே 2020 இல் புள்ளிவிபரவியலைப் பிரதானமாகக் கொண்ட பயன்பாட்டுக் கணிதத்தில், பெற்றார். பின்னர் தனது ஆய்வறிக்கையை தனது சகாக்கள், பிற பேராசிரியர்கள் 5 பேர் முன்னிலையில் வெற்றிகரமாக மெய்ப்பித்தார். இதன் மூலம் மே 2022 இல் புள்ளிவிபரவியலை பிரதானமாகக் கொண்டு கணிதத்தில் முனைவர் (PhD) பட்டம் பெற்றார். பாத்திமா ஸஹ்ரா ஆப்தீன், அக்குறணை, மல்வானாஹின்னையில், கல்விப் பின்புலத்தைக் கொண்ட பிரபலமான குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் அல் ஹாஜ் எம்.எம். ஸைனுல் ஆப்தீன் மற்றும் அல் ஹாஜா திருமதி ஜி.எஸ்.எம். சித்தி ஃபௌசுல் ஹினாயாவின் சிரேஷ்ட புதல்வியாவார்.

**G.S.M. ஸியாத் முஹம்மத்,**
**அக்குறணை**

# கலாபூஷணம் விருது

தேசமான்ய லைட் சிவாஜி மௌலானா கலைஞர் கலைக்கமலுக்கு வழங்கினார். 1977களில் பாடகராக, கவிஞராக கலையுலகில் அறிமுகமானவர் கலைக்கமல். இதுவரை 5000 இற்கும் மேற்பட்ட இசை நிகழ்ச்சிகளில் கடந்த 40 ஆண்டுகளாக பாடி பல்லாயிரம் ரசிகர்களைக் கவர்ந்தவர். கதை, கட்டுரை, கவிதை துறையிலும் ஈடுபாடுள்ள கமல் 'ஒடக்குழல்' எனும் புதுக்கவிதை கதையை இலங்கையில் முதன் முதலில் எழுதி இலக்கிய உலகில் பிரபலமானார்.

இலங்கை வானொலியில் தமிழ் முஸ்லிம் சேவை நடத்திய இசை தேர்வில் 1996 ஆம் ஆண்டு சித்தியடைந்து வானொலி தொலைக் காட்சி மேடைகளிலும் பிரசித்திபெற்ற முன்னணி பாடகராக திகழ்ந்தார். 40 வருடகால வரலாறு காணும் வலம்புரி கவிதா வட்டத்தின் 5 ஸ்தாபகர்களில் இவரும் ஒருவர்.

2015 தென்னிந்திய கும்பகோணம் இசை இலக்கிய மாநாட்டில் இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட ஒரேயொரு பாடகராக 'இசைச்சுடர்' விருதும் பொற்கிழியும் வழங்கி கவிக்கோ அப்துல் ரகுமானால் கௌரவிக்கப்பட்டார்.



'கீத்ராத்' எனும் தனிமனித பாடல் நிகழ்ச்சியை 55 தடவைகள் நடத்தி ஜனரஞ்சகப் பாடகர் எனும் பாராட்டையும் பெற்றவர் கலைக்கமல். இந்தியா முதல் ஐரோப்பிய நாடுகளில் பாடியுள்ளதுடன் கலைகள், சுய பாடல் இறுவட்டுக்கள் 20 வெளியிட்டுள்ளார். '

மஹ்தூமி கஸீதா' குழுவின் தலைவரான கலைக்கமல் நாடளாவிய ரீதியில் பல நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்.

'இசைச்சுடர்', 'இசை மதி', 'ஈழத்து இசைமுரசு' எனும் பட்டங்களை பெற்ற கலைக்கமல் பிரபல பாடகர் இசையொறி மஸ்தூரும் ஏ காதர், ஜனுல் ஸெக்கியா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராவார்.

'கலாபூஷணம் அரச விருது விழா 2021' சிறப்பு மலரிலிருந்து.....

**தகவல் : ஜி.மகேந்திரன்**
**(கிரிஷாந்)**




# நெருக்கடி தீர்ப்பதற்கு தேசிய சபை அமைக்கும் யோசனையே சிறந்தது

**நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்கு தேசிய சபையை அமைப்பது என்ற யோசனையே சிறந்ததொன்றாகும் என முன்னாள் அமைச்சரும், ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார். எமக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

**கே: காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் மீது மே 09ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் தீவைத்தல் சம்பவங்கள் உள்ளிட்ட அசம்பாவிதங்கள் இடம்பெற்றுள்ளன. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் முன்னிலை சோசலிசக் கட்சியின் மாணவர்கள், அநுராதபுரம் விவசாய பீடத்தின் ஜே.வி.பி உள்ளிட்ட கட்சியின் மாணவர்கள் குழுவினராலேயே எனது வீடு அலுவலகம் உள்ளிட்ட சொத்துகள் தாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. அனுராதபுரம் நகரின் வர்த்தக அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய மக்கள் சந்தியின் உறுப்பினர்கள் மற்றும் சில வர்த்தகக் குழுவினரும் இதில் அடங்கியுள்ளனர். இதற்கு மேலதிகமாக அனுராதபுரம் மற்றும் புறநகர் பகுதிகளில் அரசியல் சார்பற்ற இளைஞர்கள் மற்றும் சில போதைக்கு அடிமையானவர்களும் இந்தக் கும்பல் தாக்குதல்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

சில அரசியல் கட்சித் தலைவர்கள் இளைஞர்களைத் தவறாக வழிநடத்தி, தூண்டிவிட்டு, அனுராதபுரத்தில் உள்ள அரசாங்க அரசியல்வாதிகளின் வீடுகளை மே 5ஆம் திகதி முதலில் தாக்கி, பின்னர் மே 9ஆம் திகதி அவர்களது வீடுகளுக்கும் சொத்துக்களுக்கும் தீவைத்தனர். இது சில அரசியல் கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட திட்டமிட்ட கும்பல் தாக்குதலாகவே நான் பார்க்கிறேன்.

## மே 09ஆம் திகதி தாக்குதலைத் தொடர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட வன்முறைகள் சில அரசியல் கட்சித் தலைவர்களின் பங்கேற்புடன் திட்டமிடப்பட்டவையாகும்!

**கே: பொதுஜன பெரமுன ஆதரவாளர்கள் அமைதியான போராட்டக்காரர்கள் மீது நடத்திய தாக்குதலின் விளைவே இவ்வாறான சம்பவங்கள் என சிலர் கூறுவதுடன், இதற்கு அரசாங்கம் முழுப்பொறுப்பேற்க வேண்டும் என சிலர் கருதுகின்றனர். இது பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?**


பதில்: அப்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக தீர்மானித்திருந்த நிலையில், அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்க மக்கள் அலரிமாளிகைக்கு வந்திருந்தனர். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மக்களை தூண்டிவிட சில அரசியல் தலைவர்கள் தலையிட்டமை வெளிப்படையாகும். அலரிமாளிகை மற்றும் காலிமுகத்திடலுக்கு முன்பாக ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை நாங்கள் செய்த தவறாகவே நான் பார்க்கிறேன்.

காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொதுஜன பெரமுன ஆதரவாளர்கள் குழுவொன்று தாக்குதல் நடத்த முயற்சித்ததால் இரு குழுக்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டது. அலரிமாளிகை கூட்டத்திற்கு மக்களை அழைத்து வந்த பேருந்துகள் மற்றும் வாகனங்கள் தீவைத்து கொளுத்தப்பட்டதுடன், அதில் கலந்து கொண்டவர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட சிலரால் பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்களுக்கு மனிதாபிமானமற்ற தண்டனை வழங்கப்பட்டது. முதலில் எங்கள் தரப்பில் தவறு நடந்திருந்தால், எங்கள் கட்சி ஆதரவாளர்கள் மீதான எதிர்த் தாக்குதல் அதை விட நூறு மடங்கு மோசமானது. உண்மையில், அலரிமாளிகை மற்றும் காலிமுகத்திடலுக்கு முன்னால் நடந்த சம்பவங்கள் அந்த இடங்களிலேயே முடிந்திருக்க வேண்டும். அந்தச் சம்பவங்களை சாக்காக வைத்து வன்முறைக் கும்பல் 70 க்கும் மேற்பட்ட ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கு தீவைத்துள்ளது.

மேலும், மாகாண அரசியல்வாதிகள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களின் 600 முதல் 700 வீடுகளும் அழிக்கப்பட்டுள்ளன. அந்தக் கும்பல்களால் தாக்குதல்கள் நன்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பது மிகவும் வெளிப்படையாகத் தெரிகிறது. ஜே.வி.பியின் சில தலைவர்கள், எல்லா இடங்களிலும் தாக்குதல்களை நடத்துவதற்கு விரைவாக செய்திகளை வழங்கியதாக சமூக ஊடகங்களில் கூறுவதை நாம் காண முடிந்தது.

அதேபோன்று பிரபல நடிகை ஒருவர் பொதுஜன பெரமுன அரசியல்வாதிகளின் வீடுகளுக்கு தீவைக்குமாறு பேஸ்புக்கில் கருத்துத் தெரிவித்திருந்தார். அரசியல்வாதிகளின் வீடுகளை அழித்தவர்கள் மற்றும் ஆதரவாளர்களைத் தாக்கியவர்கள் இப்போதும் அவர்கள் செய்ததை நியாயப்படுத்த முயற்சிக்கின்றனர்.

தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைப் பற்றி அவர்கள் பேசுவதில்லை. ஊடகங்களும் அரசியல்வாதிகளும் கூட அந்தப் கும்பல்களின் தாக்குதல்கள் பற்றி பேசுவதில்லை அது மிகவும் தவறானது. நாங்கள் செய்த தவறை நாங்களும் ஒப்புக் கொள்கிறோம். ஆனால், எமது ஆதரவாளர்களைத் தாக்கி எமது அரசியல்வாதிகளின் சொத்துகளை அழித்தவர்கள் செய்த தவறு அதை விடப் பாரதூரமானது.



**கே: காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல்கள் மற்றும் வீடுகள் மற்றும் சொத்துகளை அழித்த ஏனைய கும்பல்களின் தாக்குதல்களை தடுக்க பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை எடுக்கவில்லை என பாராளுமன்றத்தில் கூட கவலை தெரிவிக்கப்பட்டது. இதுபற்றி என்ன கூறுகின்றீர்கள்?**

பதில்: நமது நாட்டில் ஆயிரக்கணக்கான பாதுகாப்புப் படையினரும், பொலிஸ்துறையினரும் உள்ளனர். நாட்டின் மற்றும் அதன் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அவர்கள் உள்ளனர். காலிமுகத்திடலில் தாக்குதலைத் தடுத்திருந்தால் அந்த அழிவு தடுக்கப்பட்டிருக்கும். போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலைத் தொடர்ந்து நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட அழிவுகளைப் பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் தடுத்திருக்க வேண்டும்.

முப்படை மற்றும் பொலிஸ்துறையினரின் சம்பளம் வரி செலுத்துவோரின் பணத்தில் இருந்து வழங்கப்படுகிறது. எனவே, அரசியல்வாதிகளின் வீடுகள் மற்றும் சொத்துகளுக்கு ஏற்படும் அழிவைத் தடுக்கும் பிரதான பொறுப்பு அவர்களுக்கு இருந்தது. பில்லியன்கணக்கான சேதங்கள் ஏற்பட்டுள்ளன, மேலும் அந்தப் பேரழிவைத் தடுக்கும் திறன் பாதுகாப்புப் படையினருக்கு இருந்தது. இருப்பினும், பல்வேறு காரணங்களால் அது நடக்கவில்லை. அந்தத் தாக்குதல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்காததற்கு பாதுகாப்புத் தரப்பினர் பொறுப்பேற்க வேண்டும் என்றும் நான் பாராளுமன்றத்தில் கூறினேன். இதே நிலை நீடித்தால், நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படும்.

இறுதியாக கம்போடியா, லெபனான், ஈராக் மற்றும் லிபியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட இதே போன்ற சூழ்நிலைகளுக்கு இது வழிவகுக்கும். எனவே, எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க பாதுகாப்புப் படையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதுகாப்புப் படையினர் எப்போதும் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். நீதித்துறையும் சுதந்திரமாக இருக்க வேண்டும். உண்மையில் உலகில் சர்வாதிகார ஆட்சியாளர்கள்தான் போராட்டங்கள் மூலம் மக்களால் விரட்டியடிக்கப்பட்டனர். பெரும்பாலான ஜனநாயக நாடுகளில் இது நடக்கவில்லை. எனவே, 6.9 மில்லியன் மக்கள் ஆணையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியை 24 மணி நேரத்திற்குள் நீக்க முடியாது. ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணை கொண்டு வரப்பட்டால், அது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும்.

தற்போதைய ஜனாதிபதி இன்னும் இரண்டு ஆண்டுகள் பதவியில் இருக்க வேண்டும். எனவே, இந்த நடைமுறையை பின்பற்ற வேண்டும் என்றால், குறைந்தது இரண்டு ஆண்டுகள் ஆகும். அரசியலமைப்புச் சட்டத்தின்படி, ஜனாதிபதி பதவி விலகவில்லை என்றால் அவரை பலவந்தமாக பதவி நீக்கம் செய்ய முடியாது.

எனினும், பிரதமரை பதவி விலகுமாறு ஜனாதிபதி கோரலாம். இல்லையெனில், நம்பிக்கையில்லாப் பிரேரணையைப் பாராளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றலாம். அதனால்தான் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தாமாக முன்வந்து பதவி விலகினார். தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க பெரும்பான்மையான பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வேறு சில அரசியல் கட்சிகளின் சம்மதத்துடன் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.


நாம் அனைவரும் அறிந்தவரையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பல சர்வதேச உறவுகளைக் கொண்டுள்ளார் மற்றும் சர்வதேச சமூகத்துடன் நெருக்கமாகப் பணியாற்றுகிறார். பிரதமர் தனது கடந்த கால தவறுகளைத் திருத்திக் கொண்டு முன்னோக்கி நகர்கிறார் என்பது வெளிப்படை. அது அவருடைய நடத்தை மற்றும் வேலைத்திட்டத்தின் மூலம் தெளிவாகத் தெரிகிறது. பிரதமர் தனது பணியை சரியாக நிறைவேற்றுவார் என அனைவரும் நம்புகிறோம். நாம் கவனமாக முன்னோக்கிச் சென்றால், பொருளாதாரத்தில் சில மாற்றங்களை ஏற்படுத்தவும், தற்போதைய சிக்கலான சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்கவும் முடியும்.

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சர்வதேசத்துடன் உறவுகளைக் கொண்டுள்ளார். அவர் சர்வதேச சமூகத்துடன் நெருக்கமாகப் பணியாற்றுகிறார். பிரதமர் தனது பணியை சரியாக நிறைவேற்றுவார் என அனைவரும் நம்புகிறோம்

## “எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி செய்கிறார்கள். நாங்களும் எதிர்க்கட்சியில் இருந்த போது அதைத்தான் செய்தோம். தேசிய கவுன்சில் அமைக்கப்பட்டால், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் அதில் பங்குதாரர்களாக மாறலாம்

**கே: பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது குறித்து கவலைகள் எழுந்தபோது, பாராளுமன்றத்தின் பிரதிசபாநாயகராக எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ரோகினி குமாரி விஜேரத்னவை தெரிவு செய்யாததற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதிருப்தி தெரிவித்தனர். இந்த விஷயத்தில் கட்சித் தலைவர்களால் ஏன் ஒருமித்த கருத்தை எட்ட முடியவில்லை?**

(05ஆம் பக்கம் பார்க்க)




# மனிதநேயம் எங்கே ஒளிந்து கொண்டது?

‘கண்ணுக்குக் கண்’ இல்லையென்றால் ‘பல்லுக்குப் பல்’ என்ற நியாயம் காட்டுமிராண்டி பழங்குடியினரிடம் காணப்பட்டது. காட்டுவாசி கலாசார அடையாளங்களைத் தாண்டிய மக்கள் சமூகம் நவீன விஞ்ஞான யுகத்தில் நுழைந்துள்ளது. சமூக ஒழுக்கம், மதரீதியான கொள்கைகள் மனிதனை ஒழுக்கமுள்ளவனாக மாற்றியுள்ளன.

சமூகத்தின் வளர்ச்சியானது கட்டடங்கள் மற்றும் வாகனங்கள் மாத்திரமல்ல. மனிதாபிமானமும் முக்கியம். அமைதி,பொறுமை இல்லாமல் எதிர்காலப் பயணம் இல்லை. அண்மையில் இடம்பெற்ற இன்னும் முடிவினை காணாத மோதல்கள் எமக்கு எவற்றைக் கற்பிக்கின்றன? உயர்ந்தவர்கள் எனக் கூறிக் கொண்டாலும், நாமும் ‘பல்லுக்குப் பல்லும் கண்ணுக்குக் கண்ணுமே’ கேட்கின்றோம்.

எமது சமூகம் திருந்துவதற்கு முயற்சி செய்வதில்லை. பேச்சுவார்த்தையால் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி செய்வதில்லை. அது ஆச்சரியமான நிலைமையாகும். புரட்சி, குழப்பம் மற்றும் ஜுலை கலவரங்கள் பற்றிய எமது துயரங்களை மறக்கக் கூடாது. பழைய ஞாபகங்களால் துயரப்படும் சமூகம் மீண்டும் வன்முறையை தெரிவு செய்தது ஏன்? பாதைகளில் கொல்லப்பட்ட, எரியூட்டப்பட்ட மனித உயிர்களை ஒருபோதும் இலகுவாக மறந்து விட முடியாது. அவ்வாறு இருக்கையில், நபர்களைத் தாக்கி கொல்லுமளவுக்கு மனிதாபிமானமற்ற தன்மை ஏற்படுவது எவ்வாறு?

மக்கள் பிரதிநிதிகள், அப்பாவி மக்கள் தாக்கப்பட்டு கொல்லப்படுமளவுக்கு கொடூரமான நாட்டின் நிலைமையை நியாயப்படுத்த முடியாது. நீதிமன்றத்தால் விதிக்கப்படும் மரண தண்டனை அமுலாக்கப்பட மாட்டாது என நம்புகின்ற பின்னணியில் இவ்வாறான சம்பவங்களை அனுமதிக்க முடியாது.

அண்மையில் நிகழ்ந்த இந்தச் சம்பவங்கள் கடந்த இனவாத கலவரத்தில் நாட்டுக்கு ஏற்படுத்திய அழிவை விட பெரும் துயரமாகும். இனவாதத்தை ஒருபுறம் வைப்போம். இனவாதத்தை தாண்டிய அடிப்படைவாத அரசியல் மோதலாகும். வீடுகளை எரிக்கின்ற மற்றும் அவற்றில் உள்ள பெறுமதி வாய்ந்த பொருட்களை கொள்ளையடிக்கும் காட்சிகளை அழிக்க முடியாது. அயலவரின் வீடு இன்று எரியூட்டப்படுவதைப் பார்க்கும் எமது வீடும் நாளை எரிக்கப்படலாம் என்பதை மறந்து விடலாகாது. பிரிவினையால் வெறுப்புக்கு உள்ளான சமூகத்தில் அது நடைபெறலாம். ஒரே நாட்டில் வாழும் போது மாற்றுக் கருத்துகளைக் கொண்ட நபர்களை அழிக்க எண்ணும் மனிதாபிமானம் எவ்வாறானது? ஒரு தரப்பார் மீது மாத்திரம் குற்றம் சுமத்த முடியாது. இரண்டு மூன்று தரப்பார் இதன் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆவேசத்தை தூண்டும் அனைவரும் இதன் பங்குதாரர்களே.

போராட்டத்துக்குள் நடந்தது என்ன? சட்டத்தை மதிக்காது செயல்பட்டார்கள். சட்டம் மற்றும் விதிகள் மீறப்படுவது மோசமான நிலையாகும். எமது ஒழுக்கத்தை மீறுவது எவ்வாறு? பெரியோர்கள் மற்றும் இலட்சியவாதிகளின் பாத்திரங்களால் அடிப்படையான சமூகத்தின் தற்போதைய தன்மை பற்றி எம்மால் திருப்தி அடைய முடியுமா? சர்வதேசத்தின் முன்னால் உயர்ந்த மனிதர்களாக மனித உரிமை பற்றி பேசும் எம்மால் அயலவரின் கருத்தை பொறுக்க முடியாது போயுள்ளது. அது பெரும் தவறாகும்.

வன்முறையாளர்கள் பாதையை ஆக்கிரமிக்கும் வரை பாதுகாப்புப் பிரிவினர் பின்வாங்கியது தவறு எனத் தெரிகிறது. பாதைகளை மறித்து, வாகனங்களை தடுத்து நிறுத்தி வன்முறை அதிகரிக்கும் வரை பாதுகாப்புப் பிரிவு சட்டம் பின்னடையும் போது அராஜகம் கோலோச்சுகிறது. உணவு உண்ணும் விலங்குக்கு துன்பம் விளைவிக்காத, உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடுகின்ற கொடிய பாம்புக்குக் கூட பாதுகாப்பு வழங்கும் அளவுக்கு உயர்ந்த குணங்களை கொண்ட சமூகம் இவ்வளவு தூரம் சீரழிந்ததற்கான பொறுப்பை நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.


எம் அனைவருக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள் உள்ளன. நாம் இவற்றை ஜனநாயக ரீதியில் தீர்த்துக் கொள்ள வேண்டும். பெரும்பான்மையினரின் விருப்பத்திற்கு அமைய தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு பிரச்சினையை தீர்க்கும் ,நாட்டை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. முறைகள் தோல்வியடைந்துள்ளதை ஏற்றுக் கொள்ளலாம். உயர்வு தாழ்வு நிலை ஏற்படலாம். அவற்றை சரி செய்வதற்கு பின்பற்ற வேண்டிய முறைகள் உள்ளன.

ஒழுக்கமுள்ள சமூகமே இலக்காக இருக்க வேண்டும். வெறுப்போ குரோதமோ பிரச்சினையை தீர்ப்பதற்கான வழியல்ல. ஆத்திரமான நடவடிக்கையால் ஏற்படுவது அழிவேயாகும். பின்பற்றும் மதம், பெரியோர்களின் புத்திமதி, ஆலோசனைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாதது நல்லதல்ல. இறுதியில் எமக்கு நிம்மதியை தருவது மனசாட்சி மட்டுமே என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# 116- ஆம் வருட புகாரி பெரிய கந்தூரியும் ஞாபகார்த்த நிகழ்வும்

மகான் அல்குதுபு ஸெய்யிது முஹம்மது ஜலாலிய்யில் மௌலல் புகாரிய்யில் காதிரிய்யில் கண்ணூரிய்யி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ் அவர்களின் 236 ஆம் வருட ஞாபகார்த்த நிகழ்ச்சியும் சங்கைக்குரிய அல்குதுபு ஸெய்யிது அப்துல் காதிர் தைக்கா ஸாஹிபு கிர்கரி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ், சங்கைக்குரிய அல்குதுபு அப்துல் காதிர் கல்வத்து நாயகம் கிர்கரி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ் மற்றும் மஷாயிகுமார்களின் பெயரால் ஸில்ஸிலா மஜ்லிஸும் மனாகிபும் தரீக்கத்துல் அரூஸிய்யத்துல் காதிரிய்யாவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய அஷ்ஷெய்க் அல்அல்லாமா அப்ழுழுல் உலமா தைக்கா அஹ்மத் நாஸிர் ஆலிம் ஜலாலி அவர்களின் தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பி.ப. 1.00 மணியளவில் தமாம் செய்யப்படும்.



அனைவரும் கலந்து நாதாக்களின் துஆ பறக்கத்தை பெற்றுக் கொள்ளுமாறு கொழும்பு 10, மருதானை, இமாமுல் அரூஸ் மாவத்தையில் அமைந்துள்ள அல் மஸ்ஜிதுல் புகாரி தைக்கா நிர்வாக சபை வேண்டிக் கொள்கின்றது. (பெண்கள் வருவது தடை)

# உர விநியோகத்தை உறுதிசெய்ய 600 மில்லியன் டொலர் தேவை

## விவசாய பிரதிநிதிகளிடம் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு

நாட்டில் போதியளவு உர விநியோகத்தை உறுதிப்படுத்த 600 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விவசாயத் துறை பிரதிநிதிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் போது தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், வங்கிகள் டொலரை விடுவித்தால் உர நிறுவனங்களுக்கு தேவையான உர அளவுகளை வழங்க முடியுமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விவசாயப் பொருட்களை தடையின்றி வழங்குவதையும் விநியோகிப்பதையும் உறுதிசெய்யும் புதிய சட்டமான அத்தியாவசிய விவசாயப் பொருட்கள் சட்டத்தை பாராளுமன்றத்தில் முன்வைக்கப் போவதாகவும் பிரதமர் விளக்கினார்.

உக்ரைன் யுத்தம் காரணமாக உலகம் கோதுமை மற்றும் உரத் தட்டுப்பாட்டுக்கு முகம்கொடுத்துள்ளதாக பிரதமர் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தட்டுப்பாடு அதிகரிக்கும் போது, உடனடியாக தீர்வுக்கான நட வடிக்கை எடுக்கப்படாவிட்டால், இலங்கையின் உணவு விநியோகம் மோசமடையுமென்று அவர் விளக்கினார்.

நகர்ப்புறங்களில் பயன்பாட்டில் இல்லாத நிலங்களைக் கண்டறிந்து விவசாயம் செய்ய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். நாட்டின் நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாகவும், அதைக் கடக்க வேண்டுமானால் ஒருங்கிணைந்த முயற்சி தேவையென்றும் பிரதமர் வலியுறுத்தினார்.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, துறைமுகங்கள் மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க ஆகியோரும் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

# ரயில் கட்டணங்களை அதிகரிக்க தீர்மானம்

## தொழிற்சங்கம் உறுதியாக இருப்பதாக தகவல்

ரயில் கட்டணங்கள் அதிகரிப்பு உள்ளிட்ட ரயில்வே திணைக்களத்திலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் அடுத்த வாரம் போக்குவரத்து அமைச்சருடன் கலந்துரையாடவுள்ளதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையைக் கருத்திற் கொண்டு ரயில் டிக்கெட் விலையை உயர்த்தும் முடிவில் தமது தொழிற்சங்கம் உறுதியாக இருப்பதாக தொழிற்சங்கத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். எவ்வாறாயினும், கட்டண அதிகரிப்பு ரயில் பயணிகளுக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் போக்குவரத்து அமைச்சரிடம் முன்மொழிவுகளை வழங்க அதிகாரிகள் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சிரேஷ்ட DIG மார் சிலருக்கு...

பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன தென்மாகாணத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார். சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் எல்.கே.டபிள்யூ. கே. சில்வா கிழக்கு மாகாணத்திலிருந்து குற்றவியல் மற்றும் போக்குவரத்து பிரிவுற்கு இடமாற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## KKS துறைமுகம் ஊடாக...

எஸ்.ஜெயசங்கருடன் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடியுள்ளார்.

தொலைபேசியூடாக நேற்று நடைபெற்ற, இரு அமைச்சர்களுக்கும் இடையிலான கலந்துரையாடலில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட இந்திய வெளியுறவு அமைச்சர், கடற்றொழில் அமைச்சரின் இம் முயற்சிகளுக்கு இந்திய அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதற்கு தயாராக இருப்பதாக உறுதியளித்துள்ளார்.

## இந்தியாவின் அவசர மருத்துவ...

சுகாதாரஅமைச்சின் செயலாளர் ஜானக சந்த்ரகுப்தவும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தார்.

இம்மனிதாபிமான உதவிப் பொருட்களை துரிதமாக விநியோகிப்பதற்காக இந்திய கடற்படைக்குச் சொந்தமானதும் நேரடியாக தரையிறங்கல் வசதியுடையதுமான 5,600 தொன் நிறைகொண்ட கரியால் கப்பல் சாகர் IX பணியின் ஓர்அங்கமாக சேவையில் அமர்த்தப்பட்டிருந்தது. மருத்துவப் பொருட்களுக்கு மேலதிகமாக இலங்கை மீனவர்களின் பயன்பாட்டுக்காக மண்ணெண்ணெய் இக்கப்பல் மூலமாக தருவிக்கப்பட்டுள்ளது. அடுத்துவரும் நாட்களில் இலங்கை மீன்பிடிதுறைமுக கூட்டுத்தாபனமூடாக இந்த மண்ணெண்ணெய் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

நாட்டின் பல்வேறு பாகங்களிலுமுள்ள மருத்துவமனைகள் மற்றும் அமைப்புகளூடாக விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் முகமாக இந்த மருத்துவபொருட் தொகுதி நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் மார்ச் இலங்கைக்கு வருகை தந்திருந்தபோது சுவசெரிய மன்றத்தின் பிரதிநிதிகளும் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஹர்ஷ டி சில்வாவும் தமது மருத்துவ தேவைகள் தொடர்பாக சுட்டிக்காட்டியிருந்ததையடுத்து இத்தேவைகள் தற்போது நன்கொடை மூலமாக நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக ஹம்பாந்தோட்டை பொதுவைத்தியசாலை, பேராதனை போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆகியவற்றுக்கும் மருந்து மற்றும் மருத்துவ பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

பேராதனை போதனா வைத்தியசாலையின் பயன்பாட்டுக்காக மற்றொரு பாரிய தொகுதி மருத்துவப் பொருட்கள் கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி ஐ.என்.எஸ்.கரியால் மூலமாக விநியோகிக்கப்பட்டிருந்தது. நிதி உதவி, அந்நிய செலாவணி ஆதரவுகள், மூலப் பொருட்கள் வழங்கல் போன்ற பல்வேறு வடிவங்களிலான உதவிகளை இலங்கை மக்களுக்காக இந்திய அரசாங்கம் வழங்கிவரும் இச்சந்தர்ப்பத்தில் அதன் தொடர்ச்சியாக இந்த மனிதாபிமான உதவிப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

## கச்சதீவை வழங்க முடியாது...

குறிப்பாக மீனவர்களின் நிலைப்பாடு கச்சதீவை வழங்க முடியாது என்பதே. அது எங்களுடைய மீனவர்களுக்கு பாதிப்பாக அமையும்.

எனவே, கச்சதீவை வழங்க முடியாது, அதற்கான வாய்ப்பில்லை. தமிழக மீனவர்களின் கோரிக்கையை ஏற்று அவ்வாறு ஒரு கோரிக்கையை தமிழக முதலமைச்சர் விடுத்திருக்கலாம். ஆனால், அதற்கான வாய்ப்புக்களில்லை. தமிழக முதலமைச்சரின் இந்தக் கோரிக்கை தொடர்பில் தமிழக மற்றும் ஈழத்தமிழ் உறவில் பாதிப்புக்கள் ஏற்படாது.

ஒரு விடயத்தில் வெவ்வேறு கருத்துகள் இருக்கலாம். ஆனால், அது உறவில் பாதிப்பை ஏற்படுத்தாது என்றார்.

## எரிபொருளுக்காக மாதாந்தம்...

தற்போதைய எரிபொருள் நெருக்கடி நிலையில், கைத்தொழில், அரச நிறுவனங்கள், வைத்தியசாலைகள் மற்றும் விருந்தகங்கள் என்பவற்றின் மின் கட்டணங்கள் மூன்று மடங்காக அதிகரிக்கக்கூடும். எனவே சூரிய சக்தி கட்டமைப்பு மூலம் இத் துறையினர் தமது மின்சார கட்டணங்களை கட்டுப்படுத்த முடியும்.

இலங்கை மின்சார சபை, நீர் மற்றும் அனல்மின் நிலைய கட்டமைப்புக்கள் மூலம் தமது செலவீனங்களை குறைக்க முடியும்.

இந்தநிலையில், தொழில்நுட்ப மற்றும் நிதி என்பனவற்றை மதிப்பீடு செய்வதன் மூலம் தெரிவு செய்யப்பட்ட புதுப்பிக்கத்தக்க திட்டங்களை துரிதப்படுத்த முடியுமென வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, 20 ஆயிரத்து 598 மெற்றிக் தொன் டீசல் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் கையிருப்பிலுள்ளதாகவும் அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

1, 778 மெற்றிக் தொன் சுப்பர் டீசல் கையிருப்பிலுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

42 ஆயிரத்து 750 மெற்றிக் தொன் ஒக்டேன் 92 ரக பெற்றோலும், 06 ஆயிரத்து 579 மெற்றிக் தொன் ஒக்டேன் 95 ரக பெற்றோலும், 03 ஆயிரத்து 104 மெற்றிக் தொன் ஜெட் ஏ1 ரக எரிபொருளும் கையிருப்பிலுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தனது டுவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளார்.

கப்பல் ஒன்றிலிருந்து மசகு எண்ணெய் இன்று தரையிறக்கப்படுவதாக வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார்.

அத்துடன், இன்று, டீசல் தாங்கிய கப்பலொன்று நாட்டை வந்தடையவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.அதேநேரம், கொலன்னாவை மற்றும் முத்துராஜவளை எரிபொருள் முனையங்களில் கையிருப்பிலுள்ள எரிபொருள் தொகை தொடர்பான தகவல்களையும் அவர் தனது டுவிட்டர் பதிவொன்றில் வெளியிட்டுள்ளார்.

## இலங்கைக்கு இந்தியா மேலும்...

மொரகொட, இலங்கையின் தற்போதைய நிலை குறித்து அமைச்சர் சீதாராமனிடம் விளக்கினார்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்துடனான பொருளாதார வேலைத்திட்டம் இறுதி செய்யப்படும் வரை இலங்கைக்கு இணைப்பு நிதி தேவைப்படுமென்றும் அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

இந்தச் சூழலில், அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் எரிபொருளுக்கான கடன்கள் மற்றும் கொடுப்பனவு போன்ற வடிவங்களில் இந்தியா வழங்கும் உதவிகளை அதிகரிப்பது மற்றும் மறுசீரமைப்பு செய்வதற்கான சாத்தியக்கூறுகளையும் இருவரும் ஆராய்ந்தனர்.

## கறுப்புச் சந்தையில்...

12.5 கிலோ சமையல் எரிவாயுவே இவ்வாறு 15 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இதனால் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சாதாரண மக்கள் பலரும் சமையல் எரிவாயுவை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருப்பதுடன், இது தொடர்பில் பாவனையாளர் அதிகார சபையினர் கூட கவனம் செலுத்தவில்லை எனவும் பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

## செல்வந்தர்களுக்கு நிவாரணம்...

அச்சிடப்படுவது செல்வந்தர்களுக்கு மேலும் நிவாரணங்களை வழங்கவா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதென சஜித் தெரிவித்துள்ளார்.

கோடீஸ்வரர்கள் பில்லியன், ட்ரில்லியன் கணக்கான ரூபா வரியை செலுத்தத் தவறியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரி ஏய்ப்புச் செய்துள்ள தொகைக்கு நிகரான பணத்தை அச்சிட்டு மேலும் அவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசாங்கம் ஆயத்தமாகின்றதா? என சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியுள்ளார்.

சில செல்வந்தர்கள் இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி என்பனவற்றில் பெருந்தொகை கடன் பெற்றுக்கொண்டு மீளச் செலுத்தவில்லையெனவும், இந்தக் கடன் தொகைகளை அறவீடு செய்வது கைவிடப்படுமா? என அவர் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார்.

## '21'திருத்தத்துக்கு...

தலைமையகத்தில் அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, இந்த சட்டமூலத்துக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் இணக்கம் ஏற்பட்டதாக இந்த கலந்துரையாடலில் பங்குபற்றிய அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன் அந்த திருத்தசட்டமூலத்துக்கு தேவையான யோசனைகளையும் முன்வைக்க தீர்மானிக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

சர்வகட்சி கலந்துரையாடலின் போது அது தொடர்பான யோசனைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படுமென அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். உத்தேச 21 ஆவது திருத்தச்சட்டமூலம் அண்மையில் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்டவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென மைத்திரிபால சிறிசேன அறிவித்திருந்த போதிலும் 21 ஆவது திருத்த சட்டம் தொடர்பான கட்சியின் இன்றைய கூட்டத்தில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முத்தமிழ் அறிஞரின் 98 ஆவது...

எதிர்வரும் 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது. முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் வே. ராதாகிருஷ்ணன், முன்னாள் இந்து சமய கலாசார அமைச்சர் பி. பி தேவராஜ் மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணியின் செயலாளர் கே. ரி குருசாமி, அரசியல் பிரமுகர் உமா சந்திர பிரகாஷ் மற்றும் வர்த்தகப் பிரமுகர்களான எஸ். தில்லைநாதன், சோலைமலை தேவர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

கலைஞர் கருணாநிதி தொடர்பான நினைவுப் பேருரையை கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை எஸ். தில்லை நடராஜா நிகழ்த்துவார். கவி வாழ்த்தை இளநெஞ்சன் முர்சுதீன், திருமதி. யோகேஸ்வரி லோகநாதன் ஆகியோர் நிகழ்த்துவதுடன் விழாவில் பத்திரிகை ஆசிரியர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், கல்விமான்களென பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## எங்கள் கருத்து...

# காலம் மட்டும் கடந்து சென்றாலும் கண்டது இதுவரை எதுவுமில்லை...

அவ்வாறானவர்களிடையே பசியும் தாகமும் அதனால் ஏற்படும் தாக்கமும், ஏக்கமும் மேலோங்கும்போது அவை போராட்டங்களாக வெடிக்கின்றன.

எனினும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டின் சட்டம், ஒழுங்கு என்பன சீர்குலைந்து விடக்கூடாது. என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அரசாங்கமும் அவ்விடத்தில் தனது கடமையை செய்யவே முனைகிறது.

அரசியல் தலைமைகளில் மாற்றங்கள் ஏற்பட்டபோதும் தொடரும் கஷ்ட நிலைமையில் இன்னமும் எந்த மாற்றமும் இல்லை என்பது மக்களது குற்றச்சாட்டாக உள்ளது. அந்த வழமையான நிலைமை இப்போதைக்கு மாறாது என்பதாக அரசு தனது கருத்தை முன்வைக்கிறது. அது உண்மை. ஆனால் பசிக்கு உணவு கேட்கும் மக்களுக்கு அரசு ஏதாவது செய்தே ஆக வேண்டும்.

அந்த வகையில் இந்தியாவினதும், தமிழக மக்களதும் உதவிகள் ஓரளவு கைகொடுப்பதாக உள்ளன. இந்தியாவில் தமிழகத்தில் மட்டுமல்லாது பல இடங்களிலும் அங்குள்ள மக்கள் வாழ்வாதாரத்துக்கு சிரமப்படுகின்ற நிலையிலும் இந்தியா இலங்கை மக்களுக்கு உதவ முன்வந்தமை பாராட்டுக்குரியது.

இதேபோன்று ஏனைய வசதி படைத்த நாடுகளிடம் கேட்டுப் பெற்று மக்களைக் காப்பாற்ற வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். இதில் கௌரவம் பார்ப்பதற்கு எதுவும் கிடையாது. அதனை அரசாங்கம் செவ்வனே செய்து வருகின்றது. எனினும் இன்னும் வேகமாக அந்த முயற்சிகளில் ஈடுபட்டு மக்களுக்கு நிவாரணத்தை வழங்கி அவர்களை பட்டினிச் சாவிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

இந்த ஒரு இக்கட்டான பொருளாதார சூழ்நிலையில் சிக்கி மக்கள் அவதிப்பட்டு கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் கட்சி அரசியல் பேசுவது அநாகரிகம் என்பதை தினகரன் இடித்துரைக்க விரும்புகிறது.

## 21ஆவது திருத்தச் ...

மாலை அலரி மாளிகையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

21ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கட்சித் தலைவர்களின் அவதானிப்பு மற்றும் முன்மொழிவுகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது தற்போதைக்கு முன்வைக்கப்பட்டுள்ள திருத்தச் சட்ட நகலை பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு கூடிய விரைவில் நடைமுறைப்படுத்த இணக்கம் காணப்பட்டுள்ளது.

இக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தவிர்க்க முடியாத காரணங்களினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கலந்து கொள்ளவில்லை. இருப்பினும், எதிர்வரும் வெள்ளிக்கிழமை அவர்கள் கலந்து கொள்ளும் வகையில் இறுதிக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையே 21ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான மேலதிக விளக்கங்கள் தேவைப்படுவோர் நீதி அமைச்சரைத் தொடர்பு கொண்டு அதனைப் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## காணாமல் போன 09 வயது...

சம்பவத்தில் குறிப்பிடப்படும் வானை பரிசோதித்ததாகவும் பொலிஸார் தெரிவித்திருந்தனர். அத்துடன் அந்த வானுக்கும் சிறுமி காணாமல் போயுள்ளமைக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் கடந்த வெள்ளிக்கிழமை, காலை 10 மணியளவில் காணாமல் போனதாகக் கூறப்படும் இந்த ஒன்பது வயது சிறுமியைக் கண்டுபிடிப்பதற்காக பொலிஸார் நாடு முழுவதும் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர். சிறுமி அட்டுலுகம பிரதேசத்தில் வசிப்பதுடன் உள்ளூர் பாடசாலையொன்றில் தரம் 04 இல் கல்வி பயின்றும் வந்துள்ளார். பாணந்துறை பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமந்த வெதகே, மேலதிக பொலிஸ் அத்தியட்சகர் உபாலி தலகல ஆகியோரின் ஆலோசனையின் கீழ் இவ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

அதன்படி பண்டாரகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆர்.சி.ராஜபக்ஷ, மகளிர் மற்றும் சிறுவர் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் பி.வி.ஏ.ஹேமமாலினி, பொலிஸ் பரிசோதகர் மிஹிலார் அநுர, பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் சதுரிகா உள்ளிட்டோரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

சிறுமியின் உறவினர்கள் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து நீண்ட நேரம் அவரை தேடியும் கிடைக்காததையடுத்து பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

இதேவேளை, பாணந்துறையில் வசிக்கும் சிறுமியின் நெருங்கிய உறவினர் ஒருவர் தொடர்பிலும் விசாரணைக் குழு கவனம் செலுத்தியுள்ளது. புறக்கோட்டை பிரதான பஸ் நிலையத்தில் பெண் ஒருவருடன் சிறுமி இருப்பதாக முகநூலில் தகவல் வெளியிடப்பட்டிருந்தது. இதன்படி, கொழும்பு பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்க பண்டாரகம பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

சிறுமி காணாமல் போவதற்கு முன்னைய நாள் இரவு அணிந்திருந்த உடையை மோப்பம் பிடித்த பொலிஸ் மோப்ப நாய் "ட்ரோணோ" சிறுமி கோழி இறைச்சி வாங்கச் சென்ற கடை வரை சென்று நின்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறுமி கடைக்குச் சென்று திரும்பிய போது பதிவாகியுள்ள சிசிரிவி காணொளி கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர். அதனை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகள் முன்னெடுத்த போதும் சிறுமியை கண்டு பிடிக்க முடியாமல் போனது.

இந் நிலையிலேயே சிறுமி பாத்திமா ஆயிஷா சடலமாக அவரது வீட்டுக்கு அருகிலுள்ள சதுப்பு நிலத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் அட்டுலுகம பிரதேசத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளதுடன் பட்டப்பகலில் கடைக்குச் சென்ற சிறுமி எவ்வாறு சதுப்பு நிலப்பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டார் என்பது பற்றியும் சிறுமிக்கு ஏதேனும் செய்துள்ளனரா? என்பது பற்றியும் பொலிஸார் தீவிர விசானைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

## இலங்கைக்கு உதவிகளை...

பேராசிரியர் ஜி.எல். பீரிஸை சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த சந்திப்பின் போது, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சராக மீண்டும் நியமிக்கப்பட்டமைக்கு வாழ்த்துக்களையும் உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

பல பொருளாதார சவால்களை சமாளிக்க ஒத்திசைவான உத்திகளை வகுக்கும் அதே வேளையில் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகத்தை உறுதி செய்வதில் அரசாங்கம் கவனம் செலுத்துவதாக அமைச்சர் விளக்கினார். நீண்ட கால பொருளாதார மீட்சியில் பலதரப்பு நிறுவனங்களுடன் ஈடுபடும் அதே வேளையில், இந்தக் காலகட்டத்தில் கிடைத்த இருதரப்பு உதவிகளை இலங்கை பாராட்டியது.

இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளை தாங்கள் புரிந்து கொண்டுள்ளதாக தெரிவித்த உயர்ஸ்தானிகர், இருதரப்பு மற்றும் பலதரப்பு வழிகள் உட்பட இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான வழிகளை ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்தார். சமூகத்தின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினரை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டிய நலன்புரி நடவடிக்கைகளை அமைச்சர் எடுத்துரைத்தார்.

சட்டம் ஒழுங்கைப் பேணுதல் மற்றும் குடிமக்களின் வாழ்வுக்கு இடையூறு விளைவிக்கும் வன்முறைச் சம்பவங்களைத் தடுப்பதில் கவனம் செலுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகள் குறித்தும் அமைச்சர் உயர்ஸ்தானிகரிடம் விளக்கினார். அரசியலமைப்பின் 21ஆவது திருத்தம் குறித்து தற்போது அரசியல் கட்சிகள் ஆய்வு செய்து வருவதாக அமைச்சர் விளக்கமளித்தார். தற்போதைய பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும், மோதல்களின் பின்னரான நல்லிணக்கம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கம் முன்னேற்றம் காணத் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இலங்கையில் முதலீட்டுத் தெரிவுகளை இங்கிலாந்து அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக உயர்ஸ்தானிகர் ஹல்டன் தெரிவித்தார். காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை நிவர்த்தி செய்யும் நிலையான ஆற்றல் திட்டங்கள் மற்றும் பசுமைப் பிணைப்புகளில் இலங்கை கணிசமான ஆற்றலைக் கொண்டுள்ளது. அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் மற்றும் உயர்ஸ்தானிகர் ஹல்டன் ஆகியோர் பொது நலவாயம் தொடர்பான முன்னேற்றங்கள், மகத்துவ மகாராணியின் பிளாட்டினம் விழாக் கொண்டாட்டங்கள் மற்றும் ருவாண்டாவின் கிகாலியில் நடைபெறவுள்ள பொது நலவாய அரச தலைவர்கள் மாநாடு ஆகியன குறித்தும் கலந்துரையாடினர்.

# 16 மில்லியன் டொலர் பெறுமதியான தமிழக நிவாரண பொருட்கள்

# 40 லட்சம் குடும்பங்களை சென்றடையும்!

(கடந்த இதழ் தொடர்ச்சி...)

தமிழரை விரோதிகளாகவும், தமிழ் மொழி மற்றும் கலாசாரத்தை தரம் குறைந்ததாகவும் பார்ப்பது என்பது அரசியல் இலாபங்களை அறுவடை செய்வதற்காக சிங்கள அரசியல்வாதிகளினால் உருவாக்கப்பட்ட ஒரு பொறிமுறை. இன்றைய மொழியில் மாயை அல்லது அதை ஒரு செயலி என்றும் சொல்லலாம். வடக்கு கிழக்கை எடுத்துக் கொண்டால் சிங்கள வெறுப்பு என்பதும் தமிழர் வாக்குகளை அறுவடை செய்வதற்காக போஷித்து வளர்க்கப்படும் ஒரு மனப்பான்மைதான். அரசியல் அறுவடைகளுக்காகத்தான் இரு சமூகத்துக்குமிடையேயும் இரும்புத்திரை விலக்கப்படாமல் உள்ளது என்பதை இரு தரப்பிலும் எத்தனை சாமானியர் புரிந்து கொண்டிருக்கிறார்களோ தெரியவில்லை.

தமிழருக்கு உரிமைகள் கொடுக்கப்பட்டால் திறமைசாலிகளாகக் கருதப்படும் அவர்கள் சிங்களவர்களையும் விஞ்சி விடுவார்கள் சிங்கள பிரதேசங்களுக்குள்ளும் ஊடுருவ ஆரம்பிப்பதோடு தனிநாட்டுக்கான ஏற்பாடுகளையும் செய்ய ஆரம்பித்துவிடுவார்கள். எனவே காணி, பொலிஸ், நீதிமன்ற அதிகாரங்களை எல்லாம் வழங்கிவிடக் கூடாது என்ற கருத்தை சிங்கள மக்களின் மண்டையில் அடிஅடியென அடித்து இறக்கி வைத்திருக்கிறார்கள் அரசியல்வாதிகளும், படித்தவர்களும் மற்றும் ஊடகங்களும். சிங்கள ஊடகங்கள் தொடர்ச்சியாக ஒரு பக்க சார்பான கருத்துகளையும் செய்திகளையும் தான் அளித்து வருகின்றன என்பது பொதுவான மனிதர்களின் நீண்டகால குற்றச்சாட்டு.

தமிழர் தரப்பை எடுத்துக் கொண்டாலும் இதே கதைதான். சிங்கள சமூகத்துக்கு எதிராக கொம்பு சீவி வைத்தால்தானே தமிழ் சமூகத்தின் வாக்குகளை கச்சிதமான சேகரிக்கலாம்! சிங்கள தரப்பிலோ கொம்பு சீவுவதற்கு தமிழகத்தை கூர்மையான கத்தியாக பாவிக்கிறார்கள். ஒரு காலத்தில் வறுமை மற்றும் வணிக காரணங்களின் பேரில் இலங்கைக்கு தமிழர்கள் அனுமதி பெற்றும் பெறாமலும் வரத்தான் செய்தார்கள். 1967 இல் தமிழக ஆட்சியைக் கைப்பற்றிய தி.மு.க. அரசும் பின்னர் அ.தி.மு.க. அரசும் ஏராளமான திட்டங்களை வகுத்து விவசாயத்தையும் தொழில்துறையையும் பிரமாண்டமான அளவுக்கு வளர்ந்தெடுத்தன. ஐ.டி. தொழில்துறை பெரிய அளவில் முன்னேற்றம் கண்டது. இன்று வறுமை அங்கு பிய்த்து பிடுங்கும் அளவில் இல்லை. உழைப்பதற்கான வாய்ப்புகள் ஏராளம். அப்படியும் கூட அங்கே ஏழைகளை ஆதரிப்பதற்காக இன்றைக்கும் நியாய விலைக் கடைகள் இயங்குகின்றன. இலவசமாக அரிசி, குடும்ப அட்டைக்கு மளிகைப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

ஐம்பது வருடங்களின் பின்னர் தமிழகம் இந்தியாவின் முன்னணி வகிக்கும் மாநிலங்களில் ஒன்றாகக் திகழ்கிறது. கழக அரசியல்வாதிகள், தலைவர்கள் லஞ்ச, ஊழல் மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்டது உண்மைதான். அதேசமயம் அந்தக் குற்றவாளிகளைத் தேடிக் கண்டுபிடித்து தண்டனை வழங்கும் பொறிமுறையும் அங்கே இயங்கிக் கொண்டுதான் இருக்கிறது. சமீபத்திய உதாரணம் ஜெயலலிதா. குற்றவாளியாகவே அவர் இறந்தார்.

இலங்கையில் கடந்த எழுபது ஆண்டுகளில் எந்தவொரு அரசியல்வாதியும் அல்லது உயர் அரச அதிகாரியும் லஞ்ச, ஊழல், முறைகேடுகளில் சிக்கி குற்றவாளியாக சிறை சென்றதுமில்லை. அவ்வாறு சென்றிருந்தாலும் மன்னிப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதை நாம் அவதானிக்கவே செய்தோம். கடந்த ஐம்பது ஆண்டுகளில் தமிழகம் பெரு வளர்ச்சி அடைந்து பொருளாதார ரீதியாக ஸ்திர நிலையை அடைந்திருக்கிறது.

அதே ஐம்பது ஆண்டுகளில் இலங்கை பின்னடைவை சந்தித்து, லஞ்ச லாவணியங்களில் திளைத்த அரசியல்வாதிகளினால் மொட்டையடிக்கப்பட்ட நாடாக மாறியுள்ளது.

வீட்டு வாசற்படியில் கோட்டான் கூவிய பின்னர்தான் சிங்கள சமூகம், குறிப்பாக இளைஞர் சமூகம் விழித்துக் கொண்டுள்ளது தாமதமாகத்தான்.

2009 யுத்தத்தால் வன்னிப் பெருநிலத்து மக்கள் சின்னா பின்னமாக்கப்பட்ட சமயத்தில் தமிழகத்தில் இருந்து நிவாரண பொருட்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டன. அவை பாதிக்கப்பட்ட மக்களுக்காக அனுப்பப்பட்டவை. தற்போது தமிழக மக்கள், கடுமையான பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியிருக்கும் ஒட்டு மொத்த இலங்கையர்களுக்காகவும் நிவாரண பொருட்களை அனுப்பி வைத்துள்ளனர். மொத்தம் 123 கோடி ரூபா (இந்திய) பெறுமதி கொண்ட பொருட்களே சேகரிக்கப்பட்டு மூன்று சரக்கு கப்பல்களில் அவை ஏற்றப்பட்டன.

கடந்த 22ம் திகதி கொழும்பு துறைமுகம் வந்து சேர்ந்த 'டொன்பின் 99' என்ற கப்பலில் ஒன்பதாயிரம் மெற்றிக்தொன் அரிசி, 50 மெட்றிக் தொன் பால்மா, 55 வகையான மருந்து வகைகளைக் கொண்ட 25 மெட்றிக் தொன் மருந்து பொருட்கள் என்பனவே முதல் தொகுதியாக வந்தடைந்த நிவாரண பொருட்களாகும்.

சென்னை துறைமுகத்தில் இக்கப்பலை தமிழக முதல்வர் கொடி அசைத்து அனுப்பி வைத்தார். தமிழக அரசின் இந்த நிவாரண பொருட்களை இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிசிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைத்தார். இவை இரண்டு பில்லியன் இலங்கை ரூபா பெறுமதி கொண்டவை. மேலும் இரண்டு கப்பல்கள் வரவுள்ளன.




மூன்றாவது கப்பல் ஜூன் 5ம் திகதி சென்னையில் இருந்து புறப்படுகிறது. தமிழக அரசின் இந் நிவாரண உதவியின் மொத்தப் பெறுமதி 16 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். 40 ஆயிரம் மெட்றிக் தொன் அரிசி, 500 மெட்றிக் தொன் பால்மா மற்றும் மருந்துகள் இவற்றில் அடக்கம்.

**தமிழகம் தொடர்பான சிங்கள சமூகத்தின் தவறான கண்ணோட்டத்தை, நிவாரண உதவி போக்கும் வகையில் ஊடக வெளிச்சம் தரப்பட வேண்டும்**




தமிழக அரசு நிவாரண பொருட்களை இலங்கைக்கு அனுப்பத் தீர்மானித்தபோது அது தமிழர்களுக்கு மட்டுமே என்ற முடிவு செய்யப்பட்டிருந்தது. அதற்கு இலங்கையில் இருந்தே எதிர்ப்பு கிளம்பியது. தமிழர்களுக்கு மட்டுமே உதவி என்பது சரியல்லவூ இன்றைய பொருளாதாரக் கஷ்டம் அனைத்து இலங்கையருக்கும் பொதுவானது. எனவே அனைவரும் பயனடையம் வகையில் பொருட்களை அனுப்பி வையுங்கள் என்று இங்கிருந்து விடுக்கப்பட்ட கோரிக்கையை தமிழக முதல்வர் ஸ்டாலின் ஏற்றுக் கொண்டார். எங்களுக்கு மட்டுமல்ல; அனைத்து இலங்கையருக்கும் உதவுங்கள் என விடுக்கப்பட்ட கோரிக்கையைக் கேட்டு தான் நெகிழ்ந்து போனேன் என்று அவர் கூறவும் செய்தார்.

இதேசமயம் இலங்கையில் நிலவும் கடும் மருந்து தட்டுப்பாட்டை ஓரளவுக்கு குறைக்கு வகையில் இந்தியா 25 தொன் மருந்து வகைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ள செய்தியும் தற்போது வந்துள்ளது. இம் மருந்து வகைகளின் இலங்கை பெறுமதி 26 கோடி ரூபாவாகும். இது தவிர இந்திய மத்திய அரசு இதுவரை ஐந்து பில்லியன் டொலர்களுக்கும் மேல் கடனாக வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த அளவுக்கு வேறெந்த நாடும், இலங்கைக்கு இக்கஷ்ட காலத்தில் உதவவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எந்த இந்தியாவை இலங்கை பெரும்பான்மை சமூகம் தவறான கண்ணோட்டத்தில் பார்த்து வந்ததோ அல்லது அவ்வாறு பார்க்க பழக்கப்படுத்தப்பட்டதோ அதே நாடு தான் இன்றைக்கு இலங்கையின் உற்ற தோழனாக உதவியும் வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 22ம் திகதி கொழும்பு வந்தடைந்த முதல் கட்ட நிவாரண பொருட்களை வடக்கு, கிழக்கு, நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பமாகி விட்டதாகவும் யாழ்ப்பாணத்துக்கு அரிசியும் பாலும் அனுப்பப்பட்டு விட்டதாகவும் எம்முடன் பேசிய செந்தில் தொண்டமான் தெரிவித்தார்.

'மூன்று கப்பல்களிலும் வரும் பொருட்கள் மொத்தம் 40 லட்சம் குடும்பங்களை சென்றடையும் வகையில் திட்டமிட்டுள்ளோம். தோட்டங்களில் விநியோகிப்பதில் பிரச்சினை எழாது.

ஒரு குடும்பத்துக்கு பத்து கிலோ அரிசி என்ற வகையில் பங்கீடு செய்யப்படவுள்ளது. குழந்தைகள் உள்ள குடும்பத்துக்கு பால்மா வழங்கப்படும். வடக்கில் குடும்ப அட்டை வழக்கில் உள்ளதால் வருமானம் குறைந்த குடும்பங்களை தெரிவு செய்வதில் சிக்கல் இருக்காது. நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு அரச அதிபர் ஊடாக குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு தமிழக நிவாரண உதவி பகிர்ந்தளிக்கப்படும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது' என்று சொல்கிறார் செந்தில் தொண்டமான்.

கள்ளத்தோணி என எள்ளிநகையாடப்பட்ட தமிழகத்து தமிழர்களின் சட்டமன்ற பிரதிநிதிகள் 123 கோடி ரூபா நிவாரண உதவிகள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்ற முதல்வரின் தீர்மானத்தை ஏகமனதாக அங்கீகரித்திருந்தார்கள். அங்கே யாசகர்களும் இந் நிதிக்கு பணம் வழங்குகிறார்கள். மொய் விருந்து நடத்தியும் பணம் சேகரித்துத் தருகிறார்கள். இலங்கை குடிமக்களுக்கு உதவ வேண்டும் என்ற உயிர்த்துடிப்பை எம்மால் உணர முடிகிறது.

இலங்கை வீழ்ந்துவிட்டது. அதில் இரண்டாவது கருத்து கிடையாது. இப்போது இது யாசிக்கும் காலம். எவ்வளவு காலத்துக்கு இது நீடிக்கும் எனத் தெரியவில்லை. எம்மிடம் ரூபாவும் இல்லை, டொலரும் இல்லை என்பதே யதார்த்தம். வெளிநாடுகளில் வாழ்வோர், தொழில்கள் செய்வோர் முதலில் இலங்கைக்கு பணம் அனுப்ப வேண்டும். இண்டாவது, உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு பெருமளவில் வருகை தர வேண்டும். எல்லாம் பற்றாக்குறையாக காணப்படும் இக்காலத்தில் வெளிநாட்டுப் பயணிகள் இந்நாட்டுக்கு வருவார்களா என்பது பெரியதொரு கேள்வி. மூன்றாவதாக பெருமளவு வெளிநாட்டு முதலீடுகள் வந்துசேர வேண்டும். கனரக கைத்தொழில் துறையிலும் தொழில்நுட்பத் துறையிலும் பெருமளவு முதலீடு செய்யப்பட வேண்டியது அவசியம்.

இவை எல்லாம் உடனடியாக நடந்துவிடப் போவதில்லை. கடந்த 50 ஆண்டுகளில் எந்தவொரு ஆசிய நாடும் வங்குரோத்தடைந்ததில்லை.

இன்று இலங்கை தோற்றுப்போன நாடு. நாம் எழுந்து கொண்டாலும் கூட அச்சமயத்தில் எம்மைச் சுற்றியுள்ள அனைத்து நாடுகளுமே அபிவிருத்தியில் வெகுதூரம் சென்றிருக்கும். பிரதமர் மோடி ஐரோப்பிய ஒன்றியத்துடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ளவுள்ளார். மேலும் குவாட் நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் இந்தியா, இந்தோ பசுபிக் நாடுகளுடன் வர்த்தக உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளவுள்ளது.

இலங்கை அரசியல்வாதிகள் வாய்ப்பந்தலுடன் நிற்க, ஏனைய பிராந்திய நாடுகள் காரியத்தில் கண்ணாக உள்ளன.

இலங்கையின் மிகப்பெரிய குறைபாடு, அது எவற்றை எல்லாம் களைந்திருக்க வேண்டுமோ அவற்றை எல்லாம் இன்றைக்கும் கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பதுதான். இலங்கையின் பிரதான பலவீனம் அதன் மதவாதம். அடுத்தது இனவாதம். இவை இண்டும் அரசியல்வாதிகளை வளர்த்தெடுக்க உதவியதே தவிர நாட்டின் அபிவிருத்திக்கு எள்ளளவும் உதவவில்லை.

இனிமேலாவது இந்த பலன்தராத உத்திகளில் இருந்து அரசியல்வாதிகள் மாறவேண்டும். ஏனெனில் மக்கள் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். பழைய ஏமாற்று வேலைகள் எல்லாம் அத்துப்படி அவர்களுக்கு தமிழக நிவாரண உதவியை எடுத்துக் கொண்டால் அதற்கு போதுமான ஊடக வெளிச்சம் தரப்பட்டதாகத் தெரியவில்லை. குறிப்பாக சிங்கள ஊடகங்களில். தமிழக மக்களின் உதவிக்கரம் பற்றி போதிய தகவல்கள் சிங்கள ஊடகங்களுக்கு தரப்பட்டிருப்பதாகவும் அறிய முடியவில்லை. அந்த மனிதாபிமான உதவிக்கு அதிகபட்ச ஊடக வெளிச்சம் தரப்பட வேண்டும் என்பதற்கான நியாயங்களை நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இதே சமயம் இப்பொருட்களின் பங்கீடு தொடர்பாக செந்தில் தொண்டமானிடம் மேலதிக விவரங்களைப் பெறுவதற்காக அவருடன் தொடர்பு கொள்ள பல தடவைகள் முயன்றபோதிலும் அது சாத்தியப்படவில்லை.

**அருள் சத்தியநாதன்...**

---

## நெருக்கடி தீர்ப்பதற்கு தேசிய சபை... (03ஆம் பக்கத் தொடர்)

பதில்: ஆளும் கட்சியின் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் நானும் கலந்து கொண்டேன். பின்னர் பிரதிசபாநாயகராகப் பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த அஜித் ராஜபக்ஷவை நிறுத்த இணக்கம் காணப்பட்டது. கட்சித் தலைவர்கள் கூட்டங்களில் நான் கலந்து கொள்வதில்லை. பிரதி சபாநாயகர் பதவிக்கு பெண் வேட்பாளரை நியமிக்க கட்சித் தலைவர்கள் ஏகமனதாக முடிவெடுத்திருந்தால், நாட்டிற்கு நல்ல முன்மாதிரியை வழங்கியிருப்போம். இருப்பினும், அந்த வாய்ப்பை இழந்தோம், அதற்காக நான் வருந்துகிறேன்.

**கே: அரசாங்கத்தின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை தற்போது 109 பாராளுமன்ற உறுப்பினர்களாக குறைந்துள்ளதாகவும் பாராளுமன்ற பிரதிசபாநாயகரை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பின் போது அது தெளிவாகக் காணப்பட்டதாகவும் பிரதான எதிர்க்கட்சி விமர்சிக்கிறது. இது பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?**

பதில்: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரொஷான் ரணசிங்க விமான நிலையத்திலிருந்து நாடு திரும்பியதைத் தொடர்ந்து பாராளுமன்றத்திற்கு வரத் தாமதமானதால் அவரால் வாக்களிக்க முடியவில்லை. மேலும், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரும் கலந்து கொள்ளவில்லை. மேலும் ஆறு ஆளும் கட்சி உறுப்பினர்களில் சிலர் உடல் நிலை சரியில்லாததாலும், சிலர் வெளிநாடு சென்றிருப்பதாலும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. அனைவரும் வந்திருந்தால் 117 வாக்குகளை எளிதாகப் பெற்றிருக்க முடியும். எவ்வாறாயினும், புதிதாக நியமிக்கப்பட்ட பிரதமருக்குத் தேவையான 113 வாக்குகளை நாம் காட்ட முடியும். அதே போன்று, ஜனாதிபதிக்கு எதிரான அதிருப்திப் பிரேரணை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட போது, பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது ஆதரவை வழங்கியிருப்பார்கள். எவ்வாறாயினும், அது நடக்கவில்லை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு எதிராக 119 வாக்குகள் கிடைக்கப் பெற்றதுடன், ஆதரவாக 68 வாக்குகளே கிடைத்தன. அந்தப் பிரேரணையை தோற்கடிப்பதன் மூலம் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவை மேலும் பலப்படுத்த முடிந்தது.

**கே: நாடு எதிர்நோக்கும் தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண தேசிய சபையொன்றை அமைக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது விசேட அறிக்கையில் கோரிக்கை விடுத்திருந்தார். இது பற்றி என்ன கூறுகின்றீர்கள்?**

பதில்: தற்போதைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண தேசிய சபை அல்லது நஷனல் கவுன்சில் அமைப்பது நல்லதொரு நடவடிக்கையாக அமையும்.

அனைத்துக் கட்சித் தலைவர்களும் கைகோர்த்து அத்தகைய சபையை உருவாக்கினால், யாராலும் மற்றவர்களை நோக்கி விரல் நீட்டி விமர்சிக்க முடியாது. மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது இங்கு அரசுக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே மிகப் பெரிய இடைவெளி உள்ளது. எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எப்படியாவது ஆட்சியைக் கைப்பற்ற முயற்சி செய்கிறார்கள். நாங்களும் எதிர்க்கட்சியில் இருந்த போது அதைத் தான் செய்தோம். தேசிய கவுன்சில் அமைக்கப்பட்டால், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் அதில் பங்குதாரர்களாக மாறலாம். அப்போது அவர்கள் நாட்டுக்குத் தேவையான தேசியக் கொள்கையை வகுக்க முடியும்.

# அரசியல் கலாசாரத்தை மாற்றியமைத்தால் மாத்திரமே நாட்டில் இனிமேல் ஸ்திரத்தன்மை!

**நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை உறுதியாகப் பேணும் நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய அமைச்சர்கள் பதவியேற்றிருந்தனர்.**

இவர்களில் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் மாத்திரமன்றி ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள், சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள்மற்றும் ஆளும் கட்சியிலிருந்து சுயாதீனமாகச் சென்ற 10 கட்சிகளின் கூட்டணியின் உறுப்பினர் எனப் பலரும் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் அரசியல் ரீதியில் நீண்டகால ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் நோக்கில் புதிய அமைச்சரவையில் 21 ஆவது திருத்தத்துக்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள விஜயதாச ராஜபக்ஷ கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தற்பொழுது நடைமுறையில் உள்ள 20 ஆவது திருத்தத்தைத் திருத்தும் வகையிலும், 19வது திருத்தத்தில் காணப்பட்ட முக்கியமான விடயங்களை மீண்டும் நடைமுறைப்படுத்தும் வகையிலும் 21 ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவதற்கான யோசனையை முன்வைத்திருந்தார்.

குறித்த வரைவை கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடுவது என கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக சுயாதீன ஆணைக்குழுக்களைப் பலப்படுத்துவது, பாராளுமன்றத்தின் அதிகாரத்தை மேலும் உறுதிப்படுத்துவது போன்ற விடயங்கள் இந்த யோசனையில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

அதேநேரம், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் சுயாதீனக் குழு சார்பில் 19 ஆவது திருத்தத்தை மீண்டும் கொண்டுவரக் கூடிய 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டமூலம் தனிநபர் சட்டமூலங்களாக சபாநாயகரிடம் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் அதன் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார தனிநபர் சட்டமூலத்தைச் சமர்ப்பித்திருந்தது டன், சுயாதீனக் குழு சார்பில் விஜயதாச ராஜபக்ஷ மற்றுமொரு தனிநபர் சட்டமூலத்தை சமர்ப்பித்திருந்தார்.

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் உயர்பதவிகளுக்கு நியமிக்கப்படுவதைத் தடுப்பது, பாராளுமன்றத்தின் அதிகாரத்தைப் பலப்படுத்தி ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்தல் உள்ளிட்ட பல யோசனைகள் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் நீதி அமைச்சராக நியமிக்கப்பட்ட விஜயதாச ராஜபக்ஷ அரசாங்கத்தின் சார்பில் 21வது திருத்தச்சட்டமூலத்துக்கான வரைவை அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார். இருந்தபோதும் இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரைபில் முன்னர் பல தரப்பினராலும் முன்மொழியப்பட்டிருந்த முக்கியமான விடயங்கள் உள்ளடக்கப்படவில்லையென்றும், குறிப்பாக இரட்டைப் பிராஜவுரிமை விடயம் உள்ளிட்டவை அதிக கவனம் செலுத்தப்படவில்லையென்றும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. குறிப்பாக இரட்டைப் பிரஜாவுரிமை விடயத்தை நீக்குவதற்கு பொதுஜன பெரமுனவினர் விரும்பவில்லையென்ற என்ற கருத்துக்களும் முன்வைக்கப்பட்டிருந்தன.

இருந்தபோதும், கடந்த வெள்ளிக்கிழமை பிரதமர் தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் 21 ஆவது திருத்தம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இதில் சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், 43வது படையணி, விமல் வீரவன்ச உள்ளிட்ட 10 கட்சிகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



இரட்டைப் பிரஜாவுரிமை விடயத்தை 21 ஆவது திருத்தத்தில் இல்லாமல் செய்வது என்பதில் உறுதியாக இருக்க வேண்டும் எனக் கட்சித் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர். சுயாதீன ஆணைக்குழுகளைப் பலப்படுத்துவதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும், ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இருந்தபோதும் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதை இரண்டாம் கட்டமாக முன்னெடுப்பது என்றும், சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லாத அரசியலமைப்புத் திருத்தமொன்றுக்குத் தற்பொழுது செல்வது என்ற முடிவும் இங்கு எடுக்கப்பட்டுள்ளது. அதே நேரம், இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கலந்து கொள்ளாமையால் அவர்களையும் இணைத்துக் கொண்டு எதிர்வரும் 03ஆம் திகதி மீண்டும் கூடி 21வது திருத்தச்சட்டமூல வரைபை இறுதிப்படுத்துவது என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

## 21 ஆவது திருத்தம் மீது பல்வேறு தரப்பினரும் ஆர்வம்

இந்தக் கூட்டத்தில் தேசிய மக்கள் முன்னணி கலந்து கொண்டிருக்கவில்லை என்றபோதும் அவர்கள் தமது யோசனைகளை நீதி அமைச்சருக்கு அறிவிப்பதாகத் தெரிவித்துள்ளனர். இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் பாராளுமன்றத்துக்கோ அல்லது ஏதாவது உயர்பதவிக்கோ தெரிவு செய்யப்படுவதைத் தடுப்பது, அமைச்சுக்களின் செயலாளர்கள் அரசியலமைப்புப் பேரவையின் மாத்திரம் ஊடாக நியமிக்கப்படுவது, பாராளுமன்றத்தின் காலத்தைக் குறைப்பது, ஜனாதிபதி அமைச்சுப் பதவியை வகிப்பதைத் தடுப்பது உள்ளிட்ட திருத்தங்கள் 21 ஆவது திருத்தச்சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்று அவர்கள் முன்மொழிந்துள்ளனர். அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் கட்சிகளின் கூட்டத்தில் இவ்விடயமும் கவனத்தில் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது இவ்விதமிருக்க, பாராளுமன்ற குழுக்களைப் பலப்படுத்துவது தொடர்பிலும் கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்றன. 'கோப் குழு' என அறியப்படும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு மற்றும் 'கோபா குழு' என அறியப்படும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு உள்ளிட்டவற்றை மேலும் பலப்படுத்தி, அவற்றின் செயற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்கில் பாராளுமன்ற நிலையியற் கட்டளையில் திருத்தங்களைக் கொண்டுவரவிருப்பதாக சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்திருந்தார். இதற்கான யோசனையை அடுத்த பாராளுமன்ற அமர்வு வாரத்தில் கையளிக்கவிருப்பதாகவும் அவர் கூறியிருந்தார்.

இலங்கையின் அரசியல் கலாசாரத்தை மாற்ற வேண்டிய தேவையை போராட்டக் காரர்கள் உள்ளிட்ட பலரும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் நிலையில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த அரசியல் ரீதியான மாற்றம் அவசியம் என்பதை அரசாங்கமும் ஏற்றுக் கொண்டுள்ளது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் கூட அண்மையில் 21 ஆவது திருத்தச்சட்டமூலத்துக்கான யோசனையை அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார். அனைத்துத் தரப்பினரும் இந்த விடயத்தை ஏற்றுக் கொண்டிருப்பதால் அரசியல் கட்சிகள் தமக்கான பொறுப்பினை சரியாக நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டும் என்பதே மக்களின் விருப்பாகும். நாட்டில் ஸ்திரமான அரசியல் நிலைமையொன்று காணப்பட்டாலே பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடிவதுடன், சர்வதேச நாடுகளும் இலங்கைக்கு உதவிகளை வழங்கும்.

**நாட்டில் நிலைபேறான அரசியல் உறுதிப்பாடொன்று நிலவினாலேயே, பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடிவதுடன், சர்வதேச நாடுகளும் இலங்கைக்கு உதவிகளை வழங்கும் என்பதே யதார்த்தம்!**

பி.ஹர்ஷன்...

---

# எட்டு வருட கால பா.ஜ.க ஆட்சியில் வலிமையடைந்துள்ள ஜனநாயகம்

## குவாட் அமைப்புக்கு புத்துயிரூட்டியுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் ஜப்பானிய விஜயம்

**இந்தியாவில் கொரோனா அச்சுறுத்தல் தணிவு நிலைமைக்கு வந்துள்ளதையடுத்து பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் தற்போது வெளிநாட்டு சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு வருகிறார். சமீபத்தில் பௌத்த மக்களின் புனித தினமான வெசாக் நிகழ்ச்சிகளில் பங்கேற்கவென பிரதமர் மோடி நேபாளத்துக்கு பயணம் மேற்கொண்டிருந்தார். அந்நாட்டுடன் பல்வேறு இருதரப்பு வர்த்தக ஒப்பந்தங்களையும் பிரதமர் மோடி செய்திருந்தார்.**







இந்தியாவுக்கும் நேபாளத்துக்கும் இடையிலான இராஜதந்திர உறவில் சமீப காலமாக சிறுவிரிசல் நிலவி வந்த நிலைமையில், பிரதமர் மோடியின் அவ்விஜயமானது இந்திய_நேபாள இருதரப்பு உறவுகளை மீண்டும் துளிர்விடச் செய்திருப்பதாக சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர். இந்தியாவின் நெருங்கிய நட்பு நாடாக நேபாளம் தற்போது உள்ளதாக அவர்கள் கூறுகின்றனர்.

பிரதமர் நரேந்திர மோடி நேபாள நாட்டுக்கான தனது விஜயத்தை முடித்துக் கொண்டு சில தினங்களுக்கு முன்னர் ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டிருந்தார். ஜப்பானிய அரசினால் பிரதமர் மோடிக்கு பெருவரவேற்பு வழங்கப்பட்டது. அத்துடன் ஜப்பானில் வாழும் இந்திய மக்கள் நரேந்திர மோடிக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். ஜப்பானில் பல்வேறு வைபவங்களில் அவர் கலந்து கொண்டார்.

இந்தியாவில் எட்டு வருட கால பா.ஜ.க ஆட்சியில் ஜனநாயகம் வலிமையாகவும் மீள்தன்மை கொண்டதாகவும் மாறியுள்ளதாக ஜப்பான் வாழ் இந்தியர்கள் மத்தியில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்தார்.

'குவாட்' நாடுகள் கூட்டத்தில் பங்கேற்பதற்காகவே இரண்டு நாள் சுற்றுப் பயணமாக நரேந்திர மோடி ஜப்பான் சென்றிருந்தார். ரஷ்யா_ உக்ரைன் போர் காரணமாக 'குவாட்' அமைப்பில் நிறைய சிக்கல் ஏற்பட்டிருந்தன. இந்தியாவின் நிலைப்பாட்டை 'குவாட்' அமைப்பில் உள்ள அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகள் விரும்பவில்லை என்றும் கூறப்பட்டது. இதனால் 'குவாட்' அமைப்பு தொடர்ந்து பயன்பாட்டில் இருக்குமா என்ற சந்தேகமும் நிலவியது. இந்த நிலையில்தான் 'குவாட்' அமைப்பைப் பலப்படுத்துவதற்காக பிரதமர் மோடி ஜப்பான் சென்றிருந்தார். இதனால் ஜப்பான் சென்றிருந்த அவருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

"இந்தியாவின் உட்கட்டமைப்பு மற்றும் உற்பத்தித் துறையைக் கட்டமைத்ததில் ஜப்பான் மிக முக்கியமான பங்குதாரராக உள்ளது. மும்பை அகமதாபாத் புல்லட் ரயில் திட்டம், டெல்லி_ மும்பை தொழில்துறை கொரிடார் போன்றவை இந்திய_ ஜப்பான் ஒத்துழைப்புக்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். உலகளவில் நிகழும் டிஜிட்டல் பண பரிவர்த்தனைகளில் 40 சதவீதம் இந்தியாவில் நடக்கின்றது. பருவநிலை மாற்றம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. ஜனநாயகம் வலிமையாகி உள்ளது. பசுமையான எதிர்காலத்தையும், சர்வதேச சூரியதிறன் கூட்டமைப்பை அமைப்பது தொடர்பாகவும் இந்தியா பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. மனிதத்தை வன்முறை, பயங்கரவாதம், பருவநிலை மாற்றத்தில் இருந்து பாதுகாக்க உலகம் புத்தர் பெருமானின் வழியைப் பின்பற்ற வேண்டும். நாட்டின் ஒவ்வொரு நபரின் தேவை மற்றும் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கான நிர்வாக அமைப்பை கட்டமைப்பதற்காக நாம் பணியாற்றி வருகிறோம். இன்று இந்தியாவில் உண்மையான அரசாங்கம் மக்களின் தலைமையில் நடைபெற்று வருகிறது" என்று அங்கு வாழும் இந்திய மக்கள் மத்தியில் உரையாற்றிய பிரதமர் மோடி தெரிவித்தார்.



இதேவேளை ஜப்பான் சென்றிருந்த பிரதமர் மோடி டோக்கியோவில் சுசூகி நிறுவனத்தின் மூத்த ஆலோசகர் ஒசாமு சுசூகி உள்ளிட்ட முன்னணி தொழில்நிறுவனங்களின் நிர்வாகிகளை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். இந்திய வாகனத்துறையில் சுசூகி மோட்டார்ஸ் நிறுவனம் வழங்கி வரும் பங்களிப்புக்காக மோடி பாராட்டுத் தெரிவித்தார். நிலையான வளர்ச்சி இலக்கை அடைவதற்கு மின்சார வாகனங்கள் மற்றும் பற்றரிகளுக்கான உற்பத்தி வசதிகள், மறுசுழற்சி நிலையங்களை அமைப்பது, இந்தியாவில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்து பிரதமர் அச்சந்திப்பின் போது ஆராய்ந்தார்.

மேலும், திறன் மேம்பாடு கற்கைகள் மூலம் இந்தியாவில் உள்ளூர்க் கண்டுபிடிப்பு அமைப்புகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் குறித்தும் அப்போது விவாதிக்கப்பட்டது.

அத்துடன் ஜப்பான் நாட்டின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் மின்னணுவியல் நிறுவனத்தின் தலைவர் நோபுஹிரோ எண்டோவை டோக்கியோவில் பிரதமர் மோடி சந்தித்துப் பேசினார். அப்போது, இந்தியாவின் தொலைத்தொடர்புத் துறையில், முக்கியமாக சென்னை, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளிடையேயும், கேரளாவின் கொச்சி இலட்சத்தீவுகளிடையேயும் அமைக்கப்பட்டு வரும் 'ஒப்டிகல் ஃபைபர் கேபிள்' பணியில், என்.இ.சி கோர்ப்பரேஷன் அளித்து வரும் பங்களிப்பை மோடி வெகுவாகப் பாராட்டினார்.

தொழில்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில், இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்திருத்தங்கள் குறித்து என்.இ.சி கோர்ப்பரேஷன் அதிகாரிகளுக்கு பிரதமர் மோடி எடுத்துரைத்தார். வளர்ந்து வரும் மற்றும் புதிய தொழில்நுட்பங்களில் இந்தியாவில் உள்ள வாய்ப்புகள் குறித்தும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

டோக்கியோவில் ஆடை நிறுவனமான யுனிக்லோவின் தாய் நிறுவனமான 'ஃபாஸ்ட் ரீடெய்லிங் கோ' லிமிடெட்டின் தலைவர் மற்றும் செயல் அதிகாரியான தடாஷி யனாயையும் பிரதமர் மோடி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது, இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் ஜவுளி மற்றும் ஆடைச்சந்தை குறித்தும், இந்தியாவில் உள்ள ஜவுளி உற்பத்தித் திட்டங்களுக்கான முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பாகவும் இருவரும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இந்தியாவில் எளிதாக வணிகம் செய்யும் விதமாக, தொழில்துறை மேம்பாடுகள், உள்கட்டமைப்பு வசதி, வரிவிதிப்பு மற்றும் தொழிலாளர்கள் துறை உள்ளிட்டவற்றில் செயல்படுத்தப்பட்டு வரும் சீர்திருத்தங்கள் தொடர்பாக நரேந்திர மோடி அப்போது எடுத்துரைத்தார். ஜவுளி உற்பத்தி மையமாக வளர்ந்து வரும் இந்தியாவின், 'பிரதம மந்திரி மித்ரா' திட்டத்தில் பங்கேற்குமாறு யுனிக்லோ நிறுவனத்துக்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார்.

இது குறித்து பிரதமர் மோடி தனது டுவிட்டர் செய்தியில், "கொவிட்டுக்கு பிந்திய உலகில், இந்தியா, ஜப்பான் இடையிலான நெருங்கிய ஒத்துழைப்பு இன்றியமையாதது. ஜனநாயக விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் விதமாக இருநாடுகளும் உள்ளன. இந்தோ பசிபிக் பிராந்தியத்தின் நிலையான, பாதுகாப்பான தூண்களாக இரண்டு நாடுகளும் உள்ளன. பல்வேறு துறைகளிலும் இருநாடுகளும் இணைந்து பணியாற்றுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

(22ஆம் பக்கம் பார்க்க)

சாரங்கன்...

**தற்பொழுது எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடியிலிருந்து எமது நாட்டை மீட்டெடுப்பதற்கான கடும் பிரயத்தனங்கள் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் சர்வதேச நாடுகளிடம் ஒத்துழைப்புகளைக் கோரிவரும் அதேநேரம், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவியைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை இலங்கை மத்திய வங்கியும், நிதி அமைச்சும் மேற்கொண்டுள்ளன.**



# இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து போனதற்கான உண்மைக் காரணிகள் எவை?

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

இருந்தபோதும் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் சமையல் எரிவாயுத் தட்டுப்பாடு போன்ற பல்வேறு பிரச்சினைகளால் மக்கள் நாளுக்கு நாள் சிரமங்களை எதிர்கொண்டே வருகின்றனர். பொருட்களின் விலைகள் அடிக்கடி உயர்ந்து செல்வதால் மக்கள் சிரமம் அடைகின்றனர்.

நாட்டின் பொருளாதார சூழல் குறித்து உண்மையான தகவல்களை மக்களுக்கு வழங்காமையே நெருக்கடிகளுக்குக் காரணம் எனப் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவும், மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்ஹவும் கூறி வருகின்றனர். அவர்களது கருத்தில் உண்மை இல்லாமலில்லை.

நாடு எதிர்கொண்டுள்ள தற்போதைய இக்கட்டான சூழ்நிலையின் உண்மைத் தன்மையை பொது மக்களுக்கு எடுத்துக் கூறுவதுடன், நீண்டகால பொருளாதார ஸ்திரத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு அரசியல்வாதிகள் குறுகிய அரசியல் இலாபம் கருதாது, கட்சி பேதங்களை மறந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்ஹ பாராளுமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.




## பாரதூரமான ஆபத்து அறிகுறிகளை கடந்த காலத்தில் அசட்டை செய்ததுதான் இத்தனை நெருக்கடிகளுக்கும் காரணமா?

கடந்த வாரம் நடைபெற்ற அரசாங்க நிதி பற்றிய குழுவின் கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார். மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவினால் எரிபொருட்களுக்கு விலைச்சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்ட போது தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பினால் அது கைவிடப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறானதொரு விலைச்சூத்திரத்தை மீண்டும் கொண்டுவர நேர்ந்திருப்பதையும் அவர் இங்கு சுட்டிக் காட்டியிருந்தார்.

இவ்வாறான பின்னணியிலேயே நாட்டின் எதிர்காலத்துக்காக சிறந்த நோக்கத்தில் கொண்டு வரப்படும் கொள்கைத் திட்டங்களை அரசியல் இலாபங்களுக்காக எதிர்க்காமல் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு கட்சி பேதம் இன்றி அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்குவதன் அவசியத்தை அவர் வலியுறுத்தியிருந்தார்.

'அண்மைக் காலமாக வரவுசெலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது மதிப்பீடு செய்யப்படும் அரசாங்கத்தின் வருமானம் உண்மை நிலைமைக்கு அப்பால் நடைமுறைச் சாத்தியம் அற்ற வகையில் குறிப்பிடப்படுவதால் பாராளுமன்றம் பிழையாக வழிநடத்தப்படுகிறது.

இவ்வாறு அதிக தொகை வருமானமாக மதிப்பீடு செய்யப்படுவதால் அதற்கு ஏற்ற வகையில் அமைச்சுகளின் செலவினங்களுக்காக அதிக தொகை ஒதுக்கப்படுகிறது. இறுதியில் உண்மையான வருமானத்திலும் விட செலவினங்கள் பன்மடங்கு அதிகமாக அமைந்து விடுகின்றன.





## ஆளும் தரப்பினர் உட்பட அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஆபத்து எச்சரிக்கையுடன் அறிவுரை கூறிய மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்ஹ



இதனால் துண்டுவிழும் தொகை அதிகரிப்பது மாத்திரமன்றி, அதனை ஈடுசெய்வதற்காக கடன்சுமைக்குள் தள்ளப்பட வேண்டி ஏற்படுகிறது' என்பதையும் மத்திய வங்கியின் ஆளுநர் இங்கு விளக்கிக் கூறியிருந்தார்.

எனவே ஆட்சியாளர்கள் யாராக இருந்தாலும் வரவுசெலவுத் திட்டம் தயாரிக்கும் போதும் சரி, பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டுசெல்லும் போதும் சரி உண்மையான தகவல்களை மக்களுக்கு வழங்கி அவற்றுக்கு ஏற்ற வகையில் நடவடிக்கை எடுப்பதன் அவசியம் இங்கு வலியுறுத்தப்பட்டது.

கடந்த காலத்தில் பாராளுமன்றக் குழுக்களுக்கு அமைச்சின் அதிகாரிகள் மற்றும் மத்திய வங்கியின் அதிகாரிகள் அழைக்கப்பட்ட போது சரியான புள்ளி விபரங்களை அவர்களுக்கு வழங்கத் தவறியியிருந்தமை குறித்தும் இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

கடந்த காலத்தில் நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட தவறான முடிவுகள் குறித்தும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் மேலும் விளக்கமளித்த மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிடுகையில், எங்கிருந்தாவது டொலர்களைப் பெற்றுக் கொடுத்தாலும் மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லிட்ரோ காஸ் போன்ற நிறுவனங்கள் எதிர்கொண்டுள்ள அதிக நஷ்டம் காரணமாக டொலர்களைக் கொள்வனவு செய்வதற்கு அவர்களிடம் போதிய ரூபா இல்லாமல் உள்ளது.

தற்போதைய நிலையில் எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக உலக வங்கியிடமிருந்து 600 மில்லியன் டொலர் எதிர்பார்க்கப்படுவதாகவும், ஏற்கனவே வேறு திட்டங்களுக்காக வழங்கப்படவிருந்த தொகையை இந்தத் தேவைக்குப் பயன்படுத்த எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும், முதல் சுற்றில் தொழில்நுட்பப் பிரிவின் பேச்சுவார்த்தைகள் இறுதிக்கட்டத்தில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்து, கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளக் கூடிய 34 மாத காலப்பகுதி சவால் மிக்கதாக அமையும் என்றும், இதனை எதிர்கொள்ள முடிந்தளவு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் மத்திய வங்கி பாராளுமன்றத்துக்கு விளக்கமளித்தது.

இதுஇவ்விதமிருக்க, 'கோப் குழு' என அறியப்படும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு முன்னிலையிலும் இலங்கை மத்திய வங்கி இந்த வாரம் அழைக்கப்பட்டிருந்தது.

மத்திய வங்கி தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதன் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் கலந்துரையாடும் நோக்கில் மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகளும், திறைசேரியின் செயலாளரும் கோப் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தனர்.

இக்கூட்டத்தில் குறிப்பிடத்தக்க முடிவொன்று எடுக்கப்பட்டமை அனைவரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது. அதாவது, நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள் மற்றும் இந்த நிலைக்குச் செல்லத் தமது கடமைகளை நிறைவேற்றத் தவறிய நபர்கள் குறித்து விசாரணை செய்வதற்கு விசேட பாராளுமன்றக் குழுவொன்றை அமைக்குமாறு அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தலைவர் (கோப் குழு) பேராசிரியர் சரித ஹேரத் பரிந்துரைத்தார்.

பொருளாதாரத்தை வழிநடத்திய ஒரு சிலரின் தீர்மானங்கள் காரணமாக முழு நாடும் இன்று பாரிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருப்பதாகவும், இதனைக் குற்றமாகக் கருதி விரைவில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதும் கோப் குழுவின் நிலைப்பாடாக அமைந்தது.

நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்படும் நிலைக்குச் செல்வதற்கு காரணமாக அமைந்த விடயங்கள் குறித்து இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டிருந்தது.

தற்போதைய அரசாங்கம் 2020ஆம் ஆண்டு காலப் பகுதியில் வரி வீதத்தைக் குறைப்பதற்கு எடுத்த தீர்மானம் மற்றும் தொற்றுநோய் சூழல் என்பன இதற்குப் பிரதான காரணங்களாக அமைந்ததாக இங்கு கூறப்பட்டது. அது மாத்திரமன்றி, நாணய மாற்று விகிதத்தை மிதக்க விடாது ஒரே தொகையில் தக்கவைத்திருப்பதற்கு எடுத்த தீர்மானம் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியதாகவும் கோப் குழு விசாரணைகளில் புலப்பட்டிருந்தது.

2020 ஏப்ரல் மார்ச் மாதத்தில் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன்பெறச் சென்ற போது இலங்கையின் கடன் நிலைபேறான நிலையில் இல்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. இவ்வாறான பின்னணியில் கடன்வசதியொன்றைப் பெறுவதாயின் இலங்கை கட்டாயம் கடன் மறுசீரமைப்புக்குச் செல்ல வேண்டும் என சர்தேச நாணய நிதியம் அப்போதைய மத்திய வங்கி ஆளுநருக்கு அறிவித்துள்ளது.

இருந்தபோதும் முன்னைய மத்திய வங்கியின் ஆளுநரும், நிதி அமைச்சும் இவ்விடயத்தில் அசட்டையைக் கடைப்பிடித்தமை தவறானதெனவும் இங்கு தெளிவாகப் புலனானது. மத்திய வங்கியின் நாணயச் சபையினால் எடுக்கப்படும் முடிவுகளுக்கு ஒரு சிலரின் தீர்மானங்கள் தாக்கம் செலுத்தியுள்ளன.

அதேநேரம், முன்னாள் நிதி அமைச்சர் இவ்வாறான நிலைமை குறித்து ஒருபோதும் பாராளுமன்றத்துக்குத் தெரிவித்திருக்கவில்லை என்றும், நிதி அமைச்சர் சார்பில் சபைக்குக் கருத்துக்களைத் தெரிவித்த முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் உரிய புள்ளிவிபரங்களை வழங்காது அனைவரையும் பிழையாக வழிநடத்தியிருப்பதாகவும்ம் கோப் குழுவின் உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியிருந்தார். இது பாரியதொரு தவறு என்பதும் இங்கு மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

அத்துடன், 2019 நவம்பர் சர்வதேச நாணய நிதிய அறிக்கைக்கு அமைய இலங்கையின் கடன் நிலைபேறான நிலையில் காணப்பட்டுள்ளது. எனினும், ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் சில மாதங்கள் கழித்து வெளியிடப்பட்ட சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் முன்னைய நிலைமைக்கு முற்றுமுழுதும் மாற்றான நிலைமையே காணப்பட்டுள்ளது. குறிப்பாக அப்போதிருந்த ஜனாதிபதி செயலாளரின் தலையீட்டின் ஊடாக 600 பில்லியன் ரூபா வரியைக் குறைப்பதற்கான தீர்மானம் எவ்வாறு எடுக்கப்பட்டது என்றும் இங்கு கேள்வியெழுப்பப்பட்டது.

புதிய தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்கிலேயே இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டதாகப் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சரத் வீரசேகர இங்கு சுட்டிக்காட்டியிருந்தார்.

மத்திய வங்கியின் கையிருப்பைப் பயன்படுத்தி நாணய மாற்று விகிதத்தைத் தொடர்ந்தும் பிடித்து வைத்திருக்காது மிதக்க விடவேண்டும் என்று நாணயச் சபையின் உறுப்பினராக இருந்த சஞ்சீவ ஜயவர்த்தனவும் தானும் கடுமையாக எதிர்த்ததாக நாணயச் சபையின் முன்னாள் உறுப்பினர் கலாநிதி ராணி ஜயமஹா தெரிவித்தார்.

இருந்தபோதும் நாணயச்சபையின் உறுப்பினர்கள் மூவருடைய தீர்மானத்துக்கு அமைய நாணய மாற்று விகிதம் ஒரே தொகையில் தக்கவைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அப்போது மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஷ்மன், திறைசேரியின் முன்னாள் செயலாளர் மற்றும் நியமிக்கப்பட்ட நாணயச் சபை உறுப்பினராக சமந்த குமாரசிங்க ஆகியோரின் விருப்பத்துக்கு அமைய இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## அரசாங்க நிதி பற்றிய குழுவின் கூட்டத்திலும், அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் குழு) முன்னிலையிலும் வெளிவந்த விடயங்கள்!

இதுபோன்ற பல்வேறு பிழையான முடிவுகள் நாட்டின் பொருளாதாரத்தில் கடினமான தாக்கத்தை ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைந்திருந்தமை இந்தக் கலந்துரையாடல்களின் போது புலப்பட்டது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் காணப்படும் எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு மத்தியில் அரசாங்க சேவையில் உள்ளவர்களைக் குறைந்தளவு பயன்படுத்தி பணிகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடி, எதிர்வரும் மூன்று வாரங்களில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான வேலைத்திட்டத்தை உடனடியாகத் தயாரிக்குமாறும் கோப் குழுவின் தலைவர், நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தனவிடம் பரிந்துரைத்தார்.



இது இவ்விதமிருக்க, அரசாங்கத்தின் புதிய நிதியமைச்சராகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார். அரசாங்கத்தின் செலவினங்கள் குறிப்பாக அரசாங்க ஊழியர்களின் சம்பளத் தேவை உள்ளிட்டவற்றுக்கு மேலும் ஒரு ட்ரில்லியன் ரூபாவை அச்சிட வேண்டியிருப்பதாக ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

எதுவாக இருந்தாலும் இந்த நிலைமை தொடர்ந்தால் இன்னும் சில வாரங்களில் உணவுப் பஞ்சம் ஏற்படலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. எனவே, இந்த நிலைமையிலிருந்து மீள்வதற்கு அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்படுவதுடன், இவற்றுக்குக் காரணமான அரசியல் சக்திகள் நிலைமையை உணர்ந்து சுயநலமின்றி பொதுநலத்துடன் செயற்படுவதே காலத்தின் தேவையாகும். மக்களின் எதிர்ப்பார்ப்பு அதுவேயாகும்.

# இந்திய வம்சாவளி மக்கள் போற்றும் மாமனிதர்

# அமரர் ஆறுமுகன் தொண்டமானின் 58ஆவது ஜனன தினம்



## அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மாபெரும் வேலைத்திட்டங்கள்

- பெருந்தோட்ட வீடமைப்புத் திட்டம்.
- 3179 ஆசிரியர் நியமனங்கள்.
- 500 தபால் சேவை ஊழியர்கள்.
- 200 தொடர்பாடல் உத்தியோகத்தர்கள்.
- மலையக மக்களுக்கு பாதிப்பு ஏற்படும்போதெல்லாம் பதவி பட்டங்களை துச்சமென தூக்கியெறிய தயங்காதவர்.
- நாடற்றவர் என்ற நாமமதை மாற்றி அவரின் இராஜதந்திர அணுகுமுறையில் 3 இலட்சம் மலையக சொந்தங்களுக்கு முகவரி தந்தது.
- தொட்ட பணியை இடையில் கைவிட்ட வரலாறு இல்லாதவர்.
- 27 ஆண்டுகள் அரசியல் பயணத்தில் ஆற்றல் மிகு சாதனைகளில் சொந்தக்காரர். ஒரு சிறுபான்மை சமூகத்தை பெரும்பான்மை தலைமைகளும் கூட பெரிதும் எதிர்பார்த்திருக்கும் அரசியல் அங்கீகாரத்தை ஆக்கித் தந்ததில் பாரிய பங்களிப்பு செய்தவர்.
- பெருந்தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் கட்டியெழுப்பிய காத்திரமான இலங்கை தொழிலாளர் காங்கிரஸை, அவரது மறைவின் பின்னரும் காத்திரமாக காத்து வந்தவர். பல திரை மறைவு சதிகளையெல்லாம் திசை தெரியாமல் திருப்பிவிட்டு அவதூறு வந்தபோதும் அசையா நெஞ்சுடன் ஆலமரமாக சாணக்கியத்திற்கு ஒரு சாட்சியாக விளங்கியவர்.
- 1990 ஆம் ஆண்டு அவரது அரசியல் பிரவேசத்தில் 93இல் காங்கிரசின் நிதிச் செயலாளராக, 1994 இல் பொதுச் செயலாளராக நிலை உயர்வு, அதே ஆண்டு 94ல் 74 ஆயிரம் வாக்குகளை பெற்று பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றம். அதன் பின்னர் வந்த அனைத்து தேர்தல்களிலும் மக்களோடு தன்னை பிணைத்துக் கொண்ட பக்குவத்தால் வெற்றிமேல் வெற்றி அவரை பற்றி பிடித்துக் கொண்டிருந்தது.
- 1994ல் கால்நடை அபிவிருத்தி மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர், 2001இல் பெருந்தோட்ட வீடமைப்பு தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர், 2004 இல் இளைஞர் வலுவூட்டல் அமைச்சர் என தொடர்ந்த பதவிகள் அவரது ஆளுமையின் அடையாளங்கள்.
- ஆட்சிக்கு முண்டு கொடுத்த வேளைகளிலும் அநீதிக்காக குரல் கொடுக்க, அதை கண்டிக்க தவறியதே இல்லை. தொலைநோக்கு கொண்ட தன்னிகரில்லா தலைவர். பணி என்று வந்துவிட்டால் பகல் இரவு பார்க்க மாட்டார். விட்டுக் கொடுக்கும் பரந்த மனம் கொண்ட அவர், இ.தொ.காவின் கட்டுக்கோப்பை சரியவிடாது சாசகம் புரிந்தவர். நாடு வாழ நாளும் பாடுபடும் நம் சமூகத்திற்கு கேடு ஏதும் சூழாமல் பார்ப்பதில் அவருக்கு ஈடு யாருமே இல்லை. சொந்த வீடு, சொந்தக்காணி வேண்டும். சோகம் மறைந்தோட வருமானம் உயர்வு வேண்டும், கல்வியில் உயர்ச்சி வேண்டும் எனும் கரிசனை கொண்டு பாரிய மாற்றம் தந்த காவியத் தலைவனின் சாதுரியம் சரித்திரத்தில் என்றும் பதிவுகளாகும்.


தேசிய அமைப்பாளர் சக்திவேல்


பாராளுமன்ற உறுப்பினர் இராமேஸ்வரனுடன்


செந்தில் தொண்டமானுடன் தலைவர்


கொட்டகல பிரதேச சபைத்தலைவர் ராஜமணி


எம்.எஸ்.செல்லமுத்து பிரதி பொதுச் செயலாளர்


வீ .யோகராஜ் நுவரெலியா பிரதேச சபைத்தலைவர்




நோர்வூட் பிரதேச சபைத் தலைவர் குழந்தைவேலு ரவியுடன்...


முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுடன்...

# பொருளாதார சிக்கலால் குப்புறக் கவிழ்ந்திருக்கும் மலையக வீடமைப்புத் திட்டம்



பன். பாலா ...

இ.தொ.கா. ஒரு ஸ்திரமான அரசியல் நிலைப்பாட்டை தற்போதைய நிலையில் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. அதற்குக் காரணம் உட்கட்சிப் பூசலாகக்கூட இருக்கலாம். இப்படி விமர்சிப்பதற்குக் காரணம் இருக்கிறது. சில வாரங்களுக்கு முன்பு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்டியிருந்தார். எவரும் எதிர்பார்த்திராதபடி இதில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை என்று அறிவித்தார் ஜீவன் தொண்டமான்.

அறிவித்தப்படியே நடக்கவும் செய்தார். ஜீவன் தொண்டமானின் தீர்மானம் பற்றி பல்வேறு எதிர்வுகூறல்கள் இடம்பெற்றன. இது சுயநல ஊடல் நாடகம் என்று பேசப்பட்டது. அனைத்தையும் ஆவேசமாக மறுத்தார் ஜீவன் தொண்டமான். பின்னர் திடுதிப்பென்று அரசாங்கத்திலிருந்து வெளியேறுவதாக பகிரங்கப்படுத்தினார். இங்கு தான் உள்குத்து உதயமானதாகத் தெரிகிறது. ஜீவனைவிட தொழிற்சங்க, அரசியல் அனுபவமுள்ளவர் மருதபாண்டி ராமேஸ்வரன். இ.தொ.காவின் பாராளுமன்ற உறுப்பினரும் அதன் துணைத்தலைவர்களில் ஒருவருமாவார் இந்த ராமேஸ்வரன்.

அரசாங்கத்திலிருந்து அதிரடியாக விலகல் என்பது ராமேஸ்வரனுக்கு உடன்பாடில்லாத சங்கதி. இதனை ஜீவனிடமும் அவர் சொல்லி வைத்தார். எனினும் அது எடுபடவில்லை. ஜீவன் தனது தீர்மானத்தில் பிடியாக இருந்தார். இந்நிலையில் தான் காலிமுகத்திடல் போராட்டம் தீவிரமானது. ஒட்டுமொத்த பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஓரங்கட்டி இளைஞர்கள் முழக்கமிடவே பலருக்கு தேள் கொட்டிய கதையானது.

கடந்த 9ஆம் திகதி அலரிமாளிகையின் அருகிலும் காலி முகத்திடலிலும் போராட்டக்களத்திலிருந்த நிராயுதபாணி இளைஞர்கள் மீது காடையர்களால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மூல காரணமாக முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவே இருந்ததாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இ.தொ.காவுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான உறவு இன்றோடு முடிந்தது என்று ஜீவன் ட்விட்டர் போட்டார். இதனைத் தொடர்ந்து பாராளுமன்றம் கூடியது. ஜீவனும் ராமேஸ்வரனும் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து கொண்டார்கள். ஒரு கட்டத்தில் பொதுஜன பெரமுன உறுப்பினர் ஒருவர் அரசாங்கத்துக்கு ஆதரவான கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். அதனை மேசைமீது தட்டி ராமேஸ்வரன் ஆமோதித்ததை காணொளி காட்சிமூலம் பலரும் கவனித்திருப்பார்கள். அதேவேளை ரணில் விக்ரமசிங்க பிரதமர் பதவியை ஏற்க வியூகங்களை வகுத்துக் கொண்டிருந்தார். அவர் தம்மோடும் தொடர்புகொண்டு ஆதரவு கோரியதாக ஜீவன் கூறியிருந்தார். எதிர்பார்த்தது போலவே மறுநாள் ரணில் பிரதமராக பதிவியேற்றார். அவருக்கு தமது முழு ஆதரவும் கிடைக்கும் என்று ஜீவன் ஊடகங்களுக்குத் தொிவித்தார். இதன்மூலம் இ.தொ.கா. அரசாங்கத்தோடு இணையலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இது எழுதப்படும் வரை அது இடம்பெறவில்லை.

இதனிடையே கடந்த 17ஆம் திகதி இரண்டு பிரேரணைகள் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்காக விடப்பட்டன. அதில் முதலாவது பிரேரணை பிரதி சபாநாயகர் தெரிவு. இதில் அரசாங்கத்தின் சார்பில் ஒருவரும் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் ஒருவரும் நிறுத்தப்பட்டனர். இரகசிய வாக்கெடுப்பு நடந்தது. அரசாங்கத்தின் சார்பில் போட்டியிட்டவர் 109 வாக்குகளும் எதிர்க்கட்சி சார்பில் போட்டியிட்டவர் 78 வாக்குகளும் பெற்றனர். இதில் இ.தொ.காவின் ஆதரவு எதிர்கட்சிக்கே கிடைத்திருக்க இடமுண்டு. ஏனெனில் இதனையடுத்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர் ஏ. சுமந்திரன் பாராளுமன்ற நிலையியற் கட்டளைச் சட்டத்துக்கு புறம்பாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மீதான குறைகூறல் பிரேரணை விவா தத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோரியிருந்தார். இப்பிரேரணை மீது மீண்டும் ஒரு வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது. இதில் ஜீவன் தொண்டமானும் ராமேஸ்வரனும் அதற்கு ஆதரவாகவே வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

இவ்வாறான செயற்பாடுகள் சமகால தேசிய அரசியல் ரீதியிலான கொதிநிலையின் அழுத்தம் காரணமாக கூட இடம்பெறலாம். அதேநேரம் தமது எதிர்பார்ப்பின் இலக்கினை ஆட்சியாளருக்கு உறுத்தலாக வெளிபடுத்தும் பாங்காகக்கூட அமையலாம். இதுதானே அரசியல். இதேசமயம் மலையகத்தில் மற்றுமொரு கட்சியான தமிழ் முற்போக்குக் கூட்டணி மட்டும் ஸ்திரமான போக்கை கொண்டிருப்பதாகக் கூற முடியாது. அங்கும் அரசியல் சதுரங்க ஆட்டம் இடம்பெறவே செய்கிறது. ஒருவகையில் இருகட்சிகளுக்கும் இடையில் செம போட்டி.

நடுநாயகமாக ரணில் இருப்பதால் மலையக மக்கள் மௌனமாகவே பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவா்களைப் பொறுத்தவரை இந்த இரண்டு மலையக அணிகளில் ஏதாவது ஒன்று ஆட்சி செய்யும் அரசாங்கத்தோடு கூட்டு சேர்ந்தால் மட்டுமே அற்ப சங்கதிகளேனும் நிறைவேற்றப்பட முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள். தானும் அது நப்பாசையா இல்லை தப்பாசையா என்பது காலத்தின் கரங்களில்.

இதனை நீங்கள் வாசிக்கும் நேரத்தில் மலையக கட்சிகளில் ஏதாவது ஒன்று ரணிலுடன் அணி சேர்ந்திருந்தால் ஆச்சரியப்பட வேண்டாம். தரா்கள். இனி இங்கே பேசவேண்டிய ஒரு பாரிய விவகாரம் இருக்கிறது. அது மலையக கட்சிகளின் முடிவை அடுத்து தொடர வேண்டிய ஒரு சமாச்சாரம். பெருந்தோட்ட வீடமைப்பு விடயமே அது. சமகால பொருளாதார நெருக்கடியின் பின்னணியில் ரணில் கொண்டு வர உத்தேசித்திருக்கும் இடைக்கால வரவுசெலவு திட்டத்தில் பெருந்தோட்ட வீடமைப்புத் திட்டத்திற்கு நிதியொதுக்கப்பட வாய்ப்பு இருப்பதாக எமக்கு படவில்லை. இந்திய நிதியுதவியிலான வீடமைப்புத் திட்டமும் சங்கடத்தை எதிர்நோக்கவே செய்கிறது.

ஏனெனில் இந்திய அரசாங்கம் வீடொன்றுக்கு தலா 12 இலட்சம் ரூபாவை வழங்குகிறது. கடந்த காலத்தில் வீடமைப்புக்கான உபகரணங்களின் விலை நிர்ணயப்படி வீடொன்று நிர்மாணிப்பதற்கு குறைந்தபட்சம் 15 இலட்சமாவது தேவைப்பட்டது. முன்னைய ஆட்சியில் பழனி திகாம்பரமும் மஹிந்த ஆட்சியில் ஜீவன் தொண்டமானும் அரசாங்கத்துக்கூடான நிதியொதிக்கீட்டிலிருந்து எஞ்சிய தொகையை பெற்று வீடுகளைப் பூர்த்தி செய்து வந்தார்கள். அந்த வகையில் ஜீவன் தொண்டமான் முன்னைய ஆட்சியில் முழுமை பெறாத சுமார் 1000 வீடுகளை பூரணப்படுத்தி பயன ாளிகளிடம் கையளித்திருந்ததாக செய்திகள் வெளியாகி இருந்தன.

இன்று வீடமைப்புக்குத் தேவையான பொருட்களின் விலை ஜீரணிக்க முடியாதபடி நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கிறது. சீமெந்தின் விலை மலைபோல உயர்ந்து வருகிறது. இந்நிலையில் வீடொன்றைக் கட்டிக் கொள்வது என்பது சவாலான சங்கதி. தனவந்தர்களே வீடுகட்டிக் கொள்ளத் தயங்கும்போது பெருந்தோட்ட மக்களின் நிலைபற்றி விவரிக்க தேவையில்லை. தற்போதைய நிலையில் இந்திய வீடமைப்புத் திட்டம் தொடர வேண்டுமானால் இலங்கை அரசின் நிதியுதவி நிச்சயம் தேவை. அதற்கான உந்துதலை தரவேண்டிய பொறுப்பு மலையகத் தலைமைகளை சார்ந்தே உள்ளது. ஆனால் அரசாங்கத்தில் பங்காளியாகாமல் எதுவுமே கிடைக்கப் போவதில்லை. இதுவே யதார்த்தம்.

ஏனெனில் ஏற்கனவே ஒதுக்கியபடி இந்திய அரசாங்கத்திடம் இருந்து மேலதிகமாக எதனையும் எதிர்பார்க்க முடியாது. தவிர மொத்தமாக 14 ஆயிரம் வீடுகளுக்கான நிதியினை வழங்க இந்திய அரசாங்கம் முன்வந்த நிலையில் மேலும் அதனை தொந்தரவு பண்ண இயலாதே. எனவேதான் மலையகக் கட்சிகள் எடுக்கப்போகும் முடிவு மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது.

தற்போது பேரம்பேசல் ரீதியிலான அரசியல் காய்நகர்த்தல் அவசியமாகிறது. அதேநேரம் சோரம் போகும் அரசியல் நகர்வும் ஆபத்தானதே ஆகும். தேசியக் கட்சிகளின் நலனைவிட சமூகத் தேவைக்கான அர்ப்பணங்களே முக்கியம். தொடர்ந்தும் மதில்மேல் பூனைகளாக குழம்பிக் கொண்டிருந்தால் ஆகப்போவது எதுவுமே கிடையாது.

அதேவேளை தேசிய கட்சிகளாக தம்மையும் காட்டிக் கொள்ள அல்லது நிலைநிறுத்திக் கொள்ள மலையக கட்சிகள் எத்தனிக்கும் பட்சத்தில் மலையக சமூகம் பொறுமை காட்டுவது அவசியமானது. ஏதிர்ப்புகள் ஈடேறுவது உறுதியானால் அர்ப்பணிப்புகளுக்கு அர்த்தம் கிடைக்கவே செய்யும் புரிந்துக்கொள்ள வேண்டியவா்கள் புரிந்துக் கொண்டால் சரி. எடுக்கும் எந்த முடிவும் தொலைநோக்கு கொண்டதாக இருக்க வேண்டும்.



# யார் இந்த ஞானக்கா?

## வயல் வெளியில் ஆரம்பித்து உப்பரிகை வாசம் செய்த மந்திரக்காரி

அரசர்கள் அக்காலத்தில் ஞானகுரு, மதியூகி, ராஜகுரு ஆகிய பெயர்களில் தமது நம்பிக்கைக்குரியவர்களை வைத்திருந்தார்கள். சாணக்கியன் அவ்வாறான ஒரு மதியூகியே. அத்தகையோர் சிறந்தவர்களாக இருந்தால் நாடு வளம் பெறுவதும் மோசடிக்காரர்களானால் நாடு வீழ்ச்சி அடைவதும் வழமை. ரஷ்யாவின் இறுதி மன்னரான நிக்கலசுக்கு ஒரு மதியூகி வந்து சேர்ந்தார். அவர் பெயர் ரஸ்புட்டீன். அத்தோடு அரச பரம்பரைக்கு முடிவு கட்டப்பட்டது. இந்திரா காந்திக்கு ஒரு பிரேந்திரா பிரமச்சாரி என்றால் நரசிம்மராவுக்கு ஒரி சந்திராசாமி மதியூகி சாமியார்களாக திகழ்ந்தார்கள்.

இலங்கை அரசை ஆட்டிப்படைத்தவராகக் கருதப்படுகிறவர் ஞானக்கா.

பயணம் செய்யும் உயர்ந்த பிரபு வர்க்கத்தை சேர்ந்தவராக அவர் வாழ்க்கை மாறியது. நாம் அறியாத அந்த கதையை பற்றி ஆராய்வோம்.

ஞானக்கா என அறியப்பட்ட அவர் பிறந்த இடம் அனுராதபுரத்தில் இசுறுபுரயாகும். தந்தை விவசாயி. அவர் கல்வி கற்றது தற்போது ஜனாதிபதி வித்தியாலயம் எனக்கூறப்படும் அன்றைய தீபானி வித்தியாலயத்திலாகும். அவர் உயர்தரம் வரையுமே கல்வி கற்றுள்ளார். அவ்வேளையில் பெற்றோரின் எதிர்ப்புக்கு மத்தியில் கே.ஏ. ஜெயசூரிய என்பவரை திருமணம் முடித்துள்ளார்.

அவரது கல்வித் திறமைக்கேற்ப அநுராதபுர வைத்தியசாலையில் தொலைபேசி இயக்குனராக பணிபுரிந்துள்ளார். அவரது கணவர் பல கட்டட ஒப்பந்த பணிகளை மேற்கொண்டதோடு பின்னர்

விதங்களிலும் பாதிக்கப்பட்ட மக்கள் அவரை நாடி வரத்தொடங்கினர். அவர்களுக்கு தீர்வு கிட்டியதாலோ என்னவோ அவரது பெயர் பிரசித்தமானது. யுத்தத்துக்கு செல்லும் தம் பிள்ளைகளுக்கு ஆசி வேண்டியும் பல பெற்றோர்கள் அவரை தேடி வந்தார்கள். அவர் வசியத்தால் அல்லது அதிதீவிர மனவெழுச்சி காரணமாக தன்னால் இந்த நிலைமைக்கு மாறமுடிகிறது என்பதை அவர் அறியவில்லை. ஆனால் இந்த நிலைமையால் தன்னால் அனைவருக்கும் உதவி செய்யக்கூடியதாக உள்ளது என்பதில் அவருக்கு திருப்தி.

அவரை நாடி பல அரசியல்வாதிகளும் வரத் தொடங்கினர். அவர்கள் அங்கு அவரின் கையால் நீராட்டப்படுவார்கள் என்றும் அதன் மூலம் அவர்கள் நன்மைகளை அடைகிறார்கள் என்றும் கதை பரவியது. இதையடுத்து அவரது

கூறியுள்ளார். காளி அன்னை ஒருபோதும் யாருக்கும் தீங்கு செய்யமாட்டார் என்றும் கூறியுள்ளார் . ஞானக்கா எந்தவொரு பூஜைக்கும் விலை நிர்ணயிப்பதில்லை. ஆனால் பக்தர்கள் பெருமளவு காணிக்கை செலுத்தத் தவறவில்லை.

இந்நிலையில் அவரை சந்திக்க உயர் மட்டத்தினர் வருவதாகவும் அவரின் ஆலோசனைப்படியே நாட்டின் பயணப் பாதை மாற்றப்படுவதாகவும் சமூகத்தில் பேசப்பட்டது. இங்கை பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியை சமூக ஊடகங்கள் போன்று சில சமூக விமர்சகர்களும் ஞானக்காவின் ஆலோசனையின் பேரில் செயல்பட்டதால் தான் இந்த நிலைமை உருவானது என விமர்சித்தனர். அதனால் அவர்கள் ஏற்படுத்திய சமூக கருத்துகள் காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி அவரது வீடு கற்களால் தாக்கப்பட்டு பாதிப்புக்குள்ளானது அவரது தேவாலயவும் பாதிப்புக்

வீட்டிற்குள் நுழைந்து பொருட்களை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

அவர்கள் முதலில் ஞானக்காவின் அறையை கொளுத்தியுள்ளார்கள் பின்னர் ஏனையோரின் அறைகளையும் தீ வைத்துள்ளார்கள். நீர் விநியோகத்தையும் துண்டித்துள்ளார்கள். அதிகாலை வரை அந்த இடத்திலேயே இருந்துள்ளார்கள்.

இது பற்றி ஞானக்கா என்ன சொல்கிறார்? நான் யாருக்கும் தொல்லையோ, இம்சையோ செய்தவரல்ல. நான் இந்த அழிவை தாங்கிக் கொள்வேன். நான் கஷ்டப் பட்டு சம்பா

காளியின் அம்சத்தைப் பெற்றவர் எனக் கூறப்படும் இவர் ஒரு வி.ஐ.பி மார்களின் அருள் பெற்றவர். கடந்த 9ஆம் திகதி அசம்பாவிதங்களின்போது இவரது வீடு தீக்கிரையானது.

இந்த ஞானக்கா நாட்டில் அனைவராலும் பேசப்படுபவர். பிரபு வர்க்கத்துடன் பழகும் மந்திரக்காரி என அவர் மக்களிடையே அண்மைக் காலத்திலேயே பிரசித்தமானார். ஆனால் இன்று அவர் மிகவும் நொந்து போயுள்ளார். அரசர் காலத்துக்குப் பின்னர் அரசியல்வாதிகளிடையே யாருக்காவது அனுராதபுரத்தில் பெரும் செல்வாக்கு இருந்ததென்றால் அது ஞானக்காவுக்குதான்.

இவரின் பெயர் ஞானவதி ஜயசூரிய. வயது 66. அவர் மாந்திரீகர், ஜோதிடரும், காளி உபாசகர், எமது பிரபு குடும்பங்கள் அவரை அடிக்கடி சந்தித்து வந்தனர். நவீன வசதிகளுடன் கூடிய தேவாலயம் ஒன்றும் அவருக்கு இருந்தது. அவரது கணவர் 1996 ஆம் ஆண்டு கொல்லப்பட்டார். அவர் அனுராதபுரம் வைத்திய சாலையில் தொலைபேசி இயக்குனராக சேவை செய்ததாகவும் நாம் அறிவோம். கணவர் இறந்த பின்னர் கொழும்புக்கு வந்து மகரகம பமுனுவயில் துணிகளை கொண்டு சென்று விற்பனை செய்து வாழ்ந்தவர் எனவும் அறிவோம்.

பின்னர் அவரது வாழ்க்கையின் இரண்டாவது அத்தியாயம் ஆரம்பித்தது. ஆரம்பத்திலிருந்த வியாபாரியாக அல்லாமல் சொகுசு வாகனங்களில்

கல்வி திணைக்களத்தின் காவலாளியாகவும் பணிபுரிந்துள்ளார்.

இதுவே அவரது திருமண வாழ்க்கையின் ஆரம்பப் பகுதி. அவர்களுக்கு ஒரு மகனும் மகளும் உள்ளனர். அவர்கள் அனுருத்த நளின் குமார மற்றும் நதிஷானி. ஞானக்கா தம்பதியருக்கு இருபத்தி ஐந்து வருடங்களுக்கு மேல் வாழக் கிடைக்கவில்லை. 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி ஞானக்காவின் கணவர் ஜயசூரிய கொல்லப்பட்டார்.

அதுபற்றி நிறைய கதைகள் இருந்தாலும் அதிலொன்று அது அரசியல் கொலை என்றது. அவரின் மறைவுக்குப் பின்னர் தனது பணிக்கு மேலதிகமாக கடினமான வேலைகளில் ஈடுபட்டார். அவர் தனது பிள்ளைகளுக்கு நல்ல முறையில் கல்வியையும் அளித்துள்ளார். காணிகளை கொடுக்கல் வாங்கல் செய்வதிலும் ஈடுபட்டுள்ளார்.

அவர் கணவரின் மறைவுக்குப் பின்னர் மனக்குழப்பத்தில் இருந்ததால் அவர் அடிக்கடி ஜயஸ்ரீ மஹாபோதியவுக்கு சென்று வழிபாடுகளை நடத்தி வந்துள்ளார். அவரையறியாமலே அவருக்கு ஞானசக்தி ஒன்று கிடைத்ததாக நம்பினார். அதன் மூலம் ஒருவரின் எதிர்காலத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு பல விடயங்களை அவரால் செய்ய முடியும் என அவர் நம்பத் தொடங்கினார். பின்னர் பல





சிறிய வீடு மாளிகையானது. மோட்டார் சைக்கிளுக்கு பதிலாக மோட்டார் வாகனங்கள் என வாழ்க்கை வளர்ச்சி அடைந்தது. அவரை பல வி.வி.ஐ. பி.மார் சந்தித்ததால் அவரது பெயர் மிகவும் பிரபலமானது.

ஞானக்காவின் வீடு அமைந்துள்ள காணியில் விஹாரையும் அரச மரம் ஒன்றும் காணப்படுகின்றது. ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வெள்ளை ஆடை அணிந்து அநேகமானோர் இந்த இடத்தில் கூடி தங்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக தங்களது தோஷங்கள் நீங்குவதற்காக பிரார்த்தனை செய்வார்கள். அதன்பின் ஞானக்காவின் தேவாலயம் இருக்கும் இடத்துக்கு வந்து கண்ணகி தேவிக்கு (பத்தினி) விளக்கேற்றி மலர்களை பூஜை செய்து வழிபட்டார்கள். அத்துடன் மாதத்துக்கு ஒருமுறை காளியின் அருள்பெற்று விளங்குவதாகவும் ஞானக்கா



குள்ளானது.

அதன் பின்னர் குறுகிய காலம் எந்தவொரு குழப்பமும் இல்லாது இருந்ததோடு மக்களின் கருத்திலும் எவ்வித மாற்றமும் இருக்கவில்லை. ஆனால் அவரை சந்திக்கவரும் மக்களின் எண்ணிக்கை குறிப்பிட்டளவு குறையத் தொடங்கியது.

எவ்வாறாயினும் கடந்த மே 9ஆம் திகதி காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் நாடு பூராகவும் ஏற்பட்ட கலவரத்தில் ஞானக்காவின் வீட்டின் மீது கடும் தாக்குதல் நடத்தப்பட்டது. அவ்வேளையில் அவர் அங்கு இருக்கவில்லை. மைத்துனரும் மகனும் நண்பர்களுமே வீட்டில் இருந்துள்ளார்கள். சம்பவம் நடைபெற்ற பின்னர் தனக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென ராணுவ உயர் அதிகாரிகளிடம் கோரியுள்ளார். அதன் பின்னர் இராணுவத்தினரும் பொலிஸ் அதிகாரிகளும் வீட்டிற்கு அருகில் வந்துள்ளார்கள்.

அதிகளவு மக்கள் அங்கு வந்து தாக்குதலை நடத்தியுள்ளார்கள். அவர்களில் சிலர் பக்கத்து கட்டடச் சுவரில் இருந்து ஏணி வைத்து வீட்டு வளவுக்குள் குறித்து

தித்த பணத்திலேயே இவை அனைத்தையும் கட்டி எழுப்பினேன். எனக்கு ஏதேனும் ஒரு சக்தி இருந்தால் அதனை மக்களின் நன்மைக்காகவே பயன்படுத்தினேன்.

பௌத்த தர்மத்துக்கு அமையவே நான் வாழ்க்கை நடத்தினேன். இந்த அழிவைப் பார்த்து நான் கவலை அடையவில்லை என்று கூற மாட்டேன். இதுபற்றி கதைப்பதில் எவ்வித பிரயோசனமும் இல்லை.

பலர் என்னிடம் அழிந்தவற்றை நாம் மீளவும் கட்டியெழுப்புவோம் என்று கூறுகின்றார்கள். அவர்கள் என்னிடம் ஏதேனும் ஒரு சேவையை பெற்றவர்கள். நான் அரசியல்வாதிகளிடம் இருந்து ஒரு ஐந்து சதம்கூட பெறவில்லை. அப்படி யாராவது என்மீது குற்றம் சுமத்தினார்களானால் சட்டத்தின்முன் செல்லவும் நான் தயார். நான் மிகவும் துயரங்களை அனுபவித்த பெண். இந்த துயரத்தையும் நான் தாங்கிக் கொள்வேன்என்கிறார் ஞானக்கா.

அவரின் அருகில் எப்போதும் இருப்பவரான சாரதியின் கூற்றைப் பார்ப்போம்! அம்மாவை அனேகமானோர் நேசித்தார்கள். இவர்களுக்கு ஏதேனுமொரு விதத்தில் அம்மாவின் மூலம்

தன்மை கிட்டியதால்தான் அவரைத் தேடி வருகின்றார்கள். அவ்வாறானவர்கள் இதனை செய்திருக்க மாட்டார்கள். இதன் பின்னணியில் உள்ளவர்களை கண்டுபிடிப்பது சட்டத்தின் பொறுப்பாகும். அவர் எந்தவொரு பயணத்தையும் என்னுடனேயே செல்வார். அதனால் நான் அவர் பற்றி நன்கறிவேன் என்பது அவர் கருத்து.

விடயங்கள் எவ்வாறு இருந்தாலும் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் பல உண்டு. அதில் அனுமதி இல்லாமல் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் ஹோட்டல் ஒன்றை அமைத்தது காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது வெளிநாட்டிலிருந்து வான் மூலம் தூவுவதற்காக கொண்டுவரப்பட்ட மலர்களை சபித்து வழங்கியது போன்றவையாகும்.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகளை அவர் மறுக்கிறார். அவர் ஒரு போதும் வி.ஐ.பி.மாரை நீராட்டியது இல்லை என்றும் அவ்வாறு செய்வதற்கான வசதிகள் அங்கு இல்லை என்றும், யுத்தத்தின்போது தன்னிடம் ஆசி பெற வந்தவர்களுக்கு ஆசிகளை வழங்கியதாகவும், போராட்டக்காரர்களை சபிக்கவில்லை என்றும் அவர் கூறுகின்றார்.

எவ்வாறாயினும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் நீச்சல் தடாகம் ஒன்றை அமைப்பதற்காக நீர்ப்பாசன திணைக்களத்திடம் அவர் அனுமதி கேட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

தற்போது ஞானக்காவின் வீடு மாத்திரமல்ல அவரது பெரும்பாலான சொத்துக்களும் சாம்பலாகியுள்ளன. அவரது சொத்துக்களை காப்பாற்ற அவரது தெய்வங்கள் முன்வரவில்லை என்பது நாம் ஆழமாக யோசிக்க வேண்டிய விஷயம்.

தாரக விக்ரமசேகர ...

தமிழில்: வயலட்

# நிறைவேற்றதிகார ஒழிப்பை நிறைவேற்ற முடியாதிருப்பதேன்?



பொருளாதார நெருக்கடியை போக்குவதற்கு உருவாக்கப்பட்டுள்ள ரணில் அரசாங்கத்தின் நகர்வுகள் அரசியல் அழுங்குப்பிடிக்குள்ளும் அமிழும் நிலைகள் தென்படத் தொடங்குகின்றன. ஏதோவொரு தயவுக்குள்தான் பிரதமர் இருக்கிறார் என்பதைக் காட்டவே இப்பிடிகள் பிடிக்கப்படுகின்றன. எவரும், எதிர்பாராமல் ஏற்பட்ட சில மாற்றங்கள்தான் இந்தப்பிடிகளை பலப்படுத்துவதுண்டு. பிரதி சபாநாயகர் தெரிவில் ஆரம்பான இந்தப்பிடிகள், உள்ளூராட்சி சபைகளைக் கலைக்கும் பிரதமரின்

விருப்புக்கள் கண்டுகொள்ளப்படாதுள்ளதிலிருந்து, பொதுவெளியில் பேசப்படுமளவுக்கு பரபரப்பாகி வருகிறது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிடிகள்தான் இவை. இத்தனை வேகத்தில் வளர்ந்த இக்கட்சி எப்படி திடீரென ஒரு போர்வைக்குள் முடங்குவது?

உள்நாட்டு நிதி நெருக்கடிகளை சமாளித்து, சுமுக நிலையைக் கொண்டுவரும் தைரியம், திராணி மற்றும் தீர்க்கதரிசனம் பிரதமர் ரணிலுக்கு இருக்கிறதுதான். இந்த மவுசு உள்நாட்டில் அரசியல் செல்வாக்கை ஏற்படுத்தக் கூடாதே! இப்படிச் சிந்திக்கும் சில சக்திகளே இப்பிடியைப் பிடிக்கின்றன. இங்கு, இன்னொரு சக்தி ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைத்து, பாராளுமன்றத்தைப் பலப்படுத்தவும் பிரஸ்தாபிக்கிறது. இந்த இருதரப்புக்களின் எதிர்ப்பாடுகளையும் சமாளித்துத்தான் பிரதமரின் பயணம் புறப்பட்டுள்ளது. இந்தப் புறப்பாடுகளின் வெற்றி எதிர்ப்பாடுகளின் புரிதலில்தான்

இருக்கிறது. சர்வதேசத்திடம் விடுக்கப்பட்ட நிதியுதவிக் கோரிக்கைகளுக்கு திருப்தியான பதில் கிடைக்க வேண்டுமாக இருந்தால், இவ்விரு தரப்புக்களுக்குள்ளும் இப்புரிதல் ஏற்படுவது அவசியம். ஸ்திர அரசியல், உறுதியான நிதிக் கொள்கை, உள்நாட்டுக்குள் வரும் வெளிநாட்டுச் செலாவணிகளின் கணிசமான அதிகரிப்பை உறுதிப்படுத்தல் போன்ற நிபந்தனைகளிலிருந்தே இவை கிடைக்கவுள்ளன. எனவே, இந்தப்பிடிகள் நிலவும் வரைக்கும் நிதி வழங்குவதற்கான வெளிநாடுகளின் பிடிகளும் இருக்கவே செய்யும்.

எனவே, அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் இப்போது அவசியம்தானா? அவ்வாறு அவசியப்பட்டாலும் இதனால் ஏற்படும் இழுபறிகள் தேவைதானா? இத்தேவைகள்தானே தேவையில்லாமல் இப்பிடிகளைத் தோற்றுவிக்கின்றன.

பொருளாதார பிரச்சினைக்கும் அரசியலமைப்பு திருத்தத்துக்கும் உள்ள தொடர்புதானென்ன? ஒரு வேளை முறைகேடான அரசியல் நிர்வாகம் செய்தோரை தண்டிக்கவா இந்த திருத்தம்? இல்லை, இந்த அரசியல் நிர்வாகங்களாலா இவ்வாறு நிதி நெருக்கடிகள் ஏற்படுகின்றன? இந்த தெளிவுகள்தான் மக்களுக்கு தேவைப்படுகிறது.


இப்போதுதான், விடயம் வெளிச்சத்துக்கு வருகிறது.

எந்த ஏழு மூளைக்காரரால் இந்த நெருக்கடிகள் வந்ததோ, அந்த மூளைதானே இந்தப் பிடிகளின் பின்னாலுமிருக்கிறது. இவ்வாறு இருந்தால் ரணிலின் விவேகம் எப்படி வெளிப்படும்?

நிறைவேற்று அதிகாரம் தனி நபரின் பிடியிலிருக்கக் கூடாது. தனி மனிதனால் எடுக்கப்படும் தீர்மானங்கள், நியமனங்கள் எல்லாம் நிர்வாகத் திறமையீனத்தை தோற்றுவிக்கும் என்ற கருத்துக்கள் எப்போதே எழுந்துவிட்டன. ஆனால், இப்போதுதான் காணக் கிடைத்திருக்கிறது.

இப்போது, 19 ஐ பலப்படுத்தும் 21 ஆவது திருத்தம் எப்படியிருக்கப் போகிறது என்பதைப் பார்ப்போம். இரட்டைப் பிரஜையுரிமை உள்ளோரின் அரசியல் பிரவேசத்தை பறித்தல், பாராளுமன்ற பேரவையை மீள உருவாக்கல், ஆளுநர்கள், தூதுவர்கள், செயலாளர்கள் உள்ளிட்ட அரச உயர் பதவிகளை இப்பேரவையூடாக நியமித்தல், பாராளுமன்றத்துக்கு ஜனாதிபதி பொறுப்புக்கூறல் போன்ற திருத்தங்கள்தான் இந்த 21. ஆனால், இப்போதைக்கு இது நிறைவேறுமா?

அடிக்கடி எழும் அழுங்குப்பிடிகள், மூன்றிலிரண்டு பெரும்பான்மை, மேலும் சர்வஜன வாக்கெடுப்பும் அவசியப்படலாம் என்கிறார் சட்டமா அதிபர். ஒருவாறு, நிறைவேறிவிட்டதென்றால், நிறைவேற்றதிகாரமா இந்த பொருளாதார நெருக்கடிக்கு காரணம்? அவ்வாறானால், இந்த நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கும் தீர்மானத்தை நிறைவேற்ற முடியாமலிருக்கிறதே! ஏன்?









சுஐப் எம். காசிம் ...




என். சரவணன்

# போர்த்துகேயர் வருகையை நினைவுறுத்தும் கல்வெட்டு

**ஆண்டு 1875. இடம் கொழும்பு துறைமுகம்:**


கொழும்புத் துறைமுகத்தின் தென்மேற்குப் பகுதியை இணைப்பதற்கான கட்டுமானப் பணிகளை மேற்கொண்டிருந்தார்கள் ஊழியர்கள். அவர்கள் அங்கிருந்த மணல் மேடுகளை அகற்றிக்கொண்டிருந்த போது விசித்திரமான கல்வெட்டொன்றின் அடையாளங்களைக் கண்டார்கள். உடனடியாகவே அங்கிருந்த அதிகாரிகளுக்கு அதனைத் தெரியப் படுத்தினார்கள். கட்டுமானப் பணிகளுக்கான தோண்டும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன.

பின்னர் சில மேலதிக அதிகாரிகளின் கண்காணிப்பில், அவர்களின் ஆலோசனைக் கிணங்க அது கவனமாக சுத்தப்படுத்தப்பட்டது. அதிலிருந்த மணல் தூசு அனைத்தையும் அப்புறப்படுத்தினார்கள். கொழும்பு துறைமுகப்பகுதியில் இருந்த அந்த மேடுக்குள் ஒரு பெரும் பாறை. அந்தப் பாறையில் செதுக்கபட்டிருந்தது போர்த்துகேய சின்னம். அந்த சின்னம் கொழும்பு துறைமுகத்தில் இருந்து இந்து சமுத்திரத்தை நோக்கிய திசையில் பார்த்தபடி இருந்தது.

தொல்லியல் நிபுணர்களும், பத்திரிகையாளர்களும், அதிகாரிகளும் வந்து பார்த்து வியப்பாகவும் பல குழப்பகரமான ஐயங்களுடனும் திரும்பிச் சென்றார்கள்.

இந்தச் சின்னத்தின் தொல்லியல் பெறுமதியை உணர்ந்த ஆங்கிலேய ஆட்சியாளர்கள் 1898 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதி அந்தச் சின்னம் பொறிக்கப்பட்ட 20 டன் எடையுள்ள பாறையைத் தகர்த்து துறைமுக சுங்கக் கட்டிடத்தின் முன் வைத்தனர். 1912 ஆம் ஆண்டு, இதை கொழும்பு கோட்டையில் உள்ள இராணி மாளிகையோடு உள்ள கோர்டன் பூங்காவுக்கு அன்றைய காலனித்துவ செயலாளர் சேர் ஹியுஜ் கிளிபோர்ட்டால் (Sir Hugh Clifford) வெட்டிக் கொண்டுவரப்பட்டு நிறுவப்பட்டது. "அந்தக் கல்வெட்டு அப்போது வந்திறங்கியவர்கள் வந்திறங்கியதன் நினைவாக அதனை செதுக்கியிருக்கவேண்டும்" என அவர் கருத்தினர். சில ஆண்டுகளுக்கு முன்னர் கோர்டன் கார்டனிலிருந்து அகற்றப்பட்டு 2006 ஆம் ஆண்டு கொழும்பு துறைமுக வளாகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

போர்த்துக்கேயர்கள் வந்திறங்கியது 1506 ஆம் ஆண்டாக இருந்தாலும், இந்த கல்வெட்டு 1501 ஆம் ஆண்டே நிறுவப்பட்டிருக்க வேண்டும் எனக் கூறுகிற சில வரலாற்று சர்ச்சைகள் நீண்டுகொண்டே இருந்தன.



பெரும் பாறையின் ஒரு பகுதியில் இப்படித்தான் பொறிக்கப்பட்டிருந்தது என்பதைக் காட்டும் ஓவியம்

இந்த கல்வெட்டுச் சின்னம் பற்றி அதிகம் கவனமெடுத்தவர்களில் முக்கியமானவர்கள்; அன்று சமூக விஞ்ஞானிகளின் கேந்திர அமைப்பாக திகழ்ந்த ஆசிய இராஜரீக சங்கத்தினர் (Royal Asiatic Society Ceylon Branch) தான். இலங்கையின் சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டு, தொல்லியல், என பன்முகப்பட்ட ஆய்வுகளை மேற்கொண்டு அடுத்த சந்ததியினருக்கு பல ஆய்வு மூலங்களை விட்டுச் சென்றவர்கள் அவர்கள் தான். ஆளுனரிலிருந்து, அரசியல்வாதிகள், துறைசார் அறிஞர்கள் என பல கல்விமான்களை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கிய நாட்டின் தலையாய புத்திஜீவிகளின் அமைப்பு அது.



அல்மேதா

இந்த தொல்லியல் பெறுமதி கொண்ட பாறையையும் அதன் கல்வெட்டையும் பற்றி அவர்கள் ஆராய்ந்தார்கள். அதன் பிரகாரம் 1889 ஆம் ஆண்டு பெப்ரவரி 23 ஆம் திகதி கூடிய கூட்டத்தில் அதைப் பற்றிய விபரங்களை சமர்பித்து உரையாடினார்கள். அங்கு உரையாடியவற்றையும் அங்கே சமர்பிக்கப்பட்ட ஆவணங்களையும் அவர்கள் 1901 ஆம் ஆண்டு வெளியிட்ட ஆய்வுச் சஞ்சிகையில் (Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society 1899 1900 vol16) வெளியிட்டார்கள். இந்தக் கட்டுரைக்காக அந்த உரையாடலில் கலந்துகொண்டவர்கள் பற்றி தேடி அறிந்த போது மிகவும் வியப்பாக இருந்தது. A. E. Buultjens, D. W. Ferguson, G .A. Joseph, F.H.D. Vos, Ladislaus Michael (பேராயர்) மட்டுமன்றி ஆளுநரும் கலந்து கொண்டிருந்தார்.

இந்த உரையாடலில் தான் அந்த கல்வெட்டு பற்றிய பல உண்மைகளை வெளிக்கொணர்ந்தார்கள். அந்தக் கல்வெட்டை 1501 ஆம் ஆண்டு செதுக்கியதாக இருப்பதால் போர்த்துகேயர் 1501 இலேயே வந்து விட்டார்களா என்கிற வாதம் எழுப்பப்பட்டபோது அது 1501 அல்ல 1561 என்று விளக்கப்பட்டது. அப்படி என்றால் அதன்படி லோரன்ஸ் அல்மேதாவால் அவரின் காலத்தில் இது செதுக்கப்படவில்லை என்றல்லவா பொருளாகும் என்கிற கேள்வி வந்தது.

அந்தக் கல்வெட்டில் உள்ள பிரதான சின்னம் உள்ளிட்ட அத்தனையையும் செதுக்கியவரும், ஆண்டை செதுக்கியவரும் ஒரே நபரல்ல என்றும், ஒரே காலமும் அல்ல என்றும் நிரூபிக்கப்பட்டது. அதாவது 1506 இல் இது செதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 1561 இல் இந்த வருடம் வேறு நபரால் செதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நிறுவினார்கள்.

இந்த விடயத்தில் அதிகம் சிரத்தையெடுத்து அக்கூட்டத்தில் கருத்து தெரிவித்த பெர்குசன் (Donald William Ferguson) பின்னர் "1506 இல் போர்த்துகேயரால் இலங்கை கண்டுபிடிப்பு" (The Discovery of Ceylon by the Portuguese in 1506) என்கிற தலைப்பில் ஒரு பெரும் ஆய்வுக் கட்டுரையை 1907 ஆம் ஆண்டு ஆசிய ராஜரீக சங்கத்தின் கூட்டத்தில் சமர்ப்பித்தார். அதில் போர்த்துக்கேயரின் வருகை பற்றியும், இந்த கல்வெட்டு பற்றியும் விரிவான குறிப்புகள் உள்ளடங்கியுள்ளன. அது 1908 ஆம் ஆண்டு 135 பக்கத்தில் நூலாக வெளியிடப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.



இதுதான் அக் கல்வெட்டு பாறை

அதில் இந்த ஐயங்களுக்கும், சர்ச்சைகளுக்கு எல்லாம் பல முடிவுகளைத் தந்திருக்கிறார் பெர்குசன்.

இதில் போர்த்துக்கேய மன்னரின் அரச கிரீடமும் சிலுவையும் பொறிக்கப்பட்டுள்ளது. மன்னரின் கிரீடத்தின் உருவத்தைக் கொண்ட போர்த்துக்கேய CoatofArms சின்னம் அது. மேலும் பிரதான கேடயத்தின் உட்புறத்தில் சிலுவை வடிவத்தில் ஒரு சிறிய கவசம் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஐந்து கேடயங்களின் உள்ளே தலா 5 தங்க நாணயங்கள் வைக்கப்பட்டுள்ளன. இயேசு சிலுவையில் அறையப்பட்ட பிறகு உடலில் ஏற்பட்ட ஐந்து காயங்களை இது காட்டுகிறது. ஐந்து கேடயங்களும் அபோன்சோ பிரபுவை போரில் தோற்கடித்த ஐந்து தளபதிகளை அடையாளப்படுத்துகின்றன. இயேசுவைக் காட்டிக் கொடுப்பதற்காக யூதாஸ் எடுத்த 30 காசுகளை அடையாளப்படுத்தும் வகையில் தங்கக் காசுகள் காண்பிக்கின்றன.

உறுதிபடுத்தல்

1506 இல் போர்த்துகேயர் கோட்டை அரசனின் அனுமதியுடன் கொழும்புக்கு அண்மையில் ஒரு தொழிற்சாலைக் களஞ்சியத்தையும், கத்தோலிக்க தேவாலயத்தையும், நினைவுச் சின்னத்தையும் நிறுவினர்.

தொன் பிரான்சிஸ்கோ த அல்மேதா; போர்த்துகேய அரசர் மனுவலுக்கு அனுப்பிய கடிதத்தில் (1508 செப்டம்பரில்) இப்படி இருக்கிறது:

"சீலான் தொடர்பாக அங்கே சென்று திரும்பியவர்களின் மூலம் தங்களுக்கு தகவல்களை அறியத் தந்திருக்கிறேன். என் புதல்வன் அங்கே நிறுவிய கல்வெட்டு நினைவுச் சின்னத்தையும் அவர்கள் கண்டிருக்கிறார்கள்."

பர்னவோ லோபேஸ் த காஸ்தன்ஹேதா (Castanheda 1528 அளவில்) இப்படி எழுதுகிறார்

"அரசனின் அனுமதியுடன் அவர் (தொன் லோறன்சோ த அல்மேதா) கடற்கரையோரத்தில் பாறையின் ஒரு மூலையில் போர்த்துகேய அரச சினத்தையும், இன்னொரு மூலையில் வாள் சின்னத்தையும் உடைய கல்வெட்டை நிறுவ ஆணையிட்டார்."

தொடர் 22ஆம் பக்கம்...

## அரசியல் - பொருளாதார நெருக்கடிக்கெதிரான போராட்டங்கள்

# புதிய இலங்கை தேசத்தினைக் கட்டியெழுப்ப உதவுமா?

## சில அவதானிப்புகள்

**இந்த** போராட்ட கலாசாரம் அதனை பறைசாற்றுகின்றது. இந்த புரிதலை ஏற்படுத்துவதில் சிறுபான்மை மக்களை பிரிதிநித்துவம் செய்யும் சிவில் அமைப்புகள், ஜனநாயகம், சிறுபான்மை மக்களின் உரிமைகள், நல்லிணக்கம் தொடர்பாக செயற்படும் அமைப்புகள் மற்றும் சிறுபான்மை சமூகத்தினை சார்ந்த இளைஞர்களுக்கும் உண்டு. காரணம் தற்போதைய நிலையில் சகல இனத்தைச் சேர்ந்த இளைஞர்களின் மனோநிலை, எதிர்பார்ப்பு, உணர்ச்சிகள், ஆவேசம் என்பன பெரியளவில் வேறுபடுவதாக தெரியவில்லை. புரிதலுக்கான இடைவெளியொன்று காணப்படுகின்றது. அதனை எந்தளவுக்கு சரியாக பயன்படுத்தப் போகின்றோம் என்பது முக்கியமாகும். காலத்தினை புரிந்து கொண்டு இக்காரியத்தினை உடனடியாகவே முன்னெடுக்க வேண்டும். எவ்வாறாயினும் இது இலகுவான காரியமல்ல. இந்தப் புரிதல் இளைஞர்கள் மத்தியில் இலகுவில் ஏற்படலாம். ஆனால் பெரும்பான்மை சமூகத்தின் கட்டமைப்பில் மதத்தலைவர்களின் செல்வாக்கு அதிகமாகும். இந்நிலை கிராமப்புறங்களில் அதிகளவில் காணப்படுகின்றது. அதற்கப்பால் சிங்கள சமூகத்தில் பல சமூக வகுப்புகள் காணப்படுகின்றன. ஆகவே இந்தப் புரிதல் அவர்கள் மத்தியில் ஏற்படுமா என்பது பிறிதொரு விடை காணவேண்டிய வினாவாகும்.

20ம் நூற்றாண்டின் தலைசிறந்த அரசியல் தத்துவவியலாளரான ஹன்னா அரெண்ட் என்பவரின் கருத்தினை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். அவர் இத்தகைய போராட்டங்களை அரசியல் தளங்கள் எனக் குறிப்பிடுகின்றார். இங்கு பிரஜைகள் சுதந்திரமாக உள்நுழைவது, சக பிரஜைகளை சுதந்திரமாக சந்திப்பது, சுதந்திரமாக விவாதிப்பது, பொது விடயங்கள் தொடர்பான தமது கருத்துக்களை சுதந்திரமாக பகிர்ந்துக்கொள்வது, அது குறித்து வாதிடல், மாற்றுக்கருத்துக்களை முன்வைத்தல் மற்றும் பொது நன்மைக்காக ஒன்றிணைந்து செயற்படுவதனை அவதானிக்க முடியும் என வாதிடுகின்றார். இக்கருத்து காலி முகத்திடல் உட்பட நாட்டில் ஏனைய பாகங்களில் தாபிக்கப்பட்டுள்ள 'கோடாகோகம' போராட்ட தளங்களில் அவதானிக்க முடியும். இங்கு இன, மத, மொழி, பிரதேச, சாதி, வர்க்க, அரசியல் மற்றும் பால்நிலை வேறுபாடுகள் கருத்தில் கொள்ளப்படுவதில்லை – போராட்டத்திற்கான பொது நோக்கமே முன்னிலைப்படுத்தப்படுகின்றது என்பதனை இதன் மூலம் விளங்கிக்கொள்ள முடிகின்றது. ஆகவே இந்த அரசியல் தளங்களை தீவிர ஜனநாயக மற்றும் ஆட்சி முறை மாற்றத்திற்கான களமாக பயன்படுத்த வேண்டிய பொறுப்பு சகல சமூகத்தவர்களும், சம உரிமைகளுடன் வாழக்கூடிய இலங்கையினைக் கட்டியெழுப்ப விரும்பும் அனைவரினதும் பொறுப்பாகும்.

இத்தகைய வாதத்தினை முன்வைப்பதற்கான காரணம் சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கை அரசு ஓர் இனத்துவ அரசு என்ற நிலையை தொடர்ச்சியாகவே பேணி வந்துள்ளது. இது சிங்களபௌத்த பேரினவாத சிந்தனையினை அடிப்படையாகக் கொண்டு, சுதந்திரத்திற்குப் பின்னர் பதவிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும், அரசியல் தலைவர்களும் இக்கருத்தினை ஆழமாக வேரூண்ட செய்துள்ளனர். இந்த சிந்தனை என்பது இன்று நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, இதனை முற்றாக மாற்றுவது அல்லது மறுசீரமைப்பது அவ்வளவு இலகுவான காரியமாக இருக்காது. பெரும் சவால் மிக்க காரியமாக அமையும். ஒரு புரட்சிகரமான மாற்றம் அல்லது தீவிர ஜனநாயக மறுசீரமைப்பு நடந்தால் அன்றி, அது உடனடியாக சாத்தியமடைய வாய்ப்பில்லை. நோர்வே நாட்டின் உயிர் அறிவியல்கள் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த நடராஜா சன்முகரத்தினம் கட்டுரையாசிரியருக்கு அண்மையில் அனுப்பிய மின்னஞ்சலிலும் இக்கேள்வியை முன்வைத்திருந்தார்.

### பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் வீழ்ச்சியும் அதிருப்தியும்

இப் போராட்டங்கள் இன்னொரு பக்கம் 74 ஆண்டு வரலாற்றினைக் கொண்ட பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினை, அதன் தரத்தினை கேள்விக்குட்படுத்தியுள்ளது. காரணம், பிரதிநிதித்துவ ஜனநாயகம் இலங்கையர்களை வெறும் வாக்காளர்கள் என்ற விட்டத்துக்குள் மாத்திரமே மட்டுப்படுத்தியுள்ளது. அதனைத்தாண்டி ஆட்சி முறை செயற்பாடுகளில் சாதாரண மக்களுக்கு பெரியளவிலான வகிபங்கு வழங்கப்படவில்லை. இதற்கு பல காரணங்கள் உள்ளன. அந்தவகையில் இலங்கையில் பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்பது உயர்குழாம் வர்க்கத்தின் அபிலாஷைகள் மற்றும் நலன்களை பிரதிநிதித்துவம் செய்வதாகவே எப்போதும் இருந்து வந்துள்ளது. பெரும் வர்த்தகர்களின் மற்றும் உயர் அரசியல் வரக்கத்தின் நன்மைகளுக்காவே பொதுக் கொள்கைகள் உருவாக்கப்படுகின்றன.

இது தென்னாசிய நாடுகளில் காணப்படும் பொதுவான பண்பாகும். இப்பின்புலத்திலேயே மக்கள் போராட்டங்கள் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினை சவாலுக்கு உட்படுத்தியுள்ளதுடன், அதில் காணப்படும் அடிப்படை குறைபாடுகளை வெளிப்படுத்தி வருகின்றனர். பெரும் செல்வந்தர்களையும், அரசாங்கத்திற்கு வருமான வரியினை முறையாக செலுத்தாமல் சட்டத்தினை மீறி செயற்படும் வர்த்தகர்களையும் இலங்கையினுடைய தேர்தல் ஜனநாயகம் பாதுகாக்கின்றது. இது பெரிதும் வருந்தத்தக்க விடயமாகும். எமது நாட்டில் செல்வந்த வரி அறிவிடல் தொடர்பான கொள்கைகள் இன்மையும் இவ்வாறான மோசடி செயற்பாடுகளுக்கு காரணமாக அமைந்துள்ளன. செல்வந்த வரி என்பது பெரும் வர்த்தகர்கள் மற்றும் செல்வந்தர்களிடம் அதிக வரியினை அறவிட்டு, அந்த வருமானத்தினை கொண்டு சமூகத்தில் காணப்படும் ஏழை பணக்காரன் என்ற இடைவெளியை சரி செய்து சமூகத்தில் சமத்துவத்தினை நிலைநாட்டுவதற்காக வளர்ச்சியடைந்த நாடுகளில் பின்பற்றப்படும் வரி அறவீட்டு முறையாகும். அத்தகையதொரு வரி அறவீட்டு முறை இலங்கையில் காணப்படுமாயின், தற்போதைய நெருக்கடியினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் அடிதட்டு மக்களுக்கு உதவுவதற்கு பயன்படுத்தலாம்.

போராட்டக்காரர்கள் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினை எதிர்ப்பதற்கு பிரிதொரு காரணம் அது ஊழல் மோசடிகள் நிறைந்து காணப்படுவதாகும். பேராசிரியர் ஜயதேவ உயன்கொட அண்மையில் எழுதிய ஆங்கில கட்டுரையொன்றில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினை கடுமையாக விமர்சித்துள்ளதுடன், எதிர்காலத்தில் அரசியலமைப்பு மற்றும் தேர்தல் சீர்திருத்தங்கள் இடம் பெறும் போது அதில் 'மீளழைக்கும் முறை' அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என வாதிடுகின்றனர். அதாவது, மக்கள் ஆணையினை மறுதளித்து செயற்படும் ஊழலில் ஈடுப்படும் அரசியல்வாதிகளை மீள அழைப்பதற்கான (பதவியில் இருந்து) உரிமை மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதே இங்கு வலியுறுத்தப்படுகின்றது.

காரணம் தற்போது காணப்படும் பிரதிநிதித்துவ ஜனநாயக கட்டமைப்புக்குள் இருந்து கொண்டு ஊழல் அற்ற, நேர்மை திறன் கொண்ட, தகைமையுள்ள, சரியான கொள்கைகளுடன் செயற்படக்கூடிய அரசியல்வாதிகளையோ அல்லது தூய்மையான அரசியல் கலாசாரம் ஒன்றினை உருவாக்க முடியாது. ஆகவே, இந்த போராட்டங்கள் ஜனநாயக மறுசீரமைப்பினை வலியுறுத்துகின்றன என்பது வெளிப்படுகின்றது. அத்தகைய மறுசீரமைப்புகளை உடனடியாக செய்ய வேண்டும். காரணம் அதற்கான தருணம் இன்று மலர்ந்துள்ளது. அது வெறுமனே 20 ஆவது திருத்தத்தினை இல்லாது செய்து 21வது திருத்தத்தினை கொண்டு வருவது மாத்திரம் அல்ல. ஜனநாயக மறுசீரமைப்புக்கள் அதனைத் தாண்டி செல்ல வேண்டும். உள்நாட்டில் மாத்திரம் அல்ல வெளிநாடுகளில் இலங்கையர்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளும்போராட்டங்களும்ஜனநாயக மற்றும் ஆட்சிமுறையில் மறுசீரமைப்புக்கள் அவசியம் என்பதனை வெளிக்காட்டுகின்றன. வெளிநாடுகளில் இடம்பெறும் போராட்டங்கள் ஜனநாயக மறுசீரமைப்புக்கான வெளி ஆதரவினை திரட்டுவதாக, குறிப்பாக சர்வதேசத்தின் ஆதரவினை திரட்டுவதாக அமைந்துள்ளது. இந்தப்போராட்டங்களிலும் இன ஒற்றுமை மற்றும் ஐக்கியத்தினை காண முடிகின்றது இது முன்னொருபோதும் நிகழாத விடயமாகும். புலம்பெயர் தமிழர்களும் சிங்களவர்களும் வேறுப்பட்ட அடையாளங்களைப் பேணி வந்துள்ளனர். இலங்கையின் தற்போதைய நெருக்கடி அவர்கள் மத்தியிலும் ஒரு வகையான புரிதலையும், பொது புள்ளியில் இணைந்து செயற்படுவதற்கான வாய்ப்பினையும் வழங்கியுள்ளது.


### அரசியல் மறுசீரமைப்பு மற்றும் சவால்கள்

ஜனநாயக மறுசீரமைப்புகளில் முக்கியமான அம்சமாக வலியுறுத்தப்படுவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினை ஒழிப்பதாகும். தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு பாராளுமன்ற பொறுப்புகூறலில் இருந்து விடுபட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையும் ஒரு பிரதான காரணம் என்பது பலதரப்பினராலும் முன்வைக்கப்படுகிறது. இலங்கையில் பின்பற்றப்படும் ஜனாதிபதி முறையில் காணப்படும் பிரதான குறைபாடு யாதெனில் ஜனாதிபதியின் அதிகாரங்களை கட்டுப்படுத்துவதற்கான தடைகள் மற்றும் சமன்பாடுகள் இல்லாமையாகும். உலகில் பலம் வாய்ந்த நாடாக காணப்படும் அமெரிக்க ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் அமெரிக்க அரசியல் அமைப்பில் காணப்படுகின்றன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை இல்லாதொழிக்கப்படுவதற்கான முயற்சிகள் கடந்த காலங்களில் இடம்பெற்ற பொழுது சிறுபான்மை அரசியல் கட்சிகள் அதனை எதிர்த்தன.

அதற்கொரு காரணத்தினையும் முன்வைத்தார்கள். ஜனாதிபதி சகல சமூகத்தவர்களாலும் தெரிவுசெய்யப்படுவதனால் சிறுபான்மை மக்களின் நலன்களும் பாதுகாக்கப்படும் என்பதே அந்த வாதமாகும்.

(தொடரும்)



கலாநிதி இரா.ரமேஷ்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
அரசியல் விஞ்ஞானத்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்



# யால தேசிய வனத்தின் சுற்றுச்சூழல் அபிவிருத்தி

## ESCAMP திட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தின் கொள்ளளவு மேம்பாடு மற்றும் சுற்றுலா வசதிகளை ஊக்குவித்தல்

## ECOSYSTEM CONSERVATION AND MANAGEMENT PROJECT





By Dilmi Tharaka Gimhani Lankesha of Ecosystem Conservation and Management Project

யால (ருஹுன) தேசிய வனம் இலங்கையின் ஊவா மற்றும் தென் மாகாணங்களின் மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய நிர்வாக மாவட்டங்களில் பரவியுள்ள 97,880.7 ஹெக்டேயார் அளவைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வன விலங்குகளை விரும்புபவர்கள் இடையே மிகவும் பிரபலமாக இருக்கும் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாகும். 1938 பெப்ரவரி 25 ஆம் திகதி தேசிய வனமாக பிரகடனப்படுத்தப்பட்ட யால தேசிய வனம் இலங்கையின் முதன்மையான மற்றும் இரண்டாவது மிகப்பெரிய தேசிய வனமாகும்.

இரட்டை நிலை தோற்றம் உடைய உலர் வலய வெப்ப மண்டல முட்புதர் கொண்ட காடுகள், ஈர மற்றும் உலர் பருவமழை காடுகள், பகுதி மழைக்காடுகள், புல்வெளி, நன்னீர் மற்றும் கடல்நீர் ஈரவ நிலம், மணல் மலை கொண்ட கடற்கரை பிரதான சுற்றுச்சூழல் கட்டமைப்புகளாக அடையாளம் காணப்பட்டிருப்பதோடு பல்வேறு விலங்கு வகைகள் இந்தக் கட்டமைப்பை தமது இருப்பிடமாகக் கொண்டுள்ளன. அழிவுறும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள காட்டு யானைகள் (Elephas maximus maximus), கடுமையாக அழிவுறும் அச்சுறுத்தல் கொண்ட சிறுத்தைகள் (Panthera pardus kotiya) போன்ற கவர்ச்சிகரமான விலங்கு வகைகள் மற்றும் பல்வேறு பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன, மீன்கள், ஈரூடகவாழிகள் மற்றும் நூற்றுக்கணக்கான தாவர வகைகளுக்கு சிறந்த இருப்பிடமாக உள்ளது. இதன் காரணமாக யால தேசிய வனம் தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் சுற்றுலா துறையை கவரும் ஒன்றாக உள்ளது.

### வெற்றி கொள்ளப்பட்ட பிரச்சினைகள்

சுற்றுலா செயற்பாடுகள் காரணமாக விலங்குகளின் வழக்கமான நடத்தைகளுக்கு ஏற்படுகின்ற அழுத்தம், நீர் தேவைக்காக வரட்சி காலத்தில் விலங்குகள் ஊருக்குள் வருதல், உணவுக்காக அருகில் உள்ள பயிர் நிலங்களை நோக்கி வருதல் மற்றும் அதன்மூலம் உருவாகின்ற காட்டு விலங்குகள் மற்றும் மனிதன் இடையிலான மோதல் ஆகியன யால முகாமைத்துவத்தில் அடையாளம் காணப்பட்டுள்ள பிரதான பிரச்சினைகளாகும். வன அதிகாரிகளின் குடிநீர் வசதி இல்லாமல் போவதும் அடையாளம் காணப்பட்டிருக்கும் பிரச்சினையாக உள்ளது.

பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தின் கொள்ளளவு மேம்பாடு மற்றும் சுற்றுலா வசதிகளை ஊக்குவித்தலின் கீழ் சுற்றுச்சூழல் அமைப்புகள் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் (ESCAMP) செய்வதற்காக வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு தேவையான நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### வசதிகள் வழங்கல்

சுற்றுலா பயணிகளால் விலங்குகளுக்கு ஏற்படுகின்ற அழுத்தத்தை குறைப்பதற்கான மூலோபாய ரீதியான நடவடிக்கை ஒன்றாக ஒவ்வொரு நாளும் நண்பகல் 12.00 தொடக்கம் பிற்பகல் 2 வரை வனத்திற்குள் சுற்றுலா செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதோடு அந்தக் காலப் பகுதியில் சுற்றுலா பயணிகளுக்கு தங்கி இருப்பதற்கு பொருத்தமான வசதிகள் கொண்ட சுற்றுலா நிலையம் ஒன்று வனத்தின் பட்டனங்கல பகுதியில் நிறுவப்பட்டு வருகிறது. கடற்கரைக்கு அண்டிய அழகான இடம் ஒன்றில் நிர்மாணிக்கப்படுகின்ற சுற்றுலா மையம் சுற்றுலா பயணிகளுக்கு தேவையான சூற்றுச்சூழல் அறிவை பெற்றுக்கொள்வதற்கும், யால வனம் சார்ந்த ஞாபகச் சின்னங்களை வாங்குவதற்கும், சிற்றுண்டிகள் மற்றும் பானங்களை பெறுவதற்கு தேவையான வசதிகளைக் கொண்டதாக நிர்மாணிக்கப்படுகிறது. ESCAMP நிதி ஒதுக்கீடு இதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

வனத்தின் நீர் பயன்பாட்டை மேம்படுத்துவதற்காக குளங்கள் மற்றும் நீர் நிரம்பிய பள்ளங்களை மறுசீரமைத்தல் மற்றும் கொள்ளளவை மேம்படுத்தல் ESCAMP நிதி ஒதுக்கீட்டை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி ஆண்டு முழுவதும் நீர் இருக்கின்ற இயற்கையான 7 குளங்களை சுத்தம் செய்து கொள்ளளவு மேம்படுத்தப்பட்டன. சிறிய அளவான 12 நீர் நிரம்பிய பள்ளங்கள் மறுசீரமைக்கப்பட்டன. அது தவிர மெனிக் கங்கை பரக்க கரை பகுதியில் இருந்து நிலத்தடி நீர் குழாய் கட்டமைப்பு ஒன்று மூலம் வனத்தின் 1ஆம் இலக்க வலயத்தில் அமைந்திருக்கும் 9 நீர்த்தேக்கங்களுக்கு நீரை வழங்கி பலட்டுபான வரை 20 கி.மீ தூரம் எடுத்து வரும் திட்டம் ஒன்றும் செயற்படுகிறது. இதன்மூலம் 1ஆம் இலக்க யால வலயப் பகுதியில் அமைந்திருக்கும் சிறிய அளவான 9 குளங்களுக்கு நீர் வழங்கப்படுகிறது.

இவ்வாறு நீர் மூலங்களுக்கு வரண்ட காலத்தில் நீர் வழங்கவது மற்றும் வன விலங்குகளுக்கு தடங்கல் இன்றி வனத்திற்குள் நீரை பெற்றுக்கொள்ளும் வசதி மேம்படுவதோடு குளம் சார்ந்த செடிகள் செழிப்பாக வளர்வதன் மூலம் வன விலங்குகளின் உணவுத் தேவைகளும் பூர்த்தி செய்வதற்கு காரணமாகிறது. அன்னிய மற்றும் ஆக்கிரமிப்பு தாவர இனங்களை அகற்றுதல் மற்றும் பராமரிப்பதன் மூலம் அந்த சுற்றுச்சூழல் கட்டமைப்பின் புல் வகைகளின் வளர்ச்சி மூலம் விளங்குகளுக்கு தமது உணவை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்.

### தாகத்திற்கு நீர்

தற்போதுள்ள சுற்றுச்சூழல் சமநிலைக்கு தாக்கம் ஏற்படாத வகையில் தேவையான சந்தர்ப்பங்களில் நீரை வழங்க முடியுமான வகையில் நீர் வழங்கலை கட்டுப்படுத்தும் திட்டம் ஒன்றும் இந்தத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் மழைக் காலத்தில் நீர் வழங்கலை மட்டுப்படுத்த முடியும். எவ்வாறாயினும் இதன்மூலம் ஏற்படக்கூடிய தாக்கம் தொடர்பில் எப்போதும் மீளாய்வு செய்வது முக்கியம் என்பதால் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கத்தின் தலைமையில் பொதுமக்களினதும் உதவியோடு மீளாய்வு செய்வதற்கு திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டு வருகிறது.

நீர் குழாய் பொருத்தும் திட்டத்தின் மூலம் யால தேசிய வனத்தின் ஆரம்பம் தொடக்கம் இருந்து வருகின்ற பிரச்சினை ஒன்றான வனத்துறையின் பணிக் குழுவுக்கான சுத்தமான குடி நீரை வழங்குவதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. அது இந்தத் திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படும் மிகவும் சாதகமான பணியாகும்.

### விலங்குகளின் தங்குமிடம்

ஒவ்வொரு விலங்கு இனத்திற்கும் பொருந்துகின்ற வாறு உணவு, நீர், சூழல் மற்றும் இடத்தை மேம்படுத்துவது விலங்குகளின் தங்குமிடத்தை மேம்படுத்தும்போது கருத்தில் கொள்ள வேண்டிய பிரதான காரணியாக கருதப்படுகிறது. யால பாதுகாக்கப்பட்ட பகுதிக்குள் அடையாளம் காணப்பட்ட பகுதிகளை உள்ளடக்கும் வகையில் நீரை தேக்கி வைக்கும் கொள்ளளவு மேம்படுத்தப்பட்டுள்ளது. 05 ஆம் இலக்க யால வாலயத்தின் லுனுகம்வெஹர தேசிய பூங்காவின் நீர் கொள்ளளவு மேம்பாட்டுக்காக நீர்த்தேக்கங்களை நீர்மாணிப்பது தவிர உணவு அல்லாத செடிகளை அகற்றி புல் நிலத்தின் அளவை அதிகரிப்பதன் மூலம் உணவு சார்ந்த தாவரங்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் ESCAMP திட்டம் பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தின் கொள்ளளவு மேம்பாடு மற்றும் சுற்றுலா வசதிகளை ஊக்குவிப்பதற்கு வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திற்கு அதிக அளவில் உதவி புரிந்துள்ளது.





வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்

வன பாதுகாப்பு திணைக்களம்

ESCAMP

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ திட்டம்

இது தான், நீங்கள் எமக்கு எழுத வேண்டிய முகவரி:
ESCAMP திட்டப் பணிப்பாளர்,
இலக்கம் 82, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல.
escamp.pd@gmail.com




நிகழ்வைக் காண QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி: அடுத்து வரும் மூன்று மாதங்கள் முக்கியமானவை

**இலங்கையின் பொருளாதாரம் நாளுக்கு நாள் பலவீனமாகித் தள்ளாடிக் கொண்டிருக்கிறது. விலையேற்றங்கள் கட்டுக்கடங்காமல் செல்கின்றன. ஏறிய விலையிலும் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியாமல் மக்கள் வரிசைகளில் காத்திருக்க வேண்டிய நிலை. எரிபொருள் வரிசைகளும் எரிவாயு வரிசைகளும் நாட்டின் நாலாபாகங்களிலும் தொடர்கின்றன.**

பொதுமக்கள் தரப்பிலிருந்து தவிர்க்க முடியாதவாறு எழுப்பப்படும் வினா எப்போது இந்த வரிசைகள் முடிவுக்குவரும்; சாதாரண வாழ்க்கையை மக்கள் வாழக்கூடிய சூழல் உருவாகும் என்பதாகும். ஆனால் இதற்குரிய சரியான பதிலை எவராலும் வழங்க முடியாத ஒரு நிலைமையே இப்போது தென்படுகிறது.

பெரும் எடுப்பில் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தப்போவதாக விடுக்கப்பட்ட அறிவிப்புகளும் கூட காற்றுப்போன பலூனாக மாறிக் கொண்டிருக்கின்றன. உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன இலங்கைக்கு உதவ விருப்பம் தெரிவித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுவந்த சூழ்நிலையில் அண்மையில் உலக வங்கி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு புதிய நிதியுதவிகள் எதனையும் வழங்கும் எண்ணம் இல்லை எனவும் ஏற்கெனவே இலங்கையில் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் உலகவங்கி உதவியுடனான செயற்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் ஒரு பகுதியினை அவசரகாலத் தேவையாகக் கருதி சுகாதாரம் மற்றும் நலிவுற்றோர் நலனுக்காக பயன்படுத்த அனுமதிக்கப்படுமெனவும் இலங்கை இப்போதைய இக்கட்டிலிருந்து வெளிவரப் பொருத்தமான ஒரு பேரினப் பொருளாதாரக் கொள்கை சட்டகமொன்றை (*macroeconomic policy framework*) உருவாக்கி முன்வைத்தால் எதிர்காலத்தில் ஏனைய அபிவிருத்திப் பங்காளிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு மேலதிக உதவிகள் பற்றி சிந்திக்கலாமெனவும் இலங்கையில் இடம்பெறும் விடயங்களை தாம் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் கூறியிருக்கிறது.

உலக வங்கியின் இந்த நிலைப்பாடு சர்வதேச நாணய நிதியத்தின் நிலைப்பாட்டிலிருந்து சற்றும் வேறுபடவில்லை என்பது தெளிவானதாகும். முதலில் சரியானதொரு கொள்கையுடனும் வேலைத்திட்டத்துடனும் வாருங்கள் என்றே அவை கூறுகின்றன.

சர்வதேச நாணய நிதியத்துடனான தொழில்நுட்ப ரீதியிலான கலந்துரையாடல்கள் முடிவுக்கு வந்துள்ள நிலையில் இலங்கை தான் பெற்ற கடன்களை எதிர்காலத்தில் மீளச் செலுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை கடன் கொடுத்தோரிடம் மேற்கொள்வதற்கான *Lazard* என்னும் நிறுவனத்தை நிதி ஆலோசகராகவும் *Clifford Chance* எனும் நிறுவனத்தை சட்ட ஆலோசகராகவும் தெரிவு செய்திருக்கிறது.





**“இலங்கையின் டொலர் கையிருப்புகள் முழுமையாக கரைந்து போயுள்ள சூழ்நிலையில் அத்தியாவசியப் பொருள் உள்ளிட்ட இறக்குமதி தேவைகளுக்காக சுமார் 1.9 பில்லியன் டொலர்கள் தேவைப்படுவதாக மத்தியவங்கி அதிகாரிகள் கூறுகின்றனர். பெற்றோலியம் மற்றும் எரிவாயு போன்றவற்றிற்கு கற்போது நிலவும் தட்டுப்பாடுகளுக்கும் நீண்ட வரிசைகளுக்கும் இதுவே காரணமாகும்”**

அடுத்த கட்டத்தில் இலங்கை சார்பில் இவ்விரு நிறுவனங்களும் கடன் மீள்கட்டமைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இவை முடிவடைந்து இலங்கைக்கு *IMF* இடமிருந்து நிதிவசதிகள் கிடைக்க இன்னும் குறைந்தபட்சம் மூன்று மாதங்களாவது செல்லும் என்கிறார் மத்தியவங்கி ஆளுநர். ஆகவே உலகவங்கி சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றிடமிருந்து எந்தவித நிதி உதவியும் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கு கிட்டாது என்பது மிகத்தெளிவானது.

தற்போது ஏற்றுமதிகள் மூலமாக மாதாந்தம் சுமார் ஒரு பில்லியன் டொலர் மாத்திரமே நாட்டுக்குள் வருகிறது. உல்லாசப்பயண வருவாய் வற்றிவிட்டது. வெளிநாடுகளில் உள்ள இலங்கைப் பணியாளர்கள் உள்ளிட்டோரின் பணவனுப்பல்கள் மூலமான டொலர் உள்வருகை உலக்கை தேய்ந்து உளிப்பிடியாகி விட்டிருக்கிறது.

கடந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் இதே காலப்பகுதியில் இவ்வடிவிலான டொலர் உட்பாய்ச்சல்கள் ஐம்பது சதவீத வீழ்ச்சியைக் கண்டு 300 மில்லியன் டொலர்களாகப் பதிவாகியுள்ளது.

இலங்கையின் டொலர் கையிருப்புகள் முழுமையாகக் கரைந்து போயுள்ள சூழ்நிலையில் அத்தியாவசியப் பொருள் உள்ளிட்ட இறக்குமதி தேவைகளுக்காக சுமார் 1.9 பில்லியன் டொலர்கள் தேவைப்படுவதாக மத்தியவங்கி அதிகாரிகள் கூறுகின்றனர். பெற்றோலியம் மற்றும் எரிவாயு போன்றவற்றிகு கற்போது நிலவும் தட்டுப்பாடுகளுக்கும் நீண்ட வரிசைகளுக்கும் இதுவே காரணமாகும்.

எரிபொருள் மற்றும் எரிவாயுக் கப்பல்கள் நாட்டின் வாசலில் நங்கூரமிட்டு நாட்கணக்கில் தாமதக் கட்டணமாக மிகப்பெருந்தொகையையும் செலுத்தி இவற்றை இறக்க வேண்டிய நிலைமைக்கும் இதுவே காரணம்.

இந்தப் பிரச்சினை தொடங்கி இன்று வரையில் ஆபத்பாந்தவனாக இந்தியாவே இலங்கைக்குத் துணை நிற்கிறது. இப்போதும் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கும் இந்திய நிதியுதவியை இலங்கை எதிர்பார்க்கிறது.

இந்திய கடன் உதவித்திட்டத்தின் கீழ் ஒரு பில்லியன் டொலர்களை இலங்கைக்கு அனுமதித்து அதில் 500 மில்லியன்களை ஏற்கெனவே வழங்கியுள்ளது. அத்துடன் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்தில் இந்தியாவிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு செலுத்த வேண்டிய டொலர்களை தாமதமாக செலுத்துவதற்கான ஏற்பாடாக இரண்டு மாதங்களுக்கு 500 மில்லியன் வரையிலான வரம்பிற்கு உட்பட்டு சலுகை வழங்கப்பட்டுள்ளது.

இச்சலுகையின் கீழ் இலங்கை சுமார் 1.5 பில்லியன் பெறுமதியான பொருள்களை இறக்குமதி செய்துள்ளது. அடுத்துவரும் ஆறுமாத காலப்பகுதிக்கு இன்னும் 1.5 பில்லியன் டொலர் வரையிலான இறக்குமதிகளை இலங்கை இந்தியாவிடமிருந்து பெறமுடியும். இவை பொருள் இறக்குமதிக்காக கடன் வழங்கும் நடவடிக்கையை ஒத்ததாகும்.

இந்தியாவுக்கு இத்தொகைகளை இலங்கை பின்னர் செலுத்த வேண்டும். இதனால் ஏற்படும் தற்காலிக சேமிப்புகள் டொலர் கையிருப்புகள் திரட்சியடைய உதவும். எவ்வாறாயினும் இந்த நிதியுதவிகள் ஊடாக நிலைமையை சமாளிக்க மத்தியவங்கி பகீரதப் பிரயத்தனம் செய்தாலும் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை சந்தைக்கு வழங்க மாதாந்தம் இன்னும் சுமார் 500 மில்லியன் டொலர்கள் மேலதிகமாகத் தேவைப்படுவதாக மத்தியவங்கி கூறுகிறது.

இந்தத் தொகையினை குறுங்கால கடன் வசதியொன்றை நட்பு நாடுகளுடன் கலந்துரையாடிப் பெற்றுத்தருமாறு மத்தியவங்கி கோருகிறது. இது கிட்டுமாயின் எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாடுகளையும் நீண்ட வரிசைகளையும் குறைக்க முடியும் என்றும் மத்தியவங்கி கூறுகிறது. இந்த நிதி கிடைக்காத பட்சத்தில் இப்போது நிலவும் சூழ்நிலையிலேயே அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கு நாட்டை நகர்த்திச் செல்ல வேண்டியிருக்கும்.

(20ஆம் பக்கம் பார்க்க)

---



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

## குவாட் அமைப்பின் டோக்கியோ மாநாடு:

# ஆசியாவில் போர் ஒன்று நடப்பதை விரும்புகிறாரா ஜோபைடன்?

**இந்தோபசுபிக் பிராந்தியம் மூலோபாய மற்றும் தந்திரோபாய ரீதியில் முக்கிய பிராந்தியமாக விளங்குகிறது. கடந்த பல தசாப்தங்களாக அதன் தனித்துவம் மேற்கு சீன முரண்பாடாக வடிவமைக்கப்பட்டு தற்போது கீழைத்தேச நாடுகளையும் உள்ளடக்கி வருகிறது.**

குறிப்பாக சீனாவின் எழுச்சிக்கு பின்னர் அமெரிக்காவின் பிரதான உத்தியாக இந்தோபசுபிக் பிராந்தியக் கூட்டுக்களை பலப்படுத்துவதன் மூலம் சீனாவை தோற்கடிக்க முயலுகிறது. இந்தோ பசுபிக் கட்டமைப்பானது, சீனாவின் எழுச்சியை முடிவுக்குக் கொண்டுவரவும் பதிலுக்கு சீனாவின் நகர்வானது அமெரிக்கா உட்பட்ட மேற்கின் எழுச்சியை இப்பிராந்தியத்திலிருந்து அகற்றுவதற்கானதாகவும் அமைந்துள்ளது. இத்தகைய போட்டி கடந்த இரு தசாப்தங்களாக இரு தரப்புக்கும் இடையில் நிகழ்ந்து வருகிறது. இக்கட்டுரையும் குவாட் நாடுகளில் ஒன்றான அவுஸ்திரேலியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் ஏற்பட்டுவரும் நகர்வுகளையும் குவாட் அமைப்பின் ஜப்பானிய மகாநாட்டின் விளைவுகளைத் தேடுவதாக உள்ளது.

ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் நடைபெற்ற குவாட் நாடுகளின் உச்சிமகாநாட்டுக்கு (2526) தலைமை தாங்கிய அனைத்து அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் முதல் அனைத்துத் தலைவர்களும் உரையாற்றும் போது அதிகம் உக்ரைன் போர் தொடர்பில் ரஷ்யாவுக்கு எதிரான கண்டனங்களை வெளிப்படுத்தினர். இந்தியப் பிரதமர் தவிர ஏனைய மூன்று நாட்டுத் தலைவர்களும் ரஷ்யாவின் நடவடிக்கையை கண்டித்ததுடன் ஆக்கிரமிப்பு நகர்வெனவும் குற்றம் சாட்டினர். அது மட்டுமன்றி சீனாவின் பிராந்தியம் நாடுகள் மீதான நடவடிக்கைகள் கண்டிக்கப்பட்டதுடன் தைவான் விவகாரம் முதன்மையானதாகவும் அவர்களது உரையில் காணப்பட்டது. அதனைக் கடந்து இந்தியப் பிரதமர் உட்பட ஏனைய தலைவர்கள் உலகளாவிய பொருளாதார நெருக்கடி தொடர்பிலும் அதனை வெற்றிகொள்வதற்கான உத்திகள் தொடர்பிலும் உரையாடப்பட்டது.

குறிப்பாக, பொருளாதா இணைவையும் வர்த்தக வாய்ப்புக்களை விரிவாக்குவதையும் குறிப்பிட்டதுடன் சைபர் பாதுகாப்பு, கொரனோ தடுப்பூசி விநியோகம் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பில் முதன்மைப்படுத்தி உரையாடினார். அவுஸ்திரேலியாவின் புதிய பிரதமர் அந்தோனி அல்பானீஸ் காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை மின்சக்தி பற்றிய உரையாடலை வெளிப்படுத்தியிருந்தார்.

இவ்வுச்சி மகாநாடு நிறைவுபெற்றதுடன் சீனாவின் வெளிவிவகார அமைச்சு ஜோபைடனால் டோக்கியோவில் ஆரம்பிக்கப்பட்ட வளர்ச்சிக்கான இந்தோ பசுபிக் பொருளாதாரக் கட்டமைப்பினை பொருளாதார நோட்டோ என விமர்சனம் செய்தது. அவுஸ்திரேலிய புதிய பிரதமரது அணுகுமுறைகளும் தொழில் கட்சியின் பாரம்பரியமும் அவரது அணுகுமுறையை தனித்துவமானதாக கருதினாலும் டோக்கியோவில் அவரது வெளிப்பாடுகளும் தேர்தல் காலத்தில் சீனாவுடனான உறவு பற்றிய உரையாடல்களும் தேர்தலுக்கு பின் வேறு தளம்மாறுமா என்ற குழப்பம் நீடித்தாலும் சீனாவின் உயிரியல் பொருளாதாரத்தில் இணைந்து பயணிப்பது பற்றி புதிய பிரதமர் உரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக தென் பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் நகர்வு கடந்த சில மாதங்களில் அதிகரித்திருப்பதாக அமெரிக்காவும் அவுஸ்திரேலியாவும் கருதுகின்றன. அதற்கமைவாகவே தென் பசுபிக் தீவான சாலமனுடனான சீனாவின் உடன்படிக்கை முக்கியம் பெறுகிறது.



**தென் பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் நகர்வு கடந்த சில மாதங்களில் அதிகரித்திருப்பதாக அமெரிக்காவும் அவுஸ்திரேலியாவும் கருதுகின்றன. அதற்கமைவாகவே தென் பசுபிக் தீவான சாலமனுடனான சீனாவின் உடன்படிக்கை முக்கியம் பெறுகிறது**

அது மட்டுமன்றி சீனாவின் வெளியுறவு அமைச்சர் வாங் ஜீ சாலமன் தீவுக்கு விஜயம் செய்துள்ளார். அடுத்தவாரம் (3005) பிஜித் தீவில் நடைபெறவுள்ள பசுபிக் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் வாங் ஜீ பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அந்த மகாநாட்டைத் திட்டமிட்டுள்ள சீனா அடுத்துள்ள ஐந்தாண்டு காலப்பகுதியில் உயிரியல் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டம் தொடர்பில் முன்வைத்துள்ள விடயம்; பற்றிய உடன்பாடொன்றை பசுபிக் நாடுகளோடு மேற்கொள்ள முனைகிறது. அத்தகைய உயிரியல் பொருளாதார வளர்ச்சியானது மருத்துவம், சுகாதாரம், விவசாயம், வனவியல், ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய துறைகளில் முன்னேறிய உயிரியல் தொழில்நுட்பங்களை ஒன்றிணைப்பதன் மூலம் பொருளாதாரத்தின் ஆதாரங்களாக அவற்றை விரிவுபடுத்துவதை பிரதான நோக்கமாக கொண்டுள்ளது. அதற்கான முயற்சிகளை முன்கூட்டியே தொடக்கியுள்ள சீனா, பசுபிக் நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுடனான சந்திப்பில் உடன்பாடொன்றை எட்டுவதற்கு திட்டமிட்டுள்ளமை கவனிக்கத் தக்கது. அதே நேரம் அத்தகைய உடன்பாட்டில் அவுஸ்திரேலியா பின்னிற்காது முன்னேற வேண்டும் என அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானிஸ் தெரிவித்துள்ளார். மேலும் அவுஸ்திரேலிய பிரதமர் கடல்சார் பாதுகாப்பு, காலநிலை மாற்றம், மற்றும் பசுபிக் நாடுகளுக்கான உதவிகளை அதிகரிப்பது, குடிமக்களை அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர அனுமதிப்பது ஆகிய நடவடிக்கைகளை தனது தொழில் கட்சி அரசாங்கம் எடுக்கும் எனத் தெரிவித்துள்ளார். முன்னைய அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளை கைவிடப் போவதில்லை எனவும் அதிலிருந்து முன்னேற வேண்டும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே அவுஸ்திரேலியாவின் புதிய தொழில் கட்சி அரசாங்கம் அதிக மாற்றங்களை செய்ய முனைகிற போது அமெரிக்க அணியில் பயணிக்கப் போகிறதா அல்லது சீனாவுடன் ஒத்துழைக்கப் போகிறதா என்ற குழப்பம் நிலவுகிறது. பதவியேற்றதும் குவாட் நாடுகள் மகாநாட்டில் கலந்து கொள்ள பயணமான அந்தோனி அல்பானீசின் சீனாவின் உயிரியல் பொருளாதாரத்திலும் பங்கெடுப்பதென்ற முடிவானது அந்நாடு நடுநிலையை நோக்கி நகர முயலுகிறதா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. ஆனால் குவாட் அமைப்பின் உள்ளார்ந்த நோக்கங்களை அவதானித்தால் அவுஸ்திரேலியா அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடாகவே தெரிகிறது. அதனை விரிவாக நோக்குவது அவசியமானது. .

முதலாவது, இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் பொருளாதார இணைவை உருவாக்குவதன் மூலம் சீனாவின் பொருளாதார நகர்வுகளை நெருக்கடிக்குள் தள்ளுவது அமெரிக்கா தலைமையிலான மேற்குலக கூட்டாளிகளின் நோக்கமாக உள்ளது. 2020, நவம்பரில் சீனா தலைமையில் உருவான Regional Comprehensive Economic partnership க்கு பதிலானதாக கட்டமைக்கப்பட்டதே IPEF என்ற அமைப்பாகும். ஊடகங்கள் மத்தியிலும் மகாநாட்டிலும் ஜோபைடன் உரையாற்றும் போது சீனா இப்பிராந்திய நாடுகளுக்கு ஏற்படுத்திவரும் நெருக்கடிகளை சுட்டிக் காட்டினார். சீனாவின் பொருளாதார ரீதியான ஆக்கிரமிப்புகளையும் இராணுவ ரீதியான நடவடிக்கைகளையும் குற்றச்சாட்டாக முன்வைத்ததை அவதானிக்க முடிந்தது.

**அவுஸ்திரேலியாவின் புதிய தொழில் கட்சி அரசாங்கம் அதிக மாற்றங்களை செய்ய முனைகிற போது அமெரிக்க அணியில் பயணிக்கப் போகிறதா அல்லது சீனாவுடன் ஒத்துழைக்கப் போகிறதா என்ற குழப்பம் நிலவுகிறது.**

ஏற்கனவே பராக் ஒபாவின் ஆட்சிக்காலத்தில் கட்டமைக்கப்பட்ட TPP எனும் Trans Pacific Partnership அமைப்பை அப்போது ஆட்சிக்கு வந்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனாட் ட்ரம்ப் கைவிட்டுவிட்டு குவாட் கட்டமைப்பிற்கான இந்தோபசுபிக் தந்திரோபாயத்தை உருவாக்கினார்.

இவ்வாறு மாறி மாறி புதிய அமைப்புக்கள் உருவாகிறதே அன்றி பிராந்திய பாதுகாப்போ பொருளததார செழிப்போ நிகழ்வதாக தெரியவில்லை. இலங்கை போன்று ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் 25 நாடுகள் பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவை அனைத்தும் கடன் சுமையால் நெருக்கடியை எதிர்கொள்ளும் நாடுகள் என்பதே முக்கியமானது.

(20ஆம் பக்கம் பார்க்க)

# சிறுவர் கல்வி மற்றும் அறிவை மேம்படுத்த CDB சிசுதிரி புலமைப்பரிசில் பகிர்ந்தளிப்பு




CDB சிசுதிரி புலமைப்பரிசில் திட்டம் 13ஆம் ப ருவத்தின் கீழ் 100க்கும் அதிகமான புலமைப்பரிசில்கள் இளம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. அதனூடாக அவர்களுக்கு தமது கல்வியைத் தொடர்வதற்கு அவசியமான அடித்தளம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த சித்தியை பதிவு செய்த அறுபது மாணவர்கள் மற்றும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சிறப்பாக சித்தியெய்தியிருந்த 40 மாணவர்களுக்கு இந்த புலமைப்பரிசில் வழங்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வு அண்மையில் மெய்நிகர் நிகழ்வாக இடம்பெற்றது. பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளரும், CDB இன் சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளருமான சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். CDB இன் நிலைபேறாண்மை நிகழ்ச்சி நிரலின் கீழ் இந்தப் புலமைப்பரிசில் வழங்கும் திட்டம் வருடாந்தம் இடம்பெறுவதுடன், சமூக அக்கறை எனும் அரணில் சிறுவர் கல்வி மற்றும் அறிவை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

நிதி நெருக்கடிகள் நிறைந்த சூழலில் கல்வியை தடங்கலின்றி தொடர வேண்டியதன் முக்கியத்துவதை புரிந்து கொண்டு, CDB இனால் 2008 ஆம் ஆண்டில் சிசுதிரி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதனூடாக இளம் சிறுவர்களுக்கு தரமான கல்வியை தொடர்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், தொழில்நிலை முன்னேற்றத்துக்கு பெறுமதி சேர்ப்பதாக அமைந்திருந்தது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பாக சித்தியெய்தியவர்களுக்கு, வருடாந்த புலமைப்பரிசிலாக வருடாந்தம் ரூ. 10000 வீதம் ஐந்து வருட காலப்பகுதிக்கு மொத்தமாக ரூ. 50000 வீதமும், தரம் 11 இல் புலமைப்பரிசில் பெற்றுக் கொண்டவர்களுக்கு வருடமொன்றுக்கு ரூ. 15000 வீதம் இரண்டு வருடங்களுக்கு ரூ. 30000 வழங்கப்படுகின்றது.

# 'Cannes Lions Young Marketer Competition 2022' போட்டியில் வெற்றி பெற்ற நெஸ்லே லங்காவின் சமரிது மற்றும் மினிந்து



நெஸ்லே லங்கா நிறுவனத்தின் சமரிது விதாரண மற்றும் மினிந்து அலஸ் ஆகியோர் மிகவும் புகழ்பெற்ற Cannes Lions Young Marketer Competition 2022 போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர். உள்நாட்டு போட்டியை வென்ற இருவரும் தற்போது ஜூன் மாதம் நடைபெறவுள்ள.

'Cannes Lions International Festival of Creativity' நிகழ்வில் இலங்கையைப் பிரதிzzதித்துவப்படுத்தவுள்ளனர். இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தினால் தொடர்ந்து.

ஒன்பதாவது ஆண்டாக Metal Factor உடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட இந்த போட்டியில், நாட்டின் முன்னணி நிறுவனங்களில் இருந்து மிகவும் திறமையான சந்தைப்படுத்தல் வல்லுனர்களைக் கொண்ட 20 அணிகள் பங்குபற்றியிருந்தன. தனது இளம் திறமைசாலிகளுக்கு சான்றாக, நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அணி இந்த மதிப்புமிக்க விருதை வெல்வது இது மூன்றாவது முறையாகும். இந்த வெற்றியால் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளோம். நெஸ்லே லங்கா நிறுவனத்தில் எங்களின் தொழில் வாழ்க்கையில் கிடைத்த அனைத்து வாய்ப்புகள், கற்றல் மற்றும்

அனுபவங்களுக்கு நாங்கள் நன்றியுள்ள வர்களாக இருக்கிறோம். இது நாட்டின் சிறந்த இளம் சந்தைப்படுத்தல் வல்லுனர்களுக்கு எதிராக வெற்றிகரமாக போட்டியிட எங்களுக்கு உதவியது.

உலக அரங்கில் நம் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவது ஒரு பெரும் பாக்கியம்.

# பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு வலுவூட்டும் DFCC வங்கி





சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, அனைவருக்குமான வங்கியான DFCC வங்கியினால், தொழில்முயற்சியாண்மை விருத்தி தொடர்பில் விசேட பயிற்சிப்பட்டறை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குருநாகல் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளைச் சேர்ந்த சிறிய, நடுத்தரளவு பெண் தொழில்முயற்சியாளர்களுக்கும் பெண் தொழில் உரிமையாளர்களுக்கும் உதவும் வகையில் இந்த பயிற்சிப்பட்டறை முன்னெடுக்கப்பட்டது. குருநாகல், ஹோட்டல் இந்துராவில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், இதில் 75க்கும் அதிகமான பெண் தொழில்முயற்சியாளர்கள் பங்கேற்றிருந்தனர்.

பெண் தொழில்முயற்சியாளர்கள் மற்றும் பெண் உரிமையாண்மையில் இயங்கும் நுண், சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சிகள் தொடர்பில் DFCC வங்கியின் கடன் வழங்கல் செயற்பாடுகள் அதிகம் கவனம் செலுத்துவதுடன், இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக அமைந்துள்ள அந்தத் துறையின் வளர்ச்சிக்கு கைகொடுத்து ஆதரவளிப்பதிலும் தனது பங்களிப்பை வழங்குகின்றது.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தப் பயிற்சிப்பட்டறையில் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களுக்கு முக்கியமான பல்வேறு விடயங்கள் குறித்து பேசப்பட்டிருந்தன. இதில் பதிவுகளைப் பேணல், நிதி முகாமைத்துவம் மற்றும் தொழில் முயற்சியாண்மை விருத்தி ஆகியவற்றுடன், வலையமைப்புத் தொடர்புகளைப் பேணுவதன் முக்கியத்துவம், டிஜிட்டல் சந்தைப்படுத்தலில் கவனம் செலுத்தல் மற்றும் குறைந்த செலவில் சிறிய வியாபாரங்களுக்கு சமூக வலையமைப்பு சாதனங்கள் பற்றிய விளக்கங்கள் அடங்கியிருந்தன. உணவு பதப்படுத்துகையில் பெறுமதி சேர்ப்பு முறைகளின் முக்கியத்துவம் தொடர்பான அமர்வினூடாக, பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு பெறுமதி சேர்ப்பின் முக்கியத்துவம் பற்றி விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அதனூடாக வருமானமீட்டுவது மற்றும் வாழ்க்கைக்கு நேர்த்தியான முறையில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் பற்றியும் விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

DFCC வங்கியின் நுண் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மை பிரிவு (வட மேல் மாகாண அணி) மற்றும் குருநாகல் DFCC வங்கிக் கிளையின் அணியினர் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

# சிறந்த கைத்தொழிலுக்கான தங்க விருதை வென்ற Sirrextar நிறுவனம்



ஸ்கிம் கோட், சுவர் புட்டி, டயில் மோட்டார், டயில் அடிசிவ், வோல் பில்லர் மற்றும் நிறப் பூச்சு (பெயின்ட்) உற்பத்தித்துறையில் இலங்கையின் முதன்மையான நிறுவனமான Sirrextar தனியார் நிறுவனம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை (IDB) ஏற்பாடுசெய்த சிறந்த கைத்தொழில்களுக்கான விருது வழங்கும் விழாவில் கிரேனட், டயில், புட்டி மற்றும் கட்டட நிர்மாணத் துறைசார்ந்த பிரிவின் தங்கவிருதை வென்றுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முன்னாள் கைத்தொழில்துறை அமைச்சர் ஆகியோர் தலைமையில் வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நடைபெற்ற விழாவில் அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் கீர்த்தி சிறிவர்தன தமக்கான விருதை பெற்றுக்கொண்டார்.

2008 ஆம் ஆண்டில் கோட் புட்டி உற்பத்தியின் மூலம் தொடங்கப்பட்ட Sirrextar தனியார் நிறுவனம் உயர் தரத்திலான டயில் மோட்டார்,டயில் அடிசிவ், வோட்டர் ப்ரூவ், தளபாட பாதுகாப்பு பூச்சுகள், அயன் ஒக்சயிட், க்றிவிட்டி, டர்பன்டயில், வோல் பில்லர், நிறப்பூச்சு போன்ற பல்வேறு உற்பத்திகளை அறிமுகப்படுத்தி படிப்படியாக சந்தையை வெற்றிக் கொண்டது. உயர்தரத்திலான மூலப் பொருட்களை கொண்டு நவீன தொழில்நுட்பத்தின் துணையுடன் உற்பத்தி செய்யப்படும் நீண்டகாலத்துக்கு உழைக்கக்கூடிய Sirrextar உற்பத்திகள் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை வென்றுள்ளது.

Sirrextar நிறுவனத்தின் கைத்தொழிற்சாலை மாத்தறை, வலஸ்முல்ல பிரதேசத்தில் அமைந்துள்ளதோடு, மற்றுமொரு கைத்தொழிற்சாலையும் அலுவலகமும் பிலியந்தலவில் அமைந்துள்ளது. TI, IDB மற்றும் ISO 9001:2015 தர முகாமைத்துவக் கட்டமைப்புடன் தொடர்புடைய சான்றிதழுடன் மேலும் பல சான்றிதழ்களையும் சிறந்த தொழில் முயற்சியாளருக்கான விருதுகளையும் வென்றுள்ள Sirrextar நிறுவனம் எதிர்காலத்தில் கழிவுப் பொருட்களைக் கொண்டு இயற்கைப் பசளை உற்பத்தி நடவடிக்கைகளை தொடங்குவதற்கும் எதிர்பார்த்துள்ளத

# கோழி இறைச்சி விநியோகத்தை மீள உறுதி செய்யும் New Anthoney's Farms



நுகர்வோர் தொடர்ச்சியாக தமக்கு பிடித்த கோழி இறைச்சி வர்த்தக நாமத் தயாரிப்புகளை நுகர்வதை உறுதி செய்யும் வகையில், New Anthoney's Farms (பிரைவட்) லிமிடெட், போதியளவு மற்றும் தடங்கலில்லாத கோழி இறைச்சி விநியோகத்தை மேற்கொள்வதை உறுதி செய்துள்ளது. இலங்கையின் பொருளாதாரம் பல சவால்களுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், கோழிகளுக்கு அவசியமான தீன்களைப் பெற்றுக் கொள்வதில் காணப்படும் தட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் தமது இறைச்சித் தெரிவுகளை தொடர்ந்தும் விநியோகிப்பதற்கு தன்னை அர்ப்பணித்துள்ளதாக நிறுவனம் அறிவித்துள்ளது.

போதியளவு டொலர்கள் கையிருப்பிலில்லாமை காரணமாக தீனிக்களுக்கு அவசியமான மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதில் காணப்படும் நெருக்கடி நிலை மற்றும் அவற்றின் விலைகள் சர்வதேச சந்தையில் பெருமளவில் அதிகரித்துச் செல்கின்றமையினால், தரமான, சிறந்த மற்றும் போஷாக்கான தீன்களைப் பெற்றுக் கொள்வது கோழி இறைச்சித் துறைக்கு சவால்கள் நிறைந்த விடயமாக அமைந்துள்ளது. இதனால் நடப்பு ஆண்டில் கோழி இறைச்சி உற்பத்தி ஐந்தில் ஒரு பங்காக வீழ்ச்சியடையலாம் என அனுமானித்துள்ளது.

New Anthoney's Farmsஇன் தவிசாளரும் இணை ஸ்தாபகருமான எமில் ஸ்டான்லி கருத்துத் தெரிவிக்கையில், "தற்போதைய சூழ்நிலை தொடர்பில் நாம் கூர்மையாக அவதானித்து வருவதுடன், எழும் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய முன்னாயத்தமான நடவடிக்கைகளை உரிய காலத்தில் மேற்கொள்வதற்காக பிரதான பங்காளர்களுடன் நாம் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றோம். கோழி இறைச்சித் துறையை மீண்டும் உரிய நிலைக்கு கொண்டு வருவதற்கும் அதன் சூழல் கட்டமைப்பு மற்றும் பெறுமதி சங்கிலியை வலுவூட்டுவதற்கும் கைகோர்த்து செயலாற்றுவதற்கு இது உகந்த காலமாக அமைந்துள்ளது.

New Anthoney's Farmsஇன் Haritha Hari என்பது,முற்றிலும் இயற்கையான செயன்முறையாக அமைந்திருப்பதுடன், போஷாக்கு நிறைந்த மற்றும் எந்தவொரு அன்ரிபயோடிக் அல்லது ஹோர்மோன் திரிபு அற்ற முறையில் பேணப்பட்டு, முற்றிலும் இயற்கையான தீனிக்களை வழங்கி தயாரிக்கப்படுகின்றது. உள்ளடக்கப்பட்டுள்ள அம்சங்களாக காணப்படுவதுடன், அமெரிக்காவின் தேசிய கோழி இறைச்சி சம்மேளனத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டதாக அமைந்துள்ளது.

# WACE கல்வி முறையை இலங்கையில் ஆரம்பிக்க அவுஸ்திரேலியாவுடன் உடன்படிக்கை கைச்சாத்து



இலங்கையின் சுகாதாரக் கல்வித் துறையில் முதன்மை நிறுவனமாக விளங்கும் IIHS (International Institute of Health Sciences) நிறுவனம், இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக மேற்கு அவுஸ்திரேலிய அரசாங்கத்துடன் இணைந்து மேற்கு அவுஸ்திரேலிய கல்விச் முறையினை (Western Australian Certificate of Education WACE) இலங்கையில் நிறுவுவதற்கு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

IIHS நிறுவனம் சார்பாக அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி டாக்டர் கித்சிறி எதிரிசிங்கவும் மேற்கு அவுஸ்திரேலிய அரசாங்கம் சார்பாக The School Curriculum and Standard Authority நிறுவனத்தைச் சேர்ந்த Patrick Garnett அவர்களும் அதில் கைச்சாத்திட்டனர். WACE கல்விச் செயன்முறையினை இலங்கையில் ஆரம்பிப்பதற்கு வெலிசரவில் அமைந்துள்ள IIHS நிறுவனத்துடன் இணைந்த ISWA சர்வதேசப் பாடசாலை (www.iswa.edu.lk) நிறுவப்பட்டுள்ளதுடன் இதன் மூலம் மேற்கு அவுஸ்திரேலியக் கல்விமுறையின் கீழ் கல்வி கற்பதற்கான வாய்ப்பு எமது மாணவ மாணவியர்களுக்கு கிடைக்க உள்ளது.

குறிப்பாக உயர் கல்விக்கு அவுஸ்திரேலியா செல்ல எதிர்பார்த்துள்ள மாணவ, மாணவியருக்கு WACE கல்விமுறையின் கீழ் கல்வி நடவடிக்கைககளை மேற்கொள்ள முடிகின்றமை கூடுதல் நன்மையாகும். WACE இன் கீழ் பரீட்சைகளில் சித்தியடையும் மற்றும் கல்வி நடவடிக்கைகளை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு IELTS இல்லாமலே அவுஸ்திரேலியாவில் உயர் கல்விக்கு பிரவேசிப்பதற்கான வாய்ப்பும் அதில் முன்னுரிமையும் கிடைக்கும்.

# புதிதாக பிறந்த குழந்தைகள் மத்தியில் தைரொயிட் நோய் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்திய Ninewells வைத்தியசாலை



தனியார் துறையைச் சேர்ந்த இலங்கையின் முன்னணி பெண்கள் மற்றும் சிறுவர் பராமரிப்பு வைத்தியசாலையான Ninewells வைத்தியசாலை, உலக தைரொயிட் தினம் 2022 ஐ முன்னிட்டு, இலங்கையில் புதிதாக பிறந்த குழந்தைகள் மத்தியில் பிறப்பிலிருந்தான தைரொயிட் குறைவை (Congenital hypothyroidism)(CHT) ஆரம்பத்தில் இனங்காணல் மற்றும் அதற்கான சிகிச்சையின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தது.

பிறப்பிலிருந்தான தைரொயிட் குறைவு (Congenital hypothyroidism) (CHT) என்பது குழந்தைகளை பிறப்பிலிருந்து பாதிக்கும் ஒரு நிலையாக அமைந்திருப்பதுடன், உடலில் தைரொயிட் சுரப்பி காணப்படாத நிலை அல்லது சுரப்பி காணப்பட்ட போதிலும், அதனால் போதியளவு தைரொயிட் ஹோமோன் சுரப்பு ஏற்படுத்த முடியாத நிலையை குறிக்கின்றது. இலங்கையில் சராசரியாக 4000 இல் 1 குழந்தை இந்த குறைப்பாட்டின் பாரதூரமான நிலையுடன் பிறப்பதுடன், சிறியளவிலான குறைபாடுகளை பொதுவில் காணக்கூடியதாக இருக்கும். இந்த நிலை தொடர்பில் போதியளவு கவனம் செலுத்தவிடின், சிறுவர்கள் மத்தியில் மூளை வளர்ச்சி மற்றும் சாதாரண வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கும். மாறாக, ஆரம்பத்தில் இனங்காணப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டால், CHT இனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள முடியும் என்பதுடன், முழுமையாக தவிர்த்துக் கொள்ளவும் முடியும்.

2021 இல் Ninewells வைத்தியசாலையினால் ThyroidStimulating Hormone (TSH) பரிசோதனை வசதி அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. புதிதாக பிறந்த குழந்தைகள் மத்தியில் பிறப்பிலிருந்தான தைரொயிட் குறைவு (Congenital hypothyroidism) (CHT) மற்றும் ஆரோக்கியமான சனத்தொகைக்கான இலங்கையின் நோக்கம் ஆகிய தேசிய திட்டத்துக்கு ஆதரவளிக்கும் வகையில் இந்தப் பரிசோதனை அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. அப்போது முதல், 2021 ஆம் ஆண்டில் வைத்தியசாலையினால் 8000 க்கும் அதிகமான பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், 2022 ஜனவரி முதல் மே மாதம் வரையில் 2000 க்கும் அதிகமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.




## ரயிலில்...

முபர்ரிஜ்

காதல்
விதிவிலக்கானது
மதியை மயக்க வல்லது
நியதியின் படி நடைபெறுவது

அன்றைய ரயிலோ
ஆரவாரம் அற்றது
பயணிகளைக் குறைவாய்ப் பெற்றது
அன்பின் தண்டவாளத்தில் ஓட விடப்பட்டது

என்னெதிரே வந்தவள்
எனை ஏற இறங்கப் பார்க்கிறாள்
ஏதோ எண்ணியவளாய்
எனை விட்டுச் செல்கிறாள்

கொம்பார்ட்மன்டை வலம் வந்தவள்
காலி இடம் ஒன்றை பார்க்கிறாள்
என்னெதிரே அமர்கிறாள்
ஏதேதோ முணுமுணுக்கிறாள்

தங்கத்தோடு பயணிக்காதே என
அரசு எச்சரித்து இருந்தும் அவள்
தங்கத் தோடு அணிந்திருந்தாள்
தங்கமும் ஜொலித்தது
அவளும் ஜொலித்தாள்

என் மனம் கவர்ந்தவள்
என் எதிரே இருப்பதால்
எண்ணங்கள் சுழலுது ஆனாலும்
எதுவும் செய்ய முடியவில்லை

சமயம் பார்த்து
அவள் கருவிழிக்குள்
என் கண்ணைப் பதித்து
மின்னலாய் ஒரு புன்னகையை
தூது விட்டேன்

சட்டென்று நிமிர்ந்தவள்
சற்றே நேரத்தில் சுதாகரித்துக் கொண்டாள்
கண்ணசைத்து
கொஞ்சமாய் புன்முறுவலித்தாள்

கொஞ்சமாய்ப் பேசி
அறிமுகப் படுத்திக் கொண்டோம்
மௌனமும், கண் ஜாடையும், புன்னகையும்
அதிகமாய்ப் பேசின

அவள் ஆஸ்பத்திரியில் இருந்து வந்திருந்தாள்
பலவீனமான இதயம் கொண்டவள்
இன்னும் ஆறுமாதம் மாத்திரம் ஆயுள் என
உறுதிப் படுத்தப் பட்டவள்
என அறிமுகம் செய்தாள்

கடுகதியாய் ஓடும் ரயிலுக்கு
சடுதியாய் பிரேக் போட்டது போல
ஆயிற்று எனக்கு
குலுக்கி எடுத்தது
சட்டென்று நின்றது

மீண்டும் மௌனம்
செயற்கைப் புன்னகை
கொஞ்சம் ஆறுதல் வார்த்தைகள்
என உதிர்த்தேன்

புன்னகைத்தாள்,
கதவை நோக்கி நகர்ந்து
காற்றுக்கு பறந்த கருங்குழலை சரி செய்து
போய் வருகிறேன் என்றாள்

அடுத்த தரிப்பிடத்தில்
இறங்கி
குதூகலமாய் நடந்து
தேய்ந்து
மறைந்து
காணாமல் போனாள்



## அன்பான உலகமொன்றினை கட்டி எழுப்புவோம்!

சி. மௌநேஷ், மட்டக்களப்பு

இறைவன் படைத்த அழகிய உலகமிது
இவ் உலகினில் நாம் அனைவரும்
வேற்றுமை இன்றி எல்லோரும்
ஒற்றுமையாக வாழ்ந்திடுவோம்

மனிதர் எல்லோரும் ஒரே இனமே
இவ் அழகிய பூமியிலே
அவர் அவர் உடலினில் ஓடும்
இரத்தமும் ஒரே நிறமே...

அகிலம் எல்லாம் ஒன்றே என்னும்
அன்பை வேதம் ஆக்குவோம்
பண்பாய் பழகி உலகினில்
பகைமை பேயை ஓட்டுவோம்

ஒருவர்கொருவர் உதவி செய்யும்
உன்னத வாழ்வை வளர்த்திடுவோம்
உலகமே அன்பின் இல்லமெனும்
உண்மையை உணரச்செய்திடுவோம்



## தில்லையுள் கூத்தன்

ரதிதேவி, மானிப்பாய்

நெஞ்சில் நின்று ஆடும் நாதன்
நேற்று நாளை கடந்த தியாகன்
பஞ்சப் புலன்கள் பாய்ச்சும்
உணர்ச்சி மலையில் நின்று
கொழுந்து விட்டு எரியும் வேந்தன்

யானைத் தோள் உரித்துப் போர்த்தி
யாகத் தீபோல் சடாமுடி வளர்த்து
வீணை மேல் விரல்கள் நான்கும்
நடனமாட
வீழும் மழைத்துளிகள் மகிழ்வில் மூழ்க
விண்ணும் மண்ணும்
சிரமும் பாத நகமுமாய்
பரந்துகிடக்கும்
தில்லையுள் கூத்தன்

ஈசல் போலே ஈர்த்து என் மனதை
தூசிகூட மீதமின்றித் தூய சக்தி ஆக்கி
வீசிவிட்டான் விண்வெளியில் மீன்களோடு
பேசித்திரிகிறேன் அவன் புகழை

பார்வை குறைவாகி
பாதிக்குளி இறங்கையிலும்
பாடிக்களிதிருந்தேன் அவன் சுந்தரத்தை
என் மகன்போல

தாவி மரதினுள்ளே வரும் காற்றாக
தாகம் தீர்த்தனுப்பும் ஊற்றாக
வந்தமர்ந்தனன் மடிமீது
நதிமேல் விழும் மதியாக
ஓம் நமசிவாய

## சுவாரஷ்யம்

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

உயிரான உறவும்
உணர்வுகளைப் பகிர்ந்திடுவோரும்
அடிக்கொரு முறை அழைப்போரும்
ஆங்காங்கே நினைவில் வருவோரும்

அவ்வப்போது அழ வைப்போரும்
காத்திருக்குமாறு கையசைப்போரும்
காலம் மாறி விட்டதென்போரும்
கண்ணீர் துடைக்க
நானிருப்பேன் என்றோரும்

கடைசி வரை
கண்கலங்க விடமாட்டேன் என்றோரும்
நீ இல்லாத இடம்
வெறுமைத் தீயாய்
பற்றி எரியும் என்றோரும்

உன் சோகங்களில்
சோர்ந்து விடுவேன் என்றோரும்
உன் உயர்வில்
உடனிருப்பேன் என்றோரும்
உன் நம்பிக்கையில் என்னை
விலக்கி விடாதே என்றோர்
தொடக்கம்

உன் சந்தோஷத்தில்
என் ஆறுதிலிருக்கும்
என்போர் வரை
அத்தனை பேருக்குள்ளும்
அஸ்திவாரமாய் அமைவது
இந்த சுவாரஷ்யமெனும் ஒற்றை உணர்வு தானே

அழகு அழிந்த பின்பும்
உணர்வுகளைத் தாங்கிய உடல்
முதுமை அடைந்த பின்பும்
கரம் முழுக்க
இடம் பிடித்த பணம்
காணாமல் போன பின்பும்

இந்த சுவாரஷ்யமெனும்
ஒற்றை உணர்வு
சிதைந்து போன பின்பும்
நீ நீயாக இருக்கின்றாய் எனில்

உண்மையில் நீ தான் சுவாரஷ்யமானவன்
சுவாரஷ்யம் தொலைத்த சுவாரஷ்யமாக...



## கூட்டத்தில் கூடிநின்று.......

'நிலவூர்ச் சித்திரவேல்'
திருகோணமலை

ஏழைஎந்தன் வாழ்வை
ஏட்டில் வடித்த எழுத்தாளனுக்கு
எடுத்தார்கள் பெருவிழா
திறந்தவெளி அரங்கு
நிறைந்தசனக் கூட்டம்
சிறந்தவிமர்சகர்கள்
'கரு அருமை' என்றார்
'கதை யதார்த்தம்' என்றார்
'நோக்கு...?
ஏழ்மை ஒழிப்பு' என்றார்.
இவை போதாதென்று
பொன்னாடை போர்த்திப்
பொற்கிளியும் வழங்கினார்
சொரிந்த புகழ் மழையில்
குளிர்ந்தார் எழுத்தாளர்
கதாரசிகர் மத்தியிலே
பலத்தகரகோஷம்

இத்தனைக்கும் அந்தக்
கதையின் நாயகன் நான்
கதாரசிகர் மத்தியிலே
கூனிக்குறுகி நின்று

பேணிகுலுக்குகின்றேன்
அந்தோ! ஓசைபிறக்கவில்லை!...
இறுதி நிகழ்வான நன்றியுரையுடன்
கூட்டம் பிரிகிறது – என்
நெஞ்சம் எரிகிறது
பொறுமை அழிகிறது
மௌனம் கலைகிறது
மேடையில் ஏறுகிறேன்
ஒலிவாங்கியைஉருவினேன்
உரத்தகுரலெடுத்துச்
சினந்துசீறுகிறேன்
'கூட்டத்தில் கூடிநின்று
கூவிப் பிதற்றலன்றி....
நான் முடித்திடமுன்
விழா அமைப்பாளன்
மேடைக்குவிரைந்தேறிப்
பிடரியில் பிடித்திழுத்து
'விடாமைக்கைநடாவெளியே
பிச்சைக்காரப் பயலே'என்றான்

## திருமறை

நுஸ்ஹா நவாஸ்
ஏறாவூர்

திருமறையே நீ
எந்தன் இறையுரையே!
மொழிதலிலும் கூட
நன்மை தந்த மாமறையே!

நேர்வழி கொண்ட
உலகப் பொதுமறையே!!
உன்னில் உண்டோ
ஏதும் குறை?

அறிவியல் கருத்துக்கள்
அழகிய உவமைகள்
விஞ்ஞான வியப்புக்கள்
விழுமியக் கோப்புக்கள்

சரித்திரக் குறிப்புக்கள்
எதிர்கால முன்னறிவிப்புக்கள்
உன்னத ஓசைநயம்
உயரிய பொருட் செறிவு

ஆயிரத்து நானூறு
ஆண்டுகளாயினும்
அணுவளவும் திரிபில்லா
அதிசயப் புத்தகம்


மொழியியல் அற்புதம்
மறுமையில் பரிந்துரை
எச்சரிக்கும் அச்சமூட்டல்கள்
மோசமில்லா ஆசையூட்டல்கள்

பிறப்பு முதல் இறப்பு வரை
மண்ணறை கடந்து
சுவன நரகம் வரை
மனிதனுக்கேற்ற அறிவுரை

அத்தனை அம்சங்களும்
அழகாய் ஆழமாய்
ஆதாரமாய் அணுவளவும்
அழிவின்றி இருக்குதே

திருமறையெனும்
பொதுமறையில்....
மாமறையெனும்
இறையுரையில்....
வால்லோனின்
வான்மறையில்....

## கிராமத்து நினைவுகள்



எழுத்து முஸம்மில் கமர்தீன்

மண்ணை முத்தமிடும்
மலைகளுக்கு நடுவே!
நீலநிற வானமும்
நீரில் தோன்றும் காட்சியங்கே!

பச்சைப் பயிர்களும்
பசுமைகள் தோன்றுமங்கே!
மலர்ந்திருக்கும் எங்கும்
மலர்களின் வகைகளுமங்கே!

விரித்துவைத்த இயற்கையழகு
விழிகளுக்கு இன்றும் நினைவழகு!
அன்றும் இன்றும் என்றும்
அழகிய எந்தன் கிராமம்!

தென்னங் கீற்று வீடு
தொலைத்தூரம் ஒற்றைவழிக்காடு!
தரையில் களிமண்தான்
தலை முட்டும் கூரைதான்!

முற்றத்தின் வேலிகள்
முள்ளங்கி மரத் தண்டுகள்!
காற்றுக்கு ஆடும் வேப்பமரம்
கசப்புத்தான் தொங்கும் தேன்வதை!

கல் அடுப்புக் கட்டி
கண்கலங்க விறகுபுகைகக்கி!
அரச மரத்தடியில் காற்று வாங்கி
ஆலமரத்தடியில் ஊஞ்சல் கட்டி!

மண்சாலைகள் ஊரெங்கும்
மாட்டுசானம் வெதுப்பாய்க் காணும்!
அத்தி மரங்கள் பூக்கும்
ஆத்தோர மாமரம் இனிக்கும்!

தலையில் ரோஜாப் பூ வைத்து
தாவணிப் பெண்கள் சாலைகளிளே!
சிறுவர்களின் கில்லியாட்டம்
சிறுவயது குறைவில்லா ஆட்டம்!

காட்டில் குயில்களும் பாடும்
கூடி பறவைகளும் கூச்சலிடும்!
சுகங்கள் மட்டுமே நிறுத்தியது
சுகமான கிராமத்து நினைவுகள்!

ஓடும் மேகங்கள் எங்கும்
ஓராயிரம் ஆடும் மரங்களங்கும்!
இத்தனையும் இருந்த மண்ணில்
இன்றைக்கு அத்தனையும் மண்ணுள்!

நல்ல மனிதமும் இருந்தது
நல்ல வாழ்வும் அமைந்தது!
நாகரிக வாழ்க்கையில்
நல் கிராமங்களும் தொலைந்தது!



## வலிகளின் வடிவான மடல்

பொத்துவில்
அஜ்மல்கான்

வலிகளால் வரையப்பட்ட
வாழ்க்கையில் விழிகளை
தொலைத்தபடி தவிக்கும்
கறுப்பன் நான்

வஞ்சகமான மானிடர்களுடன்
கொஞ்சமாவது வாழ்ந்திட
வேண்டும் என
துடித்து திரிகிறது
இந்த இதயம்

அரக்கன் ஓங்கியதால்
இரக்கம் மாய்ந்து
போனதாம் என்று
கடந்து போகின்றனர்
உறவுகள் என
கூறிக் கொண்டு

இன்பமான வாழ்க்கையில்
சொற்பமான வலிகள்
என நினைத்து
கற்பனையான உறவுகளைத்
தேடி அழைந்து
என்ன பயன்

இங்கு வழிகளை
விட வலிகளுக்கே
அதிக வரவேற்பு
உண்டு என்பதை
பலர் அ(பு)றிந்தும்
உள்ளனர் இன்று

இருந்தும்!
வாழ்ந்திட வேண்டும்
என்று துடித்தபடி
இருக்கிறது இந்த
இதயம்

## சீதனக் கொடுமை

வரக்காமுறையூர் ராசிக்

சீதன மொழித் திங்கு
சிறப் புடன் வாழ்வதற்கு
ஆதங்கம் கொண் டழும்
அரிவையரே மீண் டெழும்

அடுக் கடுக்காய் ஆண்கள்
ஆதனம் வாங்குகிறா ரென்று
கடு கடுப்பாய் பெண்கள்
கர்ஜிப்பதி லில்லை உண்மை

பொன்னகை எனக் கெதற்கு
புன்னகையே போது மென்று
கன்னியர் கரம் சேரும்
காளையரை நீர் பாரும்

சீர் இருக்கும் செருக்கில்
சிறப்பு விலை செலுத்தி
அருமையாய் ஆண் வாங்கும்
அப்பாக்களை நீர் பாரும்

பொத்தி வளர்த்த பெருமைக்காய்
போக்கிரி மகனுக்குக் கூட
ஆதனம் கேட் டலையும்
அம்மாக்களை யிங்கு பாரும்

செல்வ செழிப்பி லுள்ளோர்
செல்ல மகளுக் கென்றும்
ஏழையைப் பார்ப்ப தில்லை
ஏனென்று கொஞ்சம் கேளீர்

பொன்னோடு பொன் னுரச
பொருளோடு பொரு ளுரச
பணத்தோடு பணம் சேர்க்கும்
பாணியை வந்து பாரும்

இங்கு மாப்பிள்ளை ஆவதென்றால்
இலட்சங்கள் பல வேண்டும்
தங்கப் பவுனும் ஸாரிகளும்
தாராளமாய் தர வேண்டும்

மாதச் சம்பளக் கார ரொருவர்
மாப்பிள்ளையாய் வருவ தென்றால்
வீதிக்கு வர வேண்டும்
வேறொரு காலில் விழ வேண்டும்

அத்தனைப் பேரும் இணைந்தால்
அழியும் சீதனக் கொடுமை
இத்தரையி லிதை யுணர்ந்தால்
இல்லாது போகும் முடுமை

## புத்தகம்



இணுவில் வாகீசன்

உன்னை உனக்குணர்த்தும் ஒளி
உனக்கு ஞானம் தர
இன்னொருவன் பெற்ற வரம்
மௌனமாயிருக்கும் மேதைகள்

காலத்தின் கண்ணாடிகள்
காலக்கணக்கின் அற்புதங்கள்
மரணித்த எழுத்தாளரும் வாழுமிடம்
மரணித்த மனித வாழ்வின் ஆதாரம்

ஊர் அறியா செய்திகளை
ஊரறிய செய்யும் ஊடகங்கள்
உலகெலாம் பயணம் செய்யும்
விண்வெளி செய்மதிகள்

காலமெனும் படகு கரைசேர உதவும்
கலங்கரை விளக்குப் புத்தகங்கள்
காலத்தின் இதயத்தை
காலமெல்லாம் வாசிப்போம்

# தெரு



பனிப்புகார்க் காலை
தவளைகள் கத்தும்
மலர்களைக் கொய்து
முகர்ந்து மூச்சிழுத்த
புழுதிமண் தினங்கள்
மீளவும் ஜனிக்குமா?

“அம்மா! இவர்கள் ஏன் வண்டிகளில் வந்து நாய்களைப் பிடிக்கின்றனர்?”.

“நாய்களை வீடுகளுக்குள் வைத்திருக்க வேண்டுமாம். இதனால்தான் வீதிகளில் திரியும் நாய்களைப் பிடிக்கின்றனர். இவர்கள் நாய்பிடிகாரர்கள்”

“இந்த நாய்களைக் கொண்டுபோய் இவர்கள் வளர்ப்பார்களா?”

“இல்லை. கொல்வார்கள்!”

வீதிகளில் பிடிபட்ட நாய்கள் பலவற்றினது ஈனக்குரல்கள் என் காதுகளை அதிர வைக்கின்றன.

எனது பள்ளிக் காலங்களிலே கடல் பெருக்கெடுத்த காலங்களிலே நாம் கவலை கொண்டதில்லை. வாத்துகள்போலத் தண்ணீரில் நீந்துவதும், காகிதப் படகுகள் செய்து விடுவதும், கடல் எக்கரையிலிருந்தோ அள்ளி வந்த குப்பைகளுக்குள் பொக்கிஷங்களைத் தேடுவதும், மீன்களைப் பிடித்துத் தகர டப்பாக்களுக்குள் இருக்கச் செய்து அவற்றினது அசைவுகளைப் பார்த்து மகிழ்வதும் சுவையானவை... தெருவை நினைக்கும் போது, அதற்கு அருகேயுள்ள கடல் நினைவுகள் என்னைக் கிள்ளுகின்றன...

தெருவும் தெருக்களும்.

“நீங்கள் ஏன் என்னிடம் ஒருபோதுமே உங்கள் தேசம் பற்றியும் உங்களது இளமை வாழ்வு பற்றியும் பேசுவதில்லை?”

குளிர் நிலத்தில் எனக்கு அறிமுகமான சிவப்புக் குமரி ஒருத்தி கேட்கின்றாள்.

“இழந்து போன தேசம் பற்றி நினைக்கும் போதும், இந்தத் தேசத்தில் நான் கழித்த இளமை வாழ்வை அசைபோடும் போதும் என்னை இனம்புரியாத கவலை கவ்வுகின்றது என்னிடம் எனது தேசம் பற்றியும், என்னைப் பற்றியும் கேட்காதே!”

“இன்று எனது வீட்டுக்கு வரலாமே!”

“எனது மனது சற்றே குழம்பிப் போயுள்ளது. தனிமையில் இருக்க விரும்புகின்றேன்.”

பாரிஸ் நெடுஞ்சாலையொன்றில் நானும் அவளும் பிரிந்து கொள்கின்றோம்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் வியட்நாமிய உணவகம் ஒன்றிலே களவாக நான் வேலை செய்தேன். அங்கே நான்தான் கோப்பை கழுவும் மெஷின். கழுவுதல், வடியவிடல், துடைத்தல், அடுக்குதல் யாவும் நானாகிய மெஷினுக்கு இடப்பட்ட பயந்து நடுங்கியதுண்டு. எது எப்படியோ பாரிஸ் போன்ற பெரிய தலைநகர்களில் இரவுகளிலே விழிப்பாகத்தான் இருக்க வேண்டும்.

வியட்நாமிய உணவகத்தை விட்டு வெளியே வந்தவுடன்... இவ்வீதியில் உள்ள பஸ்ராண்டில் போய் நான் வாழ்வதற்கும் வாழ்வு என்று பெயர் கொடுக்கலாமா? என்றபடி யோசித்துக் கொண்டிருப்பேன்.

எனது உழைப்பைச் சுரண்டுபவன்... எனது முதலாளி பற்றியே குறிப்பிடு கருமங்கள். இரவு இரண்டு மணிக்குத்தான் எனது கருமங்கள் முடியும். முடிந்தபின் வெளியே வந்தால்...

சுரங்க ரயில் இருக்காது. இரவு பஸ்கள் சில இருந்தாலும் நான் வாழும் இடம்வரை செல்லாது. ரக்ஸி செல்லவும் வசதியில்லை. எனவே தெருக்களில் அலைந்தேன்...

தெருக்களுக்குப் பல அர்த்தங்கள் உள்ளன. பகலிலே எமக்குப் பயத்தை யூட்டாத தெருக்கள் இரவிலே எமக்குப் பயத்தையூட்டலாம்.

இரவு எனக்கு உவப்பான போதும் நிர்ப்பந்திக்கப்பட்ட இரவுகளில் நான் கின்றேன். நான் உணவகத்தை விட்டுப் போனதும் அன்றைய தினத்தில் தனக்குக் கிடைத்த இலாபம் எதுவெனப் பார்த்து விட்டு வாகனத்தில் போய் விடுவான். அவனதும், அவனது பிள்ளைகளதும், பிள்ளைகளின் பிள்ளைகளதும் எதிர்கால இருப்பிற்காகப் பிழியப்படும் நான் மட்டும் தெருவில், எந்தப் பாதுகாப்பும் இல்லாமல்... இதுவும் ஒரு வாழ்க்கையா?

காலை எப்போது வரும் எனப் பஸ் ராண்டில் காத்திருக்கும் என் முன் பஸ்களைக் காட்டிலும் பொலிஸ் வாகனங்களே தம்மை நிறுத்திக் கொள்ளும். என்னை எனது இருப்பிடம்வரை கொண்டு செல்வதற்காக அல்ல. உத்தியோகபூர்வமாக நான் பிரான்ஸில் வாழ்வதற்கான பத்திரங்கள் அனைத்தும் உள்ளனவா என்பதைப் பரிசோதிப்பதற்காகவே,

இந்த விசாரிப்புகள், பரிசோதிப்புகள் யாவும் எனக்குத் தொல்லையாகவே பட்டதால் நடந்து நடந்து இரவினைக் கழிப்பதென முடிவெடுத்தேன்.

நான் நடந்து சென்ற வழிகளில் வீடற்றோர், மாடிக்கட்டடங்களின் முகப்புகளிலே கம்பளிப் போர்வைகளால் உடலை மூடியபடி குறட்டைவிட்டனர். ‘வைன் கேஸ்கள்’ என ஒதுக்கிவிடப்பட்ட குடிகாரர்கள் குடித்துக் கொண்டும் புலம்பியபடியும் இருந்தனர். ஸ்பிறே பெயின்றினால் வெள்ளைச் சுவர்களில் எவருக்குமே விளங்கமுடியாத ஓர் வரிவடிவத்தில் எதனையோ எழுதிக் கொண்டிருந்த ‘ஸ்கின்ஹெட்கள்’ எனப்படும் மொட்டம் தலையர்களைக் கண்டேன். நான் விபசாரிகளையும் கண்டேன்.

இரவிலும் விழித்திருக்கும் புனித டேனிஸ் வீதி. தூங்காமல் உடலை விற்கக் காத்திருக்கும் விபசாரிகள், மை பூசிய விழிகளில் களைப்பு, குடிபோதையின் மிகவும் நாகரிகமான மினுக்கம், உதடுகளில் சிகெரட்□

வா! வா!! எனக் கொஞ்சும் பரிதாபக் கோலம். வாடிக்கையாளர்களோடு பேரம் பேசுகையில் ஏற்படும் சண்டைகள்... இந்தப் புத்திரிகள் என்ன பாவம் செய்தனரோ தமது ஆன்மாவை இறுக மூடி உடலை வருவோர் போவோரிடம் எல்லாம் விற்பதற்கு? ஓர் ஆவேச உணர்வுடன்தான் நான் இந்த வீதிக்குள் நடந்ததுண்டு.

இப்பொழுது நான் இரவுகளை வீதிகளில் நிர்ப்பந்த காரணமாகச் செலவழிப்பதில்லை. ஆனாலும் புனித டேனிஸ் வீதிக்கு அவ்வப்போது செல்வதுண்டு.

நிச்சயமாகப் பேரம் செய்வதற்கு அல்ல. மனித உடல்கள் சிதையும் கொடூரம் முடிவிற்கு வந்துவிட்டதா என்பதைப் பார்ப்பதற்காகவே.

பல ஆண்டுகளின் பின்னர் நான் புனித டேனிஸ் வீதிக்குச் சென்றேன். நான் அப்போது கண்ட பெண்களில் சிலர் இப்போதும் நின்றார்கள். இவர்களிடம் முதுமை தெரிகின்றது. சிலர் கொழுத்துள்ளனர்.

பேரம் பேசிவிட்டு ஓரம் கட்டுபவர்களைப் படுதூஷணத்தால் துவம்சம் செய்து அனுப்பும் மதாளித்த முலைகளைக் கொண்ட அந்த லத்தீன் அமெரிக்க செம்புத்திரியைக் காணவில்லை.

இத்தாலிய மெல்லியடையாள். இன்றும் தனது இடையை பெல்ட்டில் இறுக்கக்கட்டி, வழமையைக் காட்டிலும் மெல்லியதாக்கியபடி... அகோர முகம் கொண்ட அந்தக் கிழவி இன்னமும் தனது அகோர முகத்துடன்.

ஹோலண்டில் நண்பர் ஒருவரைச் சந்தித்தேன்.

“நீங்கள் நிறைய விஷயங்களை வாசிப்பவர். எழுதுவதற்கான அனுபவங்களும். விஷயங்களும் உங்களிடம் உள்ளன. ஏதாவது ஒரு வெளியீட்டுக்குத் தொடர்ச்சியாக எழுதலாமே?”

“நீங்கள் சொல்வது உண்மைதான்” என்றார்.

இருவரும் இலக்கியம், மனித இருத்தல் பற்றி மிகவும் பண்பாகவே பிரஸ்தாபிக்கின்றோம்.

நான் மீண்டும் பாரிஸுக்கு வருகின்றேன்.

வீதிகளில் கழிக்க வேண்டிய இரவுகளைத் தனது வீட்டில் கழிக்கலாமெனச் சொன்ன ஓர் இனியவளின் வீட்டில்.

ஆழ்ந்த நினைவுகளில் நான் யாழ்ப்பாணம் போகின்றேன்....

தெரு...

யாழ்ப்பாணத்தில் நான் கண்ட தெருக்கள் பல என் முன்னால் படமாகும் போது, படம் காட்டிய ராணி தியேட்டரும் படமாக வருகின்றது. வீதியில் ஓடிய அந்தப் படம்.

அவள் ஓர் விபசாரியாகப் பிறக்கவில்லை. ஆனால் ஓர் விபசாரியாகவே எனக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டவள். அவள் ஓர் அழகிய பெண். நான் காற்சட்டை போட்டுத் திரிந்த காலத்திலே அவள் தனது சட்டையைக் கிழித்து வீதியில் நின்றவள். அவள் விசரியா? இல்லை.

கைகொடுக்க யாருமே இல்லாது போனதால் வீதிக்கு வந்தவள்.

“நீங்கள் சொல்வது உண்மையா?”

டென்ஹாக் சிவப்பு விளக்கு வீதிகளின் கண்ணாடிப் பெட்டிகளைப் பார்த்து முடித்து வெளியே வந்து தண்டவாளக் கரையால் நடந்து கொண்டிருந்த போது நண்பர் கேட்கின்றார்.

“இது உண்மைதான். அவளை நான் பல தடவைகள் கண்டதுண்டு. அவள் மீது எனக்கு இரக்கம்.

பரிவு, அன்பு யாவுமே இருந்தன. ராணி தியேட்டர் மூலையில் உடலைச் சுருட்டிக் கொண்டு கிடந்த அவள் என்னைக் கண்டு ‘தம்பி!’ என இதமாக அழைத்தவள்.

அவளது முகம் எனக்குத் தெரியாது. அவள் இப்பொழுது உயிருடன் உள்ளாளா என்பதும் எனக்குத் தெரியாது. அவளது பெயரும் தெரியாது. ஆனால் நான் தற்பொழுது எழுதிக் கொண்டிருக்கும் ‘நிலாவின் கதை’ குறுநாவலை அவளுக்குத்தான் சமர்ப்பணம் செய்யப் போகின்றேன்.”

“உங்களை அவள் நன்கு பாதித்து விட்டாள் போலும்”

“ஆம்”

டென்ஹாக் மறைகின்றது. பாரிஸ் வருகின்றது.

“நாங்கள் வீடற்றவர்கள். வீதிகளில்தான் வாழ்கின்றோம். எங்களது வாழ்விற்காக *La rue* (வீதி) என்ற இந்தச் சஞ்சிகையை விற்கின்றோம். 10 பிராங் மட்டுமே. வாங்குகின்றீர்களா?” என இரண்டு பிரஞ்சுப் பெண்கள் கேட்கின்றனர்.

அவர்களிடம் ஒரு வீதியை வாங்கிக் கொண்டு நான் நடக்கின்றேன்.



க.கலாமோகன்...

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 25

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 02 | ■ | 03 | 04 | | 05 |
| | ■ | 06 | | | | ■ | |
| 07 | 08 | | ■ | 09 | | 10 | ■ |
| ■ | 11 | | ■ | 12 | | | ■ |
| 13 | | ■ | 14 | ■ | 15 | | |
| | ■ | 16 | | 17 | ■ | | ■ |
| 18 | 19 | ■ | 20 | | 21 | ■ | 22 |
| 23 | | | ■ | 24 | | ■ | |

திரு/திருமதி.செல்வி ..........................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..........................................

..........................................

..........................................

.......................... ..........................

திகதி கையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
போட்டி இல. 25
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :25

**இடமிருந்து வலம்**

(01) ஆயுர்வேத மருந்து தயாரிப்புக்கு தேவையானது.
(03) இதுவும் கீரை வகையைச் சேர்ந்தது.
(06) வீடு திரும்பிவிட்டது.
(07) வேலையின்றி இயல்பாக அமைதியாக இருப்பது.
(09) வலிமை. (குழம்பியுள்ளது)
(11) இன்னல், துன்பம்.
(12) மெய்யறிவு. (குழம்பியுள்ளது)
(13) கணிதத்தில் வரும் கூட்டல் குறி.
(15) ஆற்றல் (குழம்பியுள்ளது)
(16) விளையாட்டு வீரர்களுக்கு தேவையானது.
(18) முன்னெடுத்துச் செல்லமுடியாத நிலை, இடையூறு.
(20) பெண்.
(23) நகைச்சுவைப் பேச்சு.
(24) கருமை. (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

(01) இது தடைப்பட்டால் உயிரிழப்புதான்.
(02) பிரதியுபகாரம்.
(03) திறமை, வலிமை என்று சொல்லலாம்.
(04) குடும்ப வாழ்க்கை குழம்பிவிட்டது.
(05) ஒருவகை மீன். (தலைகீழ்)
(08) ஒரு விடயத்தை எண்ணி அறிதல். (குழம்பியுள்ளது)
(10) ஒரு பிரசுரத்தை அச்சிட்டு வெளியிடுதல். (குழம்பியுள்ளது)
(13) சூளுரை. (குழம்பியுள்ளது)
(14) மனம்.
(17) கவலை.
(19) விற்பனை நிலையம். (கீழிருந்து மேல்)
(21) நாலில் ஒருபகுதியை குறிக்கும். (தலைகீழ்)
(22) பாம்புக்கு இது எதிரி.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 24

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(01) செல்வாக்கு 04) மாமா (06) வடை
(08) திருடன் (11) கயல் (12) வம்பு
(13) புலி (14) தகை (17) வேம்பு
(19) இன்னிசை (22) காசு (23) இனம்
(24) மாதர் (25) ஆமை

**மேலிருந்து கீழ்**

(01) செய்தி (02) வாட்டம் (03) குடை
(05) மாரகம் (07) வயது (09) புருவம்
(10) புதன் (13)வேலி (15) சைகை
(16) என்ன (18) புகார் (20) இனிமை
(21) இம்மை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 23

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**

**எஸ்.எச்.எப். இன்ஷிரா,**
இல. 11/26A, பாடசாலை
ஒழுங்கை, பதுளை.

**இரண்டாம் பரிசு**

**ஆர். கீர்த்தனா,**
பனான, மாதெனிய,
வரகாபொல.

**மூன்றாம் பரிசு**

**எம். சுப்ரமணியம்,**
இல. 07, பாடசாலை வீதி,
ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.

### பாராட்டு பெறுவோர்

***01. வேல்நாயகம் இராஜேந்திரன்,***
இல. 88, விபுலானந்த வீதி,
காரைதீவு 01.

***02. இல்யாஸ் தாஸிம்,***
இல. 23 A, இப்றாஹிம் வீதி,
தொட்டவத்தை, பாணந்துறை.

***03. எம்.எச்.எம். பாஸி,***
இல. 02, கும்புக்கந்துறை,
ரஜவெல.

***04. அஸ்மிலா நிஷ்தார்,***
22/5, கனல் வீதி,
புத்தளம்.

***05. T. தக்கியா நூரி,***
174/2, அல் முனவ்வறா வீதி,
அக்கரைப்பற்று 04.

***06. எம்.ஏ.எச்.எம். வபா,***
'வெடிங் ரிங்' 517, காலி வீதி,
பம்பலப்பிட்டி.

***07. எம்.பி.எப். பஸ்ரினா,***
32C, கொட்டேகொட,
வெலிகம.

***08. பாத்திமா ஸிபானா,***
இல. 20/2,
பாத்திமா மாவத்தை,
மாத்தறை.

★ ★ ★

பாதுகாப்பு அமைச்சு

ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

## விலைமனுக்கோரல்

### ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கேட்போர்கூடத்திற்கு கதிரைகள் வழங்குதல் மற்றும் நிறுவுதல்

ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

ஒப்பந்த இலக்கம் : KDU/PRO/RP&SERVICE(AUD)/ 2714/2021

1. இரத்மலானை, ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், பல்கலைக்கழக திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தவிசாளரினால், ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கேட்போர்கூட கட்டிடத்திற்கு கதிரைகள் வழங்குவதற்கு மற்றும் நிறுவுவதற்கு தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் 2022.05.30 ஆம் திகதியிலிருந்து 2022.06.20 ஆம் திகதி வரை மு.ப.09.00 மணியிலிருந்து பி.ப.15.00 மணி வரையான காலப்பகுதியினுள் மீளச்செலுத்தப்படாத ரூ.12,500/- கட்டணத்துடன் ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பொருளாளரிடம் செலுத்தி பணிப்பாளர் (ஏற்பாட்டியல்), ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரியில் சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
3. மனு ஆவணங்களை மேற்குறிப்பிட்டுள்ள முகவரியில் 2022.05.30 முதல் 2022.06.20 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப.09.00 மணி முதல் பி.ப.15.00 மணி வரை சரிபார்க்கலாம் (தொலைபேசி 0710219449 தொலைநகல் 011-2632430)
4. முத்திரையிடப்பட்ட மனுக்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலம் தாழ்த்தி கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
5. 2022.06.21 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு இரத்மலானை ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும்.
6. இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் பணிப்பாளர் (ஏற்பாட்டியல்), இரத்மலான ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி / தொலைநகல் 011 2632430, 0710219449, ocrepair@kdu.ac.lk, directorlogistics@kdu.ac.lk மற்றும் விலைமனுக் கோரலில் www.kdu.ac.lk/ocls/tender-notices பார்வையிடலாம்).

தவிசாளர்
திணைக்களத்தின் பெறுகைக் குழு,
ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்,
இரத்மலான, இலங்கை.

திகதி 26.05.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4767
ரூ. 8,502,490.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 10,856,748.00
E 2 4 6 9 6 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3009
ரூ. 4,323,720.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 65,126,287.76
W 14 25 61 62

ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம்: 0076
ரூ. 4,774,560.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 2,529,119.00
மேஷம் 11 24 30 51

தன நிதானய
டிக்கெட் அச்சிடப்பட்ட திகதி : 2022 /05 /21
சீட்டிழுப்பு இலக்கம் : 797
ரூ. 3,270,180.00
L 03 13 23 76
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 111,721,628.80

Mega POWER 25+ மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1115
ரூ. 3,610,400.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 253,091,430.00
T 16 19 29 49 77
ரூ. 10,000,000.00 ரூ. 10,000,000.00
National Lotteries Board

INTERNATIONAL DRIVING LICENCE
Obtain Your International Driving Licence to Drive Overseas.
AA CEYLON
Contact :
Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Markar Mawatha,
Colombo 03
Tel: 011 2421528 - Ext 200/201
WEB : www.aaceylon.lk

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## இலங்கை முதலீட்டுச் சபை (BOI)

### விலைமனுக்களை மூடும் திகதிக்கான நீடிப்பிற்கான அறிவித்தல்

### கொழும்பு-01 இன் உலக வர்த்தக நிலையத்தின் மேற்கு கோபுரத்திலுள்ள இமுச அலுவலகங்களுக்கான சுகாதார சேவையை வழங்குவதற்கான விலைமனுக்கள்

(BOI/ADMN/Q/035/2022)

மேலேயுள்ள விலைமனுவிற்காக 2022 ஏப்ரல் 07 ஆம் திகதியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்திற்கு மேலதிகமாக விலைமனுவின் மூடும் திகதிகள் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளவென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

- **விலைமனுக்கோரல் ஆவணங்களின் வழங்கலின் மூடும் திகதி - 2022 ஜுன் 01 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும்.**
- **விலைமனுவின் மூடும் திகதி - 2022 ஜுன் 02 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக.**

2022 ஏப்ரல் 7 ஆம் திகதியிடப்பட்ட மேலேயுள்ள விடயம் தொடர்பாக பத்திரிகை விளம்பரத்தில் வழங்கப்பட்ட ஏனைய விபரங்களில் எவ்வித மாற்றமுமில்லை.

விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 011-2543041/074 1531432 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக நிருவாகத்திற்கான சிரேஷ்ட பிரதி பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

## சிவில் பாதுகாப்பு திணைக்களம்

## விலைமனுக்கோரல்

### சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமான பயன்படுத்த முடியாத வாகனங்களின் பொது ஏல விற்பனை

01. சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சொந்தமான பயன்படுத்த முடியாத வாகனங்களை பொது ஏலத்தில் விற்பனை செய்வதற்கு கீழ்குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களுக்காக மனுக்கள் கோரப்படுகின்றது.

| தொடர் இல. | வாகன இலக்கம் | உற்பத்தி செய்யப்பட்ட வருடம் | வகை | மாதிரி | தற்போதைய நிலை | விலைமனு பெற்றுக் கொள்ளக் கூடிய திகதி | விலைமனு வழங்கப்படும் இறுதித் திகதி | முடிவடையும் திகதி | மீள செலுத்தப்படாத மனு ஆவணக் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | QI-1427 | 2006 | Bajaj Three Wheelers | AUTO AR 45 | I | 2022.05.30 | 2022.06.15 | 2022.06.16 | Rs.5000.00 |
| 2 | YQ-7877 | 2011 | | RE-205 | I | | | | |
| 3 | YQ-7884 | 2011 | | | I | | | | |
| 4 | QP-7435 | 2008 | | AUTO AR 45 | I | | | | |
| 5 | QP-7437 | 2008 | | | I | | | | |
| 6 | JV-6049 | 2004 | Hero Motor Cycle | HERO OFFY | I | | | | |
| 7 | VH-7932 | 2009 | | CT 100 | I | | | | |
| 8 | GO-5671 | 2001 | Yamaha Motor Cycle | YBX 125 | I | | | | |
| 9 | BCH-6189 | 2013 | Amurleopard Motor Cycles | WUYAMG PRINCESS | I | | | | |
| 10 | MA-9626 | 2005 | Bajaj Motor Cycle | CT 100 | I | | | | |
| 11 | VH-2905 | 2009 | TVS Motor Cycles | XL SUPPER | I | | | | |
| 12 | VH-3032 | 2009 | | HAVY GUTY | I | | | | |
| 13 | 111-0758 | 1989 | Suzuki Motor Cycle | OS-125 | I | | | | |
| 14 | MA-9291 | 2005 | Bajaj Motor Cycle | CT-100 | I | | | | |
| 15 | BAG-0640 | 2005 | YUANJLAN Motor Cycle | YT-50 | I | | | | |
| 16 | MA-9600 | 2005 | Bajaj Motor Cycles | CT 100 | I | | | | |
| 17 | VH-6697 | 2009 | | | I | | | | |
| 18 | 63-3750 | 1999 | Mercedes Benz | M B 140 DOG | I | | | | |
| 19 | 19-3175 | 1994 | | E 200-CLOSED | I | | | | |
| 20 | KA-9643 | 2005 | TATA | INDIGO | I | | | | |
| 21 | KC-0168 | 2006 | PEUGOT | 407 | II | | | | |
| 22 | LD-1106 | 2006 | TATA | 207GE | II | | | | |
| 23 | KG-8955 | 2007 | Cherry QQ | 99 | II | | | | |
| 24 | NA-7708 | 2002 | KIA | PREGIO | II | | | | |

02. மனுக்கோரலானது தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய நடைபெறும்.
03. I ஆம் வகையின் கீழ் உள்ள வாகனங்கள் பதிவு நீக்கம் செய்யப்பட்டு துண்டுகளாக்கப்பட்டு விற்கப்படும்.
04. II ஆம் வகையின் கீழ் உள்ள வாகனங்கள் முழுமையாக விற்கப்படும்.
05. மேலே குறிப்பிட்டுள்ள சேவைகளுக்கான மீளச்பெற முடியாத கட்டணத்தை சிவில் பாதுகாப்பு திணைக்களம், ஜய மாவத்தை, கட்டுபெத்த, மொரட்டுவையில் பணமாக செலுத்திய பின்னர் பொது விடுமுறைகள் தவிர்ந்த வார நாட்களில் மு.ப. **09.00 மணி** முதல் **பி.ப.03.00 மணி** வரை மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
06. மனுதாரர்கள் "வாகனங்கள் பொது ஏலத்தில் விற்பனை" சிவில் பாதுகாப்பு பயிற்சி பாடசாலை, சேருபிட்ட, களுத்துறை முகவரியில் மனு ஆவணங்களை பரிசீலனை செய்துகொள்ளலாம் மேலும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களினூடாக மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர் - வழங்கல்
சிவில் பாதுகாப்பு திணைக்களம்,
ஜெய மாவத்தை, கட்டுபெத்த.
மொரட்டுவ.

பணிப்பாளர் நாயகம்
சிவில் பாதுகாப்பு திணைக்களம்.

பணிப்பாளர் வழங்கல் : 011- 2044854/5
தொலைநகல் இல : 011-2044855

## இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

### விசேட ஏற்பாடுகளின் கீழ் 2020/2021 ஆம் கல்வி ஆண்டில் விஞ்ஞானமாணி (விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம்) பட்டதாரி நிகழ்ச்சித்திட்டத்திற்கான அனுமதி

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பட்டதாரி நிகழ்ச்சித்திட்டத்தின் (விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம்) விஞ்ஞானமாணி பட்டத்தின் அனுமதிக்காக அரச விவசாய துறை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை தொழில் முயற்சிகளிலுள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பெலிஹுல்ஓய, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக விவசாய விஞ்ஞானங்கள் பீடத்தினால் நடாத்தப்படும் விவசாய விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவத்தில் நான்கு வருட (விசேட) பட்டதாரி நிகழ்ச்சித்திட்டத்தை பயிலுவதற்காக அனுமதிக்கப்படுவார்கள்.

**தேவைப்பாடுகள்:**

1. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட மூன்றாம் நிலை கல்வி நிறுவகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாயம் விலங்கு வேளாண்மை/விவசாய வியாபார முகாமைத்துவம் ஆகியவற்றில் இருவருட அல்லது மூன்று வருட உயர் டிப்ளோமா (NVQ --- 4 ஆம் மட்டம்) கற்கை நெறி.
2. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட, அங்கீகரிக்கப்பட்டதொரு அரசாங்க/ தனியார் துறை தொழில் முயற்சியொன்றில் * விவசாயத்தில் அல்லது தொடர்பான துறையில் ஐந்து வருட பட்டத் தகைமைக்குப் பின்னரான வேலை அனுபவம்,

   **மற்றும்**
3. 40 வயதிற்கு குறைவாகவிருத்தல்,

   **மற்றும்**
4. பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் போட்டி ரீதியிலான பரீட்சையில் சித்தி பெறுதல் மற்றும் அதற்குப் பின்னரான நேர்முகப் பரீட்சையிலும் சித்தியடைதல். (பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை ஆகியன ஆங்கில மொழியில் நடாத்தப்படும்)

* தனியார் துறை தொழில் முயற்சி என்பது - கம்பனிகள் பதிவாளரின் கீழ் கம்பனியொன்று வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கம்பனியாக பதிவு செய்யப்பட்டது அல்லது அரசு சார்பற்ற கம்பனி பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்பட்ட அரசு சார்பற்ற கம்பனி அல்லது இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதாவது தொழில் முயற்சியொன்று என்பதாகும்.

உரித்தான தொழில் வழங்குநர்களினால் அத்தாட்சிப்படுத்தப்படும் சேவைச்சான்றிதழ்கள் வகையில் தொழில்வழங்குநரிடமிருந்து பெறப்பட்ட வேலை அனுபவ ஆவணச்சாட்சியை விண்ணப்பதாரிகள் சமர்ப்பித்தல் வேண்டும்.

அனுமதிக்கப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வரையறுக்கப்படும்.

விண்ணப்பபடிவங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் ஆகியன 9" x 4" அளவுள்ள சுயமுகவரியிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறையில் பெலிஹுல்ஓய, த.பெட்டி 02, இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், கல்விசார் மற்றும் மாணவர்கள் சேவைகள், சிரேஷ்ட உதவிப் பதிவாளர் எனும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். https://www.sab.ac.lk/notices என்ற இணையத்தளத்திலிருந்தும் விண்ணப்பப்படிவத்தை பதிவிறக்கம் செய்யலாம்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2022 ஆனி 13 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் மேலேயுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

**பதிவாளர்,**
**இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk



## ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 7

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

# ஈழத்தின் சிறுகதை முன்னோடி ஆணல்ட் சதாசிவம்பிள்ளை

ஈழத்தின் தமிழ்ச் சிறுகதை வரலாற்றை காலரீதியாகவும் நவீன சிறுகதை வடிவரீதியாகவும் ஆராயும்போது ஈழத்தின் சிறுகதை மூலவர்களாகவும் முன்னோடிகளாகவும் இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம், சம்பந்தன் ஆகிய மூவரையும் குறிப்பிடுவது வழக்கம். சிறுகதை வரலாற்றினை விபரிக்க முயலும் விமர்சகர்கள் அனைவரும் இந்த வரன்முறையை ஒரு வாய்ப்பாடாக ஒப்புவித்து வருகினறனர். இதற்கு முக்கிய காரணமொன்றுள்ளது. தமிழக அல்லயன்ஸ் பதிப்பக உரிமையாளரான வி. குப்புசாமி ஐயர் 1940_1944 காலப்பகுதியில் நான்கு பெரும் சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டார். அவை கதைக்கோவை என்ற பெயரில் வெளிவந்தன. முதலாவது தொகுதியில் இடம்பிடித்த நாற்பது சிறுகதைகளில் ஈழத்தினைச் சேர்ந்த சி. வைத்தியலிங்கம், சம்பந்தன், இலங்கையர்கோன் ஆகிய மூவரின் சிறுகதைகள் அடங்கியிருந்தன. அல்லயன்ஸ் குப்புசாமி ஐயரால் இந்த மூவரே ஈழத்தின் சிறுகதை முன்னோடிகளாக அடையாளங்காணப்பட்டனர். அல்லயன் கதைக்கோவையின் வருகை இந்த வரன்முறை ஒப்புவிப்பினை தொடரவைத்துவிட்டது எனக் கருதுகிறேன்' இவ்வாறு ஈழத்துச் சிறுகதை வரலாற்றினை எழுதிய செங்கை ஆழியான் கலாநிதி குணராசா தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். (பக்: 31)




செங்கை ஆழியான் ஈழத்தின் முதல் சிறுகதை முன்னோடியாக ஆணல்ட் சதாசிவம் பிள்ளை அவர்களைத் தனது நூலில் குறிப்பிடுகிறார். அதேபோன்று தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும் என்ற நூலினை இணைந்து எழுதிய பெ. கொ. சுந்தரராஜன் (சிட்டி) சோ. சிவபாதசுந்தரம் ஆகியோரும் தமது நூலிலே ஆணல்ட் சதாசிவம் பிள்ளையையே தமிழில் தோன்றிய முதல் சிறுகதை ஆசிரியராகக் குறிப்பிட்டுள்ளனர்.

ஆணல்ட் சதாசிவம் பிள்ளை ஷநன்னெறிக் கதாசங்கிரகம்| என்ற ஒரு சிறுகதைத் தொகுப்பினை வெளியிட்டார். இந்த நூலினுடைய முதலாவது பதிப்பு 1869ஆம் ஆண்டு வெளிவந்தது. நூலின் இரண்டாவது பதிப்பு 1893ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இரண்டாவது பதிப்பின் பிரதியொன்று இப்பொழுது இலண்டனில் உள்ள பிரிட்டிஷ; நூலகத்தில் உள்ளது. அந்த நூலினை, தான் நேரில் பார்த்ததாகக் பதிவு செய்து, ஷதமிழில் முதலில் சிறுகதை எழுதியவர் ஆணல்ட் சதாசிவம் பிள்ளையா?| என்ற கட்டுரையை கலாநிதி பேராயர் எஸ். ஜெபநேசன் ஞானம் சஞ்சிகையின் (50ஆவது) 2004 ஜூலை இதழில் எழுதியுள்ளார். அக்கட்டுரையில் பின்வரும் விடயங்களை அவர் குறிப்பிட்டுள்ளார்:

நன்னெறிக் கதாசங்கிரகத்தின் முதலாவது பதிப்பின் முன்னுரையில் இக்கதைகள் எழுதப்பட்டதன் நோக்கத்தை ஆசிரியர் விளக்கிக் கூறுகின்றார். தமிழில் இதுவரை காலமும் எழுதப்பட்டும் வாசிக்கப்பட்டும் இருக்கின்ற கதைகள் சாதாரணமாய் சிற்றின்ப துராசைகளை எழுப்பி வாலிபர் மனங்களைக் கறைப்படுத்தும் காமரசம் வாய்ந்தவையன்றி ஞானரசம் சார்ந்தவையல்ல| கதைகளில் ஆயத்தமானவற்றில் சிலவற்றை நன்னெறிக் கதாமாலை என்ற முகவுரையுடன் உதயதாரகைப் பத்திரிகையில் தோற்றச் செய்து மறுபடி பக்திபோதனைக்குரிய வேறு சிலவற்றையும் எழுதி வந்தோம். இக்கதைகளை இங்கிலீசில் இருந்து மொழிபெயர்த்து, வேட்டை வாளியானது புழுக்களின் உருவை பேதப் படுத்தினாலொப்ப எமதிஷ்டப்பிகாரம் கூட்டிக் குறைத்து பேதப்படுத்தி வேற்றுருவாக்கிக் கொண்டோம். எம் ஊர்ப் பெண்கள் ஆதியாய் பழமொழிப் பிரீதியர். ஆதலால் அவற்றில் சற்றும் ஒறுப்பின்றி தாராளமாகச் சேர்த்துக் கொண்டோம்'

இரண்டாம் பதிப்பு 1893இல் வெளிவந்தது. இதன் முகவுரையினால் முதலாவது பதிப்பிற்குப் பெரும் வரவேற்பு இருந்தது என்பது தெரிகின்றது. இதன்முகவுரையில் ஆசிரியர் ' நவமான சிலகதைகளை கூட்ட யோசித்தும் புத்தகம் பெருக்கும், காலம் எடுக்கும் என்ற அச்சத்தினால் அந்த எண்ணத்தை விடுத்து உள்ளவற்றையே திருத்தி, காடினிய சந்திகளைத் தவிர்த்து அரும்பதத் தொடர்களை மாற்றி யாவரும் விளங்க இலகு வாக்கினோம்.' என்று குறிப்பிட்டுள்ளார்.





நன்னெறிக்கதாசங்கிரகத்தில் 40 கதைகள் இருக்கின்றன. பிள்ளைகளுக்கான சிறுகதைகளை எழுதுகின்றபோது இங்கிலாந்தின் ஆசிரியர்கள் அந்தக்கதை குறிக்கும் படிப்பினை, பயன் முதலியவற்றையும் தெளிவாகக் கூறுவார்கள். கதையின் முடிவில் படிப்பினை என்று ஒரு வசனத்தைக் குறிப்பிட்டுவிடுவார்கள்.

ஆணலட் சதாசிவம் பிள்ளை ஒவ்வொரு கதையின் தொடக்கத்திலும் அது குறிக்கும் செம்பொருளையும் ஒவ்வொரு கதையின் முடிவிலும் அவை குறிக்கும் போதனையையும் தெளிவாகக் கூறியுள்ளார். ஆசிரியர் குறிக்கும் செம்பொருளும் போதனைகளும் வருமாறு:

சிதட கண்ட பீவரன் கதை

செம்பொருள் ; இணக்கம்: வாழ்வு தரும்

படிப்பினை: இதனால் இணக்கம் வாழ்வு தரும் என்று உணர்க.

2 வீம்பாகரன் கதை

செம்பொருள்: அகங்காரம் அருமை குலைக்கும்

படிப்பினை: இதனால் தத்தம் ஒழுக்கமும் தகுதியும் நீங்கி வீம்படித்து தம்மினத்தை இகழ்ந்து மேலினம் நாடி நடப்பர் (அன்ன நடை நடக்கப்போய் காகம் தன்னடையும் கெட்டாற்போல) உள்ள கற்கையும் சலாக்கியமும் அழிந்து போவானென்றுணர்க.

மேற்கண்டவாறு தொகுதியிலுள்ள 40 கதைகளுக்கும் செம்பொருளும் படிப்பினையும் கூறப்பட்டுள்ளன.

ஆணல்ட் சதாசிவம் பிள்ளையின் கதைகளில் பஞ்சதந்திரக்கதைகளின் சாயல் தென்படுகிறது. ஒரு கதைக்குள்ளே பலகதைகள் வருகின்றன. மிருகங்கள் பட்சிகள் பேசுவதுபோல தென்படுகின்றன. இதனை தமது பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆணல்டின் தமிழ்ப் பெயர் சதாசிவம் பிள்ளை. இவரது தந்தையார் தெல்லிப்பளையைச் சேர்ந்த அருணாசலம். தாயார் பெயர் ஆனந்தப்பிள்ளை. 1820ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பதினொராம் திகதி மானிப்பாய் நவாலியில் பிறந்த சதாசிவம்பிள்ளை தாய்தந்தையருக்கு ஏழாவது பிள்ளையாவார். இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்.

மானிப்பாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற சதாசிவம்பிள்ளை, 1832இல் வட்டுக்கோட்டை பட்டிகோட்டா செமினறி மதப்பள்ளியில் இணைந்து 1840ஆம் ஆண்டுவரை அங்கு கற்று பட்டதாரியானார். செமினறியில் சேர்ந்த பின்னரும் மூன்று வருடகாலம் சைவராகவே வாழ்ந்தார். 1835ஆம் ஆண்டு மானிப்பாயில் நடைபெற்ற விசேட சமயப் பிரசாரக் கூட்டத்தில் பங்குபற்றிய பின்னர் கிறிஸ்தவ சமயத்தில் சேர்ந்து ஜோவல் ரசல் இராசசேகரம் ஆணல்ட் என்ற பெயருடன் ஞானஸ்தானம் பெற்றார்.

இவர் முதலில் மானிப்பாய் ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகச் சேர்ந்தார். பின்னர் 1844இல் சாவகச்சேரி அமெரிக்க மிசன் ஆங்கிலப் பாடசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். அதன் பின்னர் உடுவில் மகளிர் கல்லூரிக்கு 1847இல் தலைமை ஆசிரியராக மாற்றம் பெற்றார். சதாசிவம்பிள்ளை 1846 ஜூலை ஒன்பதாம் திகதி மார்கரெட் ஈ. நிச்சி என்ற முத்துப் பிள்ளை என்பாரைத் திருமணம் புரிந்தார்.

ஆசிரியத் தொழில் புரிந்த காலத்தில் அவருக்கு நூல்கள் எழுதும் ஆர்வம் ஏற்பட்டது. தனது 24ஆவது வயதில் திருச்சதகம் என்ற நூலை எழுதினார். அதனைத் தொடர்ந்து பல பக்தி இலக்கிய நூல்களை எழுதினார்.

ஆணல்டு, வட்டுக்கோட்டை மதப்பள்ளியின் தொடர்ச்சியாக அதனை யாழ்ப்பாணக் கல்லூரியாக நிறுவுவதில் முக்கிய பங்கு வகித்தார். கல்லூரியின் இயக்குநரகத்தின் உறுப்பினராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். 1881ஆம் ஆண்டில் யாழ்ப்பாணக் கல்லூரியில் தமிழ் இலக்கியப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். 1892வரை அங்கு பணியாற்றினார்.

ஈழத்தின் முதல் பத்திரிகையான உதயதாரகை, மற்றும் ஆழசniபெ ளுவயச ஆகியவற்றின் ஆசிரியராக 1857இல் கரோல் விசுவநாதபிள்ளைக்குப் பின்னர் பணிபுரிந்தது மட்டுமல்லாமல் யாழ்ப்பாணத்தில் பத்திரிகைத்துறையின் வளர்ச்சிக்குப் பெருந்தூணாக இருந்தார். 1896இல் இறக்கும் வரை உதயதாரகையின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

இவர் எழுதிய நூல்களுள் மிக முக்கியமானது, பாவலர் சரித்திர தீபகம் ஆகும்.

இந்நூல் மூலமாகவே தமிழ் பேசும் நல்லுலகம் ஆணல்ட் சதாசிவம்பிள்ளையின் பெருமையை அறிந்து கொண்டது. இந்நூலே தமிழில் முதலாவதாக வெளிவந்த தமிழ்ப்புலவர் சரிதநூலாகும். பாவலர் சரித்திர தீபகம் நூலானது 410 தமிழ்ப் புலவர்களது சரிதங்களை விபரமாகத் தந்துள்ளது. இந்த நூல் சிலகாலம் மதுரை பாலபண்டிதர் வகுப்பிற்கு பாடமாய் இருந்தது.

பரந்த அறிவும் தமிழ்ப் புலமையும் வாய்ந்த ஆணல்ட் சதாசிவம்பிள்ளை பல்வேறு துறைகளில் ஈடுபட்டுழைத்து அவற்றை நூல் வடிவில் வழங்கியுள்ளார். (1)பாவலர் சரித்திர தீபகம் (2)இல்லற நொண்டி (1887), (3)மெய்வேட்டசரம் (4) திருக்கடகம் (5)நன்நெறிமாலை (6)நன்நெறிக்கொத்து (7)*Carpotacharam*

(8)வானசாத்திரம் (9)வெல்லை அந்தாதி (சிறுவர் நூல், 1890), என்பன இவர் எழுதிய நூல்களிற் சிலவாகும்.

பத்திராதிபரும், பன்னூலாசிரியரும், தமிழில் முதலாவதாக வெளிவந்த தமிழ்ப் புலவர் சரிதநூலை எழுதியவரும், ஈழத்தின் முன்னோடிச் சிறுகதை ஆசிரியருமான ஆணல்ட சதாசிவம் பிள்ளை 1896ஆம் ஆண்டு தமது 75ஆவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**(தொடரும்)**




## 29 ஐயையோ...இவள்தான் கொலை காரியா! எப்படி கண்டு பிடித்தாய் என்று சொல்றியா!

சிரித்தபடியே அறைக்குள் வந்த பிரசாந்தினி,

"ஓ... நீங்கதான் இங்க வாறேண்டு சொன்ன அக்கா?" என்று புன்னகையை தொடரவிட்ட படியே கேட்டாள் பிரசாந்தினி.

"ஆமாம் பிரசாந்தினி... நான் காலையில் இங்கே வந்து போனேன். அப்போது நீங்கள் இருக்கவில்லை!"

"ஆமாம் அக்கா... நான் அந்த நேரத்திற்கு லெச்சர்சுக்குப் போயிருந்தேன்..!"

"ம்... இந்த டீய குடிங்க பிரசாந்தினி... இங்க இருக்கிறது உங்களோட யாரு?"

"எனது மாமி"!

"ஓ அப்படியா... நீங்க எந்த கெம்பசுக்கும் போறீங்க?

"கொழும்பு கெம்பசுக்கு"

"என்ன பாடம் எடுக்குறீங்க?"

"நான் கொமஸ் தான் எடுக்கிறேன்!" அக்கா எங்க வேலை செய்றீங்க... ஒங்கட ஊர் எங்க...?"

"நான் வேலை செய்றது அரச பாதுகாப்பு அமைச்சில்... ஏன்ட ஊர் பக்கத்துல இல்ல... கொஞ்சம் தூரம் பண்டாரவளை!"

"ம்... நல்ல ஊர்தான்... உங்கட பேர் என்ன அக்கா?"

"ஏன் மாமி சொல்லலியா என்னோட பெயர் ஊர்வசி!"

"அதே பொய்யை மீண்டும் சொன்னாள் சரண்யா.

"ஓ... அழகான பெயர். மாமி என்னிடம் உங்கள் பெயரைச் சொல்லவில்லை!"

"ஓ அப்படியா...?"

நான் இனி உங்களை ஊர்வசி அக்கா என்றே கூப்பிடுகிறேன்!"

"உங்கள் இஷ்டம் ... நீங்க காலையில எத்தனை மணிக்கு போவீங்க...?"

"நான் காலையில் எட்டு மணிக்கெல்லாம் போயிடுவேன். வாரத்துக்கு இரண்டு நாள் காலை பத்து மணிக்குப் போவேன்.

"திரும்பி வரும் போது இரவாகி விடுமோ...?"

"சில நாட்களில் ஆறுமணியாகி விடும்... மற்றைய நாட்களில் நாலு மணிக்கெல்லாம் வந்து விடுவேன்.

சனி ஞாயிற்றுக் கிழமைகளில் லீவா?"

"ஆமாம் அக்கா... அந்த நாட்களில் நான் பாடங்களைப் படிப்பேன்.

ம்... அது சரி... உங்களுக்கு திருமணமாகி விட்டதா?"

"ஐயோ இல்லை... அதைப்பற்றியெல்லாம் இன்னும் நினைக்கவே இல்லை!"

இப்போது மீ்ண்டும் ஒரு பொய்யைச் சொன்னால் சரண்யா.

அவளுக்கு திருமணமாகி ஒரு குழந்தையும் இருக்கிறது.

பொலிஸ் உத்தியோகத்திற்கு வந்து விட்டால்,

பல பொய்களை சொல்லியாக வேண்டும் என்பது அவளுக்குத் தெரியும்.

"ஏன் அப்படி ஒரு கேள்வியைக் கேட்டீங்க?"

"இல்ல அக்கா சும்மா தான் கேட்டேன்!"

"சரி...அப்ப நீங்க பாடத்தை படிங்க. நான் ஒரு நாவலைக் கொண்டு வந்தேன் அதை படித்துக் கொண்டிருக்கிறேன்..!'

"நாவலா... யாருடைய நாவல்?"

"ஏன் உங்களுக்கு நாவல் என்றால் பிடிக்குமா?"

"ம்... நிறைவே பிடிக்கும் லீவு நாட்களில் அதிகமாகவே படிப்பேன்...!"

"யாருடைய நாவல்களை அதிகமாக விரும்பி வாசிப்பீர்கள்?"

"ரமணி சந்திரனின் நாவல்களை விரும்பிப் படிபேன். சுவையாக இருக்கும்! ம்... நீங்க யாருடைய நாவல்களை அதிகம் விரும்பிப் படிப்பீங்க...!"

"நான் இலங்கை எழுத்தாளர்களின் நாவல்களைத்தான் அதிகம் விரும்பிப் படிப்பேன்!"

"ஓ... அப்படியா..! அதிலும் யாருடைய நாவல்கள் அதிகம் பிடிக்கும்?"

"மொழிவாணனுடைய நாவல்கள் தொடர்கதைகள் என்றால் விரும்பிப் படிப்பேன்!"

"அதற்கு ஏதாவது காரணம் இருக்கிறதா?"

"அவருடைய எழுத்து நடை எனக்கு ரொம்பவும் பிடிக்கும். அதேபோல் கதாபாத்திரங்களின் சுவையான சம்பாஷனை, மர்மக்கதைகளில் இறுதி வரையில் கொலைகாரனை கண்டு பிடிக்க முடியாமல் இருப்பது மிகவும் சுவாரஸ்யம்!"

'ஓ... அப்படியா..! அப்போ இப்போதும் அவருடைய நாவலைத்தான் வாங்கி வந்திருக்கீங்களா?"

"ஆமாம்..!"

அந்த நாவலுக்கு என்ன பெயரோ?

"உன் GUN உன்னை ஏமாற்றினால்.

"ம்... தலைப்பில் கூட வித்தியாசம் தெரிகிறது!"

"சரி... அப்போ நீங்க பிடிங்க...

ம்... எனக்கு இன்னுமொரு சந்தேகம்..?"

"என்னக்கா அது?"

"நான் வந்ததால் உங்கள் படிப்பு ஏதும் கெட்டு விட்டதா?

"ஐயையோ அப்படி எதுவும் இல்லை அக்கா... யார் வந்தாலும் போனாலும் எனது படிப்பில் நான் கவனமாகவே இருப்பேன்... நாளை மறுநாள் எங்களுக்கு எக்சாம்.. அதன் பிறகு நான் ப்ரியாகி விடுவேன்.. சுதந்திரமாக எதைப் பற்றியும் பேசலாம்!"

அவளைப் பார்த்துமே,

அவள் திறமையான ஒரு பெண் என்பதை சரண்யா புரிந்து கொண்டாள்.

தீபனின் நண்பர்கள் சொன்னதைப் போல்,

அவள் மிகவும் அழகாகவே இருந்தாள்.



அதேநேரம், அவள் ஒர் அப்பாவிப் பெண்ணாகவே.,

சரண்யாவின் பார்வையில் மிதந்தாள்!

சரண்யா அங்க வந்து மூன்று நாட்கள் கடந்து சென்றது.

அன்றும்,

வேலைக்குப் போய் விட்டு வருவதைப் போல்,

மாலையில் வீட்டுக்கு வந்தாள் சரண்யா.

பிரசாந்தினியும் அதே நேரத்தில் வந்து சேர்ந்தாள்...

அவள் கையில்

பத்திரிகை இருந்தது.

அந்த பத்திரிகையில் என்ன இருந்தது?

**(இளமை வளரும்)**

### கொலைகாரனைக் கண்டுபிடித்தால் பரிசு!

**கொல்லுவதோ இளமை தொடர்கதையை வாசித்துக் கொண்டு வரும் வாசகர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி.**

**ஆமாம்,**

**இந்த துப்பறியும் கதையில் கொலைகாரன் யார் என்று கண்டு பிடித்து எழுதும் வாசகர்களில் மூன்று பேருக்கு நம் நாட்டு எழுத்தாளர்களின் விலை மதிப்புள்ள நூல்கள் பரிசாக வழங்கப்படும்.**

**நீங்கள் செய்ய வேண்டியது கொலைகாரன் யார் என்று கண்டுபிடித்து எழுதி அனுப்புவது மட்டும்தான். ஒருவர் ஒரு பதிலை மட்டும்தான் எழுதமுடியும்.**

**கொலைகாரனை கண்டுபிடியுங்கள் நூல்களை பரிசாக வெல்லுங்கள்**

அனுப்பவேண்டிய முகவரி:

**கொல்லுவதோ இளமை**

தினகரன் வாரமஞ்சரி லேக்ஹவுஸ்

கொழும்பு10.



# 'ஒன்றியம் என்பதற்கு பல அர்த்தங்கள் வெவ்வேறாக புரிந்து கொண்டால் என் தவறில்லை கமல்ஹாசன்

சென்னை விக்ரம் படத்தில் கமல்ஹாசன் பாடல் ஒன்றை எழுதி பாடியுள்ளார். இதுபெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதற்கிடையே, சென்னையில் உள்ள ஹயாத் ஓட்டல் நடிகர் கமல்ஹாசனின் நடித்து வெளிவரவுள்ள விக்ரம் படத்திற்கான செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. இதில் இயக்குநர் லோகேஷ் கனகராஜ், கமல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அப்போது பேசிய கமல்ஹாசன் கூறுகையில், " 4 வருடங்களாக என் நடிப்பில் எந்த படமும் வெளியாகவில்லை. 4 வருடங்கள் காத்திருக்க வைத்ததற்காக எனது அன்பான ரசிகர்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். விக்ரம்' படத்தின் அடுத்த பாகம் குறித்து லோகேஷ் கனகராஜ்தான் சொல்ல வேண்டும்; அதற்கும் இவர்தான் இயக்குநர் என நான் முடிவு செய்துவிட்டேன்" என தெரிவித்தார். அப்போது பாஜகவினர் கமல் எழுதி பாடியுள்ள 'ஒன்றியத்தின் தப்பாலே ஒன்னியும் இல்ல இப்பாலே' என்ற வரிகளுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனரே என செய்தியாளர்கள் கேட்டனர். அதற்கு பதில் அளித்த அவர், தமிழில் நல்ல வார்த்தைகளுக்கு பல அர்த்தங்கள் உள்ளன. பத்திரிகையாளர்கள் சேர்ந்து இருக்கிறீர்கள். இதுவும் ஒரு ஒன்றியம்தான். டைரக்டர்ஸ் எல்லோரும் சேர்ந்து யூனியன் வைத்திருக்கிறார்கள். இதுவும் ஒரு ஒன்றியம்தான். அதேபோல், தயாரிப்பாளர்கள் சேர்ந்து யூனியன் வைத்திருக்கிறார்கள். அதுவும் ஒரு ஒன்றியம்தான். இங்கெல்லாம் தவறு நடந்தால் எப்படி இருக்குமோ,அதுபோல்தான் அந்த பாடல் வரிகள் அமைந்துள்ளன என தனக்கே உரிய பாணியில் பதில் கூறினார் கமல். இதனைக்கேட்டு அங்கிருந்தவர்கள் வாயடைத்து போயினர். அதையடுத்து மறைந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி பிறந்தநாளான ஜூன் 3 ஆம் திகதி விக்ரம் திரைப்படத்தினை வெளியீடுகிறீர்களே ? ஏதாவது சிறப்பு காரணங்கள் உள்ளனவா ? என கேட்டதற்கு, கருணாநிதி எனக்கு மிகவும் பிடித்த தலைவர். அவரை சந்திக்கும்போதெல்லாம் அவர் எனக்கு நல்ல புத்தகங்களை பரிசாக வழங்குவார். அந்த புத்தகங்களில் உள்ள கருத்துகள் திரைப்படத்தில் வந்தால் நன்றாக இருக்கும் என ஒரு ஆசான்போல் அறிவுரை கூறுவார். அவ்வளவுதான், அவரது பிறந்தநாள் அன்று இத்திரைப்படத்தினை வெளியிடுவதற்குக் காரணங்கள் இல்லை. அதற்கும், இதற்கும் எவ்வித சம்பந்தமில்லை எனக் கூறினார். நான் சம்பாதித்த பணத்தையெல்லாம் திரும்ப சினிமாவில் தான் போடுவேன் என சொன்னபோது கை தட்டினார்கள். ஆனால், இப்போது சம்பாதித்ததை சினிமாவையும் தாண்டி அரசியலிலும் போட விரும்புகிறேன் என கூறினார். இப்படத்தின் தமிழக வெளியீட்டு உரிமையை உதயநிதி ஸ்டாலினின் ரெட் ஜெயண்ட் மூவீஸ் நிறுவனம் கைப்பற்றி உள்ளது குறிப்பிடத்தக்கது. "ஒன்றியத்தின் தப்பாலே" என்ன சார் அர்த்தம்..? "படம் பாருங்க புரியும்"



# விஷாலுடன் ரித்து

மார்க் ஆண்டனியாக களமிறங்கி இருக்கும் விஷாலுடன், கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால் படத்தின் கதாநாயகி ரித்து வர்மா இணைந்துள்ளார். நடிகர் விஷால் நடிப்பில் சமீபத்தில் வெளியான 'வீரமே வாகை சூடும்' திரைப்படம் கலவையான விமர்சனம் பெற்றது. இதனை தொடர்ந்து விஷாலின் 33வது திரைப்படத்தை திரிஷா இல்லனா நயன்தாரா, அன்பானவன் அசராதவன் அடங்காதவன் போன்ற படங்களை இயக்கிய ஆதிக் ரவிச்சந்திரன் இயக்குகிறார். இந்த படத்திற்கு மார்க் ஆண்டனி என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. மார்க் ஆண்டனி என்ற பெயர் 1995ல் ரஜினி நடிப்பில் வெளியான பாட்சா திரைப்படத்தின் வில்லன் ரகுவரனின் கதாப்பாத்திர பெயராகும். எனவே இப்படத்தின் மீது எதிர்ப்பார்ப்பு அதிகரித்துள்ளது. விஷாலுடன் இப்படத்தில் இயக்குனரும் நடிகருமான எஸ்.ஜே.சூர்யா நடிக்கிறார். இப்படத்திற்கு ஜி.வி பிரகாஷ் இசையமைக்கிறார். இத்திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் உருவாகிறது. இதன் படப்பிடிப்பு சமீபத்தில் தொடங்கியது. இப்படத்தில் நடிக்கவிருக்கும் நடிகை குறித்து பெரிய எதிர்ப்பார்ப்பு இருந்து வருகிறது. அந்த வகையில் இப்படத்தின் கதாநாயகி குறித்து அறிவிப்பு தற்போது வெளியாகி உள்ளது. அதன்படி துலகர் சல்மான் நடிப்பில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்ற கண்ணும் கண்ணும் கொள்ளையடித்தால் படத்தில் கதாநாயகியாக நடித்த ரித்து வர்மா இதில் விஷாலுக்கு ஜோடியாக இணைந்துள்ளார். இதன் அதிகாரப்பூர்வ அறிவிப்பை படக்குழு தற்போது அறிவித்துள்ளது.



# ராஷ்மிகாவுக்கு முன்னாள் காதலன் வாழ்த்து

கன்னட நடிகை ராஷ்மிகா தெலுங்கில் சில படங்களில் நடித்தார். தமிழில் கார்த்தி ஜோடியாக சுல்தான் படத்தில் நடிக்கிறார். அவரும் ரக்ஷித் ஷெட்டியும் கிரிக் பார்ட்டி என்ற கன்னடப் படத்தில் ஜோடியாக நடித்தனர். அப்போது இருவரும் காதலித்தனர். திருமணம் செய்து கொள்ள இருவீட்டாரிடம் சம்மதம் பெற்றனர். 2018ல் பெங்களூரில் நிச்சயதார்த்த விழா நடந்தது. ஆனால், திடீரென்று ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக ரக்ஷித் ஷெட்டியுடனான காதலை முறித்துக்கொண்ட ராஷ்மிகா, சினிமாவில் தொடர்ந்து நடிக்க விரும்பி, நிச்சயதார்த்த விழாவை நிறுத்திவிட்டார். பிறகு அவர் ரக்ஷித் ஷெட்டியிடம் பேசுவது இல்லை. இந்நிலையில், கிரிக் பார்ட்டி படத்தில் இடம்பெற்ற ஒரு பாடல் காட்சி 100 மில்லியன் பார்வையாளர்களை கடந்துள்ளதை நினைவுகூர்ந்த ராஷ்மிகா, அதுபற்றி டிவிட்டரில் பதிவு செய்தார். அதற்கு பதிலளித்த ரக்ஷித் ஷெட்டி, 'சினிமாவில் மேலும் மேலும் நீங்கள் வளர வேண்டும்' என்று வாழ்த்து தெரிவித்துள்ளார்.



# அடுத்த ஆண்டில் பூர்ணா திருமணம்

கேரளாவில் வசித்து வரும் பூர்ணா, தமிழ் மற்றும் தெலுங்கு படங்களில் நடித்து வருகிறார். அவருக்கு திருமணம் செய்ய வீட்டில் மணமகன் பார்த்தனர். சில காரணங்களால் அவரது திருமணப் பேச்சு நின்றுவிட்டது. இதுகுறித்து பூர்ணா கூறுகையில், 'சில காரணங்களால் எனக்கு இப்போது மாப்பிள்ளை பார்க்க வேண்டாம் என்று என் பெற்றோரிடம்சொல்லிஇருக்கிறேன். தமிழில் பிசாசு 2, தலைவி, விசித்திரன், புளூவேல், தெலுங்கில் சுந்தரி மற்றும் பாலகிருஷ்ணாவின் படத்தில் நடித்து வருகிறேன். தவிர, வெப்தொடர்களில் நடிக்கிறேன். சினிமாவில் பிசியாக இருப்பதால், அடுத்த ஆண்டில் திருமணம் செய்ய நினைத்துள்ளேன். என்னை நன்கு புரிந்துகொள்பவராக இருக்க வேண்டும்' என்று சொன்னார்.

# சினி பஜார் கேள்வி பதில்

மொழிவாணன்

**எம். மாகிரட், எலபடகம.**

**கேள்வி:** *'பிக்பொஸ்' புகழ் நம் நாட்டு நடிகை லொஸ்லியா தமிழ்நாட்டு திரை உலகில் தாக்கு பிடிப்பாரா?*

**பதில்:** இவர் நடித்து வெளியான 'கூகுள் குட்டப்பா 'படத்தின் மூலம் ஏராளமான ரசிகர்களை சம்பாதித்திருக்கிறார் லொஸ்லியா. இவரிடம்" உங்களைப் போன்ற இளம் தலை முறை பெண்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்பும் விடயம் எது?" என்று கேட்டபோது "கல்லூரியில் பயிலும் போது நானும் பட மாளிகைக்குச் சென்று விசில் அடித்து கொண்டாடி இருக்கிறேன். தற்போது நடிகையாக அறிமுகமான பின்னணி, அதிர்ஷ்டம் இருந்தாலும் கடின உழைப்பும் விடா முயற்சியும் இருந்தது. வாழ்க்கையில் நிர்ணயித்த இலக்கை அடைய வேண்டுமென்றால் அதைவிட முயற்சியின் மூலமே எட்ட முடியும் என்பதே என்னுடைய அனுபவித்தின் மூலம் நான் கண்டு கொண்ட விடயம். அப்போதுதான் இந்த திரை உலகில் நிலைத்திருக்க முடியும். அதனையே என்னைப்போன்ற இளம் பெண்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன் என்றார் நடிகை லொஸ்லியா. இவர் தற்போது 'அன்ன பூரணி' என்ற படத்தில் மூன்று கதாநாயகிகளில் ஒருத்தியாக நடித்து வருகிறார்.

**எம். எம். இக்பால்,**
**கொலொன்னாவ.**

**கேள்வி:** *கமலின் விக்ரம் படத்தில் சூர்யாவும் நடிக்கிறாராமே எந்த கதாபாத்திரத்தில்.?*

**பதில்:** கமல் நடிப்பில் வெளியான 'மன்மத அம்பு' படத்தில் இடம்பெற்ற ஒரு பாடலுக்கு நடிகர் சூர்யா, நடிகர் சூர்யாவாகவே தோன்றி ஒத்துழைப்பு வழங்கி இருந்தார். தற்போது மீண்டும் இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் கமல் நாயகனாக நடிக்கும் 'விக்ரம்' படத்திலும் சூர்யா சிறப்பு தோற்றத்தில் நடித்திருக்கிறார். இது தொடர்பாக இயக்குநர் பேசுகையில், "சிறிய கதாபாத்திரமாக இருந்தாலும் அழுத்தமான கதாபாத்திரம் என்பதால் சூர்யாவை அணுகினோம்.

அவர் எந்த தயக்கமும் இல்லாமல் எங்களுடைய வேண்டுகோளை ஏற்று இரண்டு நாட்கள் படப்பிடிப்பில் பங்கு பற்றினார். அவருடைய காட்சிகள் திரையில் பத்து நிமிடங்கள் வரை இருக்கும். இந்த தருணத்தில் எங்களுடைய அழைப்பினை ஏற்று ஒத்துழைப்பு வழங்கிய சூரியாவிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார். 'விக்ரம்' ஜூன்3ஆம் திகதியன்று உலகம் முழுவதும் 6 ஆயிரத்துக்கும் அதிகமான பட மாளிகைகளில் வெளியாகிறது.



**ஆர்.ஏம். மதி, வவுனியா.**

**கேள்வி:** *என் அபிமான நடிகை திரிஷா ஏன் இன்னும் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கிறார்?*

**பதில்:** தமிழ்த் திரை உலகில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக முன்னணி நட்சத்திர நடிகையாக வலம் வருபவர். திரிஷா, திரை உலகில் வெற்றிகரமான நடிகையாக உலா வந்தாலும் சொந்த வாழ்க்கையில் பல தடைகளை எதிர்கொண்டவர். தற்போது தன் தாயாரின் வேண்டுகோளை ஏற்று திருமணத்திற்கு தயாராகி வருகிறார். 40 வயதை நெருங்கும் இவர், சொந்த வாழ்க்கையிலும், கலை உலக வாழ்க்கையிலும் தொடர்ந்து வெற்றி பெற வேண்டும் என்பதற்காக அண்மையில் சோதிடர் ஒருவரின் ஆலோசனையின் பெயரில் மதுரை மீனாட்சி அம்மனை வரிசையில் நின்று தரிசனம் செய்திருக்கிறார். அத்துடன் இது தொடர்பான புகைப்படத்தையும் தன்னுடைய சமூக வலைதளம் பக்கத்தில் பதிவேற்றியிருக்கிறார்.

நடிகை திரிஷாவின் நடிப்பில் செப்டம்பர் 30ஆம் திகதியன்று 'பொன்னியின் செல்வன்' திரைப்படம் வெளியாகவிருக்கிறது.



**எல்.பாலன், தாண்டியடி.**

**கேள்வி:** *பிரமாண்ட இயக்குநர் சங்கரின் மகள் அதிதி சங்கர் நாயகியாக நடித்திருக்கும் படம் எப்போது திரைக்கு வருகிறது?*

**பதில்:** அதிதி சங்கர் நாயகியாக அறிமுகமாகும் அந்தப்படத்தின் பெயர் 'விருமன்'. இந்தத் திரைப்படம் சூர்யாவின் 2டி என்டர்டெயின்மென்ட் நிறுவனத்தின் தயாரிப்பில் கார்த்தி நடிப்பில் முத்தையா இயக்கத்தில் உருவாகி இருக்கிறது. இதில்தான் அதிதி சங்கர் நாயகியாக அறிமுகமாகிறார்.

படத்தில், கார்த்தி அதிதியுடன் பிரகஷ்ராஜ், சூரி, ராஜ் கிரன், மனோஜ் பாரதிராஜா ஆகியோர் நடித்துள்ளனர்.

இந்தப் படம் ஆகஸ்ட் 31ஆம் திகதி விநாயகர் சதுர்த்தி தினத்தில் வெளியாகும் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**G. மாணிக்கம், மன்னார்.**

**கேள்வி:** எம்.ஜி.ஆர். சிவாஜி கணேசனைப் போல் சிரமமான கதா பாத்திரங்களில் கஷ்டப்பட்டு நடிக்காமல் ஏழை எளியோரைக் கவரும் விதத்தில் நடித்து பெயர் வாங்கியது ஏன்?

**பதில்:** ம்...அதனால்தானே அவர் "மக்கள் திலகம்" என்றும் இவர் "நடிகர் திலகம்" என்றும் மக்களால் முத்திரை குத்தப்பட்டார்கள்.

**எம்.மலர்ராணி, கொழும்பு 13**

**கேள்வி:** *என்ன இது நடிகை மஞ்சுநாத் கவி பின்னணி பாடகியாகவும் மாறிவிட்டாராமே... உண்மையா?*

**பதில்:** ம்...உண்மைதான் ஒளிப்பதிவாளரும் இயக்குநருமான சந்தோஷ் சிவன் இயக்கத்தில் தயாராகி விரைவில் வெளிவர இருக்கும் 'சென்டி மீட்டர்' திரைப்படத்தில் முதன்மை கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார் மஞ்சு வாரியர். அத்துடன், இந்தப் படத்துக்காக பாடலாசிரியர் லலிதானந்த் எழுதி இருக்கும் பாடல் வரிகளுக்கு சொந்தக் குரலில் பின்னணி பாடி பாடலாசிரியராகவும் தமிழில் அறிமுக மாகி இருக்கிறார். 'கிம்..கிம்' எனத் தொடங்கும் பாடலுக்கு...ராம் சூரேந்தர் இசை அமைத்திருக்கிறார்.



# நாயகனாக சிவாஜியின் பேரன்

சிவாஜி கணேசனின் மற்றொரு பேரன் தர்சன் கணேசனும் சினிமாவில் கதாநாயகனாக களம் இறங்க இருக்கிறார். நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் மூத்த மகன் ராம்குமார். இவரின் 2வது மகன் தர்ஷன் கணேசன். இவர் மிக விரைவில் ஒரு படத்தில் கதாநாயகனாக அறிமுகமாக இருக்கிறார். இது குறித்த அதிகார பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என தெரிகிறது. இதுபற்றி ராம்குமார் கூறியதாவது: ஏற்கனவே எனது மூத்த மகன் துஷ்யந்த் தயாரிப்பாளராகவும், நடிகராகவும் இருப்பது அனைவருக்குமே தெரிந்ததுதான். அவருக்கு அடுத்ததாக தர்ஷன் கணேசனும் நடிக்க வருகிறார். புனேயில் நடிப்பு பயிற்சி எடுத்துக்கொண்டு தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் தெருக்கூத்து நாடகங்களை அரங்கேற்றிவிட்டு தகுந்த பயிற்சிபெற்று வருகிறார். அவருக்கு பல பட நிறுவனங்கள் அழைப்பு விடுத்துள்ளன. விரைவில் இது குறித்த முறைப்படியான அறிவிப்பு வெளிவரும் என்று அவர் கூறினார்.



## அர்த்தமுள்ள வாழ்க்கையின் அடையாளம்

# அமரர் ஆறுமுகன் தொண்டமான்







கொட்டகலை தொண்டமான் தொழில்நு ட்ப பயிற்சி வளாகத்தில் 1998 ஆம் ஆண்டு இலவச மரு த்துவ முகாம் நடந்தது. இந்திய டாக்டர்களின் பரிசோதனையும் இலவச மருந்துவ முகாமை இ.தொ.கா ஏற்பாடு செய்திருந்தது. இறுதிநாள் நிகழ்வில் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் பங்கேற்கிறார். அப்போது அவர் உடல் நலம் குன்றியிருந்தார் நடையில் சிறிது தளர்வு தெரிந்தது. அவரைத் தாங்கியபடி மருத்துவ முகாமைப் பார்வையிட உதவினார் ஓர் இளைஞர், அவர் தான் சௌமிய மூர்த்தி தொண்டமானின் பேரன் ஆறுமுகன் தொண்டமான்.



அந்நேரம் அவர் தனது தாத்தாவுக்கு அந்தரங்கச் செயலாளராக பணியாற்றிக் கொண்டிருந்தார். அவரது துடி துடிப்பும் கம்பீர தோற்றமும் வருங்காலத்தில் தலைமையை தாங்கும் உணர்வைத் தந்தது.

அப்போது அவர் அரசியலில் ஈடுபட்டிருந்தார். அவரது முதல் அரசியல் பிரவேசம் 1990ல்.தாத்தாவோடு பவனி வந்தார். இ.தொ.கா. பாசறையில் பயிற்சி பெற்றார். இ.தொ.கா அப்போது வெறும் தொழில் சங்க காரியங்களை மட்டும் கவனிக்கும் அமைப்பாக இருக்கவில்லை. முழு மலையகத்தினதும் சமூகவியல் மாற்றங்களை நிர்ணயிக்கும் சக்கியாக விளங்கியது. சௌமிய மூர்த்தியின் சாதுர்யமான தலைமைத்துவம்




ஒரு கட்டுக் கோப்பை உருவாக்கி விட்டிருந்தது.

அவரது திறமை பளிச்சிட்டது. இதனாலேயே 1994ஆம் ஆண்டு பொதுச் செயலாளராக நியனம் பெறும் தகுதி கிடைக்கப்பெற்றது. இதே ஆண்டு (1994) பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் நடந்தது. அதில் முதல் தடவையாக அமரர் ஆறுமுகன் தொண்டமான் போட்டியிட்டார். நுவரெலியா மாவட்டத்தில் களம் இறங்கிய அவர் 74,000 வாக்குகளைப் பெற்றார்.இந்த வாக்குகள் மூலம் இரண்டு செய்திகளை மலையக மக்கள் அறிவித்திருந்தனர். ஒன்று அமர் சௌமிய மூர்த்தியின் அரசியல் தரிசனம் சரியானதே என்பது.

அடுத்தது இ.தொ.கா.வின் அடுத்தவாரிசாக வரும் தகுதி ஆறுமுகன் தொண்டமானுக்கே உள்ளது என்பதாகும். 1999 இல் சௌமிய மூர்த்தி தொண்டமான் இயற்கை எய்தினார். இ.தொ.காவில் சலசலப்பு எழுந்தது. சௌமிய மூர்த்தியோடு தோளோடு தோள் நின்று போராடி அனுபவம் பெற்ற உயர்மட்டத் தலைவர்கள் பலர் உடனிருந்தார்கள். தலைமைத்துவ போட்டியொன்று தோன்றும் ஆபத்து தெரிந்தது. திறைமறைவு சங்கதிகள் சிலவும் நடந்தேறின. இ.தொ.கா சிதறிப்போகும் என்று எதிர்வு கூரல்கள் எழுந்தன. இருந்தும் ஆறமுகன் தொண்டமான் துணிவு கொண்டார். தலைமைப் பொறுப்பை தாங்கிக் கொள்ள தானே முன்வந்தார்.ஆனால் ஆறுமுகன் தொண்டமான் தனது மன உறுதியை கைவிடவே இல்லை. அவரின் நிதானமும் சவாலை சாதித்துக் காட்டும் இளமைத் துடிப்பும் இ.தொ கா தொண்டர்களுக்கு உயிரூட்டம் தந்தது. சௌமியமூர்த்தியின் மறைவுக்குப் பின் திரைமறைவு செயற்பாடுகளினால் தடுமாற்றம் அடைந்திருந்த அவர்கள் திருப்தியுடன் பெருமூச்சு விட்டார்கள். இது ஆறுமுகன் தொண்டமானுக்கு ஆறுதலை தந்தது. தன்னை எதிர்ப்பவர்கள் விமர்சிப்பவர்களுக்குப் பதில் கூற முனையாத அவர் தனது பணியினை தக்க முறையில் நிறைவேற்றுவதில் மட்டுமே குறியாக இருந்தார்.

இதனால் நாளடைவில் அவரக்கெதிரான தனிப்பட்ட வாய் பேச்சுக்கள் எல்லாமே மௌனித்துப் போயின. இது அவருக்கு மேலும் ஊக்குவிப்பை தந்தது. இதை இறுதிவரை அவர் சரியாகப் பயன்படுத்திக் கொண்டிருந்தார். 2000 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி,2004ல், 2010 இலும் வெற்றி வாகை சூடினார். மக்கள் அவர் வார்த்தைகளை நம்பினார்கள். மெல்லமெல்ல தாத்தாவைப் போல தனது பாணியையும் மாற்றித் கொள்ள ஆரம்பித்தார். அவர் கடந்து வந்த பாதையினை உன்னிப்பாக அவதானிப்பவர்களால் இதனை நன்கு உணர முடியும்.







அவர் தொழிலாளர்களிடம் ஒருமையாக பேசுகிறார் கொச்சை வார்த்தைகளில் உரையாடுகிறார் என்பது சிலரது பார்வை. அதற்கு அவர் தந்த பதில்,நான் என் வீட்டில் பிள்ளைகளிடம் எப்படி பேசுவேனோ அப்படியே தான் எமது மக்களிடம் பேசுகிறேன். இதில் ஏது தப்பு? சரியான சாட்டையடி வார்த்தை. இங்கே அவரது தாத்தாவாகி நிற்கிறார் அமரர் ஆறுமுகன் தொண்டமான். இ.தொ.காவும் மலையக மக்களும் என் குடும்பம் என்று சொந்தம் கொண்டாடிய அவரின் பாங்கு இனி இங்கு எத்தனை பேருக்கு வாய்க்கும்.எப்படி பார்த்தாலும் எடைபோட்டால் அவரது பக்கத் தராசு தட்டு உயர்ந்தே நிற்கிறது.

கூட்டு ஒப்பந்தம் பேச்சு வார்த்தைகளின் போது அதிரடியாக முடிவுகளை எடுத்தார். இதே போலவே அமைச்சர் பதவிகளை வகித்த வேளைகளில் தனது சாணக்கியமான அணுகுமுறைகளை பல தடவைகளில் நிரூபித்துள்ளார். இவர் 1999 இல் கால் நடை அபிவித்தி மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர், 2001 இல் வீடமைப்பு மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர், 2006 ஆம் ஆண்டு இளைஞர் வலுவூட்டல் தோட்ட வீடமைப்பு அமைச்சர், 2019ஆம் ஆண்டு இளைஞர் வலுவூட்டல் தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சுப் பொறுப்புகளை இறுதி மூச்சுவரை வகித்தார்.

இதன் மூலம் தோட்ட மக்களின் தனி வீட்டுத் திட்டம் தொடரும் என்று எதிர் பார்க்கப்பட்டது. இதே போல வடக்கு கிழக்கு மக்களும் தமது மீள குடியேற்றம் துரிதப்படுத்தப்படும் என காத்திருந்தனர். ஆனால் துரதிஷ்டவசமாக காலன் அவரை 55 வயதில் அழைத்துச் சென்று விட்டான். அமரர் ஆறுமுகன் தொண்டமான் எந்த முடிவை எடுத்தாலும் அது மக்களின் நலன் சார்ந்ததாகவே இருந்து. 1996 இல் இ.தொ.கா அப்போது அரசின் பங்காளி கட்சி.சம்பள ஒப்பந்த விவகாரத்தின் போது தொழில் அமைச்சு பாரபட்சமாக நடப்பதாக கூறி அதற்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து அசத்தினார். கடந்த ஆட்சியில் முன்னாள் பிரதமர் ரணிலுக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்தது பொதுஜன பெரமுன. அப்பக்கம் சார்பு கொண்டிருந்தார் அமரர் ஆறுமுகன். ஆனால் அதிரடியாக அவர் ரணிலுக்கு ஆதரவாக வாக்களித்து அசர வைத்தார். இது அவரது அரசியல் முதிர் நிலையாகும்.

1000 ரூபா சம்பள அதிகரிப்பு கிடைக்கப் போதில்லை என்று முன்னாள் இந்நாள் அரசாங்கங்களே நம்புகின்றன. கம்பனி தரப்பு சகல கதவுகளையும் இறுகச் சாத்திவிட்டுள்ளன. தொழிலாளர்கள் கிட்டுமா? கிட்டாதா என்று ஏக்கம் கொண்டுள்ளனர். நாடே நம்பிக்கை இழந்திருந்த நிலையில் மூச்சின் முணுமுணுப்பு முடங்கும் வரை அவரது பேச்சின் தொணி 1000 ரூபாவை வாங்கியே தருவேன் என்னும் உத்தர வாதத்தையே உள்வாங்கி இருந்தது. இந்த மன உறுதி யாருக்கு வரும்? அந்த ஆட்டம் காணாத பிடிவாதம் அவரிடம் நாம் கண்ட தனிச்சிறப்பு.






சவரிமுத்து தேவதாஸ்
(சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்)



தினகரன் வாரமஞ்சரி

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## மோட்டார் வாகனங்கள்

121

### வாகனங்கள் தேவை

தேவை

நீர்கொழும்பில், பிரபல, சாவித் தகடு, கபட், ஹெண்டில் விநியோகிக்கும் எமது நிறுவனத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் 18 1/ 2 அடி அலுமினியம் புல்பொடி லொறி தேவை. மாதாந்த வாடகை பேசித் தீர்க்கலாம். 0773 067074, 031 4940074 032597



## வர்த்தகம்

207

### வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

கண்டி குண்டசாலை 80 பேர்ச் சதுர வடிவ காணி கென்டோஸ் சொக்ளட் தொழிற்சாலைக்கு முன்னால் 180 அடி அகலமான கார்பட் பிரதான வீதியில் இருந்து 100 மீற்றருக்கு அப்பால், 21730 சதுர அடி காணி. காணியைச் சுற்றி 15 அடி உயர பாதுகாப்பு சுவர் இரும்பு கேட்டுடன் வர்த்தக வங்கிகள், BOI, பல்லேகெலே விளையாட்டரங்கு, அரச அதிகார சபைகள் மற்றும் ரிஜென்ட் ஹோட்டலுக்கு அருகில். நடைதூரம் ஐந்து நிமிடம் காணியில் இருந்து டொக்டர்களுக்கு பொருத்தமானது. மின்சாரம், நீர் உண்டு. பெறுமதி ரூ. 85 மில்லியன். 077 7438169, 0777282147 031616

## வேலைவாய்ப்பு

315

### வெற்றிடங்கள் கல்வி

அனுபவம் வாய்ந்த ஆலிமாக்கள் தேவை. தொடர்புகளுக்கு 0779515705. தொட்டவத்தை வீதி, வேறவத்தை, பாணந்துறை. 032964

318

### வெற்றிடங்கள் டிரைவர்கள்

எமது நிறுவனத்திற்கு கனரக வாகனம் செலுத்தும் அனுமதிப் பத்திரத்துடனான சாரதி தேவை. மாதாந்த சம்பளம் ரூ. 45, 000/ செலுத்தப்படும். நாளாந்தம் வருகை தரக் கூடியவர் அல்லது தங்கி வேலை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும். 0112546280 033004

## காணி/தோட்டம்

617

### வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கடவத்த, எல்தெனிய பண்டார நாயக்க மாவத்த சகல வசதிகளுடன் 15 பேர்ச் வீடு விற்பனைக்கு அதிவேக வீதி பிரவேசத்திற்கு 1 KM. புரோக்கர்களுக்கு 3% 075 7119500 032723

கம்பஹா கடவத்தை கிராமிய சுற்றாடலில் கண்டேனர் ஒன்றை சிக்கலின்றி உள்ளே எடுப்பதற்கான இடவசதியுள்ள 04 வீடுகள் 04 கராஜ்கள் 02 கழிவறைகள் வீதம் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. கொழும்புக்கு 10 கி.மி. தொலைவில் சிக்கலற்ற 45 வருட தனி உறுதிப்பத்திரம் தொ. பே. 070 1121966. R. D. ஆரியதாஸ். 031078




## திருமண சேவைகள்

### மணமகள்

இஸ்லாமிய மணமகளுக்கு நற்குணமுள்ள மார்க்கப்பற்றுள்ள மணமகன் தேவை. 0741711316, 0114906065. B180713

### மணமகன்

சிங்களம், பௌத்த மதத்தை சேர்ந்த 1965ஆம் ஆண்டு பிறந்த, 56 வயதுடைய காலியில் வசிக்கும், விவாகரத்து பெற்ற, பொறுப்புகளற்ற வங்கியில் தொழில் புரியும் மணமகனுக்கு நல்ல பண்பான, இந்து மதத்தை சார்ந்த தமிழ் மணப்பெண்ணை மணமகன் எதிர்பார்க்கிறார். தொடர்பு பிரதீப். டி. சில்வா. 0779886937 G180877

## சொந்த விடயம்

501

### பழங்காலப் பொருட்கள் சேகரிப்புகள்

உங்களது வீட்டின் ஆடம்பரத்தைக் காட்டும் தளபாடங்களின் சேர்க்கை இலகுவாக அடைய குடியாத புராதன பொருட்களின் சேர்க்கை எம்மிடம் உண்டு. பரிசளிக்கவும் ஏற்றது. வருகை தாருங்கள் கடந்தகால வீட்டு நிர்மாணத்தின் அழகை நேரில் காணுங்கள். ஜயசங்க என்டிக், சம்பத் வங்கிக்கு அருகில் ராகம இசுரு ADZ 032928

தினகரன் வாரமஞ்சரி

திருமண சேவைகள்

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

தினகரன் வாரமஞ்சரி

திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

## ஆசியாவில் போர் ஒன்று நடப்பதை... *(12ஆம் பக்கத் தொடர்)*

இரண்டாவது, குவாட் நாடுகளது உரையாடலின் மூலம் ஜோபைடன் சீனாவின் தைவான் நகர்வுகளை தீவிர எதிர்ப்புவாதத்தின் மூலம் கண்டித்துள்ளதைக் காணமுடிகிறது. குறிப்பாக அமெரிக்க ஜனாதிபதி தைவான் விடயத்தில் சீனாவின் தலையீடு ஆபத்துடன் விளையாடுவதற்கு சமமானதாகும் எனத் தெரிவித்துள்ளார். அவ்வாறே ஊடகங்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போது தைவான் மீது சீனா இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டால் அமெரிக்கா இராணுவ ரீதியிலான தலையீட்டை ஏற்படுத்துமெனவும் தைவானுக்கு ஆதரவாக இராணுவ ரீதியாக செயல்படும் என்றும் களத்தில் இறங்கும் எனவும் பதிலளித்தார். சீனாவையும் ஒரு போருக்குள் நுழைத்துவிடுதல் என்ற இலக்குடைய குவாட் அமைப்பிலுள்ள அவுஸ்ரேலியா எவ்வாறு சீனாவுடன் கூட்டிணையும் என்ற கேள்வி இயல்பானது. ஆனால் சீனாவின் உள்நாட்டு நிலையும் பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பும் சீனா சார்ந்ததாகவே அமைய வேண்டிய நிலை தவிர்க்க முடியாதது. அதனை தொழில் கட்சி உணர்ந்துள்ளமையே பிரதமரது நடவடிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. நாடுகள் அணிகளில் இணைவதென்பதை விட பொருளாதாரமாகவே அணியமைக்க முயலுகின்றன.

மூன்றாவது, இந்தியா குவாட் அமைப்பில் காணப்பட்டாலும் அதன் அணுகுமுறை தனித்துவமானதாகவே உள்ளது. தொழில்நுட்ப அறிவை அதிகரிக்கும் நோக்குடன் இந்திய மாணவர்களது கல்விக்கான வாய்ப்புக்களை குவாட் நாடுகள் வழங்க வேண்டும் என நரேந்திர மோடி கோரிக்கை முன்வைத்துள்ளார். அது மட்டுமன்றி சீனாவிலிருந்து வெளியேறும் முதலீடுகளை இந்தியாவுக்கு கொண்டுவரும் நோக்கத்தையும் அவர் அதிகம் பிரஸ்தாபித்துள்ளார். ஒட்டுமொத்தத்தில் குவாட் கட்டமைப்பை இந்தியா நோக்கியதாக பயன்படுத்தத் திட்டமிடும் பிரதமர் மோடி, தொழில்நுட்ப ரீதியில் இந்தியாவை எழுச்சிகரமான தேசமாக்க முனைகிறார். அதேநேரம் அமெரிக்காவோ ஜப்பான் அவுஸ்திரேலியா மற்றும் தென் கொரியாவை தனது நெருக்கமான நாடுகளாகக்கொள்ள முனைகின்ற போக்கினையும் அவதானிக்க முடிகிறது. சீன இந்திய முரண்பாட்டை அதிகம் விரும்பும் அமெரிக்கா சீனாவுக்கு எதிரான அணியில் நம்பிக்கைக்குரிய நாடாக அவுஸ்திரேலியாவை பலப்படுத்த முனைகிறது.

எனவே ஜப்பானிய போர் எதிர்ப்புவாதிகள் கூறுவதுபோல் குவாட் உச்சிமகாநாட்டின் மூலம் ஆசியாவில் ஜோபைடன் போர் மூள்வதற்கு திட்டமிடுவதாக குற்றம்சாட்டு நியாயமானதாகவே தெரிகிறது. டோக்கியோவில் கூடிய போர் எதிர்ப்புவாதிகள் பைடனுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர். முன்னாள் அவுஸ்திரேலிய பிரதமர் கெவின் ரூட், சீனாவுடன் இன்னும் நிலையான உறவை அவுஸ்திரேலியா எப்போதும் வரவேற்கும் என்றார். ஆனால் சீனாவால் நிறுவப்பட்ட இந்த முன்நிபந்தனைகள் தொடர்ந்து இருக்கும் நிலையில் உறவு சுமூகமானதாக இருக்காது. எனத் தெரிவித்துள்ளார். ஆகவே அவுஸ்திரேலியாவின் நகர்வுகள் குவாட் அமைப்பின் இலக்குகளை தகர்ப்பதாக அமைய வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது.

## இலங்கையின் பொருளாதார... *(12ஆம் பக்கத் தொடர்)*

அத்தோடு மத்தியவங்கி செலாவணிக் கட்டுப்பாட்டு நடைமுறைகளை இறுக்கமாக்கியிருக்கிறது. திறந்த கணக்குகள் (open accounts) ஊடாக இறக்குமதிகளை மேற்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது. ஒருவர் கைவசம் வைத்திருக்கக்கூடிய டொலர்களின் அளவு பத்தாயிரமாகக் குறைக்கபட்டிருக்கிறது. டொலர் பரிமாற்றங்கள் வங்கித்துறை ஊடாக மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்த கண்காணிப்பு நடவடிக்கைகளும் பலப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இத்துடன் டொலரை முகாமை செய்யப்பட்ட மிதக்கவிடலின் கீழ் கொண்டு வந்து டொலர் சந்தையில் பரிமாறப்படக்கூடிய ஒரு வீச்சு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் தொடர்ந்து அதிகரித்துச் சென்ற டொலரின் விலை ஓரளவு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. வங்கித்துறையும் ஏனைய நிதிநிறுவனங்களும் மத்திய வங்கிகளின் வழிகாட்டல்களை தற்போது பின்பற்றுவதாகத் தெரிகிறது. இதன் மூலம் கள்ளச் சந்தையில் டொலர் பரிமாற்றங்கள் நிகழ்வதையும் அதன் மூலம் ஊகவணிகர்கள் செயற்கையாக நிர்ணயிக்கும் விலைகளை முறைசார்ந்த நிதித்துறையினரும் ஏற்பவேண்டிய நிலையினையும் தடுக்க மத்தியவங்கி முனைந்துள்ளது.

எவ்வாறாயினும் இவை அத்தனையும் தற்காலிக நடவடிக்கைகளேயாகும். பிரச்சினை தீரவேண்டுமாயின் வருமான உழைப்புகள் என்ற வடிவிலே இலங்கைக்குள் டொலர் உட்பாய்ச்சல்கள் அதிகரிக்க வேண்டும். கடன்கள் தற்காலிகமாக பிரச்சினைக்கு தீர்வாக அமைந்தாலும் அக்கடன்கள் எதிர்காலத்தில் மீளச் செலுத்தப்பட்டேயாக வேண்டும்.

தினகரன் வாரமஞ்சரி

BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

Largest Pipeline Company In Sri Lanka




ALLIED TRADING INTERNATIONAL (PVT) LTD
301 Old Moor Street, Colombo 12, Sri Lanka 011- 739 7777 011- 2435180 alliedint@eureka.lk www.allied.lk




ACADEMY OF CULINARY ART
BY CHEF JEAN PIERRE

CLASSES IN
1. FOOD PREPARATION
2. PASTRY / BAKERY
3. DIPLOMA / ADVANCED DIPLOMA

CLASS DURATION
• ONE DAY CLASS • 6 MONTH DIPLOMA
• 1 MONTH CLASSES
• 3 MONTH CLASSES

INFORMATION
• TIME PER CLASS - 4 HOURS
• INDIVIDUAL CLASSES / MINIMUM 3 STUDENTS
• NO AGE LIMIT, EVERYONE IS WELCOME

THE SAFEST PLACE TO LEARN

AN OPPORTUNITY TO BECOME A CERTIFIED CHEF

FOR REGISTRATION
CALL OR SMS : 0779 144 219 WHATSAPP : 0766 351 191
FACE BOOK : JEAN PIERRE INSTAGRAM : @CHEFJEANPIERRE.CATERING

தினகரன் வாரமஞ்சரி

திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 / பியுமி - 011 2 429 383 /
ரமணி - 011 2 129 347 / கயனி - 011 2 429 342



# வாரபலன்

08.05.2022 - 14.05.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

வைகாசி 3ம் திகதி (17 /5/ 2022 )முதல் மாத கடைசி வரை மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். எனவே விரைய ஸ்தானம் வலுக்கிறது. இதனால் வாங்கிய இடத்தை விற்கும் சூழ்நிலை ஒரு சிலருக்கு ஏற்படலாம். கோபத்தின் காரணமாக சில நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடலாம். ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துங்கள் இதுவரை உச்சம்பெற்று மீனத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன் வைகாசி 10ம் திகதி (24/05/ 2022) உங்கள் ராசியில் சஞ்சரித்துள்ளார். இதனால் பணப்புழக்கம் அதிகரிக்கும்.எடுத்த காரியம் வெற்றியாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். கல்யாண முயற்சி கைகூடும்.

## ரிஷபம்

வைகாசி 3ம் திகதி (17 /5/ 2022 ) முதல் மாத கடைசி வரை மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். உங்கள் ராசி அடிப்படையில் சனி யோகம் செய்யும் கிரகம் ஆகும். அவர் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்தைப் பார்ப்பதால் எதிர்பார்த்த நல்ல திருப்பங்கள் ஏற்படும். இல்லம் தேடி நல்ல தகவல்கள் வந்து சேரும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம். கடன் சுமை குறையும். இதுவரை உச்சம்பெற்று மீனத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன் வைகாசி 10ஆம் திகதி (24/05/2022) மேஷ ராசியில் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிநாதன் சுக்கிரன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது கொஞ்சம் கவனத்துடன் செயல்படவேண்டும். யாருக்கும் வாக்குறுதி கொடுக்க வேண்டாம். மருத்துவச் செலவு கூடும். எதையும் துணிந்து செய்ய இயலாது. உதவி செய்வதாக சொன்னவர்கள் கடைசி நேரத்தில் கையை விரிக்கலாம்.

## மிதுனம்

வைகாசி 3ம் திகதி (17 /5/ 2022 ) முதல் மாத கடைசி வரை மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. அஷ்டமத்து சனி ஆதிக்கம் மற்றும் சனி, செவ்வாய் பார்வை ஏற்படுவதால் விரயங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காது. தொழில் பங்குதாரர்களால் தொல்லை ஏற்படலாம். குருவோடு இணைந்து 'குரு மங்கள' யோகத்தை உருவாக்குவதால் இல்லத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெற கூடும். இதுவரை உச்சம்பெற்று மீனத்தில் சஞ்சரித்த சுக்கிரன் வைகாசி 10ம் தேதி (24/05/2022) மேஷ ராசியில் சஞ்சரித்துள்ளார். விரயாதிபதியான சுக்கிரன் லாப ஸ்தானத்திற்கு வரும்போது விரயத்திற்கேற்ற வருமானம் வந்து சேரும். இருப்பினும் வீண் விரயம் அதிகரிக்கும். பாகப்பிரிவினை சுமுகமாகும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

## கடகம்

வைகாசி 3ம் திகதி (17 /5/ 2022 ) முதல் மாத கடைசி வரை மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். இக்காலத்தில் கூடுதல் கவனம் தேவை. குடும்ப பிரச்சினை, சொத்து பிரச்சினை அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கல்களில் ஏமாற்றத்தை சந்திப்பீர்கள். விரயத்தால் மனநிம்மதி குறையும் .வாங்கிய சொத்துக்களை விற்கக் கூடிய நிர்ப்பந்தம் உருவாகும். ஆரோக்கியம் பாதிக்கும். இதுவரை உச்சம்பெற்று மீனத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன் வைகாசி 10ஆம் திகதி (24/05/2022) மேஷ ராசியில் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். எதிரிகள் விலகுவர். சுப காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். புதிய கிளைத் தொழில் தொடங்கலாமா என்று சிந்திப்பீர்கள். வெளிநாட்டு முயற்சியில் அனுகூலம் கிடைக்கும்.

## சிம்மம்

வைகாசி 3ம் திகதி (17 /5/ 2022 ) முதல் மாத கடைசி வரை மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். எனவே உங்கள் ராசிப்படி அட்டம ஸ்தானம் வலுவடைகிறது. உறவுகள் பகையாகலாம். பிறருக்கு நன்மை செய்தாலும் அது தீமையாக தெரியும். உத்தியோகத்தில் பதவி உயர்வு தாமதப்படும் .பண நெருக்கடி அதிகரிக்கும். ஆரோக்கிய தொல்லை உண்டாகும். இதுவரை மீனத்தில் உச்சம் பெற்றிருந்த சுக்கிரன் வைகாசி 10ஆம் திகதி(24/05/2022) மேஷ ராசியில் சஞ்சரித்துள்ளார். இக்காலத்தில் பாக்கியஸ்தானம் வலுப்பெறுவதால் பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். குடும்ப பிரச்சினை படிப்படியாக மாறும். இடம், பூமி விற்பனையால் லாபம் உண்டு. இல்லம் தேடி நல்ல தகவல் வரும்.

## கன்னி

வைகாசி 3ம் திகதி(17 /5/ 2022 ) முதல் மாத கடைசி வரை மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கிறார். உங்கள் ராசிக்கு சப்தம ஸ்தானம் பலம் இழக்கிறது. எனவே வாழ்க்கை துணை வழியில் சில பிரச்சினை ஏற்படலாம்.வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு சில தடுமாற்றங்களும் தடைகளும் ஏற்படும். பிள்ளைகளை நெறிப்படுத்துவதன் மூலமே நிம்மதி பெற முடியும். பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் தடை வரலாம். வீண் விரயங்கள் ஏற்படும் நேரமிது. இதுவரை மீனத்தில் உச்சம் பெற்று சஞ்சரித்து வந்த சுக்கிரன் வைகாசி 10ஆம் திகதி (24/05/2022) மேஷ ராசியில் சஞ்சரித்துள்ளார். அவர் தன் சொந்த வீட்டைப் பார்ப்பதால் தன ஸ்தானம் வலுவடைகிறது. பொருளாதாரப் பற்றாக்குறை அகலும் பெண்வழி பிரச்சினை அகலும். புதிய தொழிலுக்கு வங்கிகளில் ஒத்துழைப்பு கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த இடமாற்றம், ஊதிய உயர்வு உண்டு. படிப்பிற்கு ஏற்ற நல்ல வேலை அமையும்.

## துலாம்

வைகாசி 3ம் திகதி (17 /5/ 2022 ) முதல் மாத கடைசி வரை மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் இருக்கும் சனி பார்க்கப் போகிறார். உங்கள் ராசிக்கு 4ம் இடத்தில் சஞ்சரிக்கும் சனி தன சப்தமாதிபதி செவ்வாயை பார்க்கும் பொழுது பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும்.தொழில்,உத்தியோகத்தில் இருந்த குறுக்கீடுகள் அகலும். உடல் நலம் சீராக மாற்று மருந்துகள் கைகொடுக்கும். இதுவரை உச்சம்பெற்று மீனத்தில் சஞ்சரித்த சுக்கிரன் வைகாசி 10ஆம் திகதி (24/05/2022) மேஷ ராசியில் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிநாதன் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிப்பது நல்ல நேரம்தான். சுபகாரியம் நடைபெறுவதற்கான அறிகுறி தென்படும். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. நினைத்ததை நினைத்தபடி செய்து முடிப்பீர்கள்.

## விருச்சிகம்

வைகாசி 3ம் திகதி (17 /5/ 2022 ) முதல் மாத கடைசி வரை மீனத்தில் உள்ள செவ்வாய் மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார் அதாவது உங்கள் ராசிநாதன் செவ்வாய் சகாய ஸ்தானாதிபதி சனி பார்ப்பதால் எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். எதிர்பாராத சில வாய்ப்புகள் தொழில் முன்னேற்றத்திற்கு வழிவகுத்துக் கொடுக்கும் பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் பூர்வ புண்ணிய ஸ்தானம் வலுப்பெறும் நேரமிது. இதுவரை உச்சம் பெற்று மீனத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன் வைகாசி 10ஆம் திகதி (24/05/2022) மேஷ ராசியில் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் 12க்கு அதிபதி ஆறில் வரும்போது விபரீத ராஜ யோகம் செயல்படும் எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும் தொட்ட காரியங்கள் வெற்றியாகும் நேரமிது.

## தனுசு

வைகாசி 3ம் திகதி (17 /5/ 2022 ) முதல் மாத கடைசி வரை மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். உங்கள் ராசிக்கு 5, 12க்கு அதிபதியான செவ்வாய் 2,3 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. எனவே விரயங்கள் கொஞ்சம் அதிகரிக்கும். வீடு மாற்றம் இடமாற்றம் உறுதியாகும். பிள்ளைகளின் போக்கில் திடீர் மாற்றம் உருவாகலாம். வாங்கிய பூமியை விற்க நேரிடலாம். இதுவரை உச்சம்பெற்று மீனத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன் வைகாசி 10ஆம் திகதி (24/05/2022)மேஷ ராசி மேஷ ராசியில் சஞ்சரித்துள்ளார். 6 ,11 க்கு அதிபதியான சுக்கிரன் பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு வரும்பொழுது பிள்ளைகளின் படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கும். உத்தியோகத்தில் விருப்ப ஓய்வு பெற்று தொழில் தொடங்குவது பற்றி சிந்திப்பீர்கள்.

## மகரம்

வைகாசி 3ம் தேதி (17 /5/ 2022 ) முதல் மாத கடைசி வரை மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். இக்காலத்தில் மருத்துவ செலவு கூடும் .கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாது. தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. தடைகளும் மனப் போராட்டமும் அதிகரிக்கும். வாங்கிய இடத்தை விற்க கூடிய சூழ்நிலை ஏற்படலாம். இதுவரை உச்சம் பெற்று மீனத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன் வைகாசி 10ஆம் திகதி (24/05/2022) மேஷ ராசியில் சஞ்சரித்துள்ளார். இக்காலகட்டத்தில் பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிரச்சினைகள் படிப்படியாக தீரும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். பூர்வீக சொத்து தகராறுகள் அகலும் உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு காலம் ஒரு பொற்காலம் ஆகும்.

## மீனம்

வைகாசி 3ம் திகதி (17 /5/ 2022 ) முதல் மாத கடைசி வரை மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். எனவே இக்காலத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் பிரச்சினை அதிகரிக்கும். விரயங்களால் மனக் கலக்கம் ஏற்படும். இதுவரை உச்சம் பெற்று மீனத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன் வைகாசி 10ம் திகதி (24/05/2022) மேஷ ராசியில் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் சகாய ஸ்தானத்திற்கும் வரும் இந்த நேரம் நன்மைகள் அதிகரிக்கும். குறிப்பாக இடம் , வீடு வாங்கும் யோகம் உண்டு. கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும் .பொருளாதாரத்தை மேம்பாடு அதிகரிக்கும். நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும்.

## கும்பம்

வைகாசி 3ம் திகதி (17 /5/ 2022 ) முதல் மாத கடைசி வரை மீனத்தில் உள்ள செவ்வாயை மகரத்தில் உள்ள சனி பார்க்கப் போகிறார். உங்கள் ராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய் அவரை லாப ஸ்தானத்தில் உள்ள சனி பார்க்கும் பொழுது பகை கிரகமாக இருந்தாலும் பொருளாதார நிலை சிறப்பாகவே இருக்கும். விற்பனை செய்த பூமியால் சில பிரச்சினை வரலாம். இதுவரை உச்சம் பெற்று மீனத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன் வைகாசி 10ஆம் திகதி (24/05/2022) மேஷ ராசியில் சஞ்சரித்துள்ளார். சகாய ஸ்தானாதிபதி தன ஸ்தானத்திற்கு வரும்போது தன வரவு திருப்தி தரும். கடமையில் இருந்த தொழிலில் முன்னேற்றம் உண்டு. ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

# சி.வி: அரசியல் எழுத்திற்கு கிடைத்த பொக்கிஷம்

க.கைலாசபதி தினகரனில் பிரதம ஆசிரியராக இருந்தபோதுதான் சி.வி.வேலுப்பிள்ளையின் மலையக அரசியல் தலைவர்கள், தளபதிகள் பற்றிய கட்டுரைத் தொடர் வெளியானது. 1958 செப்டம்பர் மாதத்திலிருந்து சி.வி.யின் மலையக அரசியல் கட்டுரைகள் 1959 ஏப்ரல் மாதம் வரை தினகரனில் தொடர்ந்து வெளியாகின. முதலில் இக்கட்டுரைத் தொடர் கேலிச்சித்திரம் என்று அறிமுகப்படுத்தப்பட்டு அப்துல் அசீஸ், எஸ்.தொண்டமான் ஆகியோர் பற்றிய கட்டுரைகள் கேலிச்சித்திரமாகவே ஓவியர் யூனுஸின் கேலிச்சித்திரத்துடன் வெளியாகின. அச்சித்திரங்கள் கேலிச்சித்திரங்களாக, political caricature/ cartoon என்ற பாணியில் அமைந்திருந்தன. பின்னர் வெளியான அரசியல் தலைவர்கள், தளபதிகளின் கட்டுரைகள் அவர்களின் புகைப்படங்களுடன் வெளியாகின. கேலிச்சித்திரம் என்று அவை குறிக்கப்படாமல் வாழ்க்கைச்சித்திரம், பேனாச்சித்திரம் என்றே குறிக்கப்பட்டன. 'மலைநாட்டுத் தமிழ்மக்கள் தலைவர்கள்' என்ற தலைப்பில் முக்கிய பெரும் மலையக அரசியல் ஆளுமைகள் 13 பேரினதும், 'மலைநாட்டுத் தமிழ் மக்களின் உரிமைப்போர்த் தளபதிகள்' என்ற தலைப்பில் இரண்டாம் நிலைப்பட்ட வளர்ந்துவரும் மலையக அரசியல் ஆளுமைகள் 13 பேரினதும் வாழ்க்கைச் சித்திரங்களை சி.வி. சிறப்பாக எழுதியிருந்தார். மலையகத்தின் அரசியல் தளத்தில் இயங்கிய 26 ஆளுமைகள் பற்றிய சி.வி. வேலுப்பிள்ளையின் பதிவு ஆறு தசாப்தங்கள் கழித்து இன்று நூல் வடிவம் பெறுவது ஈழத்து அரசியல் எழுத்திற்குக் கிடைத்திருக்கும் பெரும் பொக்கிஷமாகும். மலையகத்தின் அரும்பெரும் ஆவணப்பதிவாளராக (chronicler) சி.வி. ஈழத்து அரசியல் வரலாற்றில் நிலைபெறுகிறார். ஒவ்வொரு அரசியல் தலைவரையும் மிக நுட்பமாக அவதானித்து, அரிய தகவல்களுடன் அந்த அரசியல் ஆளுமைகளின் உள்ளார்ந்த சாரத்தை, அங்கதச்சுவையுடன் அபூர்வமான எழுத்தில் வடித்திருக்கிறார் சி.வி. ஈழத்தில் நாம் காணும் அரசியல் தலைவர்கள் பற்றிய வரலாறு என்பது அத்தலைவர்களின் புகழ்ப்பரணி பாடுபவையாகவே அமைந்துள்ளன. ஒவ்வொரு அரசியல் தலைவரையும் பற்றி சி.வி. எழுதும்போது, அவரின் நினைவுக்கிடங்கில் குவிந்திருக்கும் கொள்ளைத் தகவல்கள் அவரது நியாயமான பரிசீலனைக்குத் துணை நிற்கின்றன.

கட்டுரையின் ஒவ்வொரு வசனத்திலும் புதிய அரிய வேறெங்கும் நாம் கேட்டிராத தகவல்கள் கட்டுரையின் செழுமைக்கு துணை சேர்க்கின்றன. ஒரு கவிஞனின் சாணைக்கல்லில் வார்க்கப்பட்ட அரசியல் சொல்லோவியங்களாக அவை மிளிர்கின்றன. ஓர் அரசியல் கட்டுரையை இத்துணை ரசனையோடு, அங்கதம் பளிச்சிட, ஆழ்ந்த பகுப்பாய்வுடன் எழுதவல்ல பிறிதொரு எழுத்தாளனை நாம் இங்கு கண்டதில்லை. இந்த அரசியல் கட்டுரைகள் மூலம் சி.வி. அரசியல் எழுத்தின் உன்னதத்தைத் தொட்டிருக்கிறார்.


மலைநாட்டுத் தொழிற்சங்க வரலாற்றின் முன்னோடி கே.நடேசய்யரைப்பற்றி சி.வி. எழுதும்போது, 'தொழிலாளர் எழுச்சியுற்று , உரிமையுடைய மக்களைப்போல் தன்மானத்தோடு நடக்க, ஐயரவர்கள் கற்பித்தார் என்பதனை ஒருபொழுதும் அலட்சியம் செய்ய முடியாது' என்று குறிப்பிடும் அதேவேளை, 'அவருக்கு நல்ல




ஆலோசனை கூறுவோர் இருக்கவில்லை. ஆமாம் போடுபவர்கள் மட்டுமே இருந்தார்கள். அவருடைய ஸ்தாபனம் ஒரு திட்டவட்டமான கொள்கையுடையதல்ல. ஆனால், தான் மட்டும் தனியாய் நின்று நாடகத்தை நடத்தினார். அவருடைய சம்மேளனம், அவர் ஏறிச் சென்ற அந்த ரதம் 1947ஆம் ஆண்டில் நொறுங்கிச் சிதைந்தது' என்று துல்லியமான மதிப்பீட்டினை முன்வைக்கிறார்.

ஜனாப்.அப்துல் அசீஸ் பற்றி சி.வி.எழுதுகையில், 'அவர் இரண்டு லட்சம் மக்களின் தலைவர்; ஆயினும் அவர் நெருக்கடியான தருணங்களில் இனித்தான் முக்கிய முடிவுகள் செய்யவேண்டியவரா யிருக்கிறார். புதியவர்களைச் சுலபமாக வசீகரிப்பவர்; ஆனால், அவர்களைத் தம்வசம் வைத்திருப்பதற்கு கஷ்டப்படுவார்' என்று எழுதுகிறார்.





எஸ்.தொண்டமான் பற்றி எழுதுகையில், 'தொண்டமான் அரிசிச் சோறு அரைப்பங்குக்கும், தாழ்மையான தம்மைப்பற்றிய பத்திரிகைச் செய்திகள் என்னும் உணவை மூன்றரைப்பங்கும் உண்டு வாழ்கிறாரென்பது பொதுவான பேச்சாகும்' என்று சி.வி.எழுதுவதை வேறு யார் எழுத முடியும்?

'தெளிந்த சிந்தையும் அன்பு உள்ளமும் வாழ்க்கையிலுள்ள சகல நல்லவற்றையும் மேன்மையானவற்றையும் பயபக்தியுடன் போற்றும் மரியாதை உணர்ச்சியும் படைத்த பண்பாட்டின் சிறந்த வாலிபத் தலைவரான தேவராஜ் சமுதாயத்துக்கு ஒரு பொக்கிஷம்' என்று சான்று தருகிறார் சி.வி.

சி.வி. தீட்டிய மலையகத் தலைவர்களின் சித்திரத்தில் வந்து சேர்ந்தவர்களில் இன்றும் எம்மிடையே வாழும் சீலராகத் தனித்துவம் பெறுகிறார் பி.தேவராஜ் .

மலையக அரசியலைத் தொழிற்சங்க அரசியலிலிருந்து பிரித்துப்பார்க்க முடியாது. மலையக சமுதாய உருவாக்கத்தில் தொழிற்சங்கங்களே அந்த மக்களின் காவல் அரணாகத் திகழ் ந்திருக்கிறது. அவர்களின் தொழிற்களத்திலே நின்று அந்த மக்களுடன் போராடியிருக்கிறது. தொழிற்சங்கங்களை அமைப்பதற்கான போராட்டத்திலே இரண்டு இளஞ்சிங்கங்கள் தூக்குக்கயிறை முத்தமிட்டுள்ளன. மலையக மக்களின் மீட்சிக்குக் குரல் கொடுத்த இப்பெருந்தகைகள் எல்லாரும் ஏதோ ஒரு வகையில் தொழிலாளர் களோடும் தொழிற்சங்கங்களோடும் அந்தரங்க சுத்தியோடு உழைத்திருக்கிறார்கள். எளிமையோடு அந்த மக்களுடன் வாழ்ந்திருக்கிறார்கள்.சி.வி. வடித்திருக்கும் அந்தப் பெரியார்களின் வாழ்க்கை கனம் பண்ண வேண்டிய பெருமக்களின் வாழ்வாக நம் கண்முன்னே விரிகிறது. காந்தி, அம்பேத்கார், ராஜாஜி, பண்டிதர் நேரு, பெரியார் ஈ.வே .ரா, ராஜேந்திர பிரசாத், பாலகங்காதர திலகர், பிபின் சந்திரபால், கமலாதேவி சட்டோபாத்யாய, டாக்டர். ருக்மணி இலட்சுமிபதி, ஹரீந்திரநாத் சட்டோபாத்யாய, முஹம்மது அலி ஜின்னா, கஸ்தூரிரங்க ஐயங்கார், கல்கி, நீதியரசர் சதாசிவ ஐயர், சி.எப்.அன்றூஸ் போன்ற இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களுடனும் பெரியார்களுடனும் உறவு பூண்டிருந்த பேராளுமைகளைக் கொண்ட அரசியல் தலைமை

மு.நித்தியானந்தன் ...✍

மலையகத்தில் வேரூன்றியிருந்தது என்பதை சி.வி.யின் இந்த எழுத்துகள் இனங்காட்டுகின்றன.

சர்.பொன் அருணாசலம், தியாகராஜன் செட்டியார், சத்தியவாகீஸ்வர ஐயர், சர்.ஜேம்ஸ் பீரிஸ்,லாரி முத்துகிருஷ்ணா, டாக்டர் சரவணமுத்து போன்ற பெருந்தகைகளுடனும் சேர்ந்து உழைத்த மலையக அரசியலின் முற்போக்குப் பாங்கினை இந்நூல் வலியுறுத்துகிறது. அந்த அரசியலின் பன்னிற மணிக்கலவை செழுமையானது. அந்த அரசியலில் ஆழ்ந்தவர்கள் நேர்மையானவர்களாக இருந்திருக்கிறார்கள். ஏழை எளிய மக்களின் சுபீட்சமே தங்கள் பணியின் இலக்காக வரித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கொண்டிருந்த தொடர்புப்பின்னல் ஆச்சரியமூட்டுகிறது. பெருமைப்படத்தக்க அரசியல் பாரம்பரியத்தை அவர்கள் மலையகத்திற்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள். அத்தகைய செழுமையான அரசியல் பாரம்பரியத்தை எழுத்திலே வடித்த மலையகத்தின் பெருங் கவிஞர் சி.வி. வேலுப்பிள்ளைக்கு மலையகம் நன்றிக்கடன் பட்டிருக்கிறது.இத்தகைய ஒரு அற்புதமான பதிவை அவரைப் போன்ற ஒருவரே சாதித்திருக்கமுடியும். ஒவ்வொரு கட்டுரையிலும் ஒவ்வொரு வசனத்திலும் பொருள் பொதிந்த கருத்துகளை, தகவல்களை, புதிய செய்திகளை அவர் வாரி இறைத்துச் செல்கிறார். இந்தக்கட்டுரைகள் 1958/1959 இல் எழுதப்பட்டு, இன்று 63 ஆண்டுகளுக்குப்பின் நூல் வடிவம் பெறுகிறது என்பது, நமது அரும்பெரும் இலக்கியப் பொக்கிஷங்களைப் பேணுவதில் நாம் காட்டும் அசிரத்தையைக் காட்டுகிறது. மலையக மக்களின் அரசியல் தலைவர்கள் குறித்த கட்டுரைத் தொடரை எழுத சி.வி.யை ஊக்குவித்து, தினகரனில் அதனைத் தொடராக வெளியிட்டு ஒரு சமூகத்தின் பாரிய தேவையை நிறைவு செய்த பேராசிரியர் க.கைலாசபதி க்கு நாம் நன்றி கூறுதல் தகும்.

ஜோன் மலையகத் தலைவர்களில் புத்தம் புதிய சிந்தனைகளால் ஒளியூட்டிய முன்னோடியாகத் தெரிகிறார்.

சி.வி. எழுதியிருக்கும் மலையக அரசியல் தலைவர்களின் வரலாறு மலையகத் தொழிலாளர்களின் தொழிற்சங்க வரலாற்றின் பல கட்டங்களுக்கூடாக பயணிக்கிறது. சுதந்திரத்திற்கு முற்பட்டகாலத்தில் ஜோர்ஜ் மோத்தா, பெரி சுந்தரம், ஐ.எக்ஸ்.பெரேரா போன்ற ஆளுமைகளின் தலைமைப்பண்பு பற்றி துல்லியமான மதிப்பீட்டைத் தருகிறார் சி.வி.

1948 ஆம் ஆண்டு மலையகத் தமிழர்களின் பிரஜாவுரிமையை மறுக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டபோது, சுதந்திர இலங்கையில் மனித உரிமைகளை அப்பட்டமாக மீறும் சட்டவாக்கத்திற்கெதிராக முதல் அரசியல் போராட்டம் மலையகத்திலிருந்துதான் எழுந்தது. 1948 ஆம் வருடத்திலிருந்து தொடர்ச்சியாக வந்த மூன்று ஆண்டுகள் சமீப காலச் சரித்திரத்திலே காரிருள் சூழ்ந்த காலம் என்கிறார் சி.வி.

தொழிற்சங்கங்களில் உழைத்த தலைவர்களை சி.வி.மிக உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றினார்.இறுதிவரைதொழிற்சங்கவாதியாகவே வாழ்ந்து மறைந்த சி.வி.அவர்களுக்கே அந்த போராட்ட அணியின் பெருமையும் வலிமையையும் தெரிந்திருக்கிறது.

மலையக அரசியல் வரலாற்றை அறிய விரும்பும் யாரும் சி.வி.எழுதிய இந்த வரலாற்றுப் புதையலைக் கடந்து போக முடியாது.

இன்றைய மலையக அரசியல் தலைவர்கள் பற்றிய மதிப்பீட்டைத் தருவதற்கு ஒரு சி.வி. இல்லை என்ற ஏக்கம் இந்த நூலை வாசித்து முடிக்கையில் எழவே செய்கிறது.

## எட்டு வருட கால பா.ஜ.க ஆட்சியில்... (06ஆம் பக்கத் தொடர்)

குஜராத் முதல்வராக நான் இருந்த நாட்களிலிருந்தே ஜப்பானிய மக்களுடன் பழகும் வாய்ப்பு எனக்கு தொடர்ச்சியாகக் கிடைத்துள்ளது. ஜப்பானின் முன்னேற்றங்களும், வளர்ச்சியும் எப்போதும் போற்றத்தக்கவை. தொழில்நுட்பம், உள்கட்டமைப்பு, புதுமை, புதிய தொழில்கள் தொடங்குவது உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஜப்பான், இந்தியாவுடன் கூட்டு சேர்ந்துள்ளது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இது இவ்விதமிருக்க, கடந்த ஆட்சிக் காலத்தில் 2ஜி ஊழல் காரணமாக முடங்கியிருந்த இந்திய தொலைத்தொடர்புத்துறை தற்போது 3ஜி,4ஜி,5ஜி என தொடர்ந்து முன்னேறி தற்போது 6ஜி என்ற இலக்கை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. "எட்டு ஆண்டுகளில் தொலைத் தொடர்பு துறையில் ஏராளமான புதிய ஆற்றலை உட்புகுத்தி உள்ளோம்.3ஜியில் இருந்து 4ஜிக்கு வேகமாக இந்தியா முன்னேறியுள்ளது. தற்போது 5ஜிக்கு மாறியுள்ளது. இந்தியாவில் இணையத்தை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. நாட்டின் பொருளாதாரத்திற்கு சுமார் 450 பில்லியன் டொலர் அளவிற்கு 5ஜி தொழில்நுட்பம் பங்காற்றும். 5ஜி தொழில்நுட்பம் ஒவ்வொரு இந்தியருக்கும் பெருமையான விஷயம். இது இணைய வேகத்தை அதிகரிப்பது மட்டுமல்ல, வளர்ச்சியின் வேகத்தையும், வேலைவாய்ப்புகளையும் உருவாக்குகிறது. நாட்டில் உள்ள கிராமங்கள் அனைத்துக்கும் 5ஜி தொழில்நுட்பத்தைக் கொண்டு சேர்க்க வேண்டும். அடுத்த 10 ஆண்டுகளில் நம்மால் 6ஜி சேவையை தொடங்க முடியும். 6ஜி தொழில்நுட்ப சேவையை பயன்பாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கெல்லாம் காரணம் யார் என்பது மக்களுக்குத் தெரியும். ஊழல்களால் முடங்கிய பல்வேறு துறைகளை நாம் மீட்டெடுத்துள்ளோம்.

டிஜிட்டல் இந்தியா, மேக் இன் இந்தியா உள்ளிட்ட முன்னெடுப்புகள் இதற்குக் காரணம் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இது நாட்டில் வலுவான டிஜிட்டல் உள்கட்டமைப்புக்கு அடித்தளம் அமைத்துள்ளது. நாட்டின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் 4 இலட்சம் பொதுச்சேவை மையங்கள் கட்டப்பட்டுள்ளன. இன்று இந்த பொதுச்சேவை மையங்கள் மூலம் நூற்றுக்கணக்கான அரசு சேவைகள் கிராம மக்களைச் சென்றடைகின்றன. இந்த பொதுச்சேவை மையங்கள் இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பையும் வழங்கியுள்ளன. சமீபத்தில் குஜராத்தில் ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தேன். பழங்குடியினர் வசிக்கும் பகுதியான தாஹோட் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளி தம்பதியை சந்தித்தேன்.அவர்கள் பொதுச்சேவை மையத்தின் மூலம் 30 ஆயிரம் ரூபாய் சம்பாதிக்கிறேன் என்றார்கள் இதுதான் நமது திட்டம்" என பிரதமர் நரேந்திர மோடி பெருமையுடன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

## அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவிற்கமைய, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ("ஆணைக்குழு") நுகர்வோருக்கு தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தைக் கிடைக்கச் செய்வதை உத்தரவாதப்படுத்தும் பொருட்டுபின்வரும் நபருக்கு மின்சாரத்தினை பிறப்பாக்கம் செய்யும் நோக்கத்திற்கான அனுமதிப் பத்திரத்தினை வழங்க உத்தேசிக்கின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றது.

| விண்ணப்ப குறிப்பு இல. | விண்ணப்பதாரர் | ஆலை/வசதி பெயர் | திறன் (MW) | தொழில்நுட்பம் |
|---|---|---|---|---|
| E/AL/N/20/13 | ரெகோஜென் (பிரைவேட்) லிமிடெட் | படல்கம உயிரிவாயு மின்நிலையம் | 1.0 | உயிரிவாயு |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும் போது விண்ணப்பக் இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**தலைவர்**
**இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு**
**06-வது மாடி, இலங்கைவங்கி வர்த்தகக்கோபுரம்,**
**இலக்கம் 28, புனித மைக்கல் வீதி,**
**கொழும்பு 03**

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
பெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

திகதி: 2022.05.28

---

## தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை

# பதவி வெற்றிடங்கள்

தேசிய மருந்துகள் கட்டுப்படுத்தல் அதிகார சபையின் பின்வரும் வெற்றிடங்களுக்கு தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் பதவிகளாகும் என்பதுடன் இடமாற்றங்கள் பெற முடியாதவையாகும்.

## சட்ட அதிகாரி பதவி (வெற்றிட எண்ணிக்கை 1)

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டமானி ஆரம்பப் பட்டம் சகிதம் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகவிருத்தல்

(ஆ) உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக 01 வருட தொழில்சார் அனுபவத்தைப் பெற்றிருத்தல்

(இ) ஆங்கில மொழியில் சிறப்பாக வேலை செய்யும் இயலுமை இருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

(அ) மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது :** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

பதவிக்குரித்தான சம்பள நிலை: 02/2016ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரகாரம் MM 1-1 ரூபா (53,175 – 10x1,375 – 15x1,910 – 95,575/-) சம்பள அளவில் ஆரம்ப நிலையான 53,175/- ரூபா மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள்

ஆட்சேர்க்கப்படும் முறை: திறந்த போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**ஏனைய விடயங்கள்:**

**சகல விண்ணப்பதாரர்களும்:**

i. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் வேலைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நன்னடத்தையுடையவராகவிருத்தல் வேண்டும்.

- அரச, அரை அரச நிறுவனங்களில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

பிழையின்றி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2022-06-11ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் cv@nmra.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் இடுவதன் மூலம் அல்லது பிரதான நிறைவேற்று அதிகாரி, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, இல. 120, நொரிஸ் கெனல் வீதி, கொழும்பு-10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரையும் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை.**

## தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபை

**.......................................... பதவிக்கான விண்ணப்பப்படிவம்**

1. முழுப் பெயர்:
2. முதலெழுத்துகளுடன் பெயர்:
3. முகவரி:
4. வதியும் மாவட்டம்:
5. பிறந்த திகதி:
6. வயது வருடம்:.................. மாதம்:.................... திகதி:....................
7. பால்:
8. தேசிய அடையாள அட்டை இலக்கம்:
9. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:
10. தொலைபேசி இலக்கம்:
    நிலையானது ............................ கையடக்க தொலைபேசி: ...................
11. மின்னஞ்சல் முகவரி:
12. கல்வித் தகைமைகள்:
13. தொழில்சார் தகைமைகள்:
14. அனுபவம்:
15. விண்ணப்பதாரர் தொடர்பான தகவல்களை விசாரிக்கக்கூடிய உறவினரல்லாத இரு நபர்களின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம் மற்றும் முகவரி:

இங்கு மேலே தரப்பட்டுள்ள என் தொடர்பான விபரங்கள் எனது அறிவு, விசுவாசத்தின் பிரகாரம் சரியானவை மற்றும் உண்மையானவை என பிரகடனப்படுத்துகின்றேன்.

திகதி:. ..........................................................
(விண்ணப்பதாரியின் கையொப்பம்)

**கவனிக்க வேண்டியது:**

இயைபுடைய மாதிரியின் பிரகாரம் மட்டுமே விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும் என்பதுடன் உங்களின் கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

---

# இலங்கை கடற்படை

## விலைமனுக்கோரல்

**இருதய மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு வளாகத்தின் கட்டுமானம் சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலை - கொழும்பு 08 (மருத்துவ எரிவாயு அமைப்பினை வழங்குதல் மற்றும் நிறுவுதல்)**

**ஒப்பந்த இல (CONTRACT NO: SB/179/G/32/2020)**

1. **இருதய மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு வளாகத்தின் கட்டுமானம் சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலை கொழும்பு - 08 (மருத்துவ எரிவாயு அமைப்பினை வழங்குவற்கு மற்றும் நிறுவுதற்கு** தகுதியினை கொண்ட மனுதாரர்களை தேர்வு செய்வதற்காக த.பெ.இல.593, கொழும்பு 01, கடற்படை தலைமையகம், இலங்கை கடற்படைத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன. மதிப்பிடப்பட்ட தொகை அண்ணளவாக **நூற்று எழுபத்தி ஏழு மில்லியன் ரூபாய் (ரூ.177 மில்லியன்)** முடிவுறும் காலம் **182 நாட்களாகும்.** கட்டுமான வளாகம் சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் அமைந்துள்ளது.
2. மனுகோரல்கள் **தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய (NCB)** நடைபெறும்.
3. ஒப்பந்தந்திற்கு தகுதிபெறும் மனுதாரர்கள் கருப்புபட்டியல் நிரலில் இடம்பெறாதவரும் பின்வரும் தகுதி மற்றும் திறன்களை பூர்த்தி செய்யக்கூடியவருமாக இருத்தல் வேண்டும்.

   அ. மனுதாரர்கள் கட்டுமான தொழில் அபிவிருத்தி ஆணைக்குழுவில் (CIDA) மருத்துவ எரிவாயு அமைப்பு **(MG)** வேலைகள் மற்றும் **(EM )1** தரத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல்.

   ஆ. கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கட்டுமானப் பணிகளின் சராசரி வருடாந்திர அளவு குறைந்தபட்சம் **ரூ.350 மில்லியனாக** இருத்தல் வேண்டும்.

   இ. குறைந்தபட்சம் ஒப்பந்தத்திற்கு தேவைப்படும் நீர்மைச்சொத்து மற்றும் / ஒப்பந்தத்திற்கான கடன் வசதிகள் ஏனைய ஒப்பந்த பத்திரங்கள் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் முன்கூட்டியே கொடுப்பனவுகளைத் தவிர்த்து குறித்த ஒப்பந்தம் **ரூ.90 மில்லியனாக** இருக்க வேண்டும்,

   ஈ. கடந்த ஐந்து ஆண்டுகளில் பிரதான ஒப்பந்ததாரராக ஒத்த இயல்பு மற்றும் சிரமமான கட்டிட கட்டுமானத் திட்டமொன்றில் தீ பாதுகாப்பு மற்றும் தீயை கண்டறிதல் செயற்பாட்டினை வெற்றிகரமாக நிறைவேற்றிய அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   உ. ஒப்பந்ததாரர் பின்வரும் ஊழியர்களை நியமிக்க வேண்டும்.

   - உதவிப் இயந்திரப் பொறியியளாலர் பட்டம் (தளம் - பகுதி நேரம்) - NCT அல்லது அதற்கு சமமான தகைமையுடன் குறித்த துறையில் **3 வருட** அனுபவத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

4 இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் **2022.05.30** ஆம் திகதியிலிருந்து **2022.06.29** ஆம் திகதி வரை **09.00** மணியிலிருந்து **15.00** மணி வரையான காலப்பகுதியில் எழுத்து மூல விண்ணப்பத்தை **தலைமை அதிகாரி அலுவலகம் (கட்டிடக் கட்டுமானம்)** இலங்கை கடற்படை தலைமையகம், **கொழும்பு 01 இல்** மீள் செலுத்தப்படாத கட்டணமாக **ரூ.32,000.00 (வட்வரி உள்ளடக்கப்படாத)** சமர்ப்பிப்பதன் மூலம் அச்சிடப்பட்ட ஆங்கில மொழியிலான விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

5. தகுதியான மனுதாரர்கள் மேலதிக தகவல்களை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ளவதுடன், **தலைமை அதிகாரி அலுவலகம் (கட்டிடக் கட்டுமானம்)** இலங்கை கடற்படை தலைமையகம், த.பெ.இல.593, **கொழும்பு 01 இல் 2022.05.30 ஆம் திகதி முதல் 2022.06.29 ஆம் திகதி வரை** வார நாட்களில் **காலை 09.00** மணி முதல் **மாலை 14.00** மணி நேரம் வரை மனு ஆவணங்களை இலவசமாக பரிசீலனை செய்யலாம்.

| | |
|---|---|
| பொறியியல் பணிப்பாளர் நாயகம், | தொலைப்பேசி இல |
| கடற்படை தலைமையகம், | DGE - 0117194211 |
| த.பெ.இல.593, | தொ.நகல் - 0112441456 |
| கொழும்பு 01. | மின்னஞ்சல் **nhqdge@gmail.com** |

**தலைமை அதிகாரி அலுவலகம் (கட்டிடக் கட்டுமானம்)**

| | |
|---|---|
| கடற்படை தலைமையகம், | DGE - 0117192375 |
| த.பெ.இல.593, | தொ.நகல் - 0117192373 |
| கொழும்பு 01. | மின்னஞ்சல் **ssobcnhq@gmail.com** |

மனுக்கள் **2022.08.28** ஆம் திகதி வரை (மனுக்கள் முடிவுறும் திகதியிலிருந்து **91 நாட்கள்**) செல்லுபடியாகும்.

6. மனு பிணையானது **ரூ.2,700.000.00** பெறுமதியுடைய இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியிடமிருந்து பெறப்பட்ட அங்கீகார படிவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
7. குறித்த மனுப்பாதுகாப்பு தொகையானது மனுக்கள் முடிவுறும் திகதியிலிருந்து **2022.09.25** ஆம் திகதி வரை **(119 நாட்கள்)** செல்லுபடியாகும்.
8. இது தொடர்பான முன்மனுக் கூட்டமானது **2022.06.10** ஆம் திகதி 1000 மணிக்கு **கொழும்பு - 08 சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில்** நடைபெறும்.
9. மனு ஆவணங்களை நகல் பிரதி மற்றும் அசல் பிரதி ஒன்றுடன் **2022.06.30** ஆம் திகதி **1400** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **த.பெ.இல.593, கொழும்பு 01 இலங்கை கடற்படை தலைமையகம், கொள்முதல் குழுவின் தலைவருக்கு** கிடைக்கும் வகையில் நேரில் கையளிக்க முடியும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். மனுக்கள் இடப்பட்டுள்ள உறையின் இடது பக்கமேல் மூலையில் ஒப்பந்த இலக்கத்தினை தெளிவாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
10. மனுக்கள் திறக்கப்படும் நேரம் முடிந்தவுடன் **2022.06.30** ஆம் திகதி மாலை **1400** மணிக்கு பங்கேற்க விரும்பும் மனுதாரரகள் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாக திறக்கப்படும். மனுதாரர் சார்பாக கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் மனுதாரரின் உரிமம் பெற்ற கடிதத்தினைக் சமர்ப்பித்தல் வேண்டும். மனுக்கள் திறக்கப்படுவதற்கு குறைந்தது மூன்று அலுவலக நாட்களுக்கு முன்னர் பங்கேற்கும் நபரின் பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது கடவுச்சீட்டு இலக்கத்தினை த.பெ.இல.593, **கொழும்பு 01, தலைமை அதிகாரி அலுவலகம் (கட்டிடக் கட்டுமானம்)** இலங்கை கடற்படை தலைமையகத்திற்கு தெரியப்படுத்தவும்.
11. தேவையான ஆவண சான்றுகள் முழுமையடையாத மற்றும் அவற்றுடன் இணைக்கப்படாத மனு ஆவணங்கள் நிராகரிக்கப்படும். எந்தவொரு மனு விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை தலைவர், கொள்முதல் குழு, இலங்கை கடற்படை தலைமையகம் கொண்டுள்ளது.
12. இப்பத்திரிகை விளம்பரத்தை இலங்கை கடற்படை www.navy.lk வலைத்தளத்தில் பார்வையிடலாம்.

மேலே குறிப்பிடப்பட்ட முகவரி :

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு,
இலங்கை கடற்படை தலைமையகம்,
த.பெ.இல. 593,
கொழும்பு 01.

---

## போர்த்துகேயர் வருகையை...

10ஆம் பக்க தொடர்...

இந்த க ல்வெட்டுடன் சேர்த்து JSOI என்கிற எழுத்து க்கள் பெரிதாக செதுக்கப்பட்டுள்ளது. அதன் விரிவை ஆங்கிலத்தில் (Jesus Salvator Orientalium Indiorum) என்று அர்த்தப்படுத்துகிறார்கள். அதாவது கிழக்கிந்திய மீட்பரான இயேசு கிறிஸ்து என்று அர்த்தப்படும். போர்த்துகேயரால் கீழைத்தேய நாடுகளில் கத்தோலிக்க விஸ்தரிப்பின் போது பயன்படுத்தப்பட்ட சுலோகம் அது. அப்படியான நாடுகளில் எல்லாம் இப்படியான கல்வெட்டை நிறுவியிருப்பதை அறிய முடிகிறது. அங்கெல்லாம் ஒரு சிலுவையுடன் நினைவுத் தூபி. அரச இலட்சனை என்பன நிறுவப்பட்டுள்ளன.

போர்த்துகேயர் இலங்கை வந்தது பற்றிய இன்னும் புரியாத புதிராக இருகின்ற இரு சர்ச்சைக்குரிய விவாதங்கள் பலமாகவே உள்ளன. முதலாவது அவர்கள் வந்திறங்கிய உறுதியான ஆண்டு, அடுத்தது அவர்கள் வந்திறங்கிய இடம்.

போர்த்துகேயரின் வருகையும் கொழும்புத் துறைமுகமும்

16 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்தியப் பெருங்கடலில் வளமான தீவுகள் இருப்பதை போர்த்துகேயர்கள் அறிந்திருந்தனர். அத்தகைய தீவுகளைக் கண்டுபிடிப்பதே அவர்களின் நோக்கமாக இருந்தது. இந்தியாவின் கொச்சியில் முகாமிட்டிருந்த தளபதி பிரான்சிஸ்கோ த அல்மேதா இந்தப் பணிக்கு நியமிக்கப்பட்டார். பிரான்சிஸ்கோ அல்மேதா தனது மகன் லோரென்சோ த அல்மேதாவின் தலைமையில் ஒரு இராணுவத்தை இந்தப் பணிக்காக அனுப்பினார். லோரென்சோவும் அவரது இராணுவமும் புதிய தீவுகளைத் தேடிக் கப்பலில் சென்றுகொண்டிருந்த வேளை காலி பகுதியில் ஏற்பட்ட அலைகளின் பேரெழுச்சியாலும், புயலாலும் சிக்கி கொழும்பில் அக்கப்பல்கள் கரையொதுங்கியன. கம்போடியாவிற்கு ஏற்றுமதி செய்வதற்காக ஏற்றப்பட்டிருந்த கறுவா, குட்டி யானைகள் என்பவற்றைக் கொண்ட கப்பல்கள் அப்போது துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்தன. லோரென்சோவும் அவரது ஆட்களும் முஸ்லிம்களை பயமுறுத்தி அவர்களை விரட்டினர். கப்பலில் இருந்து வந்த மாலுமிகள் கரையோரத்தில் கண்ட சுதேசிகளிடம் அனுமதி பெற்று ஒரு கல்லில் தாம் வந்திறங்கியதன் நினைவாக தமது நாட்டின் அரச இலட்சினையை செதுக்கினார்கள். அதை செதுக்கிய கோன்சலேஸ் கொன்ஸ்வலேஸ் என்கிற போர்த்துக்கேய படையினன் தனது பெயரையும் அதில் பொறித்தார்.

அப்போதைய இலங்கை மன்னர் 'கோட்டே'யில் இருப்பதை அறிந்த போர்த்துகேயர்கள் பின்னர் மன்னரைச் சந்திக்க கோட்டே சென்றனர். போர்த்துகீசியர்களைப் கண்ட சுதேசிகள் 8வது வீரபராக்கிரமபாகுவிடம் சென்று பின்வருமாறு கூறினார்கள்.

"அரசே, ஒருவித விசித்திரமான மனிதர்கள் கொழும்பில் இறங்கியிருக்கிறார்கள். அவர்கள் இரும்பு தொப்பிகளையும் இரும்பு கவசங்களையும் அணிந்திருக்கிறார்கள். கற்களைத் தின்று இரத்தம் குடிப்பதை நாங்கள் பார்த்தோம்."

அதைக் கேட்ட அரசன் அவர்களை அழைத்துவரும்படி கட்டளையிட்டான். அரசரின் கட்டளைப்படி போர்த்துகீசியர்கள் அரண்மனைக்கு அழைத்து வரப்பட்டனர். ஆனால் வழமையான வழியில் அல்ல. தூரப் பாதையால் அரச மாளிகைக்கு அழைத்து வரப்பட்டார்கள். இப்படி வேடிக்கையாக அழைத்துச் செல்லப்பட்ட கதை சிங்களத்தில் பிரபல்யம். எனவே "பறங்கி கோட்டே சென்றது போல" என்கிற சொலவடை உருவானது. பின்னர் அரண்மனைக்கு வந்த மன்னருக்கும் போர்த்துகேயர்களுக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டது. அதன்படி போர்த்துக்கேயருக்கு ஆண்டுதோறும் 400 பஹார் கறுவாவை மன்னர் வழங்குவதாகவும் அதற்குப் பதிலாக போர்த்துக்கேயர் அரேபியர்களிடம் இருந்து இலங்கைத் துறைமுகங்களை பாதுகாப்பதாகவும் உடன்பாடு கண்டனர். இப்படித்தான் கொழும்பு துறைமுகம் வளர்ச்சி பெற்றது.

இலங்கையில் உள்ள துறைமுகங்களைப் பாதுகாக்கும் பொறுப்பு போர்த்துகீசியர்களிடம் ஒப்படைக்கப்பட்டதால், அவர்கள் தங்கள் கப்பல்களை நிறுத்தி கொழும்பு நகருக்கு அருகில் ஒரு கப்பல் துறையை நிறுவ முடிவு செய்தனர். அதன்படி, போர்த்துகீசியர்கள் கப்பல்துறைக்கு கொழும்பு கடற்கரைக்கு அருகில் ஒரு சிறிய மேட்டைப் பயன்படுத்தினர். இன்று அந்த இடம் தான் கொழும்பு துறைமுகமாக உருவாகியுள்ளது.

16 ஆம் நூற்றாண்டில் ஒரு போர்த்துகேய எழுத்தாளர் ஒருவர் கொழும்பு நகருக்கு அருகிலுள்ள துறைமுகத்தைப் பற்றி இப்படி எழுதினார்:

"துறைமுகத்திற்குள் நுழைய ஒரு பெரிய வாயில் உள்ளது. இப்பகுதிக்கு அருகே கால்வாய் ஒன்றும் ஓடுகிறது. துறைமுகத்தின் முனை ஒரு மீன்பிடி கம்பியின் முனை போல் உள்ளது. இது தரைக்கு மிக அருகாமையில் அமைந்துள்ளது. அது ஒரு பக்கத்திலிருந்து மறுபுறம் கல்லை எறியும் அளவுக்கு சிறியது. போர்த்துகேய வணிகர்களும் மாலுமிகளும் அந்த இடத்தைச் சுவரால் எழுப்பி தங்கள் வணிகத்தின் மையமாக மாற்றினர். போர்த்துகேயர்கள் 1517 இல் இருந்து இந்த துறைமுகத்தில் வர்த்தகம் செய்யத் தொடங்கினர். பின்னர் சுமார் 139 ஆண்டுகள் போர்த்துகீசியர்களால் இலங்கை ஆளப்பட்டது. இருப்பினும், 17 ஆம் நூற்றாண்டில், இரண்டாம் ராஜசிங்க மன்னரின் உதவியுடன், டச்சுக்காரர்கள் போர்த்துகீசியப் பகுதிகளைக் கைப்பற்றினர். அதன்படி 1656 இல் கொழும்பு துறைமுகம் டச்சுக்காரர்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றது.

போர்த்துகேயர்களால் இலங்கையில் அமைக்கப்பட்ட முதல் நினைவுச்சின்னமும் இதுவே. காலனித்துவத்தின் முதல் அடையாளமும் இது தான்.

காலனித்துவத்தின் அடையாளமாக இருக்கும் அதி பழமையான ஒரே கல்வெட்டு இது தான். 500 ஆண்டுகளையும் கடந்து இன்றும் எஞ்சியிருப்பது வியப்பான விடயம். அது மட்டுமல்ல போர்த்துகேயர் முதலாவது வந்திறங்கியது காலியிலா, கொழும்பிலா என்கிற குழப்பத்துக்கும் இந்த கல்வெட்டின் மூலம் நமக்கு விடை கிடைக்கிறது. **(தொடரும்)**

namal
NATIONAL ASSET MANAGEMENT LTD

**நேஷனல் அசெட் மேனேஜ்மென்ட் லிமிடெட் (NAMAL) NAMAL Acuity Value Fund 29 செப்டம்பர் 2019** அன்று முதிர்ச்சியடைந்ததாக யூனிட் வைத்திருப்பவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறது. இதுவரை மீட்பைப் பெறாத எந்தவொரு யூனிட் வைத்திருப்பவரும் எங்களை **+94 (0) 11 244 5911** அல்லது **info@namal.lk** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

**National Asset Management Ltd**
**No.07, Glen Aber Place, Colombo 03, Sri Lanka**
**☎ 011 2445911 🖷 011 2445903**
**www.namalfunds.com**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 13

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | |
| 06 | | 07 | | 08 | 09 |
| | 10 | 11 | 12 | | |
| 13 | 14 | | 15 | 16 | |
| | 17 | | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | | 24 | 25 |

பெயர் ..........................................
வகுப்பு ..........................................
தொலைபேசி இல ..........................................
பாடசாலை பெயர் ..........................................
வதிவிட முகவரி ..........................................
..........................................

.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர்/ பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(01) எமது அன்றாட வாழ்வை இலகுபடுத்துவதற்காக வெப்பசக்தி, ஒளிச்சக்தி, இயக்கசக்தி, மின்சக்தி போன்றவையெல்லாம் எமக்குத் தேவையாகின்றன. அச்சக்திகளை உருவாக்கிக் கொள்வதற்கான மூலப்பொருள் இது.
(08) பாலூட்டி உயிரினங்கள் (மனிதன் தவிர்ந்த) பலவற்றில் நாம் காணக்கூடிய சிறப்பான அங்கம். நகருயிரிகளில் பெரும்பாலானவற்றிலும் இந்த அங்கம் உள்ளது.
(10) உணவுக்கு சுவையூட்டியாக நாம் சேர்த்துக் கொள்கின்ற சிறிய வகை வித்து. சிறிதென்றாலும் அதிக சுவையை தரவல்லது.
(13) நிறையுணவு கொண்ட திரவ ஆகாரம்.
(15) அறிவுக்கண் திறக்கும் ஆசான். (தலைகீழான சொல்)
(18) காடு, கானகம், வனம், வனாந்தரம் என்றெல்லாம் பல சொற்களால் நாம் குறிப்பிடுகின்றோம். அந்த அர்த்தம் தருகின்ற மற்றொரு சொல் இது. (தலைகீழான சொல்)
(21) ஓவியம் வரைவதற்கு இது அவசியம்.
(24) குதிரையைக் குறிக்கும் சொல்.

### மேலிருந்து கீழ்

(01) அணில் போன்று இதுவும் சிறு உருவம் கொண்ட பாலூட்டி உயிரினம். வீடுகளுக்குள் இரவு நேரத்தில் பிரவேசித்து உணவுப் பொருட்களை தின்று தீர்த்து விடும் பிராணி.
(03) பெண்கள் நெற்றியில் இட்டுக் கொள்வது. உலகெங்கும் இந்துப் பெண்களுக்கு இதுவொரு அடையாளச் சின்னம்.
(05) அக்காலத்தில் அரசர்களும், போர் வீரர்களும் பயன்படுத்திய போர் ஆயுதம். இக்காலத்தில் குற்றவாளிகள் பயன்படுத்துகின்றார்கள். (தலைகீழான சொல்)
(10) மாணவர்களாகிய நீங்கள், கல்வி பயில்கின்ற கல்விக்கூடம்.
(12) பறவைகளில் பார்த்து ரசிக்கக் கூடிய இனம்.
(16) நீர்ப்போக்குவரத்துச் சாதனம். (தலைகீழான சொல்)
(20) காட்டுக்கு அரசனான சிங்கத்தைக் குறிக்கும் சொல்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 12

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(01) வெள்ளிவிழா (07) உடை (10) காசு
(12) கான் (15) பாவலன் (19) சனம்
(23) கோபம்

**மேலிருந்து கீழ்**

(01) வெங்காயம் (03) உளி (04) விடை
(09) காமன் (12) கோவலன் (15) பாசம்

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 11

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**கோ. விபுதரன்,**
தரம் 08 B, தி/கலைமகள் வித்தியாலயம்,
975, அம்பாள் வீதி,
திருகோணமலை.

**இரண்டாம் பரிசு**
**எம்.ஐ. பாத்திமா அஸீமா,**
தரம் 08, தி/கிண்ணியா மகளிர் வித்தியாலயம்,
114, ஜாயா வீதி, மாஞ்சோலைச் சேனை,
கிண்ணியா 3.

**மூன்றாம் பரிசு**
**ஜே.எம். சாஹில்,**
தரம் 05 B, களு/ஜீலான் மத்திய கல்லூரி,
ஹேனமுல்லை,
பாணந்துறை.

### பாராட்டு பெறுவோர்

1. **எம்.இஸட்.எப். ரம்லா,**
தரம் 10 A, பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி,
கிறான்ட்பாஸ் வீதி, கொழும்பு 14.
2. **எம்.ஆர். சாரா,**
தரம் 09, மாறை அல்மினா ம.வி.,
இல. 41, படபத்தை,
மீயல்லை.
3. **ஆர். அப்துல்லாஹ்,**
தரம் 05 B, அக்/டி.பி. ஜாயா வித்தியாலயம்,
அட்டாளைச்சேனை.
4. **எம்.ஐ. அய்னா,**
தரம் 05, ப/ பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி,
பதுளை.
5. **எம்.என்.ஏ. அஹமட்,**
தரம் 05, சாஹிரா ஆரம்ப பாடசாலை,
புத்தளம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 13
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



*குறளமுதம் :*

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

***தெளிவுரை :***
*முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும்; முயற்சி இல்லாதிருத்தல் அவனுக்கு வறுமையைச் சேர்த்து விடும்.*

## உடைந்த பேனை

சுயசரிதை



எனது பிறப்பிடமானது சீனா. என்னோடு பலர் அங்கு தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்டோம். பின்னர் எங்களுக்கு வர்ணம் பூசப்பட்டு பெட்டியில் அழகாக பொதி செய்யப்பட்டோம். அதற்குப் பிறகு எங்களை வாகனங்களில் ஏற்றி அனுப்பி வைத்தனர். அதன் பின்னர் கப்பலில் ஏற்றிவந்து இலங்கையின் கொழும்பு துறைமுகத்தில் இறக்கினர். துறைமுகத்திலிருந்து கொண்டுவரப்பட்ட எங்களை கடைகளுக்கு விநியோகிக்கின்றனர். கடைக்காரர் எங்களை எடுத்து அழகாக அடுக்கி வைத்து மாணவர்களை கவரும் விதத்தில் காட்சிப்படுத்தி வைத்திருந்தனர்.

அந்த கடைக்கு பெற்றோருடன் வந்த சிறுவனொருவன் என்னை வாங்கித்தருமாறு கேட்டுக் கொண்டான். சிறுவனின் தந்தை என்னை பணம் கொடுத்து வாங்கிக் கொடுத்தார். அச்சிறுவனும் சந்தோஷமாக என்னை எடுத்துச் சென்று வீட்டில் அனைவரிடமும் காண்பித்தான். பாடசாலைக்கு எடுத்துச் சென்ற என்னை சகமாணவர்களிடம் காட்டி மகிழ்ச்சியுடன் இருந்தான்.

வகுப்பில் என்னை பயன்படுத்தி அழகாக எழுதினான். பரீட்சையிலும் என்னைப் பாவித்து எழுதி சிறந்த பெறுபேறுகளையும் பெற்றதாக சொல்லிக் கொண்டிருப்பான். அப்படியே நாட்கள் நகர்ந்தன. என்னை அவன் பயன்படுத்துவது படிப்படியாக குறைந்து இப்போது செயலிழந்த நிலைக்கு தள்ளப்பட்டேன். என் உயிர் பிரிந்ததைப்போன்று எனது மையும் முடிந்துவிட்டது. இப்போது என்னை உதவாக்கரை என கூறிவிட்டு உடைத்து குப்பைத்தொட்டியில் போட்டுவிட்டான். இப்போத நான் உடைந்த பேனையாக குப்பைத்தொட்டியில் கிடக்கிறேன்.

**எம்.ஏ. ஆஷிப் அஹமட்,**
தரம் 07B, கே/மாவ/அல் அஸ்கர் தேசிய பாடசாலை, ஹெம்மாத்தகம.

## இவ்வார மழலை



கன்துல் கைனா

ஏ.ஸீ.எம். முனீர் - எப். பர்தியா
கந்தறை.


## நான் கண்டெடுத்த பணப்பை

நான் கடைக்குச் சென்று கொண்டிருந்த போது வழியோரம் விழுந்து கிடந்த ஓர் பையை கண்டேடுத்தேன். மனதில் ஒருவித பதற்றம் தொற்றிக் கொள்ள ஓடோடி வந்து அந்த பணப்பையை என் அம்மாவிடம் கொடுத்தேன்.

அவர் அதனை திறந்து பார்த்தபோது அதற்குள் சில நாணயத்தாள்களும். ஒரு சோடி காப்பும். இரண்டு வங்கி அட்டைகளும் இருந்தன. இன்னும் தேடியபோது ஓர் தொலைபேசி எண் தென்பட்டது. அந்த இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்திய போது எதிர்முனையில் பேசிய பெண்ணிடம் விசயத்தை கூறினார். உடனே அப்பெண் அந் தப்பை தன் தாயாருடையது என கூறினார். அத்துடன் எமது முகவரியை பெற்றுக்கொண்டு உடனே வருவதாகவும் கூறினார். முப்பது நிமிட காத்திருப்பின் பின் இருவரும் வந்தனர். அம்மா அப் பையை அவர்களிடம் கொடுத்து சரி பார்க்க சொன்னார். அவர்களும் சரி பார்த்து நா தழுதழுக்க.கண்ணீர் மல்க என்னை கட்டியணைத்து உச்சி முகர்ந்தார். பின் எம்மிடம் விடை பெற்றனர். என் அம்மா என்னை பெருமிதத்துடன் பார்த்தார். நான் அவரை பாசத்துடன் கட்டிக் கொண்டேன்.

**பி. டினோசா,**
டிக்கோயா வீதி, தரவளை.

## எமது நாடு



இயற்கையாகவே அழகு நிறைந்தது எம் நாடு. இலங்கையை நாம் தம்பன்னி, செரண்டிப், தப்ரபேன், சீல துவீபம், சீலயி, செயிலான், செயிலாவோ, சிலான், சிலோன், ஈழம் எனும் பெயர்களால் அழைப்பதுண்டு.

ஆசியாவின் வைரம் .இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படுவதுண்டு. நான்கு புறமும் கடலால் சூழப்பட்ட ஓர் அழகிய தீவாகும். இங்கு உயர்ந்த மலைகளும். எப்போதும் வற்றாத ஆறுகளும். பரபரப்புடன் பாயும் நீர்வீழ்ச்சிகளும். பச்சைக்கம்பளம் போர்த்திய தேயிலைத் தோட்டங்களும். எமது நாட்டை இன்னும் அழகாக்குகின்றன.

இலங்கையின் தேசிய வனமான சிங்கராஜ வனத்தில் இலங்கைக்கே உரித்தான தாவரங்களும், அதிசய தாவரங்களும் வளர்கின்றன.

இலங்கையின் தேசிய மரம் நாகமரமும் தேசிய மலர் அல்லி மலரும் தேசிய விளையாட்டு கரப்பந்தாட்டமும் தேசிய பறவையாக காட்டுக்கோழியும் விளங்குகின்றன. பொன்நிறமான கடற்கரைகளும்.பனிபடர்ந்த காடுகளும். பசுமையான புல்வெளிகளும். வயல் வெளிகளும்.

அழகான நகரங்களும். ஓங்கி உயர்ந்த மரங்களும் இலங்கையின் அழகுக்கு இன்னும் அழகு சேர்க்கின்றன.

உல்லாசப் பயணிகளை அதிகம் கவரும் நாடுகளில் எமது நாடும் ஒன்றாகும். பல இனத்தவர் ஒற்றுமையுடன் வாழும் தேசமாகும். பல கலாசாரங்களை தன்னகத்தே கொண்ட நாடாகும். இலங்கை ஓர் சொர்க்கபுரித் தீவாகும்.

**சுஸ்மிதன் ஆனந்தன்,**
நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம்,
நோர்வூட்.






பதுளை – தெளிவத்தை பெண்ணரசிகள் சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி செரண்டிப் சிறுவர் இல்லத்தினரால் பசறை கனவரல்லை இலக்கம் 1 தமிழ் வித்தியாலயம், எல்டெப் இலக்கம் 1 தமிழ் வித்தியாலயம், அலியாவத்தை தமிழ் வித்தியாலய மாணவர்களுக்கு தலா 2800 ரூபா பெறுமதியான கற்கை உபகரணங்கள், புத்தகப் பைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் செரண்டிப் சிறுவர் இல்லத்தின் பொறுப்பதிகாரி ஆர். விஜேந்திரன், இணைப்பதிகாரி பி. சரண்ராஜ் ஆகியோர் கலந்து இவற்றை வழங்கினர். (தகவலும் படங்களும் : பதுளை எம். செல்வராஜா)

## தங்கத் தமிழ் தாத்தா..!



*தங்கத் தமிழ் தாத்தா*
*தாடிக் காரத் தாத்தா*
*அன்னைத் தமிழை நன்கு*
*போற்றி வளர்த்த தாத்தா.*

*நவாலி யூரில் பிறந்த*
*தமது மண்ணின் தாத்தா*
*நெற்றி யிலே நீறும்*
*பொட்டும் வைத்த தாத்தா.*

*தாடிக் கார வேடன்*
*கதையை சொன்ன தாத்தா*
*ஆடிக் கூழைப் பாடி*
*அகத்தில் நிறைந்த தாத்தா.*

*பவழக் கொடிப் பாடல்*
*படிக்கத் தந்த தாத்தா*
*படித்துச் சுவைக் நூல்கள் பல*
*படைத் தளித்த தாத்தா.*

*புலவர் பட்டம் பெற்று*
*புகழும் படைத்த தாத்தா*
*எங்கள் இனிய தமிழின்*
*வரமாய் வந்த தாத்தா..!*

**ஷெல்லிதாசன்,**
திருமலை.

***(நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பிறந்த மாதம் இது (25 வைகாசி)***


## சிறுவர் சித்திரங்கள்



**பி. சதுர்ஷன்,**
தரம் 07, ஸ்ரீசண்முகா தமிழ் மகா வித்தியாலயம்,
மொனறாகலை.



**சி. மௌநேஷ்,**
அமிர்தகழி, மட்டக்களப்பு.



**சி. தியா,**
தரம் 06, எம்.டி. குணசேன சர்வதேச பாடசாலை,
கொழும்பு.



**பதுரியா ஜெஹான்,**
தரம் 03A, கைரியா மு.ம. வித்தியாலயம்,
கொழும்பு 09.

# மஞ்சரி விளையாட்டு

## 20 வயதின்கீழ் ஆசியக் கிண்ண தகுதிகாண் கால்பந்து:

# சவால் மிக்க குழுவில் இலங்கை அணி




உஸ்பெகிஸ்தானில் 2023ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 20 வயதின் கீழான அணிகளுக்குரிய ஆசியக் கிண்ண கால்பந்து தொடரின் தகுதிகாண் போட்டிகளில் விளையாடுவதற்கு ஆசிய பிராந்தியத்தினைச் சேர்ந்த 44 அணிகள் தெரிவாகியிருக்கின்றன.

இந்த தகுதிகாண் தொடரானது இந்த ஆண்டின் செப்டம்பர் மாதம் 10ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரையில் நடாத்தும் விதத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த தகுதிகாண் தொடரில் பங்கெடுக்கும் அணிகள் 10 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு மோதல்கள் இடம்பெறவுள்ளதோடு, ஒவ்வொரு குழுவில் இருந்தும் வெற்றியாளராக தெரிவு செய்யப்படும் அணியும், இரண்டாம் இடத்தினைப் பெறும் அணியும் 2023ஆம் ஆண்டு உஸ்பெகிஸ்தானில் நடைபெறவுள்ள 20 வயதின் கீழான ஆசியக் கிண்ண கால்பந்து தொடரில் விளையாடும் வாய்ப்பினை பெறவிருக்கின்றன.

இதில் ஆசியக் கிண்ண கால்பந்து சம்பியன் பட்டத்தினை 12 தடவைகள் வெற்றி கொண்டிருக்கும் கொரிய குடியரசு அணியானது, குழு ஈ இல் இலங்கை, மலேசியா மற்றும் மொங்கோலியா ஆகிய நாடுகளுடன் இந்த தகுதிகாண் போட்டிகளில் ஆடவிருக்கின்றது. எனவே, தகுதிகாண் போட்டிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட இலங்கை அணிக்கு மிகப் பெரும் சவால் இந்த தொடரில் உருவாக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இதேநேரம், 2018ஆம் ஆண்டில் சம்பியன் பட்டம் வென்ற சவூதி அரேபிய அணி குழு ஏ இல் சீனா, மியன்மார், மாலைதீவு மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் தகுதிகாண் போட்டிகளில் பங்கெடுக்க, குழு பி இல் பஹ்ரைன், பங்களாதேஷ், கட்டார், நேபாளம் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.

லாவோஸ் அணியானது குழு சி இல் ஜப்பான், யெமன், பாலஸ்தீன் மற்றும் குவாம் ஆகிய நாடுகளுடன் போட்டியிட குழு டி இல் ஜோர்தான், சீனா தாய்பேய், சிரியா, துர்க்மெனிஸ்தான் மற்றும் வட மேரியானா தீவுகள் ஆகியவை உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

இரண்டு தடவை சம்பியன் பட்டத்தினை வென்றிருக்கும் தாய்லாந்து அணியானது, ஓமான், ஆப்கானிஸ்தான் மற்றும் பிலிபைன்ஸ் ஆகிய நாடுகள் குழு ஜி இல் போட்டியிட, இந்தியா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் குழு எச் இல் காணப்படுகின்றன.

மறுமுனையில் குழு ஐ இல் லெபனான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளும், குழு ஜே இல் ஐக்கிய அரபு இராச்சியம், கிரைக்ஸ் குடியரசு மற்றும் ஈரான் ஆகியவை பெயரிடப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

**குழு ஏ:** சவூதி அரேபியா (எச்), சீனா, மியன்மார், மாலைதீவுகள், உஸ்பெகிஸ்தான்

**குழு பி:** கட்டார், பஹ்ரைன் (எச்), பங்களாதேஷ், நேபாளம், பூட்டான்

**குழு சி:** ஜப்பான், யேமன், பாலஸ்தீன், லாவோஸ் (எச்), குவாம்

**குழு டி:** ஜோர்தான் (எச்), சீன தாய்பே, சிரியா, துர்க்மெனிஸ்தான், வட மெரியானா தீவுகள்

**குழு எப்:** இந்தோனேசியா (எச்), வியட்நாம், ஹொங்கோங், டிமோர்எஸ்டே

**குழு எச்:** அவுஸ்திரேலியா, ஈராக் (எச்), இந்தியா, குவைட்

**குழு ஐ:** தஜிகிஸ்தான் (எச்), கம்போடியா, லெபனான், சிங்கப்பூர்

**குழு ஜே:** ஐக்கிய அரபு இராச்சியம், ஈரான், கிரைக்ஸ் குடியரசு (எச்), புருனே

## டெஸ்ட் சம்பியன்ஷிப்

# தரவரிசையில் முன்னேறிய இலங்கை



பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியதைத் தொடர்ந்து ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் இலங்கை அணி நான்காவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.




இலங்கை கிரிக்கெட் அணி, பங்களாதேஷுக்கு சுற்றுப்பயணம் செய்து 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஓர் அங்கமாக நடைபெற்ற இந்தத் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி சமநிலையில் நிறைவடைந்தது.

இந்த நிலையில் மிர்பூர், பங்களா கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற 2 ஆவதும் கடைசியுமான போட்டியில் இலங்கை அணி 10 விக்கெட்டுகளால் வெற்றி கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என கைப்பற்றியது.

இந்த வெற்றியுடன் 2 போட்டிகள் கொண்ட ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரை 1–0 என்ற கணக்கில் இலங்கை தனதாக்கிக்கொண்டது. அத்துடன், இந்த வெற்றிக்கான 12 டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகளைப் பெற்ற இலங்கை அணி தொடரில் மொத்தம் 18 புள்ளிகளைப் பெற்றது.

மெதிவ்ஸ், சந்திமால் ஆகியோரின் சதங்களோடு பலம் பெற்ற இலங்கை அணி 55.56 புள்ளிகள் சதவீதத்துடன் பாகிஸ்தானை பின்னுக்குத் தள்ளி ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 4 ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ளது.

ஐ.சி.சி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் கீழ் இதுவரை 6 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள இலங்கை அணி, 3 வெற்றிகளுடன் 40 புள்ளிகளைப் பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பட்டியலில் அவுஸ்திரேலிய அணி 75 புள்ளிகள் சதவீதத்துடன் முதலிடத்தில் உள்ளது. 71.43 புள்ளிகள் சதவீதத்துடன் தென்னாபிரிக்கா அணி 2 ஆவது இடத்திலும், 58.33 புள்ளிகள் சதவீதத்துடன் இந்திய அணி 3 ஆவது இடத்திலும் காணப்படுகிறது.

பாகிஸ்தான் அணி 52.38 புள்ளிகள் சதவீதத்துடன் பட்டியலில் 5 ஆவது இடத்தில் உள்ளது. நடப்பு சம்பியன் நியூசிலாந்து அணி 38.89 சதவீதத்துடன் 6 ஆவது இடத்தில் உள்ளது.

அதனைத்தொடர்ந்து மேற்கிந்திய தீவுகள், பங்களாதேஷ் மற்றும் இங்கிலாந்து ஆகிய அணிகள் முறையே 7 முதல் 10 ஆவது இடங்களைப் பிடித்துள்ளது.

இலங்கை அணி அடுத்து அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய அணிகளுடன் தலா 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் சொந்த மண்ணில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 100 செல்வாக்கு மிக்க நபர்களில் ரபேல் நடால், பெங் ஷுவாய்



கிராண்ட்ஸ்லாம் மன்னர் ரஃபேல் நடால் மற்றும் சீனாவின் பெங் ஷுவாய் ஆகியோர் டைம் பத்திரிகையின் 2022 ஆம் ஆண்டின் மிகவும் செல்வாக்கு மிக்க 100 நபர்களில் ஒருவராக பெயரிடப்பட்டுள்ளனர்.

நடால் இந்த ஆண்டு தொடக்கத்தில் அவுஸ்திரேலிய பகிரங்கத்தில் தனது 21 வது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றார், ஆனால் நீண்ட காலத்திற்கு முன்பே விளையாட்டின் அடையாளமாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டார்.

மற்றொரு தொடர் வெற்றியாளரான அமெரிக்க கால்பந்து நட்சத்திரம் டாம் பிராடி, ரஃபாவுக்கு பாராட்டு தெரிவித்தார்.

'ஒரு இளம் வீரராக ஆடுகளத்தில் காலடி எடுத்து வைத்த கணத்திலிருந்து, ரஃபேல் நடால் ஒரு நிகரற்ற கவர்ச்சியைக் கொண்டிருந்தார்' என்று பிராடி எழுதினார்.



'அவர் அனைத்து பெரிய விளையாட்டு வீரர்கள் என்ன செய்ய மன மற்றும் உடல் கடினத்தன்மை உள்ளது: மிகப்பெரிய தருணங்களில் தங்கள் சிறந்த விளையாட இது காரணமாக இருந்தது.

'அவர் தனது உணர்ச்சி நிலையை ஒரு இடத்திற்கு உயர்த்துகிறார், அங்கு அவர் தனது எதிராளி மீது ஒரு விளிம்பை உருவாக்குவதற்காக, வெற்றிக்கு தன்னை தயார்படுத்திக் கொள்ள சிறிய விஷயத்தின் மீது பைத்தியக்காரத்தனமாக கவனம் செலுத்த முடியும்.

'அது பலனளித்தது. 2022 அவுஸ்திரேலிய பகிரங்கத்தை வென்றபோது, ரஃபா தனது 21 வது கிராண்ட் ஸ்லாம் ஒற்றையர் பட்டத்தை வென்றார் வரலாற்றில் எந்த ஆண் டென்னிஸ் வீரரையும் விட அதிகம்.

வரம்புக்கு தங்களை தள்ளும் விளையாட்டு வீரர்களை நான் பாராட்டுகிறேன், மேலும் ஒவ்வொரு முறையும் ரஃபா ஆடுகளத்தில் இருக்கும் போது நான் முற்றிலும் ஈர்க்கப்பட்டேன்.

'அவரது உறுதிப்பாடு, அவரது மூலோபாயம், எந்தவொரு கணத்தையும் ஒருபோதும் எடுத்துக் கொள்ளாத எல்லாவற்றையும் பார்த்து கற்றுக் கொள்ள வேண்டிய ஒன்று இருக்கிறது.

'அவர் எப்போதும் அனைத்து விளையாட்டுகளிலும் மிகச் சிறந்த விளையாட்டு வீரர்களில் ஒருவராக நினைவு கூரப்படுவார்.'

சீனாவில் சக்திவாய்ந்த ஆண்களின் கைகளில் தனது துஷ்பிரயோகத்திற்கு எதிராகப் பேசியதில் பெங் ஷுவாயின் துணிச்சல், நாட்டில் பெண்களின் உரிமைகளுக்காக தீபம் ஏற்ற மற்றவர்களைத் தூண்டியது.

முன்னாள் டென்னிஸ் நட்சத்திரம் இன்னும் ஆபத்தில் இருக்கக்கூடும் என்று எச்சரிக்கும் அதே நேரத்தில் சமூக ஆர்வலர் லு பின் பெங்கின் பூமியை உடைக்கும் வெளிப்பாட்டை அறிவித்தார்.

'சீன சமூக ஊடக தளமான வெய்போவில் ஒரு நீண்ட இடுகையுடன், டென்னிஸ் நட்சத்திரம் பெங் ஷுவாய் உலகளாவிய விளையாட்டுகளை ஆழமாக மாற்றிய நிகழ்வுகளின் ஒரு எதிர்வினையை அமைத்தார். கடந்த ஆண்டு நவம்பரில் வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில், முன்னாள் துணைப் பிரதமர் ஜாங் கௌலி தன்னை உடலுறவு கொள்ளுமாறு கட்டாயப்படுத்தியதாகவும், அவருடன் திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவைப் பேணுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, பெங் பொதுமக்களின் பார்வையில் இருந்து மறைந்துவிட்டார். 2022 பீஜிங் ஒலிம்பிக்கின் அமெரிக்க இராஜதந்திர புறக்கணிப்புக்கான இறுதி நியாயப்படுத்தலை மேடைகளில் அவர் மீண்டும் தோன்றினார், மேலும் பெண்கள் டென்னிஸ் சங்கம் சீனாவில் அதன் நிகழ்வுகளை இரத்து செய்ய வழிவகுத்தது. அவரது பெயர் சீன இணையத்தில் தணிக்கை செய்யப்பட்டுள்ளது.

'பெங் சந்தேகத்திற்கு இடமின்றி பேசுவதில் உள்ளார்ந்த ஆபத்துக்களை ஆரம்பத்தில் இருந்தேஅறிந்திருந்தார்.

இப்போது நீக்கப்பட்ட இடுகையில், அவர் தனது செயல்களை ஒரு சுடர் ஒரு அந்துப்பூச்சி, ஒரு கல்லுக்கு ஒரு முட்டை, மற்றும் ஒரு சுய அழிவு என்று விவரித்தார். அவரது பதிவு எதேச்சாதிகார அதிகாரத்திற்கு எதிராக பெண்களின் உரிமைகளை முன்னெப்போதும் இல்லாத வகையில் பாதுகாத்துள்ளது. அவரது அசல் கூற்றுக்களை அவர் பின்னர் மறுத்தது, அவர் இன்னும் முழு சுயாட்சியை மீண்டும் பெறவில்லை என்பதைக் குறிக்கிறது உண்மையில் சொல்லமுடியாத கொடுமையை அனுபவித்துக் கொண்டிருக்கலாம்.'

# MCA சுப்பர் பிரீமியர் லீக் 2022 இல் CDB வெற்றி



MCA சுப்பர் பிரீமியர் லீக் 2022 போட்டியின் லீக் சம்பியன்சிப் போட்டிகளில் சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பிஎல்சி (CDB) வெற்றியை பதிவு செய்திருந்தது. 15 போட்டிகளைக் கொண்ட லீக் சுற்றின் நிறைவில் 21 புள்ளிகளுடன் CDB முன்னிலையில் திகழ்ந்தது. இதில் போட்டியிட்ட ஏனைய போட்டியாளர்கள் இரண்டாம் மற்றும் மூன்றாமிடங்களில் 13.5 மற்றும் 13 புள்ளிகளுடன் காணப்பட்டன.

ஒதுக்கப்பட்ட ஓவர்களின் அரைப்பங்கு மீதமிருந்த நிலையில், ஹற்றன் நஷனல் வங்கி அணியை வெற்றியீட்டியிருந்ததனூடாக CDB வெற்றியை சுவீகரித்திருந்தது. Mode Engineering, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் மற்றும் சம்பத் வங்கி ஆகிய அணிகளுக்கெதிராகவும் வெற்றியை பதிவு செய்திருந்தது. CDB அணியைச் சேர்ந்த தனுஷ்க தர்மசிறி போட்டித் தொடரின் அதிக ஓட்டங்களான 121 ஐ பதிவு செய்திருந்தார். போட்டித் தொடரின் அதிகளவு விக்கட்களான 7 ஐ லக்சித மனசிங்க பெற்றுக் கொண்டார்.

போட்டிகளில் தொடர் வெற்றியை பதிவு செய்திருந்த CDB அணியில் லஹிரு மதுசங்க (தலைவர்), லஹிரு உதான (உப தலைவர்), சிதார கிம்ஹான, ஹசித பெரேரா, அஞ்ஜலோ பெரேரா, தனுஷ்க தர்மகீர்த்தி, முதித லக்சான், சவின் குணசேகர, தரிந்து ரத்நாயக்க, ரொஹான் சஞ்ஜய, கேஷான் விஜேரட்ன, லக்சித மனசிங்க, வனிந்து ஹசரங்க, சரித் அசலங்க, சதுரங்க டில்ஷான், பெத்தும் நிஸ்சங்க, காமிந்து மென்டிஸ், சச்சிந்து கொலம்பகே, அசித பெர்னான்டோ, டெஹான் சாஃப்ட்டர், தேவிந்து சேனாரட்ன மற்றும் சச்சிந்த பீரிஸ் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 மே மாதம் 29ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.